# எல்லாம் தரும்
# அன்னை

கர்மயோகி

# எல்லாம் தரும் அன்னை

கர்மயோகி

**மதர்ஸ் ஸர்வீஸ் சொஸைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
பாண்டிச்சேரி – 605 011.


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஆகஸ்ட் 1987 |
| இரண்டாம் பதிப்பு | : | ஏப்ரல் 1990 |
| மூன்றாம் பதிப்பு | : | ஆகஸ்ட் 1993 |
| நான்காம் பதிப்பு | : | மே 1996 |
| ஐந்தாம் பதிப்பு | : | ஜனவரி 1998 |
| ஆறாம் பதிப்பு | : | ஜனவரி 2000 |
| ஏழாம் பதிப்பு | : | ஜனவரி 2003 |
| எட்டாம் பதிப்பு | : | ஆகஸ்ட் 2004 |
| பதிப்புரிமை | : | © கர்மயோகி |
| விலை | : | ரூ.100/– |
| அச்சு | : | அகரம்,<br>மனை எண்.1,<br>நிர்மலா நகர்,<br>தஞ்சாவூர். |

## முகவுரை

'எல்லாம் தரும் அன்னை'யின் அளப்பரிய கருணைப் பிரவாகத்தைச் சுட்டிக்காட்டும் முயற்சியே இந்நூல்.

இந்நூலுக்கென எழுதப்பட்ட சிறப்புக் கட்டுரைகளோடு மிகுதியாகக் கலந்து இருப்பவை 'அமுதசுரபி'யில் வெளியான கட்டுரைகள். ஒன்றிரண்டு 'கலைமகளி'ல் வந்தவை.

'அமுதசுரபி' ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் சமீபத்தில் பாரிஸுக்குப் புறப்படுவதற்குமுன் ஆசிரமத்திற்கு வந்து சமாதி தரிசனம் செய்தார். அப்பொழுது அவர் ஆசிரமத்தின் டிரஸ்டி ஒருவரைச் சந்தித்துப் பிரசாதம் பெற்றபொழுது, "உங்கள் பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருக்கும் ஸ்ரீ அரவிந்தர் அன்னை பற்றிய கட்டுரைகள், தமிழ்நாட்டில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தி உள்ளன. உங்களுக்கு அம்மாறுதலின் அளவு தெரியாமல் இருக்கலாம். ஆனால், நான் அதைப் பூரணமாக அறிவேன்" என்று கூறினார் அந்த டிரஸ்டி.

'அமுதசுரபி' வாசகர்களில் பெரும்பாலோர் எனக்கு எழுதும் கடிதங்களில், "அன்னையைப் பற்றி அறிந்து நான் மெய் சிலிர்த்துப்போனேன்" என்று குறிப்பிடுகின்றார்கள். தெய்வத்தை அறிவால் புரிந்து கொள்ளும்பொழுது நம்பிக்கை பிறக்கின்றது. உணர்வால் ஏற்றுக் கொள்ளும்பொழுது பக்திப் பரவசம் ஏற்படுகின்றது. அவற்றையும் கடந்து ஆழமாக உடலில் அவ்வொளி பரவும்பொழுது மெய் சிலிர்க்கின்றது. சமாதியைத் தரிசித்தோ, அன்னையின் திருவுருவப்படத்தைப் பார்த்தோ, அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டோ அல்லது தரிசித்தோ ஸ்ரீ அரவிந்தர் அன்னையை அறிபவர்களுக்கு ஏற்படும் அனுபவம், மெய் சிலிர்த்துப் புளகாங்கிதம் அடைதல்.

'ஒரே விநாடியானாலும் அன்னையின் அன்பையும், அருளையும் உணர்ந்தவர்கள், உணர்ந்து மெய்சிலிர்த்தவர்கள், அன்னையை எக்கணமும் மறப்பதில்லை' என்பது பக்தர்களுடைய அனுபவம்.

**கர்மயோகி**

## பொருளடக்கம்


1. ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் .......... 1
2. ஸ்ரீ அரவிந்தாசிரமம் .......... 4
3. தரிசனமும் தகவல்களும் .......... 12
4. அன்னையும் இந்திரா காந்தியும் .......... 17
5. ஸ்ரீ அரவிந்தரின் யோகம் .......... 20
6. ஆத்ம சமர்ப்பணம் .......... 29
7. செய்யும் தொழிலில் அன்னை செயல்படுவது எப்படி? .......... 41
8. கணவனும் மனைவியும் .......... 53
9. இழந்ததைப் பெறலாம் .......... 63
10. கர்மவினையும் அன்னையின் அருளும் .......... 75
11. கைகொடுத்த நம்பிக்கை .......... 84
12. தேடி வந்த செல்வம் .......... 91
13. பாலையிலும் பசுஞ்சோலை .......... 101
14. சுற்றுச் சுவர் .......... 112
15. அன்னையின் அருளில் நம்பிக்கை .......... 122
16. அன்பர்களின் வாழ்வில் அற்புதங்கள் .......... 129
17. அன்னையின் அருளுக்கு இணை ஏது? .......... 136
18. அன்னையே துணை .......... 143
19. அன்னையின் அருள் விரைவு .......... 150
20. ஆட்கொள்ளும் அற்புதம் .......... 158
21. பூரண நம்பிக்கையின் பலன் .......... 164
22. அன்னையும் சுவாமிநாதன் என்றோர் அன்பரும் .......... 170
23. நினைவுகள் எல்லாம் விளைவுகளாகும் .......... 178
24. காணிக்கை .......... 187
25. தமிழர் மரபில் வாழ்க்கைப் பிரச்சினைகளும், அன்னையின் அருளும் .......... 198

# 1. ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும்

1872–இல் வங்காளத்தில் பிறந்த ஸ்ரீ அரவிந்தர், தம் இரு சகோதரர்களுடன் சிறு வயதிலேயே கல்வி பயில்வதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். தம் 21 வயதுவரை அங்கே தங்கி இருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு தாய் நாட்டுக்குத் திரும்பினார். பரோடா சமஸ்தானத்தில் பணி புரிந்தார். கல்லூரிப் பேராசிரியராகவும் சில காலம் இருந்தார். பின்னர் இந்திய விடுதலை இயக்கத்தில் சேர்ந்து போராடினார். அந்தச் சமயத்தில் யோகத்தில் உள்ள அதிசய சக்தியை ஒரு நாக சன்னியாசியிடம் கண்டு, ‘அதன் மூலம் இந்திய விடுதலையை அடையலாம்’ எனக் கருதி யோகம் பயின்றார்.

கல்கத்தா தீவிரவாதிகளுடன் சேர்ந்து அவர் சேவை செய்த பொழுது, அந்தத் தீவிரவாதிகள் வீசிய குண்டு சம்பந்தமான ஒரு வழக்கில் நிரபராதியான அவரும் சேர்க்கப்பட்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவரது யோகம் சித்தி பெற்றது. அந்நிலையில் அவர் கைதிகளையும், காவலர்களையும், வழக்கு மன்றத்தில் எதிரிகளையும், நீதிபதியையும் வாசுதேவனாகக் கண்டார். பின்னர், ‘வழக்குப் பொய்யானது’ என்று நிரூபணமாகி, அவர் விடுதலை செய்யப்பட்டார். அவருடைய அந்தராத்மாவின் குரல், ‘இந்தியா விடுதலை அடைந்துவிட்டது. உனக்கு வேறு பணி உண்டு. பாண்டிச்சேரிக்குப் போ’ என அவரைப் பணித்தது. 1910–ஆம் ஆண்டு முதல் 1950, டிசம்பர் 5–இல் சமாதி அடையும் வரையில் புதுவையிலேயே யோகம் பயின்றார்.

‘பராசக்தியின் அவதாரம்’ என்றும், ‘அன்னை’ என்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தரால் அழைக்கப்பட்ட மிரா, பிரான்ஸ் நாட்டில் 1878–இல் பிறந்தார். ‘நம் ஆசைகளைப் பூர்த்தி





செய்து கொள்வதற்காக இந்த உலகத்தில் நாம் பிறக்கவில்லை. பிறப்பின் நோக்கம் கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதுதான்’ என்ற கண்டிப்புடன் தம் தாயாரால் வளர்க்கப்பட்டவர் மிரா. அவருடைய குழந்தைப் பருவத்திலேயே அவர் தலை மீது ஒரு சிறு ஒளி மண்டலம் நிரந்தரமாகத் தவழ்ந்தது. திடீரென்று தியானம் தானாகவே வந்து அவரைச் சூழ்ந்து கொள்ளும்.

அவர் கண்களை மூடிக் கொண்டு நெஞ்சினுள் நிறைந்து ஒளிரும் ஒளியில் கலந்துவிடுவார். இந்த நிகழ்ச்சி குடும்பத்தில் இருந்தவர்களுக்கு ஒரு தொந்தரவாகவே இருந்தது. இந்தியர் ஒருவர் அவரிடம் கீதையைப் படிக்குமாறு கூறினார். கீதையின் ரகசியம் அவரை முழுதுமாகக் கவர்ந்தது. அவருடைய தியானத்தில் பல மகான்கள் தோன்றுவது வழக்கம். அவர்களில் அடிக்கடி தோன்றும் ஒருவரை, ‘கிருஷ்ணா’ என்று அழைத்தார் மிரா.

1914–இல் புதுவைக்கு வந்து ஸ்ரீ அரவிந்தரைத் தரிசித்தார் மிரா. ‘தம் தியானத்தில் கிருஷ்ணாவாகத் தோன்றி உபதேசம் செய்த மகான் இவரே!’ என்று உணர்ந்தார். ‘உலகம் இருளில் மூழ்கி இருந்தாலும், எனக்குக் காட்சி தரும் இந்த ஒளி மயமான திவ்யபுருஷன் இருக்கும்வரை உலகம் பொய்ம்மையிலிருந்து நிச்சயம் விடுபடும்’ என்று உறுதி பூண்டு, ஸ்ரீ அரவிந்தருடன் சேர்ந்து புதுவையிலேயே தங்கி, மரணம், மூப்பு, பிணி, வறுமை, பொய்ம்மை இவற்றிலிருந்து உலகம் முழுதுமாகவும், நிரந்தரமாகவும் விடுபடக் கூடிய யோகத்தை மேற்கொண்டார்.

1926–இல் ஸ்ரீ அரவிந்தரின் யோகம் முதல் கட்டத்தைக் கடந்து இரண்டாவது கட்டத்தை நோக்கி வெற்றிகரமாகச் செல்ல இருந்தபொழுது ஸ்ரீ அரவிந்தர் மிராவை, ‘நமக்கெல்லாம் இவர் அன்னை, உலகத்துக்கே இவர்தாம் அன்னை. உலகத்தை உய்விக்க வந்த பராசக்தி இவரே!’ என்று பிரகடனம் செய்து, ஆசிரமத்தின் எல்லா நிர்வாகப் பொறுப்புகளையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு, தனித்தே தவயிருக்கை கொண்டார்.

1950–இல் ஸ்ரீ அரவிந்தரின் தவம் பலித்துவிட்டது. ‘தவத்தின் மூலம் தாம் பெற்ற பேரொளியைப் பெற்றுக் கொள்ள உலகம் தயாராக இல்லை’ என்பதை அறிந்து, அன்னையின் உடலில் அந்தப் பேரொளியை இருத்திவிட்டு, தாம் சூட்சும உலகிற்குச் சென்று உலகைத் தயார் செய்யும் பணியில் ஈடுபட வேண்டி, சமாதி அடைந்தார்.

1956, 1967, 1969 ஆண்டுகளில் அன்னையின் யோகம் ஸ்ரீ அரவிந்தருக்குப் பலித்த கட்டங்களைக் கடந்து, சிறந்து, வேகமாக முன்னேறியது. 1973–இல் அன்னை தம் 95–ஆவது வயதில், “நான் 100 ஆண்டுகள்வரை இருந்தால், ஸ்ரீ அரவிந்தரின் யோகம் அவரின் குறிக்கோளைப் பூர்த்தி செய்து உலகத்தின் நலத்திற்காகப் பூரணமாகப் பலிக்கும். இறைவனின் சித்தம் எப்படி என்று தெரியவில்லை. இறைவனின் திருவுள்ளம் என் உடலில் எப்படிப் பூர்த்தியானாலும், அதுவே உயர்ந்ததாகும்” என்று கூறினார்.

இறைவனின் திருவுள்ளம் பூர்த்தியை நாடியது.

அன்னை 1973, நவம்பர் 17–இல் சமாதி அடைந்தார். ஒரு பக்தர் அன்னை சமாதி அடைந்த நேரத்தில் வான் வெளியில் ஒரு பேரொளி தோன்றி, அது கோடிக்கணக்கான பொறிகளாகச் சிதறி, ஒவ்வொரு மனித இதயத்தையும் நாடிச் சென்று, அங்கே தங்குவதைக் கண்டார்.

ஸ்ரீ அரவிந்தரிடம் பிறந்து, அன்னையிடம் வளர்ந்த அந்தத் திவ்யப் பேரொளி, உலகத்தில் கவிந்து கிடக்கும் நோய், மரணம், வறுமை போன்ற இருளைப் போக்கிக் கொண்டிருக்கும் நித்திய, சத்தியப் பேரொளியாகும்.

✶✶✶



# 2. ஸ்ரீ அரவிந்தாசிரமம்

யோகத்துக்குப் புது இலட்சியம் ஒன்றைக் கற்பித்த ஸ்ரீ அரவிந்தர், ‘வாழ்க்கை எப்படிச் சத்திய ஒளியாக மலர வேண்டும்?’ என்பதை விளக்கி அதன்பாற்பட்ட யோகக் கருத்தை **Life Divine** என்ற நூல் மூலம் தெரிவிக்கின்றார். அன்னை தம் வாழ்க்கையை முழுதுமாக ஸ்ரீ அரவிந்தருடைய இலட்சியத்திற்கு அர்ப்பணித்தபிறகு, ‘உலகில் அந்த இலட்சியம் செயல்படுவதற்கு முதல் கட்டமாக ஓர் ஆசிரமம் நிறுவப்பட வேண்டும்’ என்று கருதினார். மகான் ஸ்ரீ அரவிந்தர் அந்தக் கருத்திற்கு இசைவு தந்தார்.

‘உலகத்தில் சத்தியம் நிலை பெற வேண்டுமானால், ஒரு சிறு சமுதாயம் உலகத்தின் பிரதிநிதியாக இருந்து அந்த முயற்சியை முன்னோடியாகச் செய்ய வேண்டும். அந்தச் சமுதாயத்திற்கென ஓர் இடம் ஏற்பட்டால், அதற்கு உலகில் தற்போது நிகழும் ஒவ்வொரு செயலுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும். மனித சுபாவத்தின் எல்லா அம்சங்களையும் யோக சக்திக்கு உட்படுத்தி, அவற்றின் கருவை இருளின் பிடியிலிருந்து விடுவித்து, ஒளியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். அந்தச் சிறு சமுதாயத்தைச் சேர்ந்த சாதகர்கள் தம் வாழ்வில் அத்தகைய மாற்றத்தைக் கொண்டுவர முயன்றால், எதிர்காலத்தில் உலகில் பல நிலைகளில் பரவிக் கிடக்கின்ற வாழ்க்கையின் அடிப்படை மாறி, அது சத்தியத்தின் கருவியாக அமையும்’ என்பதே ஸ்ரீ அரவிந்தாசிரமம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகும். ‘உலகத்தில் ஏதாவது ஒரு பெரிய நல்ல காரியம் நடைபெற வேண்டுமானால், அது முதலில் இங்கே (ஆசிரமத்தில்) நடைபெற வேண்டும்’ என்கின்றார் அன்னை.

1968–இல் ஆரோவில் நிர்மாணிக்கப்பட்டபொழுது, ‘ஆரோவில் உள்ளவரை மூன்றாவது உலகப்போர் மூளாது’ என்று கூறினார் அன்னை. இன்றுவரை மூளவில்லை. போர்க்குணமும், வன்முறை உணர்வும், ‘எதிரியை வீழ்த்த வேண்டும்’ என்ற வெறியும் எல்லா மனிதர்களிடமும் உள்ள இயல்புகள். பல நாடுகளிலிருந்து வந்து சாதாரண மனிதர்கள் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து வாழ முனையும்பொழுது நிமிடத்துக்கு நிமிடம் பிணக்குகளும், பூசல்களும், முடிவில் சிறு மோதல்களும் ஏற்பட்டே தீரும்.

ஸ்ரீ அரவிந்தரையும் அன்னையையும் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டு ‘ஆரோவில்’ என்ற உலகப் பொது நகரில் வாழ்ந்துறையும் பன்னாட்டு மக்கள், அவ்வாறு ஏற்படும் சிறு மோதல்களை ஸ்ரீ அரவிந்தரின் பொன்னொளிக்குச் சமர்ப்பித்துத் தீர்வு காண முயலும்பொழுது உலகில் பெரு மோதல்கள் தவிர்க்கப் படுகின்றன. இந்த முயற்சி முழு வெற்றி அடைவதற்காகவே அன்னை ஆரோவில்லுக்குத் தலைவர் என்ற ஒருவரை நியமிக்கவில்லை; சட்ட திட்டம் எதையும் ஏற்படுத்தவில்லை. அங்குள்ளவர்கள் தம் தம் உள்ளொளிக்கே கட்டுப்பட்டவர்கள். அந்த உள்ளொளி போராட்டத்திலிருந்து மீண்டு வெற்றி பெற்றால், அது உலகத்துக்குக் கிடைக்கும் மாபெரும் வெற்றியாகும்.

1926–இல் ஸ்ரீ அரவிந்தாசிரமத்தை நிறுவிய அன்னை, ‘எதிர்காலத்தில் பொன்னொளியாக ஜோதி உலகை நோக்கி வரும் பொழுது, அதை ஏற்றுத் தக்க வைத்துக் கொள்ள ஓர் இடம் தேவை’ எனக் கருதி அவ்வொளி தங்கி இருக்கத் தேவையான சூழ்நிலைகளை ஏற்படுத்த முற்பட்டார். அதற்காக நிறுவப் பட்டதுதான் ஸ்ரீ அரவிந்தாசிரமம். ஒளி உறைய வேண்டிய இடம் மிகத் தூய்மையாக இருக்க வேண்டும் அல்லவா? அதனாலேயே அன்னை தூய்மைக்கு முதல் இடம் கொடுக்கின்றார்.

ஆசிரமம் தொடங்கப்பட்ட அடிநாளில், ‘அன்னை எங்களுக்கெல்லாம் புத்தகங்களையும், பொருட்களையும் எப்படி





அடுக்கி வைப்பது என்பதைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்து அதிலிருந்து சுத்தம், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றையும் பயிற்றுவித்தார்’ என்று 96 வயதுவரை வாழ்ந்த சாதகர் ஒருவர் கூறியிருப்பதன் மூலம், அன்னை தூய்மைக்குக் கொடுத்த முக்கியத்துவம் நன்கு புரிகின்றது.

“இன்று ஆசிரமத்தில் இருக்கும் நீங்கள் அனைவரும் என் முற்பிறவிகளிலும் கூடவே இருந்தவர்கள். ‘இறைவன் பூவுலகிற்கு வந்து தன் தெய்வீக சத்தியத்தை நிலை நாட்டும்பொழுது நாங்களும் உங்களுடன் இருக்குமாறு அருள் பாலித்திட வேண்டும்’ என்று நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு பிறவியிலும் என்னிடம் கேட்டுக்கொண்டதால், எல்லாப் பிறவிகளிலும் தொடர்ந்து வந்து, இந்தப் பிறவிக்காக என்னுடன் ஆசிரமத்தில் இருந்து கொண்டு இருக்கின்றீர்கள்!” என்று சாதகர்களிடம் ஒரு முறை கூறினார் அன்னை.

மகான் ஸ்ரீ அரவிந்தரது யோகம் பூரண யோகம். “இந்த யோகம் இறைவனுடைய யோகம்; மனிதன் செய்யும் யோகம் இல்லை. இதை மனிதனால் செய்ய முடியாது. மனிதன் தன்னைப் பூரணமாக இறைவனுக்குச் சரணாகதி செய்த பின்னர், இறைவனே அந்த மனித உடலில் தங்கி யோகத்தை மேற்கொள்கின்றான்” என்று பரிபூரண யோகத்திற்கு விளக்கம் கொடுக்கும் ஸ்ரீ அரவிந்தர், மேலும் சொல்வார்; “நான் யாரையும் இந்த யோகத்தைச் செய்யும்படி அழைப்பதில்லை. ஆண்டவனுடைய அழைப்பு இருக்கின்றது என்பதைத் தீர்க்கமாக உணர்ந்தவர்கள் மட்டுமே இதை ஏற்றுக் கொள்ள முடியும். இந்த யோகத்தை மேற்கொள்ளும்பொழுது, நம்முள் இருக்கும் அனைத்து சக்திகளும் வீரியம் பெற்று இரு கட்சிகளாகப் பிரிந்து போர் தொடுக்கும். அந்தப் போர்க்களத்தை (பொய்ம்மைக்கும் வாய்மைக்கும் ஏற்பட்ட போராட்டத்தை) எதிர் கொள்ளத் தம்மை அர்ப்பணிக்கக் கூடியவர்களால் மட்டுமே இந்த யோகத்தை ஏற்றுக் கொள்ள முடியும்”.

அன்னையைப் பக்தி பூர்வமாக ஏற்றுக் கொண்ட மாத்திரத்தில் வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் அவிழ்வதையும், பிரச்சினைகள் தீர்வதையும், அல்லல்படுத்திக் கொண்டு இருந்த மனம் அமைதி அடைவதையும், நல்ல பெரிய நிகழ்ச்சிகள் எதிர்பாராமல் நிகழ்வதையும் பல அன்பர்கள் கண்கூடாகக் கண்டு இருக்கின்றார்கள். ஒரு கண நேரம் மட்டுமே நினைத்த தம் பக்தன் ஒருவனுக்கு, அவனாலேயே தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாதபடி அவனுடைய மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்த ஓர் ஆசையை அன்னை பூர்த்தி செய்து இருக்கின்றார். தன்னை அறிந்தபிறகு பக்தன் தன் குல தெய்வத்திற்கு ஏதாவது ஒரு பிரார்த்தனை செய்து கொண்டால், அந்தக் குல தெய்வம் இதுவரை பூர்த்தி செய்யாத அந்தப் பிரார்த்தனையை அன்னை அதே தெய்வத்தின் மூலம் இம்முறை பூர்த்தி செய்விக்கின்றார்.

ஓர் அன்பர் காச நோய்க்காக இரண்டு வருடங்கள் பவழ பஸ்பம் சாப்பிட்டார். குணமாகவில்லை. பிறகு ஒரு பத்து வருடங்கள் ஆங்கில வைத்தியம் செய்து பார்த்தார். நோய் அசைந்து கொடுக்கவில்லை. அவருக்கு விரக்தி; வேதனை. இந்த நிலையில் அவர் அன்னையைத் தரிசித்து முறையிட்டார். அதற்கு, ‘‘உங்களுக்கு எந்த மருந்து பிடிக்கிறதோ, அதைச் சாப்பிடுங்கள்’’ என்று மட்டுமே அன்னை கூறினார்.

அன்னையின் வாக்கை மருந்தாக எண்ணிய அந்த அன்பர், நம்பிக்கையுடன் ஏற்கனவே சாப்பிட்ட பவழ பஸ்பத்தை மீண்டும் சாப்பிட்டார். மூன்றே மாதங்களில் காச நோய் அவரைவிட்டு விலகிவிட்டது. பலனே இல்லாமல் இருந்த பவழ பஸ்பத்தில் அன்னையின் அருள் சேர்ந்ததும் நோய் தன்னாலேயே தீர்ந்தது. இங்கே ‘பஸ்பம்’ என்பது ஒரு கருவிதான்.

‘பக்தர்கள் பலவீனமானவர்கள்’ என்பதால், அன்னையின் அருள் விரைந்து செயலாற்றும். சாதகன் என்றால், அவனுக்குச் சட்டம் வேறு.





சாதகன் அன்னையை ஏற்றுக் கொண்டு யோகத்தை மேற்கொண்டவுடன், வாழ்க்கையில் உள்ள எல்லாப் பிரச்சினைகளும் தீவிரம் அடையும். இது நாள்வரை கட்டுப் பட்டிருந்த உள்ளுணர்ச்சிகள் எல்லாம் கட்டு மீறிச் செயல்படும். அதனால்தான் அன்னை சாதகர்களைத் தம் அருகிலேயே வைத்துக் கொண்டு இருந்தார். ஆசிரமத்தில் சேர்ந்தபிறகு சாதகன், அன்னை கொடுக்கும் வேலையைச் செய்ய வேண்டும். அவன் தனக்குப் பிடித்தமான வேலையைக் கேட்கக் கூடாது. அன்னை கொடுக்கும் வேலை பெரும்பாலும் சாதகனுக்குப் பிடிக்காத வேலையாகவே இருக்கும். சமையல் அறைப் பக்கம் எட்டிப் பார்க்கவே பிடிக்காத சாதகனுக்குச் சமையல்கட்டில் வேலை அமையும். அந்நேரத்தில் அன்னையை மட்டும் நினைவில் நிறுத்திக் கொண்டால், சாதகனுக்குள் நடக்கும் அந்தப் போராட்டத்தின் பாரத்தை அன்னை ஏற்றுக் கொள்வார். அதனால் அவனுக்குப் பிடித்தது, பிடிக்காதது என்ற பேதம் நீங்கிப் போகும். அவன் இரண்டு நிமிடம் அன்னையை மறந்து தன்னை நினைக்க ஆரம்பித்துவிட்டால் கோபத்திலும், எரிச்சலிலும் வேக நேரிடும்.

ஆசிரமத்தில் இன்று பல தொழில்கள் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. அவை தொழில் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. சாதகர்கள் யோகம் செய்வதற்கு அவை தேவைப்பட்டன. அந்த நோக்கோடு அன்று அன்னையால் தொடங்கப்பட்ட ஒவ்வொரு தொழிற்கூடமும் யோகக் கூடமே.

‘எந்தச் செயலையும் சிறப்பாகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போதுதான் இறையொளி அதன் மூலம் வெளிப்படுகின்றது’ என்பது அன்னையின் கோட்பாடு. அன்னை ஓர் அச்சகத்தை அமைத்து ஆசிரமத்தின் வெளியீடுகளைக் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தார். அந்த அச்சகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற ஒரு பேராசிரியர் வேலை செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் நடைபெற இருந்த அகில

இந்தியத் தத்துவ மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அது அச்சகம் ஆரம்பித்த தொடக்க காலம். அங்கே வசதிகள் இல்லை. மேஜை, நாற்காலிகளும் இல்லை. அந்தப் பேராசிரியர் சேவை மனப்பான்மையோடு அந்தத் தொண்டை செய்ததால், வசதிக் குறைவைப் பற்றி அவர் நினைத்துப் பார்த்ததே இல்லை. அவர் தம்முடைய மாநாட்டுத் தலைமை உரையை ஒரு பெட்டியில் உட்கார்ந்து கொண்டு, இன்னொரு பெட்டியின் மீது எழுதித் தயாரித்தார். அன்று மிக மிகச் சிறிய அளவில் தொடங்கப்பட்ட அந்த அச்சகம் பிறகு பெரிய அளவில் வளர்ந்து, அச்சுத் தரத்திற்காகவும், தயாரிப்புத் தரத்திற்காகவும் இரு முறை அகில இந்திய அளவில் முதற் பரிசைப் பெற்றது.

1950வரை–அதாவது மகான் ஸ்ரீ அரவிந்தர் இருந்த வரை–அன்னை ஆசிரம வேலைகளில் முழுக்கக் கவனம் செலுத்தினார். ஸ்ரீ அரவிந்தர் அவற்றிலிருந்து முற்றும் விலகி யோகத்தில் ஈடுபட்டிருந்தார். ‘யோகப் பொறுப்புகள்’ என்று வரும்பொழுது, ஸ்ரீ அரவிந்தர் அவற்றை அன்னையின் மூலம் ஏற்றுக் கொண்டார். 1930–இல் சுமார் 150 சாதகர்கள் மட்டுமே இருந்தார்கள். அப்பொழுது அன்னை, “சாதகர்களின் உள்ளுணர்வு களையும், எல்லாச் செயல்களையும் நான் என் கைக்குள் அடக்கி வைத்து இருக்கிறேன்” என்று கூறினார். பிற்காலத்தில் சாதகர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் பெருகிவிட்டது. என்றாலும் சாதகர்களின் எண்ணமும், செயலும் அன்னையின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கின.

1920–இல் புதுவைக்கு நிலையாக வந்த அன்னை, 1942 வரை தம் பெருஞ்செல்வத்தைக் கொண்டு ஆசிரமத்துச் செலவுகளைச் செய்து வந்தார். சாதகர்கள் ஆசிரமத்தில் சேரும்பொழுது தங்கள் சொத்துகளை அன்னைக்குப் பூரணமாக அர்ப்பணிப்பது வழக்கம். மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்ட ஆசிரமத்தின் செலவுகளுக்கு, அவ்வாறு கிடைத்த செல்வமும் பயன்படுத்தப்பட்டது.





1950–இல் மகான் ஸ்ரீ அரவிந்தரின் யோகம், அவரைப் பொறுத்த வரையில் சித்தித்துவிட்டது. ஆசிரமம் ஏற்படுத்தியதன் நோக்கம் ஓரளவு பூர்த்தியாகிவிட்டது. ஸ்ரீ அரவிந்தருக்குப்பின் அன்னையே ஆசிரமப் பொறுப்போடு சேர்த்து யோகப் பொறுப்பையும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அதனாலும், ஆசிரமம் ஏற்பட்டதன் நோக்கம் ஓரளவு பூர்த்தியாகிவிட்டாலும், அன்னை அதிக அளவில் சாதகர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. 1973–இல் அன்னை சமாதி அடையும்வரை இந்நிலையே நீடித்து வந்தது.

அன்னை தம் இறுதிக் காலத்தில் ஆசிரமத்தில் சேர விரும்பிய பிரெஞ்சுக்காரர் ஒருவருக்கு, “அது தேவை இல்லை. இருக்கும் இடத்திலேயே யோகத்தை மேற்கொள்ளலாம்” என்று பதில் அளித்துவிட்டு, மேலும் கூறினார்: “நீங்கள் இனிமேல் ஆசிரமத்தில் சேர்ந்தால், உங்கள் ஜீவனின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் சிரமங்கள் கட்டுக்கு அடங்காமல் வெளிப்படும். நீங்கள் வெளியில் இருக்கும்பொழுது, அந்தச் சிரமங்கள் உங்களுக் குள்ளிருந்து கிளர்ந்து வாராமல், வெளியிலிருந்து பிரச்சினைகளின் உருவில் வரும். உள்ளிருந்து கண்ணுக்குத் தெரியாமல் வரும் சிரமங்களைச் சமாளிக்க மனித சக்தியால் இயலாது. ஆனால், கண்ணுக்குத் தெரிந்து வெளியிலிருந்து வரும் பிரச்சினைகளை மனித சக்தியால் எதிர்கொள்ள முடியும்; வெல்லவும் முடியும்”.

“ஸ்ரீ அரவிந்தாசிரமம் அமைந்துள்ள இடம், அகத்திய முனிவர் சமாதியான அருள்தலம்” என ஓர் ஆராய்ச்சி நிபுணர் கூறி இருக்கின்றார். “அப்படித்தான் இருக்க வேண்டும்” என்று உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் நிறைய இருக்கின்றன. மேலும், அங்கே முத்திரை பதித்து இருக்கின்றது அமைதி. அங்கே அருட்கொலு இருக்கின்றது. காலம் காலமாக அகத்தியரைப் போன்ற முனிபுங்கவர்கள் யோகம் செய்து புனிதப்படுத்திய புதுவை மண்ணுக்கு, ஸ்ரீ அரவிந்தர் பொன்னொளியைக் கொண்டு வந்து சேர்த்தார்; அமைதியைப் பயிர் செய்து அந்த மண்ணில் நல்வண்ணம் இழைத்தார்.

ஜவஹர்லால் நேரு முதல் தடவையாகப் புதுவைக்கு வந்தபொழுது "புதுச்சேரியில் எங்கும் இல்லாத அமைதி தவழ்கின்றது" என்றார்.

பெருந்தொழில் அதிபர் ஜே.ஆர்.டி. டாடா ஆரோவில்லுக்கு வருகை தந்தபொழுது, "இங்கே உயர்ந்த சந்தோஷம் குடி கொண்டிருக்கின்றது" என்றார்.

"ஆசிரமத்தில் என்னதான் நடக்கிறது?" என்று வேடிக்கை பார்க்க வந்த ஓர் 70 வயதுக் கிழவர் அங்கே வசித்த கிழவர்கள் எல்லாம் தடி ஊன்றாமல் நிமிர்ந்து நடப்பதைப் பார்த்து வியந்து, "அது எப்படி?" என்று கேட்டார்.

இதில் வியப்பு ஏதும் இல்லை. டாடா கூறியதைப் போல அங்கே உயர்ந்த (தெய்வீக) சந்தோஷம் இருக்கின்றது. அந்தத் தெய்வீக இன்பத்தில் இருப்பவர்கள் நிமிர்ந்துதானே நடப்பார்கள்?

அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த ஒரு வேத விற்பன்னர் ஆசிரமத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு, "இங்கே வசிப்பவர்களின் முகம் பிரகாசமாக இருக்கின்றது. மற்ற யோகங்களில் எதைக் கடைசி இலட்சியமாக நாடுகின்றார்களோ, அதை இங்கு ஆசிரமத்திலேயே பெற்று இருக்கின்றார்கள். இது பெரிய அதிசயம்" என்றார். அது அதிசயம்; ஆனால், உண்மை.

"ஸ்ரீ அரவிந்தாசிரமம் என்பது எது?" என்ற ஒரு கேள்விக்கு விளக்கம் அளிக்கும் வகையில் ஒரு முறை ஸ்ரீ அரவிந்தர் கூறினார்; "ஆசிரமம் என்பது நான் இருக்கும் இந்தக் கட்டிடத்தை மட்டும் அன்று; சாதகர்கள் உள்ள எல்லா இடங்களையும் குறிக்கும், சாதகர்கள் எங்கு இருந்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும் அவர்கள் உள்ள எல்லா இடங்களுமே ஆசிரமந்தான்".

✶✶✶



# 3. தரிசனமும் தகவல்களும்

"விசேடமான நாட்களில் தவறாது கோயிலுக்குப் போக வேண்டும்" என்பது நம் நாட்டு வழக்கம். "வெள்ளிக்கிழமைகளில் கோயிலுக்குப் போவது மிகவும் நல்லது" என்று கருதப் படுகின்றது. "ஒவ்வொருவரும் தம் பிறந்த நாள் அன்று கோயிலுக்குச் செல்ல வேண்டும்" என்று பெரியவர்கள் கூறுவார்கள். அந்த நாட்களில் சுவாமிக்கு அர்ச்சனை செய்வது நம் வழக்கம். பூஜா காலங்களில் அர்ச்சகர் பூஜையை முடித்து விட்டு, கோயிலுக்கு வந்திருக்கும் பக்தர்களுக்கு விபூதி, குங்குமம், தீர்த்தம், தளம் முதலிய பிரசாதங்களை வழங்குவார். இவை யாவும் நம் மரபில் வந்தவை.

அவதார மூர்த்திகளாகிய அன்னையையும் ஸ்ரீ அரவிந்தரையும், ஸ்ரீ அரவிந்தாசிரமத்தில் அடக்கம் செய்து சமாதி எழுப்பி இருக்கின்றார்கள். ஒரே சமாதியில் இருவருடைய உடல்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. "பக்தியோடும், நம்பிக்கையோடும் இந்த சமாதியைத் தரிசிக்கச் செல்கின்றவர்களுக்கு எல்லா விதங்களிலும் மனத் தெளிவு மிகத் தேவை" என்பதை உணர வேண்டும்.

"சமாதியைத் தரிசிக்கச் செல்லும்பொழுது கையில் ஏதேனும் கொண்டு போக வேண்டுமா? சமாதியை அடைந்த பின் செய்ய வேண்டிய சடங்குகள் என்ன என்ன? சமாதியைத் தரிசிப்பதால் ஏற்படும் பலன்கள் யாவை? என்பன போன்ற கேள்விகள் எழுவது இயற்கையே. அங்கு விக்கிரகமோ, அர்ச்சகரோ, அர்ச்சனையோ எவையும் கிடையா".

அது சமாதி. சமாதி முழுதும் அழகான பல வண்ண மலர்கள் நிறைந்திருக்கும். தியான மண்டபத்தில் அன்னையின் படுக்கை இருக்கிறது. அங்கு நம் மரபின் வழியாய் வந்த பூஜை முறைகள் எவையும் கடைப்பிடிக்கப்படுவது இல்லை. மரபில்

வந்தவர்களுக்கு இது ஏதோ ஒரு வினோதமான இடமாகத் தோன்றலாம்; எளிதில் புரிந்து கொள்ள முடியாத 'சிதம்பர ரகசிய'மாகவும் தோன்றலாம்.

அப்படி இல்லை.

பிறகு ஏன் அத்தகைய வித்தியாசமான சூழ்நிலை?

பொது மக்களிடையே சமய உணர்வை உயிர்ப்பிப்ப தற்காகவும், வளர்ப்பதற்காகவும் தோன்றியவை கோயில்களும், அங்கு நிகழ்த்தப்பெறும் பூஜைகளும். ஆத்ம ஞானத்தினை வளர்த்து, அதைப் பக்குவப்படுத்துவது ஆசிரமம். மத நம்பிக்கையை வளர்ப்பது கோயில். 'கோபுர தரிசனம் பாவ விமோசனம்' என்பார்கள். சமாதிதரிசனமோ ஆன்மாவையும் இறைவனையும் ஒன்றுபடுத்துகின்றது. 'ஆத்ம அனுபவத்தைத் தரும் இடம் சமாதி' என்று அன்னை கூறியுள்ளார்கள்.

ஒரு சமயம் ஆசிரமத்தைப் பார்ப்பதற்குச் சிலர் வந்திருந்தார்கள். அவருள் மணமாகாத ஒரு பெண்ணும் இருந்தாள். நாள் தோறும் ஸ்ரீ அரவிந்தருடைய அறை பக்தர்களுக்காகத் திறக்கப்படும். காலை 11.45 அளவில் அறை திறக்கப்பட்டவுடன் பக்தர்கள் அங்கு போய்த் தரிசனம் செய்து வருவார்கள். முன் குறிப்பிட்ட பக்தர்களும் 11.45க்கு அறைக்குச் செல்லத் தயாராக இருந்தார்கள். அதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னால் அந்தப் பெண், சமாதியின் அருகில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்துவிட்டாள். மணி 11.40 ஆகி விட்டது. அவள் தியானத்தை முடித்தபாடாக இல்லை. மற்றவர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. பொதுவாக, தியானத்தில் ஆழ்ந்து இருப்பவர்களைக் கலைத்து எழுப்புவது சரி இல்லை. அது அவர்களுக்குப் புரிந்தது. அந்தப் பெண்தான் தியானம் கலைந்து சமாதியைவிட்டு எழுந்திருக்க வேண்டும்.

அவளைச் சேர்ந்தவர்கள், 'அவள் சமாதியைவிட்டு உடனே எழுந்திருக்க வேண்டும்' என்று நினைத்தவர்களாய், அவள்





அருகே நின்று கொண்டு இருந்தார்கள். யாரும் அவளை அணுகி, 'தியானத்தை முடித்துக்கொள்' என்று கூறவில்லை.

அந்த நேரத்தில் அவள் கண்களைத் திறந்து அவர்களை நோக்கி "நான் இதுவரை பேரானந்தத்தில் மூழ்கி இருந்தேன். கண்களைத் திறக்கவே எனக்கு மனம் இல்லை. நீங்கள் என்னை அழைக்கவே, நான் தியானத்தை முடித்துக் கொண்டேன்!" என்று கூறிக் கொண்டே எழுந்தாள்.

உண்மையில், யாருமே அவளை அழைக்கவில்லை. ஆனால், அப்படிச் சொன்னாளே, எதனால்? மற்றவர்கள், 'அவள் சமாதியை விட்டு உடனே எழுந்திருக்க வேண்டும்' என்று நினைத்தது, அவளுக்கு 'அழைத்ததாக'த் தோன்றி இருக்கின்றது! சமாதியின் அருகில் அமர்ந்து தியானத்தில் மூழ்கி இருந்ததால், மற்றவர்கள் நினைத்தது அவர்கள் கூறாமலே அவளுக்குப் புரிந்துவிட்டது. இதுதான் சமாதியின் சக்தி.

இனி சமாதிக்கு வரும் அன்பர்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சிறிதே சிந்திப்போம். சமாதிதரிசனத்திற்கு வருபவர்கள் உணர்வின் அலைப் பாய்ச்சல்களிலிருந்து முழுதும் விடுபட்டவர்களாகவும், ஒருமுகப்பட்ட சிந்தனையோடும் வந்தால், தியானத்திலும், அந்தச் சூழலிலும் மனம் ஒன்றித் திளைக்க முடியும். வரும் அன்பர்கள் அன்னையை மட்டுமே நெஞ்சம் முழுதும் நிறைத்துக் கொண்டு மற்றவற்றை அறவே களைந்துவிடல் வேண்டும். அது இயலாவிட்டால், மனத்தை அமைதியாகவாவது வைத்துக் கொண்டு வரவேண்டும். சமாதிக்கு வரும்பொழுது நல்ல வாடாத மலர்களையும், நறுமணம் நிறைந்த ஊதுபத்திகளையும் கொண்டு வந்து சமாதியில் வைத்து வணங்க வேண்டும்.

ஆசிரமத்தில் விசேடமான நாட்கள் எனக் கருதப்படுபவை: ஜனவரி 1–ஆம் தேதி; பிப்ரவரி 21, 29–ஆம் தேதிகள்; ஏப்ரல் 24–ஆம் தேதி; ஆகஸ்ட் 15–ஆம் தேதி; நவம்பர் 17, 24–ஆம் தேதிகள்; டிசம்பர் 5–ஆம் தேதி.

ஜனவரி 1–ஆம் தேதியை 'சுபிட்ச தினம்' என்று கூறுகின்றார் அன்னை. பிப்ரவரி 21–ஆம் தேதி அன்னையின் பிறந்த நாளாகும். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிப்ரவரிக்கு 29 தேதிகள் வரும். இதை 'லீப்' வருடம் என்பார்கள். இப்படி வாராது போல் வரும் பிப்ரவரி 29–ஆம் தேதி, 'சுத்த தெய்வ சக்தி பூமியில் வந்து தங்கும் நாள்' என்று சொல்லப்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'சூப்ராமென்டல் டே' **(Supramental day)** என்பர். ஏப்ரல் 24, அன்னை பாண்டிச்சேரிக்கு வருகை தந்த நாளாகும். ஆகஸ்ட் 15–ஆம் தேதி ஸ்ரீ அரவிந்தர் பிறந்த நாள். நவம்பர் 17–ஆம் தேதி அன்னை சமாதியான புனித தினம். நவம்பர் 24–ஆம் தேதி ஸ்ரீ அரவிந்தர் மேற்கொண்ட யோகத்தில் ஓர் அடிப்படையான திருப்பம் ஏற்பட்ட நாள். இந்நாள் 'வெற்றித் திருநாள்' என அழைக்கப்படுகின்றது. டிசம்பர் 5–ஆம் தேதி ஸ்ரீ அரவிந்தர் சமாதியான நாள்.

இந்த விசேட நாட்களில் ஆசிரமத்தில் உள்ள சாதகர்களும், அன்பர்களும் சமாதியின் அருகில் கூடித் தியானம் செய்வது வழக்கம். இந்த நாட்களில் ஸ்ரீ அரவிந்தர் அன்னை வாசம் செய்த அறைகளுக்குச் சென்று தரிசனம் செய்வதற்கு சாதகர்களும், அன்பர்களும் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

ஆசிரமத்தில் பார்க்க வேண்டிய இடங்கள்: அன்னை ஸ்ரீ அரவிந்தர் சமாதி; தியான மண்டபத்தில் வைக்கப் பட்டிருக்கும் அன்னையின் கட்டில் (இந்தக் கட்டிலில்தான் அன்னை 1973–ஆம் ஆண்டு நவம்பர் 17–ஆம் தேதி சமாதியானார்கள்). இவற்றைத் தவிர ஸ்ரீ அரவிந்தரின் அறை. ஸ்ரீ அரவிந்தர் தன் இறுதி நாள்வரை வாசம் செய்த இந்த அறை, ஒவ்வொரு நாளும் காலை 11.45க்குத் திறக்கப்பட்டு, அன்பர்களும் சாதகர்களும் அனுமதிக்கப்படுகின்றார்கள். இங்கு செல்ல முன்னதாகவே அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 'வரவேற்பு அறை' என்ற பிரிவில் விசாரித்தால், 'அனுமதிச் சீட்டை எங்கு பெற வேண்டும்?' என்ற விவரத்தைச் சொல்வார்கள்.





ஆசிரமத்தில் இயங்கி வரும் வரவேற்புப் பிரிவு, வருகின்ற அன்பர்களுக்குத் தேவையான விவரங்களைக் கொடுத்து உதவி செய்து வருகின்றது. தரிசன காலங்களிலோ, மற்ற நாட்களிலோ ஆசிரமத்தில் வந்து தங்க வேண்டும் என்று அன்பர்கள் விருப்பப்பட்டால், அதற்கு ஆசிரமத்தில் உள்ள வரவேற்புப் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. நேரிலோ, கடிதம் மூலமோ வரவேற்புப் பிரிவோடு தொடர்பு கொண்டால், தங்குவது சம்பந்தமான எல்லா விவரங்களும் கிடைக்கும். ஆசிரமத்தில் விருந்தினர் மாளிகைகள் பல இருக்கின்றன. அன்பர்களுடைய வசதிக்கேற்ப, அங்குத் தங்குவதற்கு வகை வகையான அறைகள் வாடகைக்குக் கிடைக்கும். உணவுக்கு ஆசிரமத்தைச் சேர்ந்த உணவுக் கூடம் ஏற்பாடு செய்கின்றது. 'ஒரு நாளைக்குத் தேவையான உணவு இவ்வளவு' என்று நிர்ணயிக்கப்பட்ட சீட்டை முன்கூட்டியே வாங்கிக் கொள்ள வேண்டும். இதற்கும் வரவேற்புப் பிரிவு உதவுகின்றது.

சமாதியில் சூழ்ந்துள்ள புனித அமைதி, ஆசிரமத்தோடு மட்டுமன்று; ஆசிரமத்தைச் சுற்றிப் பல மைல்கள் தூரம் வரையில் வியாபித்து இருப்பதையும் நாம் உணரலாம். ஒரு சமயம், நம் மறைந்த பாரதப் பிரதமர் நேரு அவர்கள் ஆசிரமத்திற்கு வருகை தந்தார். அப்பொழுது அவர், இந்த அமைதியினைத் தாம் உணர்ந்ததாகக் கூறினார்.

ஓர் அமெரிக்க இளைஞர் விமானத்தில் இந்தியாவுக்குப் பறந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது விமானத்தில் இந்தியாவை நெருங்கிக் கொண்டிருக்கும் செய்தியை அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பைக் கேட்டவுடன், தாம் ஓர் அமைதிச் சூழலில் பிரவேசிப்பதை உணர்ந்ததாகக் கூறியுள்ளார் அந்த இளைஞர். அவர் அன்னையைத் தரிசிப்பதற்காகவே அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டு இருந்தார். அவரைப் போலவே பல அன்பர்களும், 'இப்படிப்பட்ட ஓர் அமைதிச் சூழலை வேறு எங்கும் உணர முடிவதில்லை' என்று அனுபவ பூர்வமாகக் கூறி இருக்கின்றார்கள்.

◆ ◆ ◆

# 4. அன்னையும் இந்திரா காந்தியும்

பகவான் ஸ்ரீ அரவிந்தர் பரம்பொருளின் அவதாரம் ஆவார். 'எண்ணிலா உலகங்களுக்கும், தேவர்களுக்கும், கடவுள்களுக்கும் தாயாக விளங்கும் ஆதி பராசக்தியே அன்னையாக அவதரித்துள்ளார்' என்று அன்னையை அடையாளம் காட்டுகின்றார் ஸ்ரீ அரவிந்தர்.

அன்னை மேற்கொண்டிருந்த பணி மிக உன்னதமான ஒரு பணியாகும். 'மனிதன் தெய்விக நிலைக்கு உயர்ந்து கடவுளரையும் கடந்து நிற்க வேண்டும்' என்பது அவருடைய பணியின் நோக்கமாகும்.

எக்காரணத்தை முன்னிட்டாவது அன்னையிடம் வரும் அன்பர்களின் விருப்பங்களை, 'அவர்கள் வெளியிட வேண்டும்' என்று காத்திராமல், அவர் அதைப் பூர்த்தி செய்து அருள் பாலிப்பதுண்டு.

இப்பண்பு உலக வரலாற்றில் காண இயலாத ஒன்றாகும். முறையிட்டு தவம் செய்து, வேண்டுகோள் விடுத்து தம்முடைய விருப்பத்தை ஒருவர் பூர்த்தி செய்து கொள்வது உலக வழக்கு. அது மட்டுமன்று; பக்தனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கும் தெய்வம், அவ்வாறு செய்வதற்குப் பல நிபந்தனைகள் விதிப்பதும் உலக வழக்கே. கேட்காமலே கொடுக்கும் தெய்வத்தைப் பற்றி நாம் இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஆனால், அன்னை கேட்காமலே கொடுப்பவர்!

தமிழ்ப் பண்டிதர் ஒருவரின் மனைவி அடங்காப் பிடாரி. அவள் தன் கணவரோடு சண்டை போட்டுக் கொண்டு பிறந்த வீட்டிற்குச் சென்று நீண்ட காலமாகத் தங்கிவிட்டாள். அவள் திரும்பி வரும் நோக்கத்தில் இல்லை. அதனால் பண்டிதர் வாழ்க்கையில் மிகவும் விரக்தி அடைந்து போயிருந்தார்.





அவர் தற்செயலாக அன்னையைத் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்பொழுது அவருக்கு அன்னையைப் பற்றி எதுவும் தெரியாது. அவர் அன்னையை வேண்டிக் கொள்ளவும் இல்லை. ஆனால், அவர் அன்னையைத் தரிசித்த சில நாட்களுக்குள் அவருடைய மனைவி தன்னாலேயே அவரைத் தேடி வந்துவிட்டாள்.

அவ்வாறு அன்னையிடம் கொஞ்சமாகக் கேட்டு நிறையப் பெற்றவர் மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி.

1971–ஆம் ஆண்டு 85 ஆண்டுகளாக அடர்ந்த ஆல மரமாக இருந்த காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது.

அப்பொழுது இந்திரா காந்தி பாரதப் பிரதமராக இருந்தார். பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்த் தரப்பில் சேர்ந்துவிட்டார்கள். ஆகவே இந்திரா காந்திக்குப் போதுமான பலம் இல்லாமற் போயிற்று. அதனால் அவர் தி.மு.க வினர் ஆதரவை நாட வேண்டி இருந்தது. 25 தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்திரா காந்திக்குத் துணையாக நின்று பாராளுமன்றத்தில் அவருக்குத் தேவையான பலத்தைக் கொடுத்து வந்தனர்.

இந்த உதவி பறி போகாமல் இருக்க இந்திரா காந்தி ஒவ்வொரு நிமிடத்தையும் அச்சத்தோடு ஓட்டும்படியாக இருந்தது. எனவே அவருடைய அரசியல் எதிர்காலம் நிச்சயம் இல்லாமல் இருந்தது.

இதிலிருந்து விடுபட அவருக்கு ஒரே வழிதான் இருந்தது. மீண்டும் தேர்தலை நடத்தி மக்களின் பூரண ஆதரவைப் பெறுவதுதான் அந்த ஒரே வழி. ஆனால், 'தேர்தலை நடத்தினால் தமக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது நிலை இதைவிட மோசமாகிவிடுமா?', என்று குழம்பினார் அவர்.

அந்த நேரத்தில் இந்திரா காந்திக்கு நெருக்கமானவரும், அவருடைய அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்தவருமான

ஒரு பெண்மணி, "நீங்கள் அன்னையைத் தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டால் தேர்தலில் உங்களுக்குப் பூரண ஆதரவு கிடைக்கும்" என்று அவருக்கு ஆலோசனை வழங்கினார்.

அந்த ஆலோசனையை ஏற்று அன்னையைத் தரிசிக்க பாண்டிச்சேரிக்குப் புறப்பட்டு வந்தார் இந்திரா காந்தி.

இந்திரா காந்தி அன்னையைத் தரிசிப்பதற்காக அறைக்குள் நுழைந்து வணங்கினார். அவருக்காகவே போடப்பட்டிருந்த நாற்காலியில் அமரும்படி கூறினார் அன்னை.

"நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் எங்கள் கட்சி 250 இடங்களில் வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைக்குமா? 250 இடங்கள் கிடைக்காவிட்டால் எங்கள் கட்சி ஆட்சியை அமைக்க முடியாது" என்று அன்னையிடம் கூறினார் இந்திரா காந்தி.

அவரைத் தம் பார்வையால் பூரணமாகத் தழுவிக் கொண்டு, பெரும்புன்னகை ஒன்றைப் பூத்தார் அன்னை. இவ்வாறு நிகழ்ந்தால், 'அன்னை அன்பரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஆசீர்வதித்துவிட்டார்' என்று பொருள். 'தேவையான ஆதரவு கிடைக்கும்' என்பதற்கு அடையாளமாகப் பலமாகத் தலை அசைத்தார் அன்னை. அது மட்டுமன்று; "நிச்சயமாகக் கிடைக்கும்" என்று தெளிவாகவும் அவர் பதில் அளித்தார்.

கேட்டது 250! கிடைத்ததோ 350! தேர்தல் முடிந்தது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு இந்திரா காந்திக்குக் கிடைத்துவிட்டது.

"கேளுங்கள், கிடைக்கும்!" என்பது நாம் அறிந்த நடைமுறை வழக்கு. ஆனால், அன்னையைப் பொறுத்த வரையில், "வேண்டுங்கள்! வான் மழை போல் வரையில்லாது வழங்கப்படும்" என்பது நாம் அன்றாடம் காணும் அனுபவம்.

◆ ◆ ◆



# 5. ஸ்ரீ அரவிந்தரின் யோகம்

மகான் ஸ்ரீ அரவிந்தர் மகாசமாதி அடைந்தபொழுது அவருடைய உடலில் ஜகஜ்ஜோதியான பொன்னொளி பரவி மூன்று நாட்கள் வரையில் தங்கியிருந்து மறைந்தது. அவரது ஆயுட்காலத்தில் அவருடலில் இருந்திராத இப்பொன்னொளி மகாசமாதி அடைந்தபின், அவர் உடலில் புகுந்தது. மரணம், வறுமை, மூப்பு, நோய், துன்பம் போன்றவற்றையும், இவற்றிற் கெல்லாம் அடிப்படையான பொய்மையையும் உலகிலிருந்து நிரந்தரமாகவும், அடியோடும் அழித்துவிடக் கூடிய சக்தி பெற்றது இப்பொன்னொளி. பன்னெடுங்காலம் தவமிருந்து தம் யோக முயற்சியால் இவ்வொளியைத்தான் உலகிற்குக் கொண்டுவரப் பாடுபட்டார் ஸ்ரீ அரவிந்தர்.

'ஆத்மாவைப் பிறவிச் சுழலிலிருந்து விடுவித்து மோட்சம் அடையச் செய்வது' என்பதே எல்லா யோகங்களின் இலட்சியமாகும். இறைவன் ஆத்மாவைச் சிருஷ்டித்தது உலகில் சத்தியத்தின் அடிப்படையில் வாழ்க்கையை அமைப்பதற்குத்தானே தவிர, அதிலிருந்து விடுபட்டுப் பிறப்பிடமான மோட்ச லோகத்தை வந்து அடைவதற்கன்று. பகவான் புத்தரும், சுவாமி விவேகானந்தரும் மோட்ச லோக வாசலை வந்தடைந்தபொழுது, இறைவனின் இலட்சியத்தை நினைவு கூர்ந்து, 'உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் மோட்சம் கிடைக்கும்வரை, தங்களுக்கும் அந்த மோட்சம் தேவை இல்லை' எனக் கூறி, வாராது போல் வந்த மோட்சத்தை மறுத்துவிட்டார்கள்.

புருஷனாகிய ஆத்மா பிரகிருதியுடன் கலந்தும், பின்னியும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. ஞான யோகி தன் ஆத்மாவுக்கு மோட்சம் வேண்டி, பிரகிருதிக்கு அடிமைப்பட்டு உழல்கின்ற புருஷனை அதிலிருந்து பிரிப்பதற்காக, பிரகிருதியின் வாயில்களான

புலன்களை அவித்து தியானத்தின் தீவிரத்தால் புருஷனைப் பிரகிருதியிடமிருந்து பிரித்து வெற்றி காண்கிறான். அவ்வகையில் விடுதலை அடைந்த ஆத்மா, தன் பிறப்பிடமான பரம்பொருளை –இறைவனை–விரைந்து அடைகின்றது. விடுதலை அடைந்தபிறகு (இதுவரை பிரகிருதியின் பிடியில் சிக்கி, உடலின் அடிமையாகக் கட்டுண்டு இருந்த ஆத்மா) இந்த உடலிலேயே தங்கி இருக்க விரும்பினாலும், தூய்மையற்றதான உடலும், மனமும் ஆத்மாவின் விருப்பத்தைச் செயல்படுத்தத் தடையாகிவிடுகின்றன. எனவே இறைவனின் சத்திய ஆட்சியைத் தூய்மைப்படுத்தப்பட்ட தன் ஆத்மா மூலம் நிலை நாட்ட முனையும் பூரண யோகத்துக்கு ஞான யோக முறை–பிரகிருதியைப் பிரிக்கும் முறை–பயன்படாது.

ஸ்ரீ அரவிந்தரின் யோகம் ‘பூரண யோகம்’ எனப்படும். இதன் இலட்சியம் இறைவனின் பணியை உலகில் பூர்த்தி செய்வதாகும். அவ்வேலையைச் செய்வதற்கு விடுதலை அடைந்த ஆத்மா, உடலிலேயே தங்கியிருக்க வேண்டும். ஆகையால் இந்த யோகத்தில் ஆத்மாவுக்கு விடுதலை கொடுப்பதற்குமுன்பு, உடலுக்கும் மனத்துக்கும் பொய்ம்மையிலிருந்து பூரண விடுதலை அளிக்க வேண்டும். உடலையும் மனத்தையும் தூய்மைப் படுத்துவதன் வாயிலாக ஆத்மாவுக்குப் பிரகிருதியிலிருந்து விடுதலை கிடைக்க முயல்வது இந்த யோக நெறியின் நோக்கமாகும்.

ஆத்மா இறைவனின் கருவி. அகங்காரம் இருளின் கருவி. உடலையும், மனத்தையும் அகங்காரத்தினின்று விடுவித்தால், அதை ஏவிய கருவியாகிய இருள் அழிந்து போகின்றது. அதன் மூலம் ஆத்மாவைக் கவிந்துள்ள ஆணவ மலம் விலக்கப்படுகின்றது. ஆத்மா பொய்ம்மையிலிருந்தும், அதன் வாயிலாகப் பிரகிருதியி லிருந்தும் விடுதலை அடைகின்றது. பொய்யான எண்ணங்கள், உணர்ச்சிகள், செயல்கள் எல்லாம் அகங்காரத்தின் பல கூறுகள். அவற்றை ஆத்ம ஒளிக்குச் சமர்ப்பித்துச் சரண் அடைவதன் மூலம், தூய்மையான உடலும், தூய்மையான மனமும் கிடைக்கின்றன. ஆத்மாவுக்கு விடுதலை கிடைக்கின்றது. சரணாகதி முழுமையாகும்





நிலையில் அகங்காரம் முழுதுமாக அழிந்துபடுகின்றது. அந்நிலையில் ஆத்மாவுக்குப் பூரண விடுதலை கிடைக்கின்றது. இத்தன்மை படைத்த விடுதலை பெற்ற ஆத்மா, இறைவனுக்குக் கருவியாகச் செயல்பட விரும்பி உலகிலேயே தங்க முடிவு செய்தால், அதற்குத் தக்க இருப்பிடமாக அமைந்த ஒரு தூய்மையான உடல் இப்பொழுது அந்த ஆத்மாவுக்கு உண்டு.

மகான் ஸ்ரீ அரவிந்தர் தம் யோகத்திற்கு ஒரு புதுக் குறிக்கோளையும் அளிக்கின்றார். ‘ஆத்மா என்பது ஒவ்வொரு மனிதனிடமும் இறைவனின் பிரதிநிதியாக இருக்கின்றது’ என்பதை நாம் பொதுவாக அறிவோம். யோக மரபுப்படி உலகத்துக்கு ஓர் ஆத்மா உண்டு; பிரபஞ்சத்திற்கும் ஓர் ஆத்மா உண்டு **(Universal Soul).** ஸ்ரீ அரவிந்தர், ‘மனிதனுடைய ஆத்மாவுக்கு இந்த இரண்டு அம்சங்களும் உண்டு’ என்பதை நினைவுபடுத்துவதுடன், ‘மனிதனாகிய தன்னை ஆத்மாவாக அறிந்ததுடன் நில்லாமல் யோகி தன்னைப் பிரபஞ்சத்தின் ஆத்மாவாகவும் உணர வேண்டும்’ **(A Centre of Universal Soul)** என்று கூறுகின்றார். அதோடு, பரம்பொருளை இந்த இரண்டு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகவும் யோகி உணர வேண்டும் என்றும் கூறுகிறார். தன்னையும், பிரபஞ்சத்தையும், அப்பாலுக்கும் அப்பால் உள்ள இறைவனையும் ஆத்மாவாக உணர்தல் என்பது ஸ்ரீ அரவிந்தருடைய பூரண யோகத்தின் முதற்படியின் மூன்று பாகங்களாகும்.

யோகியின் ஆத்மா விடுதலை அடைந்தவுடன் அது பரம்பொருளுடன் தொடர்பு கொள்கின்றது. தான் பிரபஞ்சத்தின் ஆத்மாவுமாகும் என்ற யோக நிலையை எய்தியவன், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியுடனும் ஆன்மிகத் தொடர்பு உள்ளவனாகின்றான். சாதாரண மனிதன் தன் விருப்பங்களுடைய கருவியாக மாறி, அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக வாழ்க்கையை நடத்துகின்றான். யோக சித்தி பெற்றவனும் வாழத்தான் செய்கின்றான். ஆனால், அவன்

தன்னுள் விடுதலை அடைந்த ஆத்மா பரிபூரணமாகிப் பக்குவம் அடைவதற்காகவே உலகில் தங்கியிருக்கின்றான். அவனை ‘ஜீவன் முக்தன்’ என்கிறோம். மரத்தில் பழுத்த பழம் காம்பிலிருந்து கழன்று விழுவதற்கு மேலும் சில நாட்களாவதைப் போல், ஜீவன் முக்தன் மேலும் சில காலம் உலகில் இருக்கின்றான். இறைவனின் பணியைப் பிரபஞ்சம் முழுதும் செயலாற்ற ஜீவன் முக்தன் பயன்பட மாட்டான். ஏனெனில் அது முதலிலிருந்தே அவனுடைய குறிக்கோள் இல்லை.

பூரண யோகி, ஜீவன் முக்தனினின்றும் வேறுபட்டவன். அவன் தன் உடலையும் கரணங்களையும் (புலன்களையும்) தூய்மைப் படுத்திவிட்டமையால் இறைவனுக்கு ஏற்ற கருவியாகின்றான். இறைவனுடன் முழுமையான நேரடித் தொடர்பு உள்ளதால், இறைவனின் எண்ணத்தைப் பூரணமாகப் பிரதிபலிக்கும் திறன் அவனுக்கு உண்டு. அவனுக்குப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுடனும் ஆன்மிகத் தொடர்பு ஏற்பட்டிருப்பதால், பிரபஞ்சத்தில் அவனால் திறம்படச் செயல்பட முடியும். ஆகவே பூரண யோகம் கொண்டுள்ள ஓர் இலட்சியத்தை – அதாவது உலகில் மரணத்தையும், பொய்யையும், பிணியையும், துன்பத்தையும் விலக்கி, சத்தியத்தின் ஆட்சியைத் தோற்றுவிக்கும் இலட்சியத்தை –நிலை நாட்ட அவன் ஓர் ஆற்றல் மிகு கருவியாக இறைவனுக்குப் பயன்பட முடியும்.

யோக நிலைகளில் பல கட்டங்கள் உண்டு. மௌனம் காத்து ‘முனிவர்’ எனப் பெயர் பெற்றோர் முதல் கட்டத்தில் வருகின்றார்கள். உலக நிகழ்ச்சிகளை அகக் காட்சிகளாகக் காணும் ரிஷி, அடுத்த நிலையில் உள்ளவர். அவற்றைக் கடந்து ஆத்ம ஞானத்தை நேரடியாக உணர்பவர் யோகி. இந்த நிலைகளுக்கு அப்பால் தெய்வங்களாகிய சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் போன்றவர்கள் உறையும் லோகம். ‘கிருஷ்ணாவதாரம் இந்த லோகத்தின் சிறந்த சக்தியை மனித குலத்துக்கு வழங்கிற்று’ என்பர். சிருஷ்டியை ஒரு





கோளமாக உருவகப்படுத்தினால், மேற்சொன்ன நான்கு நிலைகளும் கோளத்தின் கீழ்ப் பாதியைச் சேர்ந்தவை. கிருஷ்ணாவதாரம் அதன் உச்ச கட்டம். அந்த நிலைக்குரிய நிறம் நீலம். அவற்றைக் கடந்து சென்றால் கோளத்தின் மேற்பகுதியின் முதல் நிலை. இந்து மரபுப்படி அதற்கு ‘மகர லோகம்’ என்றும், கடைசி லோகத்துக்கு ‘சத் லோகம்’ என்றும் பெயர்கள். அதற்கும், மகர லோகத்திற்கும் இடையேயுள்ள லோகங்கள், ‘ஆனந்த லோகம்’, ‘சித் லோகம்’ என்பனவாகும். சிருஷ்டி அத்துடன் முடிவடைகின்றது. சிருஷ்டிக்கும் அப்பாற்பட்ட இறைவன், சிகரமாக இருக்கின்றான். வேத ரிஷிகள் தங்கள் யோக மார்க்கத்தின் வழியாக இந்த எல்லா லோகங்களிலும் சஞ்சரிக்கின்றனர்.

பூரண யோகி இப்போது கருவிக்கேற்ற முழுத் தகுதியையும் பெற்றுவிட்டான். ஆனால், இறைவனின் இலட்சியத்தை நிறைவேற்றும் சக்தி அவனிடம் இல்லை. தெய்வ லோகத்திற்கு அடுத்த நிலையில் உள்ள மகர லோகத்தில் அந்த சக்தி உறைகின்றது. அந்த லோகத்தை அடைந்தவர் பலர். அதற்கும் அப்பால் உள்ள உலகங்களுக்குச் சென்று சேர்ந்தவரும் பலர். அங்கெல்லாம் சென்றவர்கள் அந்த லோகங்களின் மேன்மையால், தம் ஆத்மாவின் உயர்ந்த இலட்சியங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றார்கள். ஆனால், அந்த லோகங்களில் பொதிந்துள்ள தெய்விக சக்தியைப் பூவுலகிற்குக் கொண்டுவரக் கூடிய ஆற்றல் அவர்களுக்கு இல்லை.

ஞான யோகம் உயர்ந்தது. அது ஞானத்தையே கருவியாகக் கொண்டது. மனிதனின் பல பகுதிகளில் ஒன்றான மனத்தின் சிறப்பு ஞானம். ராஜ யோகம் எல்லா யோகங்களுக்கும் தலையானது. அதன் கருவி மனமாகும். பூரண யோகத்தில் ஒரு கருவியை மட்டும் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஆத்மா, மனம், உடல் ஆகிய எல்லாக் கருவிகளையும் பூரணமாகப் பயன்படுத்துகின்றான் பூரண யோகி. அத்துடன் அவன் ஆத்ம

விடுதலைக்கு முன்னதாக கரணங்களைத் தூய்மைப்படுத்தும் செயலில் முனைகின்றான். எனவே, பூரண யோகி மனித நிலையிலிருந்து ஒரு கட்டத்திற்கு—மௌன நிலைக்கு—உயர்ந்தவுடன், தெய்வ நிலையில் உள்ள எல்லா சக்திகளும் அவனுடைய ஆத்மாவிலும், உடலிலும் பாய்ந்து நிரம்புகின்றன. முனிவன், ரிஷி, யோகி, தெய்வம் ஆகிய நிலைகளை அவன் அடையும்போது, ஒவ்வொரு முறையும் அந்தந்த லோகத்திற்கு உண்டான எல்லா சக்திகளும் அவனுடலில் இறங்கி நிலைக்கின்றன. அவனுடைய உடலை நிரப்புகின்றன.

‘ஆத்ம விடுதலையாலும், விடுதலையை மோட்சமாக மாற்றாத இலட்சியத்தாலும், தன்னைப் பிரபஞ்சத்தின் ஆத்மாவாக உணர்ந்து, அதனால் சகல ஜீவராசிகளுடனும் முழுத் தொடர்பு கொண்டமையாலும் பூரண யோகி இறைவனுக்கு ஏற்ற கருவியாகின்றான்’ என்று சொன்னோம். அவன் முனிவன், ரிஷி, யோகி, தெய்வ நிலைகளைக் கடந்து மகர லோகத்தை அடையும்பொழுது, அந்த லோகத்தில் உள்ள சக்தி—சத்தியத்தின் மகத்தான சக்தி—மரணம், மூப்பு, பிணி, பொய்ம்மைகளை வெல்லும் வலிமையை அவனுக்குப் பூரணமாக அளிக்கின்றது.

அந்த லோகத்தின் ஒளி பொன்னொளி. பொன்னொளி படர்ந்த அந்த சக்தி முழுமையாக அவனுடைய தூய்மையான உடலில் பாய்ந்து, நிரம்பி, மிளிர்ந்து ஒளிர்கின்றது. இனி அவனால் ஒவ்வொரு கணமும் இறைவனின் கருவியாக உலகில் செயல்பட முடியும்; மரணத்தை வெல்லும் கருவியாகச் செயல்பட முடியும். துன்பத்தைத் துடைக்கும் கருவி அவனே. சத்திய உலகிற்கு அவனே அஸ்திவாரக் கல். எல்லா ஜீவராசிகளுடனும் ஆன்மிகத் தொடர்பு கொண்டுள்ளதால், அவற்றின் வாழ்வில் திரையிட்டு மூடும் மரணத்தை வெல்ல அவனால் முடியும்.

1920—இல் அன்னை ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்து உலக நலனுக்காக யோகத்தை அவர்கள் இருவரும் கூட்டாக





மேற்கொள்வதென முடிவு செய்தபொழுது, நீல ஒளி நிறைந்த தெய்வ லோக சக்தியால் தம் யோகத்தைப் பூர்த்தி செய்யலாம் என்று கருதினார் அன்னை. “அந்த சக்திக்கு மரணத்தை வெல்லும் ஆற்றல் இல்லை” என்று மகான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கம் கூறிவிட்டு, “அதற்கு அடுத்த சக்தியைப் **(Supramental Force)** பயன்படுத்த வேண்டும்” என்றார்.

முடிவில், ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் உலகத்துக்காக யோகத்தை மேற்கொண்டு ஆசிரமம் நிறுவினர். அதன் நோக்கங்களாவன: 1. கரணங்களை—மனம், உடல்—முதலிய வற்றைத்—தூய்மைப்படுத்துவதன் மூலம் அகங்காரத்தை அறுத்து ஆத்மாவுக்கு விடுதலை (மோட்சத்துக்குச் செல்லும் தகுதி) அளிப்பது. 2. தன்னைப் பிரபஞ்சத்தின் ஆத்மா என உணர்ந்து, எல்லா ஜீவராசிகளுடனும் ஆன்மிகத் தொடர்பைப் பூரணமாகப் பெறுதல். 3. யோகத்தால் ஆத்மாவையும், கரணங்களையும் மகர லோகம் அடையச் செய்தல்.

மகான் ஸ்ரீ அரவிந்தர் தம் யோகத்தில், தம் குறிக்கோளாகக் கொண்டவற்றை எல்லாம் முழுதுமாகப் பெற்றார். அவருக்கு சக்தியாக விளங்கிய அன்னை ஸ்ரீ அரவிந்தருடைய அருளை, தம்மைச் சூழ்ந்திருந்த சாதகர்கட்கும், தம்மை வணங்கும் பக்தர்களுக்கும், தம்மை அறிந்திராத ஏனைய உலகத்தாருக்கும் பரிபூரணமாகப் பரிமாறினார். அதாவது ஊற்று நீராக இருந்த ஸ்ரீ அரவிந்தக் கருணையைப் பருகும் நீராக அளித்தவர் அன்னை. ‘அன்னை இல்லாவிட்டால் தம் யோகப் பலன்கள் எல்லாம் தம்முடனேயே இருந்துவிட்டிருக்கும், மற்றவர்கட்குப் பயன்பட்டிராது’ என்று ஸ்ரீ அரவிந்தர் கூறியிருப்பது இதற்குச் சான்று.

பூரண யோகத்தால் பொன்னொளியையும், அது நிறைந்துள்ள உலகையும் அடைந்தார் ஸ்ரீ அரவிந்தர். இறைவனின் அருள் தன் இருப்பிடத்தைவிட்டு நகர்ந்து பூவுலகிற்கு வந்து செயல்படத் தயாராக இருக்கின்றது. ஸ்ரீ அரவிந்தரின் யோகம் பூரணமாகப்

பலித்துவிட்டது. அப்பலனை அவரிடமிருந்து பெற்று உலகுக்கு வழங்க அன்னை அவர் அருகில் இருக்கின்றார்.

ஆனால், பூவுலகம் தயாராக இல்லை. பூவுலகம் இறைவனின் அருளை ஏற்கத் தயாராக இருப்பதற்கு ஓர் அறிகுறி உண்டு. 12 பேர் இறைவனின் கருவிகளாக ஏற்படுவதே அந்த அடையாளம். பூவுலகம் இன்னும் தயாராகவில்லை. 12 கருவிகள் இன்னும் ஏற்படவில்லை. ஸ்ரீ அரவிந்தரின் முன்னுள்ள பிரச்சினை இதுதான். அந்த நிலையில் பெற்ற பாக்கியத்தைத் தாமே அனுபவிக்கலாம்; அல்லது, உலகம் தயாராகும்வரை அவர் உலகத்தில் காத்திருக்கலாம். 'காத்திருக்கலாம்' என்றால் எத்தனை காலம்? அவருடைய கணக்குப்படி 300 ஆண்டு காலம். அத்தனை ஆண்டு காலம் காத்திருக்க அவர் தயாராக இல்லை. தம்முடைய உடலை நீத்து, சூட்சும உலகில் சென்று தங்கி, உலகைத் தயார் செய்வது என முடிவு செய்தார் அவர். அத்துடன், 'ஒரு முறையாவது, ஓர் உடலிலாவது அப்பேரொளி –பொன்னொளி– உலகில் செயல்பட வேண்டும்' எனக் கருதினார். ஆனால், தம்முடைய உடலில் உயிர் உள்ளவரை அது சாத்தியம் இல்லை என அறிந்து, தம் உயிரை நீத்து உடலை அப்பொன்னொளிக்கு ஏற்ற பாத்திரமாக வழங்குவது எனத் தீர்மானித்தார். அதன்படி 1950, டிசம்பர் 5–ஆம் தேதி அவர் மகாசமாதி அடைந்தார். அவர் உடலில் பொன்னொளி எழுந்தது. அப்பொன்னொளி அவருடைய உடலில், அது வைக்கப்பட்டிருந்த ஐந்து நாட்களில் மூன்று நாட்கள்வரை தங்கிப் பிரகாசித்தது.

மகான் ஸ்ரீ அரவிந்தர், தம் உடலில் உள்ள எல்லா யோக சக்திகளையும் அன்னையின் உடலில் தங்க வைத்த பின்னரே சமாதி அடைந்தார். அன்னை அவரின் யோகப் பணியைத் தொடர்ந்து செய்தார். 1956–ஆம் ஆண்டு அன்னை தம் தியானத்தில் பொன்மயமான அந்த உலகைப் பொன் மயமானதும், பிரம்மாண்டமானதுமான கதவு ஒன்று மூடி





இருப்பதைப் பார்த்து, மிகப் பிரம்மாண்டமான பொன் சுத்தியால் அக்கதவைத் தூள் தூளாக உடைத்தார். அக்கணமே பொன்னொளியின் பிரவாகம், உலகைத் தன் வெள்ளத்தால் மூடியது. அச்சமயம் உலகில் உள்ள தமோ குண சக்திகள் பொங்கி எழுந்து, பொன்னொளியை முழுதுமாக மறைக்க முயன்றன. அதில் பெரிய அளவுக்கு அவை வெற்றியும் கண்டன.

1967–இல் பொன்னொளிக்கு மேலும் ஒரு வெற்றி கிட்டியதாகக் கூறுகின்றார். அன்னை 1969–இல் அப்பொன்னொளி மேலும் வெற்றி பெற்று, உருவம் பெற்று ஜனவரி முதல் தேதியன்று அன்னையின்முன் வந்து காட்சி அளித்தது. "உலகியல் வாழ்வில் ஏற்பட்ட பேராபத்துகள்–க்யூபாவில் அமெரிக்க–சோவியத் மோதல், சீனாவின் படை எடுப்புப் போன்றவை தாமாகவே மறைந்த அற்புதம், இந்த ஒளி செயல்படுவதால்தான் ஏற்பட்டது" என்று அன்னை கூறுகின்றார்.

எளிய மனிதனுடைய வாழ்வில் இந்த ஒளிச் சிறப்பும், யோக சக்தியும் பல வகைகளில் செயல்பட்டாலும், அவை குறிப்பாகவும், சிறப்பாகவும் இரு வகைகளில் வெளிப்படுகின்றன. அவை 1. கர்ம பலனை (விதியை) அழித்து கர்மத்திலிருந்து மனிதனுக்கு விடுதலை அளிப்பது. 2. பிரார்த்தனை செய்யாமலேயே – அதாவது கேட்காமலும் கோராமலும் இருக்கும் போதே – தம் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொள்வது.

❖ ❖ ❖

# 6. ஆத்ம சமர்ப்பணம்

‘ஆத்ம சமர்ப்பணம்’ என்பது, ஆன்மா விடுதலை அடைய வழி செய்யும் ஒரு யோக நெறியாகும். யோகம் சித்தி பெற உதவும் உயர்ந்த சில முறைகளுள் இதுவும் ஒன்று. ஸ்ரீ அரவிந்தர் எழுதிய ஏராளமான நூல்களில் தலையாயது யோக நூல். அந்த நூலின் தொடக்கத்திலேயே சமர்ப்பணத்தைப் பற்றி ஓர் அத்தியாயம் இருக்கின்றது. அந்நூலில் காணப்படும் 80 அத்தியாயங்களில், இந்த ஓர் அத்தியாயத்திலேயே தமது யோகத்தின் முழுமையையும் சுருக்கமாகவும், சாரமாகவும் விளக்குகின்றார் ஸ்ரீ அரவிந்தர்.

சாதாரண மனிதனுக்கு வாழ்க்கையை விளக்கம் பெற்றதாக நடத்துவது என்பது, ஒரு தவ முயற்சியை மேற்கொள்வது போன்றதாகும். ஆத்ம சமர்ப்பணத்தின் சிறப்பு, வாழ்க்கை விளக்கத்தில் பெறும் இடத்தைப் பற்றித்தான் நாம் இங்கே பேசப் போகின்றோம்.

‘அன்னைக்குப் பிரார்த்தனை செய்தவுடன் பல பிரச்சினைகள் விலகிவிடுகின்றன’ என்பது உண்மையே யானாலும், ‘சில பிரச்சினைகள் அப்படிச் சுலபத்தில் தீர்வதில்லை’ என்பது, சில பக்தர்களுடைய அனுபவம். ‘அந்த அனுபவத்தில் உள்ள பாதகமான நிலையைப் பிரார்த்தனையின் மூலமே சாதகமான நிலைக்கு மாற்ற முடியும்’ என்ற உண்மைக்கு உட்படுத்தக் கூடியதே ஆத்ம சமர்ப்பணம்.

‘பிரார்த்தனை பலிக்கும்’ என்ற நம்பிக்கையுடன் நாம் சொல்லும்போது மனிதனுடைய குரல் அன்னைக்கு எட்டி, அன்னையின் திவ்யஒளி நம் மீது மட்டும் அல்லாமல், நமது பிரச்சினையின் மீதும் பட்டுவிட்டது என்று பொருள். பிரச்சினையும், அன்னையின் ஒளியும் சந்தித்த மாத்திரத்தில்





பிரச்சினை கரைந்துவிடுகின்றது. ‘பிரச்சினை தீரவில்லை’ என்றால் ‘அன்னையின் சக்தி ஒளி பிரச்சினை மீது படவில்லை’ என்று பொருள். ஆத்ம சமர்ப்பணம் அந்தக் குறையை நீக்கி, பிரச்சினையைத் தீர்க்கின்றது.

‘ஆத்ம சமர்ப்பணம்’ என்ற சொல்லுக்கு யோகத்தில் கொள்ளும் பொருளை இங்கு கருதாது, அதன் சாரமான கருத்தை மட்டுமே நோக்குவோம். பிரச்சினைக்கு உரியவர் பிரச்சினையின் கூறுகளை, தன் உள்ளொளிக்குச் சமர்ப்பிப்பதை இங்கு ‘சமர்ப்பணம்’ என்ற பொருளில் கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக உள்ளூரிலேயே உத்தியோகம் செய்து வந்த ஒருவர், பதவி உயர்வை எதிர்பார்த்தார். நியாயமான எதிர்பார்ப்புத்தான். அவருடைய பதவி உயர்வுக்கு அலுவலகத்தில் யாரும் முட்டுக்கட்டை போடவில்லை. என்றாலும் ஏதோ ஒன்று தடையாக இருந்தது. அது என்ன என்று கண்கூடாகத் தெரியவில்லை. இத்தனைக்கும் அவர் அன்னையின் பக்தர். ‘நான் அன்னையை உருக்கமாகப் பிரார்த்தித்துக்கொண்டு வருகின்றேன். பதவி உயர்வைத் தவிர மற்றவை எல்லாம் எனக்கு உடனுக்குடன் கிடைத்துவிடுகின்றன. அதற்கு மட்டும் என்ன தடை என்று புரியவில்லை’ என்று அடிக்கடி கூறி வேதனைப்படுவார் அவர்.

“உங்களுக்கு உள்ளூரைவிட்டுப் போகப் பிரியம் இல்லை. பதவி உயர்வு கிடைத்தால் நீங்கள் வெளியூருக்குப் போக வேண்டியதிருக்கும். அதனால்தான் தடை” என்று அவருக்கு விளக்கும்பொழுது, தமக்குத் தாமே தடையாக இருந்ததை உணர்ந்து, முதல் வேலையாக உள்ளூர் ஆசையைத் துறக்கின்றார். அவருக்கு உடனே பதவி உயர்வு கிடைத்துவிடுகின்றது. மனத்தால் விரும்பும் ஒன்றை, அவர் உணர்ச்சியால் விரும்பவில்லை. ஊரைவிட்டுப் போக விரும்பாத உணர்ச்சி, பதவி உயர்வுக்குத் தடையாக இருந்தது. அதுவே அன்னையின் சக்தி செயல்படத் தடையாகவும் இருந்தது.

ஓர் அடாவடிக்காரனிடம் பணம் கொடுத்து பிராமிசரி நோட்டு எழுதி வாங்கினால், ‘அந்த நோட்டு அவனைக் கட்டுப்படுத்தும்’ என்று நினைப்பது தவறு. அந்தத் தவற்றை உணராத வரையில் அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனைகள், அந்தப் பணத்தைப் பெற்றுத் தாரா. ஆனால், செய்த பிரார்த்தனைகள் வீண் போகா. அவை வேறு காரியங்கள் கூடிவர உதவி செய்யும்.

சம்பந்தப்பட்டவரின் தவறான நினைவு, அந்தச் செயலின் மீது இருள் போலப் படிந்துள்ளது. பிரார்த்தனையால் நம் உள்ளே வரும் ஒளியை அது தடை செய்கின்றது. அது வெறும் இருளாக இருந்தால், அந்த ஒளியே அதைக் கரைத்துவிடும். ஆனால், அது சம்பந்தப்பட்டவருடைய அறிவின் துணையோடு ஏற்பட்ட இருள். அதனால் அன்னையின் ஒளியால்கூட அதைச் சுலபமாகக் கரைத்துவிட முடியாது. அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். அதுவரை சம்பந்தப்பட்டவருக்குப் பொறுமை வேண்டுமே!

அன்று செய்த தவற்றை இன்று உணர்ந்தால், இருள் நீங்கி, உறுத்திக் கொண்டு இருந்த பிரச்சினை முற்றிலும் உலர்ந்து போகும். அன்னையின் ஒளிக்குப் பிரச்சினையைக் கரைப்பது சுலபம்; ஆனால், மனிதன் தன் அறிவால், சொல்லப் போனால் பிடிவாதத்தால் ஏற்படுத்திக் கொள்ளும் இருளைக் கரைப்பது சுலபம் அன்று. அது கரைய நாளாகும்.

ஒருவர் தவறு செய்வதன் மூலம் பிரச்சினைக்கு ஆளாகிச் சிக்கித் தவிக்கும்பொழுது, அவர் நமக்கு வேண்டியவராக இருந்தால் என்ன செய்கின்றோம்? அவரிடம் அவருடைய தவற்றை எடுத்துக் கூறுகின்றோம். அவர் புரியாமல் தவறு செய்தவராக இருந்தால், நம் அறிவுரையைக் கேட்டபிறகு திருந்தி விடுகின்றார். ‘வம்பு செய்து பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்’ என்று ஒருவர் தப்புக் கணக்குப் போட்டால், ‘சட்டம் என்ன செய்யும்? எதிராளி என்ன செய்வார்?’ என்ற அறிவுரையைப் பெறும்பொழுது, அவருக்கு இருந்த தவறான





செயல் முனைப்பு அடங்கிப் போகும். ஒரு தொழில் கூட்டாளி மற்றவருடைய பங்கை அபகரிக்க முயன்றால், ஒரு மருமகளை மாமியார் கொடுமை செய்தால், மாமியாரை மருமகள் வறுத்து எடுத்தால், ஒரு மாணவன் போலீஸிடம் வீண் வம்பு வளர்த்தால், அரசியல் காழ்ப்புக் காரணமாக ஒருவர் வன்முறையைத் தூண்டிவிட நினைத்தால், அவர்களுக்கு வேண்டிய நல்லவர்கள், அதனதன் பின்விளைவுகளைச் சுட்டிக்காட்டுவார்கள். அது பிரச்சினை வளர்வதைத் தடுக்க உதவும்.

அதே போல நம் மனத்தை நமக்கு வேண்டிய இரண்டாம் நபராக நிறுத்தி, தீராத ஒரு பிரச்சினைக்கு வழி காண நாம் அந்த மனத்தோடு உரையாடி, வழக்குரைத்து வாதாடி, அது செய்த தவற்றையும், அதனால் பிரச்சினை ஏற்பட்ட விதத்தையும் எடுத்துக் கூறும்பொழுது, மனம் நியாயத்திற்கும், அறிவுக்கும் உட்பட்டு அவற்றை ஏற்றுக் கொண்டால், அதன்பிறகு செய்யும் பிரார்த்தனைக்கு உடனே பலன் கிடைத்துவிடுகின்றது. 6 ஆண்டுகளாகப் பலிக்காமல் இருந்த பிரார்த்தனை, தன்னைத் தானே உணர்ந்துவிட்ட கட்டத்தில் நொடிப்பொழுதில் பலித்து விடுகின்றது. இவ்வாறு மனம் தன் பிழையை, செயலை ஆத்ம ஒளிக்குக் கொண்டுசெல்வதற்கு ‘ஆத்ம சமர்ப்பணம்’ என்று பெயர்.

‘பிரச்சினை உருவானது எப்படி?’ என்பதை நாம் விவரமாகத் தெரிந்து கொண்டால் – அதாவது அதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு நமக்குத் தெளிவு இருந்தால் – ஒளி தெளிவின் வழியே விரைந்து செயல்படும். ‘பிரச்சினை ஏன் வந்தது, எப்படி உருவாயிற்று?’ என்று தெளிவு இல்லாத குழப்பத்தில் மனம் உழலுமானால், முதலில் அந்தக் குழப்பத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அன்னையின் ஒளி தன் வேலையைத் தொடங்கும்.

அன்னையிடம் நாம் ஒரு பிரச்சினையைச் சொல்கின்ற பொழுது, அது சம்பந்தமான எல்லா விவரங்களையும் அவர் ஒன்றுவிடாமல் கேட்பார். விவரங்களை எல்லாம் சரியாகவும்,

முறையாகவும் நாம் சமர்ப்பித்தால், அன்னைக்குச் செயல்படுவது எளிதாகின்றது.

‘உத்தியோகம் போய்விட்டது’, ‘கணவர் என்னைக் கை விட்டுவிட்டார்’, ‘கடன் சுமை தாங்கவில்லை’, ‘நகைகள் காணாமல் போய்விட்டன’ என்பன போன்ற பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ளும்பொழுது, ‘உத்தியோகம் போக என்ன காரணம்? கணவர் கைவிட்டுப் போனதற்கு என்ன காரணம்? கடன் எப்படி ஏற்பட்டது? நகைகள் எப்படிக் காணாமல் போயின?’ என்பன பற்றித் தெளிவாகத் தெரிந்தால், நாம் பிரார்த்தனை செய்து கொண்ட அக்கணமே அன்னை விரைவாகச் செயல்படுவார்.

‘ஆத்ம சமர்ப்பணத்’திற்குத் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டு இருக்கும் விளக்கத்தை நடைமுறைப்படுத்தும்பொழுது, நமக்கு அந்தத் தெளிவு சுலபத்தில் கிடைத்துவிடும்.

‘எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஆதியிலிருந்து ஒவ்வொரு கட்டமாக அதை நினைவு கூர்ந்து அடி முதல் நுனி வரையிலான எல்லா விவரங்களையும் அன்னையிடம் சொல்வதையே ஆத்ம சமர்ப்பணம் என்கிறோம்’, என்பதை தெளிவு கருதி மீண்டும் ஒரு முறை கூறுகின்றேன். அன்னையிடம் அந்தப் பிரச்சினையைப் பற்றிய வாக்குமூலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுதே, ‘நாம் அலட்சியமாக நினைத்தவை எல்லாம் எத்தனை பெரிய இடையூறுகள்?’ என்பது புரியும். அதற்கப்புறமும்கூடச் சிலருக்குப் புரியாமல் இருக்கவும் கூடும். என்றாலும் அன்னையிடம் அவர்கள் தம் பிரச்சினையின் தோற்றத்தை ஓரளவு சொன்ன காரணத்தால், பின்னர் பிரச்சினையின் மொத்தப் பரிமாணத்தையும் அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்றுவிடுவார்கள்.

நாள் தோறும் மீண்டும் மீண்டும் பிரச்சினையின் வரலாற்றை அன்னையிடம் சமர்ப்பித்துக் கொண்டு வந்தால் நம்முடைய





பிரச்சினையும், அன்னையின் ஒளியும் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்து ஒரு நாள் சந்திக்கும். அந்தச் சந்திப்பு நிகழும் நேரத்தில் பிரச்சினை பளிச்சென்று தீரும்.

‘பிரார்த்தனை பலிக்கவில்லை’ என்றுகூடச் சிலர் நினைக்கின்றார்கள். அது உண்மையே. அப்படி நினைக்கின்றவர்களுடைய குறைபாடு வெளிப்படையாக எல்லோருக்குமே தெரியும். ஆனால், அவர்களுக்குத் தெரிவது இல்லை. நோய் தெரியாமல் மருந்துண்ணுவது எப்படி? அவர்கள் முதலில் தங்களின் நோய் என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தங்களுடைய குறைபாடு என்னவென்பதை நுணுகிச் சலித்து அறிய வேண்டும். அது முடியாத பட்சத்தில், நெருங்கிப் பழகுபவர்களிடம் பிரச்சினைக்குக் காரணமான நம் குறைபாடு என்ன என்பதைக் கேட்டறிந்து அந்தக் குறைபாட்டை விலக்கியபின், பிரார்த்தனை செய்வது முதல் வழி. இந்த முதல் வழியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தபிறகு, பிரச்சினையின் முழு விவரத்தையும் தினந்தோறும் ஒரு முறை அன்னையிடம் சொல்ல வேண்டும். இது இரண்டாவது வழி. முதல் வழியைப் பின்பற்றுவதன் மூலம் பிரச்சினை நாள் கடந்து தீரும். இரண்டாவது வழியின் மூலம் பிரச்சினை நிச்சயமாகத் தீரும். ஆனால், விரைவில் தீராது. ஏனென்றால் பிரார்த்தனைக்கு இரு கடமைகள் உண்டு. முதலில் பிரார்த்தனை, பிரச்சினைக்கு உரிய குறையை அகற்ற வேண்டும். பின்னர் பிரச்சினையைக் கரைக்க வேண்டும்.

ஒருவர் ஆலை முதலாளி. 10 கோடி மூலதனத்துடன் 500 தொழிலாளர்கள் வேலை பார்க்கும் ஆலை அவருடையது. வேலை பார்க்கும் ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு பிரச்சினையுடன் வந்து சந்தித்தபோது அவர் எரிச்சலுடன், “இப்படி ஒவ்வொருவராக வந்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். எல்லாத் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து சங்கம் அமையுங்கள். தலைவரை நியமியுங்கள். உங்கள்

எல்லோருக்குமாகச் சேர்த்து அவரை என்னிடம் அனுப்புங்கள்'' என்று சொல்லிவிட்டார். பிறகு என்ன? ஆலைக்குள் சங்கம் வந்தது; தலைவர் வந்தார். கூடவே தாங்க முடியாத அளவுக்குப் பிரச்சினைகளும் வந்தன. இத்தனையும் வந்தபிறகு வழக்கமாக வரும் கோஷம், ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் போன்றவையும் வந்து ஒரு போராட்டத்தைத் தூண்டிவிட்டன.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தவர் அந்த ஆலை முதலாளிதான். சங்கத்தை ஆரம்பிக்கச் சொன்னவர் அவர்தாமே! வம்பை விலை கொடுத்து வாங்கிச் சிக்கலில் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கிய நிலையில் அவர் என்னைச் சந்தித்து, "சிக்கல் தீர வழி கூறுங்கள்'' என்று வேண்டினார்.

"சொல்லப் போனால் வேலை நிறுத்தத் தலைவர் நீங்கள்தான். அதாவது சிக்கலுக்குக் காரணமான சங்கத்தை ஆரம்பிக்கச் சொன்னவர் நீங்கள் தானே? அன்னையிடம் இந்தப் பிரச்சினைக்குத் தோற்றுவாயாக அமைந்த உங்கள் குறைபாட்டைக் கூறிப் பிரார்த்தனை செய்யுங்கள்'' என்றேன் நான்.

அவர் தம் தவற்றை உணர்ந்து, தம் குறையை அன்னையிடம் சமர்ப்பித்து, நிவாரணத்தை வேண்டிப் பிரார்த்தனை செய்தார். சில நாட்களில் வேலை நிறுத்தம் பிசுபிசுத்தது. கடைசியில் யூனியனே காணாமல் போய்விட்டது!

'பெண்ணிற்குத் திருமணம் செய்தபிறகு, பெண்ணையும், மாப்பிள்ளையையும் வீட்டிலேயே வைத்துக் கொண்டால், வீட்டில் உள்ள மகனின் வாழ்வு கெட்டுப் போகும்' என்று நம்பும் வழக்கம் நம்மிடம் இருக்கின்றது. அந்த மரபுப்படியும், உளவியல் தத்துவப்படியும், வேறு எந்த வகையில் பார்த்தாலும் இது தவறுதான். உற்றோரும் மற்றோரும் கூறியதை எல்லாம் புறக்கணித்துவிட்டு இந்தத் தவற்றைச் செய்தார் ஒரு தொழில் அதிபர். 15 ஆண்டுகளுக்குப்பிறகு அவருடைய மகன் திடீரென்று மரணம் அடைந்தார். மாப்பிள்ளை திவால் ஆனார்.





அதற்குப்பிறகே அவர் தம் மாப்பிள்ளையைத் தனியாக அனுப்பினார். வசதி உள்ளவர்கள் பெண்ணின் மீதுள்ள பாசத்தால் இதைச் செய்கின்றார்கள்.

பல ஆண்டுகளுக்குமுன் 700 ரூபாய் வருமானம் உள்ள ஒரு கல்லூரி ஆசிரியர், ரூபாய் 30,000 கடன் வாங்கினார். அவருக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமே இல்லை. சிறிய குடும்பம்தான். ஆனாலும் ஆடம்பரக் குடையை விரித்துப் பழகிவிட்டார். அதனால் கடன். நாளாக நாளாக கடன் சுமை அவரை அழுத்தத் தொடங்கிவிட்டது. கவலைப்பட்டுக் கவலைப்பட்டு அவருடைய உடல் நலம் ஒரேடியாகக் கெட்டது. அவர் அன்னையின் பக்தர். அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொண்டார். நாளெல்லாம் அவர் செய்து கொண்ட பிரார்த்தனையால் கடன் குறைந்தது. மூச்சு முட்டும் அளவுக்கு இருந்த கடன் சுமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து சுமக்கக் கூடிய அளவுக்கு இறங்கிவிட்டது. 'இனிமேல் வருமானத்திற்கு மேல் செலவு செய்வதில்லை' என்று அவர் முடிவு செய்து கொண்டார். இந்த முடிவே அவருடைய பிரச்சினைக்கு ஏற்பட்ட முடிவாகவும் அமைந்தது.

ஒருவன் வாயைத் திறந்தால் நீதியும், நேர்மையும் கரை புரண்டோடி வரும். ஆனால், தன் சொந்த வாழ்க்கையில் தன் மனைவியைக் கண்கலங்க வைத்துவிட்டு ஒழுங்கீனமான வழியில் உல்லாசமாய் வாழ்கின்றான். பிரச்சினை பூதாகாரமாகிறது. அப்பொழுது தன் பிரச்சினையை உருவாக்கியவர்கள் தன் மனைவியும், ஊராரும் என்றுதான் நினைக்கின்றானே தவிர, பிரச்சினைக்குக் காரணமானவனே தான்தான் என்பது அவனுக்குப் புரிவதில்லை. அதாவது, ஊர் அறிந்ததை அவன் அறியவில்லை.

மன்னிக்க முடியாத குணக் கேடுகளால் ஒருத்தியை ஒருவன் விலக்கிவிடுகின்றான். எல்லோருக்கும் அவளுடைய குணக்கேடுதான் அதற்குக் காரணம் என்பது புரிகின்றது. ஆனால், அவளுக்கு மட்டும் அது புரியாமல் போகின்றது!

இன்னோர் சாரார் இருக்கின்றார்கள். அவர்கள் தம்மைப் பற்றி மற்றவர்கள் புரிந்து கொண்டிருப்பதற்கு எதிர்மாறாகப் புரிந்து கொள்வார்கள். வாய் ஓயாமல் பேசும் ஒரு வியாபாரி, "நான் அளந்துதான் பேசுவேன். அவசியம் இல்லாமல் ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டேன்" என்பார். 'பிறர் பொருளுக்கு நான் ஆசைப்பட மாட்டேன்' என்று தம்மைப் பற்றி உண்மையிலேயே நினைக்கக் கூடிய ஒருவர், தம் வியாபார நண்பர்களை அணுகி, "உங்கள் வியாபாரத்தை எனக்குக் கொடுத்துவிடுங்கள்" என்கின்றார். திறமை சிறிதும் இல்லாத, ஆனால், இனிமையாகப் பழகக் கூடிய ஒருவர், தம்மைச் சிறந்த திறமைசாலி என்று நம்புகின்றார்.

கண்ணுக்கு முன்னால் காட்சியாக இருக்கும் விளக்கத்தைப் பார்க்க மறுத்து, இல்லாத ஒன்றை இருப்பதாக நம்புகின்றவர்கள் இன்னொரு வகையினர். தம்முடைய திருட்டுக் கணக்குப் பிள்ளையை விசுவாசத்தோடு வேலை செய்வதாக நினைக்கும் முதலாளி, அடுத்துக் கெடுக்கும் ஒருவரைத் தம் சிறந்த நண்பராகக் கருதும் அப்பாவி, மேலதிகாரியிடம் பொய்ப் புகார்களைக் கூறி வேலைக்கு வேட்டு வைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஒருவரை 'ஆபத்பாந்தவர்' என்று நம்பும் ஏமாளி போன்றவர்கள், இந்த வகையில் வருவார்கள். 'நேர்மையாக இருந்ததாலேயே என் வேலை போய்விட்டது' என்று ஒப்பாரி வைப்பவர்களையும் இந்த வகையில் சேர்க்கலாம். நேர்மையே உயர்ந்தது. இதில் கொஞ்சம்கூடச் சந்தேகம் இல்லை. ஆனால், 'அது ஆபத்தானது' என்பதையும் மறுப்பதற்கில்லை. காந்திஜியைவிட நேர்மையானவர் இந்த உலகில் உண்டா? அவருடைய முடிவு ஆபத்தில்தான் முடிந்தது. நேர்மையோடு விழிப்பும் வேண்டும். இல்லாவிட்டால், அது பார்வையற்ற விழிகளுக்குச் சமானம்.

இவர்களைப் போன்றவர்கட்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால், பிரச்சினையின் மூல காரணத்தை அவர்களால் அறிய முடியாது. அப்பொழுது அன்னையிடம் பிரச்சினையின் வரலாற்றைச்





சொன்னால், அவர் காரணத்தைத் தெளிவுபடுத்துவார். அல்லது பிரச்சினையை விலக்குவார். இத்தகையோர் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொண்டால், உண்மையான காரணத்தைப் புரிய வைக்கக் கூடிய நிகழ்ச்சிகள் நடக்கும். அநேக ஆண்டுகளுக்குமுன் அரசுப் பணியை விட்டுவிட்டு, மாமனார் சொத்துக் கொடுப்பார் என்ற எண்ணத்தால் மாமனார் வீட்டில் போய்த் தங்கி, மாமனாரின் சொத்துகளைப் பன்மடங்காகப் பெருக்கி, பின்னர் அதில் ஒரு பங்கைப் பெற்று, மைத்துனரிடமிருந்து பிரிந்து வந்து, பிற்காலத்தில் வாழ்க்கையில் எந்தப் பக்கம் திரும்பினாலும் பிரச்சினையாக இருப்பதைப் பார்த்த ஒருவர், தாம் அடிப்படையில் செய்த செயல் சரி இல்லாதது என்பதைத் தெரிந்து கொள்ள இயலாதவராக இருக்கின்றார். இத்தனைக்கும் அவர் அன்னையின் பக்தர்! 'பிரார்த்தனை எல்லா விஷயங்களிலும் பலிக்கின்றது. ஆனால், அடிப்படையான பிரச்சினையில் மட்டும் வழிவிடவில்லை' எனக் குறைப்படுகின்றார் அவர்.

இவர்களுக்கெல்லாம் உகந்த முறை சமர்ப்பணமாகும். 'சமர்ப்பணம்' என்ற தத்துவத்தின் ஆன்மிக அடிப்படைகளைச் சுருக்கமாகக் கீழே தருகின்றேன்.

1. 'கடந்தகால நிகழ்ச்சிகள் முடிந்து போனவை. நடந்தது நடந்ததுதான். இனி அது பற்றிச் செய்வதற்கு ஒன்றும் இல்லை' என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொண்டு இருக்கின்றோம். 'இறையருளுக்கு அந்த உண்மையும் உட்பட்டது' என்று நினைக்கப் பழகிக் கொண்டால் நல்லது. நம்பிக்கை அளவற்ற பலனைக் கொடுக்கக் கூடியது. 'கடந்த நிகழ்ச்சிகளை மாற்ற முடியாது' என நினைத்தால் நம்பிக்கைக்கு இயற்கையாகவுண்டான பெரும்பலன் குறையும். 'அருள் கடந்ததையும் மாற்றும்' என உணர்ந்தால், நம்பிக்கையின் திறம் வரையறையற்றதாக இருக்கும்.

2. மனிதன் காலத்தால் கட்டுண்டவன். அதனால் கடந்தகால நிகழ்ச்சிகள் அவனுக்குக் கட்டுப்பட்டா. அன்னையின் ஒளி

காலத்தைக் கடந்தது. அதனால் கடந்தகால நிகழ்ச்சிகளும் அன்னையின் ஒளியைப் பெற்று, இப்பொழுது பலனாக விளைய முடியும். சமர்ப்பணத்தின் மூலம் கடந்தகால நிகழ்ச்சிகளை அன்னையின் ஒளிக்கு உட்படுத்த முடியும்.

3. கடந்தகால நிகழ்ச்சிகளின் சுவடுகள் நம் இன்றையச் செயல்களில் படிந்திருக்கின்றன. அந்தச் சுவடுகளைப் புரிந்து கொண்டுவிட்டால் அந்தப் பழைய செயல்களையும், அவற்றின் பாதிப்புகளான இன்றையப் பலன்களையும் மாற்றலாம்.

4. மனிதனுடைய வாழ்க்கையில் செயல்பட இறைவன் மனிதனுடைய புத்தியைக் கருவியாகப் பயன்படுத்துகின்றான். புத்தியின் செயல் அதன் குணங்களால் நிர்ணயிக்கப்பட்டது. ஆகையால் மனிதனுடைய குண விசேடங்களுக்குப் புத்தியின் செயலைச் சிறப்பாக்கும் ஆற்றல் உண்டு. உயர்ந்த குணங்களின் மூலம் இறைவன் மனித வாழ்க்கையில் சிறப்பாகச் செயல்படுகின்றான்.

5. செயல்களின் கூறுகளும், குணத்தின் தன்மைகளும் பிரித்துப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டு இருக்கின்றன.

6. கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து அவற்றை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், கடந்தகால நிகழ்ச்சிகளின் பாதகமான பலன்கள் நீங்கும். ஆனால், அந்நிகழ்ச்சிகளுக்குக் காரணமான குண விசேடங்கள் அழியாமல் அப்படியே இருக்கும்.

7. அந்தக் கடந்தகால மிச்சம் இன்றைய குணச் சிறப்புகளாக நம்மிடம் ஒட்டிக் கொண்டிருக்கும்.

8. இன்றுள்ள இந்தக் குணச் சிறப்புகளிலிருந்து விடுபட முயன்றால், ஜீவன் கடந்தகால நிகழ்ச்சிகளின் இன்றையப் பலனிலிருந்து விடுதலை அடையும்.





9. கடந்தகால நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் சமர்ப்பணத்திற்காக நினைவு கூர்ந்தால், அவற்றின் வேகம் ஒரு கட்டத்தில் அதிகரிக்கும். அதன்பின் நிகழ்ச்சிகளின் சுவடுகளான குண விசேடங்கள் மனோவேகத்தில் மனக் கண்ணில் தோன்றும்.

10. மரணத்திற்குமுன் ஆத்மா வெளிவந்து இப்பிறவியின் செயல்களைக் கண நேரம் விமர்சனம் செய்து, அடுத்த பிறவிக்குரிய இடத்தைத் தீர்மானிக்க முயல்கின்றது. புனர்ஜன்மம் எடுப்பதற்கு இந்த மதிப்பீடு அடிப்படையாக இருப்பதைப் போல், நாம் அன்னைக்குச் செய்யும் சமர்ப்பணம் ஒரு சிறு அளவிலான புனர்ஜன்மமாகும். எந்தச் செயலைச் சமர்ப்பணம் செய்கின்றோமோ, அந்தச் செயலின் (கர்மத்தின்) பலன்களிலிருந்து விடுதலை அடைந்து, அதைப் பொறுத்த வரையில் புனர்ஜன்மம் எடுத்த பலன் உண்டு.

11. கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து சமர்ப்பணம் செய்தால், அவற்றால் ஏற்பட்ட பிரச்சினைகள் நிச்சயமாகக் கரையும். ஆனால், நிதானமாகக் கரையும். ஆனால், அந்நிகழ்ச்சிகளுக்கு அஸ்திவாரமான உணர்ச்சிகளை (குணங்களை) நினைவு கூர்ந்து சமர்ப்பணம் செய்தால், பிரச்சினைகள் உடனடியாகவும் முழுமையாகவும் கரைந்து போகும்.

12. ‘ஒரு பிரச்சினையை அழிக்க வேண்டும்’ என்ற தீவிரமான எண்ணத்துடன் முயன்றால், அதற்குச் சமர்ப்பணம் ஒன்றே உரிய கருவி. அவ்வெண்ணம் பூரணமாகச் செயல் படும்பொழுது, மனிதனால் தீர்க்க முடியாத பிரச்சினை என்று எதுவுமே இருக்க முடியாது.

◆ ◆ ◆

# 7. செய்யும் தொழிலில் அன்னை செயல்படுவது எப்படி?

அன்னைக்குப் பிரார்த்தனை செய்து பலன் அடைந்தவர்கள் பலர். சிறிய பிரச்சினைகள் தீர்ந்தாலும், பிரச்சினைக்கு உரியவர்கட்கு அது பெரு வியப்பாக இருக்கும். மற்றவர்கட்கு அது ஆச்சரியத்தைக் கொடுக்காது. காணாமல் போன மோதிரம் கிடைத்துவிட்டால் தொலைத்தவருக்கு அது பலன்; சந்தோஷம். ஒரு மோதிரம் ஒரு சவரனோ, அரைச் சவரனோ இருக்கலாம். அதை இழந்தவர் திரும்பிப் பெற்றதில் கேள்விப்படுபவர்க்கு வியப்புக்குரிய செய்தி இல்லை. ஆனால், கால் இலட்சம் பெறுமானம் உள்ள வைர மோதிரமாக இருந்தால், கேட்பவரிடம் ஏற்படும் விளைவே வேறாக இருக்கும். அரைச் சவரன் கிடைப்பதற்கும், வைர மோதிரம் கிடைப்பதற்கும் செயல்படும் சக்தி ஒன்றுதான்.

500 ரூபாய் வருமானம் உள்ள ஒருவர் அன்னையை வழிபட்டு 5000 ரூபாய் வருமானம் பெற்றால், அவரைப் பொறுத்தவரை அது நல்ல செய்தி. மற்றவர்கள் தெரிந்து கொள்வதற்குப் பொதுவாக அதனுள் ஒன்றும் இல்லை. இரண்டரைக் கோடி நஷ்டம் அடைந்த ஓர் ஆலையில் அன்னையின் முறைகளைக் கடைப்பிடித்து இரண்டரைக் கோடி இலாபத்தை எட்டக் கூடிய நிலையை அவ்வாலை அடையும் பொழுது, அது எல்லோருக்கும் ஒரு செய்தியை அளிக்கின்றது.

அன்னையைப் பொறுத்த வரையில் குடும்பம் ஒரு தொழில்தான்; ஒரு தொழிலும் **(Industry)** ஒரு குடும்பம்தான். இரண்டிற்கும் அடிப்படை ஒன்றுதான். அளவுதான் வித்தியாசம். என்றாலும், ஒரு தொழிலை நடத்துபவரிடம் அன்னையைப் பற்றியும், அவரின் முறைகளைப் பற்றியும் சொல்வதற்குப் பல அம்சங்கள் உள்ளன.





100 கோடி மூலதனம் உள்ள ஓர் அரசு நிறுவனம், பத்து ஆண்டுகளுக்கு மேலாக வேலை நிறுத்தம்; போராட்டம், உற்பத்திக் குறைவு, நஷ்டம் என்று கீழ் நோக்கில் போய்க் கொண்டு இருந்தது. அதில் வன்முறை நித்திய நிகழ்ச்சியாக இருந்தது. அதிகாரிகளும், உண்மை ஊழியர்களும் அடிக்கடி தாக்கப்பட்டனர். 'இனி அந்த நிறுவனம் ஓர் ஒழுங்கின் கீழ் வாராது' என்று எல்லோரும் முடிவு கட்டிய நிலையில், அதன் தலைவர் அன்னையின் முறைகளைக் கேள்விப்பட்டு அவற்றை பக்தி சிரத்தையுடன் பின்பற்றியதும், எல்லாத் தொந்தரவுகளும் விலகி, உற்பத்தி உபரியாகிப் பெருவாரியாக இலாபம்வர ஆரம்பித்தது, பல தேசிய விருதுகளும் கிடைத்தன.

இந்த நிலைக்கு முன்னால் அந்த நிறுவனத்திற்கு எல்லா வகைகளிலும் சோதனை. கச்சாப் பொருளுக்குக் கடுமையான தட்டுப்பாடு. விற்பனையான சரக்குக்கு வரவேண்டிய தொகை பல கோடிகள் நிலுவையாய் நின்றன. எல்லா வகைகளிலும் நெருக்கடி. கான்டீனில் எப்பொழுது பார்த்தாலும் கலாட்டா. எங்கும், எந்த நேரத்திலும் கோஷம்; போராட்டம்.

அந்த நிறுவனத்தின் துணைத் தலைவர், "எங்காவது கூச்சல் கேட்டால் தலையைச் சுற்றுகிறது. எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருக்கின்றது" என்று அடிக்கடி கூறுவார். அதன் தலைவர் அன்னையைப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்த மறு நாளே, அதுவரை கலக பூமியாக விளங்கி வந்த கான்டீனில் உள்ள தகராறு நின்றுவிட்டது. தலைவருக்கு அதைக் கண்டு ஒரே ஆச்சரியம். 'அன்னையின் எல்லா முறைகளையும் நாள் முழுதும் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று தீர்மானித்து, அதன்படி ஒழுகினார். வியப்புக்குரிய பல மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த நிறுவனம் ஒரு பெரிய அமைப்பின் முக்கியப் பகுதி. ஓராண்டுக்குப்பின் அதன் தலைவர் அங்கு ஏற்பட்ட நல்ல பல மாறுதல்களை எல்லாம் என்னிடம் விவரித்து, "எதையுமே இன்றுகூட என்னால் நம்ப முடியவில்லை" என்று வியந்தார். அதற்குப்பிறகு

அந்த நிறுவனத்தின் உற்பத்தி, நாட்டிலேயே முதன்மையான அளவுக்கு பெருகியது.

இந்த மாற்றத்தைக் கொண்டு வரும் முறைகள் யாவை? அன்னையின் சக்தி என்னுடைய சிறுதொழிலில் சிறப்பாகச் செயல்பட நான் செய்ய வேண்டியது என்ன?

'செய்ய வேண்டியதைச் சிறப்பாகச் செய்வது' என்பதுதான் பொதுவான பதில்.

ஒரு தொழிலை மேற்கொண்டால் அதற்குத் தேவையானவை: உழைப்பு, பொறுப்பு, நிதானம், விரைந்து செயல்படுதல், நேர்மையாகச் செயல்படுதல், பொருள்களையும், செயல்களையும் கூர்மையாகக் கண்காணித்தல், குழப்பமின்றிக் காரியங்களைச் செய்தல், தொழிலகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்.

நான் குறிப்பிட்ட நிறுவனத்தின் கட்டிடம் 1½ பர்லாங் நீளம் உள்ளது. அவ்வளவு பெரிய கட்டிடத்தில் எந்தப் பகுதிக்குப் போனாலும் அந்தச் சோதனையான காலத்திலும்கூடச் சுத்தமாக வைத்திருந்தார் அதன் தலைவர். அன்னையின் சக்தி விரைந்து செயல்படுவதற்கு அந்தச் சுத்தம் ஒரு முக்கியக் காரணம். "இந்த ப்ராஜெக்ட்டில் முதல் செங்கல்லை எடுத்து வைத்ததிலிருந்து நான் எஞ்ஜினீயராக இருக்கின்றேன். இன்று நானே இதன் தலைவர். இது என் குழந்தையைப் போன்றது" என்றார் அந்தத் தலைவர்.

அவருடைய பொறுப்புணர்ச்சி, கடமையுணர்ச்சி, அந்த அரசு நிறுவனத்தைத் தம் சொந்த நிறுவனம் போல எண்ணும் உளப்பாங்கு ஆகியவை, அன்னை முழுமையாகச் செயல்பட மற்றொரு முக்கியக் காரணம்.

இன்று கடை வீதிகளில் உள்ள கடைகள் மிகச் சுத்தமாகவும், அழகாகவும் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றன. வியாபாரிகள் அவற்றின் அவசியத்தை உணர்ந்துவிட்டார்கள்.





ஆனால், ஒரு தொழிற்சாலைக்குப் போனால் அந்தச் சுத்தத்தைக் காண முடியாது. அங்கு, பொருள்கள் அலங்கோலமாகவும், கண்ட கண்ட இடங்களில் சிதறிக் கிடப்பதையும் காணலாம்.

முதலாவதாக, ஒரு தொழிலில் தேவைப்படுவது உழைப்பு. முதல் கட்டத்திலிருந்து கடைசிக் கட்டம் வரையில் உழைப்பு குறை இல்லாமல் இருக்க வேண்டும். குறைந்த பட்சம் முதலாளியாவது சுறுசுறுப்பானவராக இருத்தல் வேண்டும். சுறுசுறுப்புள்ளவர்கள் நடத்தும் தொழிலில் அன்னை சுலபமாகச் செயல்பட முடியும். வாழ்க்கையில் சோம்பேறித்தனத்தைவிடச் சுறுசுறுப்பு பலன் அளிப்பது போல, அன்னையின் சக்தியைப் பெற்றுப் பலன் அளிப்பதிலும் சுறுசுறுப்பு முக்கியமானது.

ஒரு நீர் ஏற்றும் மோட்டார் செய்யும் நிறுவனத்தைச் சிறிய அளவில் தொடங்கினார் ஒருவர். அவர் மனைவி தம் தோழிகள் மூலம் அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆசிரமத்திற்கு வந்தார். தம் கணவரையும் அழைத்து வந்தார். அவர் உழைப்பாளி என்பதுடன் மிகச் சுறுசுறுப்பானவராகவும் இருந்தார். அவர் மட்டும் அல்லாது அவருடைய குடும்பமே சுறுசுறுப்பானது. அவர் சில ஆண்டுகளில் வானளாவ வளர்ந்து விட்டார். அவருடைய வியாபாரம் ஒன்றரைக் கோடியைத் தாண்டிவிட்டது. அன்னையின் அருளை வியந்து போற்றிய அந்த வியாபாரி, ஆண்டு தோறும் வடநாட்டிலிருந்து தம் குடும்பத்துடன் ஆசிரமத்திற்குவரத் தவறுவதே இல்லை. அவருடைய வெற்றிக்குக் காரணம் அவர் குடும்பத்தின் சுறுசுறுப்பேயாகும்.

தொழிலில் நுணுக்கம் உண்டு. இதை **(Technology)** என்கின்றோம். இதைத் 'தொழில் திறன்' எனவும் கூறலாம். வேலைப்பாடு **(Workmanship)** தொழிலுக்கு முக்கியம். அது தானே பலன் அளிக்கும் தன்மையுள்ளது. அன்னைக்கு முக்கியமானவற்றில் அதுவும் ஒன்று. கல்லில் கலை வண்ணம் செய்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கற்கலைஞர் ஒருவர்

பாண்டிச்சேரிக்கு வியாபார விஷயமாக வந்தார். வந்த இடத்தில் அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டுச் சமாதியைத் தரிசனம் செய்தார். ஆண்டுக்குப் பத்து இலட்சம் சம்பாதிக்கக் கூடிய அவர், மனம் நெகிழ்ந்து அன்னைக்குக் கணிசமான ஒரு காணிக்கையைச் செலுத்தினார். சில ஆண்டுகளுக்குப்பிறகு அவருடைய வருமானம் பல கோடிகளைத் தாண்டிவிட்டது. தொழில் நுணுக்கமும், திறமையும் உயர்ந்தவை. அவை இரண்டும் பொருந்தியவர்களை 'வல்லுநர்' என்கின்றோம். அன்னையின் அருள், திறமை கூடியிருக்கும் இடங்களில் அளவு கடந்து செயல்படும்.

ஒரு மனிதனுக்கு எல்லா அங்கங்களும் முழுமையாக இருக்க வேண்டும். ஓர் அங்கம் குறைந்தால்கூட ஊனம்தான். அதே போல, ஒரு நல்ல மனிதனுக்கு எல்லாச் சிறப்பான குணங்களும் மொத்தமாகத் தேவை. அவற்றில் ஒன்று குறைந்தாலும் ஊனமே. அதே போல, குறையற்ற எல்லா உயர்ந்த குணங்களும் ஒரு தொழிலுக்குத் தேவைப்படுகின்றன. அன்னை எல்லா மனித இயல்புகளையும் ஏற்றுக் கொண்டாலும், உயர்ந்த குணங்களைப் பெரிதும் பாராட்டி, அவற்றின் மூலம் விரைவாகவும், விரிவாகவும் செயல்படுவார்.

ஓர் இளம் பொறியாளர் சொந்தத்தில் ஒரு தொழிலைத் தொடங்குவதற்காகத் தீவிரமான பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், தோல்வியைத்தான் சந்தித்தார். அவருடைய விடா முயற்சியின்பால் ஈர்க்கப்பட்ட அவருடைய நண்பர் ஒருவர் அவருக்கு உதவ முன்வந்து, ஒரு பெரிய தொழில் அதிபரை நாடி அவருக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார். அந்தத் தொழில் அதிபர் 15 பெரிய தொழில்களை நடத்தி வந்தார். யாரையுமே அவர் கூட்டாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. 'கூட்டுக் கூடாது' என்பது அவருடைய திட்டவட்டமான கொள்கை. அப்படிப்பட்டவர், அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பொறியாளரின் திறமையையும், தமக்கு அவரை அறிமுகம் செய்து வைத்த நண்பரின் தகுதியையும் கருதி, 40 இலட்ச ரூபாய் மூலதனத்தில்





ஒரு புதிய தொழிலைத் தொடங்கி, அதில் அந்தப் பொறியாளருக்குக் கால்கூட்டுக் கொடுப்பதாகவும், இலாபம் வரும் காலம்வரை சம்பளம் கொடுப்பதாகவும், இதுவரை அந்தப் பொறியாளர் செய்த தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட கடனைக் கொடுப்பதாகவும் கூறினார். இப்படிப்பட்ட ஓர் அரிய வாய்ப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அந்தப் பொறியாளர், "எனக்குக் கூட்டு வேண்டாம். சம்பளம் போதும். 5 ஆண்டுகள் சென்றதும் அந்த முழுத் தொழிலையும் எனக்கே கொடுத்துவிட வேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். அப்படியானால், 'அவருக்கு ஒருவர் பெரிய முதலீடு செய்து ஒரு தொழிலை ஆரம்பித்துக் கொடுத்துவிட்டு, 5 ஆண்டுகளுக்குப்பிறகு தலையில் துணியைப் போட்டுக் கொண்டு வெளியேறிவிட வேண்டும்' என்பதுதானே அந்த நிபந்தனையின் பொருள்? அதற்கு இசைவதற்கு யாருக்கு மனம் வரும்? உதவி செய்ய முன்வந்த தொழில் அதிபர், 'கழற்றிக் கொண்டு போனால் போதும்' என்ற முடிவுக்கு வந்து, பேசாமல் எழுந்து போய்விட்டார்.

அந்தப் பொறியாளர் திறமையானவர்தாம். சந்தேகம் இல்லை. ஆனால், பேராசை கொண்டவர். அதனால்தான் அவருடைய முயற்சிகள் வரிசையாகத் தோற்றுக் கொண்டு வந்தன. எனவேதான் தொழிலில் வெற்றி காண்பதற்குத் திறமை மட்டுமல்லாது எல்லா உயர்ந்த குணங்களும் தேவைப்படுகின்றன.

15 ஆண்டுகளுக்கு முன்னால், 100 ரூபாய் மாத வருமானம் உள்ள ஓர் இளைஞர், 5 இலட்சம் பெறுமான மிக்க ஓர் ஆலையில் பங்குகள் விற்பதாகக் கேள்விப்பட்டார். அவர் அந்தப் பங்குகளை வாங்க நினைத்தார். அதன் காரணமாக அந்த ஆலையின் நிலையை அறிய முற்பட்டார். 'அந்த ஆலையில் இலாபம் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன' என்று பலரும் கூறினார்கள்.

அந்த இளைஞர் ஒரு தீர்மானத்துடன் சென்று அதன் நிர்வாக இயக்குநரைச் சந்தித்து, "நான் உங்கள் ஆலையில்

இருபதாயிரம் ரூபாய்க்குப் பங்குகள் வாங்க நினைக்கின்றேன். ஆனால், இன்று ஆலை இலாபகரமாக இயங்கவில்லை என்று அறிகின்றேன். என்னை நீங்கள் மானேஜராகப் போட்டால் இந்த ஆலையை இலாபகரமாக மாற்றிக் காட்டுகின்றேன்'' என்றார். நிர்வாக இயக்குநர் அதற்குச் சம்மதித்ததுடன், பங்குகளுக்கு உரிய இலாபம், சம்பளம், உபரியாக வியாபார இலாபத்தில் 10 சதவிகிதப் பணம் ஆகிய எல்லாம் தருவதாக வாக்களித்தார். இளைஞர் முதலீடு செய்துவிட்டு மானேஜர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஒரே ஆண்டில் சில இலட்ச ரூபாய் இலாபமாகக் கிடைத்தது. நிர்வாக இயக்குநர் வாக்களித்தது போல அவருக்கு இலாபத்தில் 10 சதம் அளிக்க முன்வந்தார். ஆனால், இளைஞர், "5 சத இலாபம் போதும்'' எனக் கூறி, அதை மட்டுமே பெற்றுக் கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு அவர் அந்த ஆலைக்கு டைரக்டராகவும் ஆனார். பின்னர் அவர் ஆண்டுக்கு ஒரு தொழிற்சாலை என்று தொடங்கி வியாபார உலகில் முன்னணி நட்சத்திரமாக ஒளி வீசினார்.

பேராசை தவிர்க்க முடியாதது. முதலில் கூறிய இளம் பொறியாளர் அந்தப் பேராசையில் சிக்கி, தம் எதிர்காலத்தையே இருளாக்கிக் கொண்டார். பின்னர் கூறிய இளைஞர் நிதானம், கட்டுப்பாடு, அதுவும் முறையாகத் தமக்குக் கிடைத்த பணத்தைக் கூட 'வேண்டாம்' என்று மறுக்கும் மனக் கட்டுப்பாடு ஆகிய உயர்ந்த குணங்களால் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போனார். உயர்ந்த குணங்கள் நிறைந்த அவரிடம், அன்னை பேரளவில் செயல்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

ஓர் அயல் நாட்டுக் கடை. அது சிறிய கடை. நாள் ஒன்றுக்கு நம் கணக்குப்படி பத்தாயிரம் ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். திடீரென்று ஓரிரு நாட்களுக்குள் இருபத்தையாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. இம்மாதிரியான நெருக்கடிக் கட்டங்களில் கடைக்காரர் அந்தத் தேவையைத் தவிர்த்துவிடுவதே வழக்கம். இந்த முறை அந்தக் கடை முதலாளிக்கு, 'எப்படியாவது சமாளிக்க வேண்டும்' என்ற ஓர்





உந்துதல் ஏற்பட்டது. 'இதற்கு வழி என்ன?' என்று தம் நண்பர் களிடம் கேட்டார் அவர். அவர்கள் அன்னைக்குப் பிரார்த்தனை செய்யச் சொன்னார்கள்.

வெளி நாடுகளில் 'பிரார்த்தனை' என்றால் கேலி செய்வார்கள். ஆகவே, யோசனை கூறிய அன்பர், 'அன்னைக்குச் சுத்தம் முக்கியம். உங்கள் கடையைச் சுத்தம் செய்யுங்கள்' என்றார். கடை முதலாளியும், மற்றவர்களும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், மனத்தின் ஒரு மூலையில், 'இது பைத்தியக்காரத்தனம்' என்ற நினைவு குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக் கொண்டு இருந்தது. இருந்தாலும் கடையை எவ்வளவு சுத்தம் செய்ய முடியுமோ, அவ்வளவு சுத்தம் செய்தனர்.

அன்று மாலைத் தபாலில் கடைக்காரருக்குத் தேவைப்பட்ட ஒரு தொகை – குறிப்பாக அதே தொகை – ஒரு வாடிக்கைக் காரரிடமிருந்து செக் மூலம் வந்தது. அந்த வாடிக்கைக்காரர் அத்தனை சுலபமாகப் பணம் கொடுப்பவர் இல்லை. கொடுத்தாலும் பல தவணைகளில்தான் கொடுப்பார். அப்படிப்பட்டவர், இன்று மொத்தப் பணத்தையும் தாமே அனுப்பி வைத்திருக்கின்றார்! இது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. அந்தக் கடையில் உள்ள அனைவரும் இப்பொழுது சுத்தத்தின் மகிமையையும், அன்னையின் அருளையும் புரிந்து கொண்டதோடு, ஏற்றுக் கொள்ளவும் செய்தார்கள்.

ரூபாய் 7,000 முதலோடு ஒரு தொழிற்சாலையைத் தொடங்கிய இளைஞர் ஒருவர், பத்தே ஆண்டுகளில் 10 இலட்சம் புரளக் கூடிய அளவுக்கு உயர்ந்துவிட்டார். ஒரு கட்டத்தில் அவர் ஈடுபட்டு இருந்த தொழிலில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டது. பலரும் தொழிற்சாலைகளை மூடிவிட்டார்கள். அந்தக் கெட்டிக்கார இளைஞர் மட்டும் தம் தொழிற்சாலையை மூடாமல் திறந்து வைத்துக் கொண்டு இருந்தார். ஆனால், உற்பத்தி இல்லை. கடன் ஏற்பட்டுவிட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுகூட அவரால் கடனை அடைக்க முடியவில்லை. இந்த

நிலையில் அவர் சமாதியைத் தரிசித்துவிட்டுப் போனார். அதிலிருந்து அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவருடைய நிலையோடு ஒப்பிடும்பொழுது அவருக்கு ஏற்பட்டிருந்த கடன் அப்படி ஒன்றும் பெரிதில்லை. தொழிலைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அதுதான் அவருடைய பிடிவாதம். "உற்பத்தி இல்லாமல் தூசி படிந்து கிடக்கும் இயந்திரங்களை, வேலை நடக்கும் காலத்தில் துடைப்பது போலத் துடைக்க வேண்டும். சுத்தமான இடத்தில் அன்னையின் அருள் தங்கி நிற்கும்" என்பதை ஓர் அன்னையின் பக்தர் மூலம் அறிந்தார். அவ்வாறே செயல்பட்டார். நாள் தோறும் அவருடைய இயந்திரங்கள் சுத்தம் செய்யப்பட்டன. உடனே உற்பத்திக்குக் கிராக்கி வந்து விட்டது. அவருடைய தொழிற்சாலையில் இயந்திரங்கள் இரவு பகலாக ஓட ஆரம்பித்தன. ஆறே மாதங்களில் கடன் அடைபட்டது. மூன்றே வருடங்களில் அவருடைய வியாபாரம் மூன்று மடங்காகப் பெருகிவிட்டது.

அன்னையின் முறைகள் அநேகம். வாழ்க்கையில் பொதிந்து இருக்கும் ஒவ்வொன்றைப் பற்றியும் அன்னை விளக்கமாக எழுதி இருக்கிறார். அவருடைய கட்டுரைகள் 17 வால்யூம்களாகப் பிரசுரிக்கப்பட்டு இருக்கின்றன. அதே போல் தொழிலைப் பற்றியும் நிறையவே எழுதி இருக்கின்றார் அன்னை.

ஒரு தொழிலை நடத்துபவர் அன்னையின் பக்தராக இருந்தால், அவர் தம் தொழிலில் அன்னையின் முறைகளைப் பின்பற்றி வெற்றி அடைய நினைத்தால், கீழ்க்கண்ட கருத்துகள் அவருக்கு மிகவும் பயன்படும்.

1. தொழிலுக்குத் தேவையான முழு உழைப்பை மனப் பூர்வமாகவும், மகிழ்வாகவும் அளித்தல் வேண்டும்.

2. அன்றாட வரவு செலவுக் கணக்குகளை அன்றன்றே முடிக்க வேண்டும். 'நாளைக்கு' என்று ஒத்திப் போடக் கூடாது.

3. தம் தொழிலில் உள்ள பொருட்களை ஜீவன் உள்ள குழந்தைகளைப் பாதுகாப்பதைப் போலப் பராமரிக்க வேண்டும்.





4. தொழிலின் முழுப் பொறுப்பையும் முழு மனத்தோடு ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும்.

5. தொழிலில் மற்றவர்கள் கையாளும் நுணுக்கங்களை **(Technology)** புறக்கணிக்காமல் கடைப்பிடிக்க வேண்டும். இன்னும் ஒரு படி மேலே போய் முன்னோடியாக இருக்க முயல்வது சிறப்பு.

6. புதிய முறைகள் **(Systems)** தொழிலில் அமுலுக்கு வந்தால், அவற்றைக் கடைப்பிடிக்க விரைவாக முன்வரல் வேண்டும்.

7. தொழிலகத்தைச் சுத்தத்திற்கு எடுத்துக்காட்டாக வைத்தல் வேண்டும்.

8. சீராகவும், முறையாகவும் பொருட்களை வைத்தல் வேண்டும்.

9. தணிந்த குரலில் பேசுதல் அவசியம்.

10. மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களைச் செய்தல் கூடாது. ஒவ்வொரு தொழிலிலும் ஒரு முறை உண்டு. வீட்டில் ஏற்றுக் கொள்ளாத காரியங்களை, தொழில் கருதித் தொழிலில் ஏற்றுக் கொள்வார்கள். எந்த நிலையிலும் தொழிலில் உள்ள நல்லவர்கள் செய்யாத காரியங்களை நாம் செய்யக் கூடாது. தொழிலில் உள்ள மனச்சாட்சி தனி நபரின் மனச்சாட்சியைப் போலத் துல்லியமாக இருக்காது. என்றாலும், தொழிலில் உள்ள மனச்சாட்சியை மதித்து நடக்க வேண்டும்.

தவறாமல் கணக்கு எழுதும் எந்த வியாபாரத்திலும் பணத் தட்டுப்பாடு இருக்காது. ஒரு தொழிலில் பண நெருக்கடி ஏற்பட்டால், அங்கு கணக்கு பாக்கியாக இருக்கின்றது என்று பொருள். பாக்கியுள்ள கணக்கை எழுதி முடித்துவிட்டால், மறு நாளே பணத் தட்டுப்பாடு தீர்ந்துவிடும். அன்னை செயல்பட இந்த ஒழுங்கு மிக அவசியம் தேவை.

உழைப்பு, பொறுப்பு, கவனம், கணக்கு, நுணுக்கம், முறைகள், நியமம், சுத்தம், தணிந்த பேச்சு, மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுதல் ஆகியவை வாழ்க்கையில் எவர்க்கும் வெற்றி அளிக்கும். தொழிலில் மந்தப் போக்குள்ள ஒருவர்,

அன்னையை ஏற்றுக் கொண்டு மேற்சொன்னவற்றில் ஏதாவது ஓர் அம்சத்தை முழுமையாகக் கடைப்பிடித்தால், தொழில் சிறப்பாக மாறிவிடும். மேற்சொன்ன எல்லா அம்சங்களையுமே முழுமையாகக் கடைப்பிடிக்க முயல்வது சிறந்த இலட்சியமாகும். இலட்சியத் தொழில் அதிபராகத் தம்மை உருவாக்கிக் கொள்ளும் பொழுது, ஒருவர் வரலாற்றைப் படைப்பவராகவும் ஆகின்றார்.

பெருந்தொழில்களை (**Industries**) நடத்துபவர்களுக்கு உபயோகமான சில குறிப்புகளைக் கீழே தருகின்றேன். உலகத்தில் தொழில் தலைவர்களாக (**Industrial Kings**) உள்ளவர்களின் வாழ்க்கையிலிருந்து சேகரிக்கப்பட்டவை இவை:

1. தொழில் சம்பந்தமாக ஒருவரைச் சந்தித்துப் பேசும் பொழுது ஆர்வமாகவும், கவனமாகவும் அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். அவருடைய சொந்த விஷயங்களைத் தெரிந்து கொள்ள முயலக் கூடாது.

2. வங்கியோடு தொடர்பு கொண்டுள்ளவர்கள் வங்கி அதிகாரிகளைச் சந்திக்கும்முன், அவர்கள் என்னென்ன தஸ்தாவேஜுகளைக் கேட்பார்களோ, எந்தப் புள்ளி விவரங்களை எதிர்பார்ப்பார்களோ அவற்றை எல்லாம் முன்கூட்டியே தயார் செய்துகொண்டு போக வேண்டும்.

3. தம் மனத்தில் எழும் எண்ணங்களை வெளியிடாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும் (**Silent will**).

4. தம்முடைய நிறுவனத்திற்கு மானேஜர், அக்கவுண்டெண்ட் போன்ற பதவிகளுக்கு நபர்களை நியமிக்க இண்டர்வியூ கொடுக்கும்பொழுது, அவர்களுடைய முக்கியம் இல்லாத சிறிய செயல்களைக் கூர்ந்து கவனித்துக் குறித்துக் கொள்ள வேண்டும்.

5. ஆர்டர்கள் தேவைப்படும்பொழுதோ, ஒரு பெருந் தொகையை எதிர்பார்த்தோ மற்றவர்களைச் சந்திக்கும்பொழுது, அச்சம், கவலை, படபடப்புப் போன்றவை இயல்பாக எழும். அத்தகைய சந்தர்ப்பங்களில் 'யாரைப் பார்க்கின்றோம்? பிரச்சினை எவ்வளவு பெரியது?' என்பன போன்ற நினைவுகளை ஒதுக்கி





வைத்துவிட்டு, 'நான் இந்த வேலைக்காக வந்திருக்கின்றேன்' என்பதை மட்டும் மனத்தில் கொண்டு வேலையைக் கவனித்தால், கவலையும், படபடப்பும், பயமும் விலகும். பொறுப்பேற்ற வேலை சிறப்பாக நடக்கும்.

6. வியாபாரம் மந்தமாக இருந்தால், வியாபாரம் அபரிமிதமாக நடக்கும் வேளைகளில் இயங்குவதைப் போல் சிறு சிறு விஷயங்களையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

7. இயந்திரங்களைச் சுத்தமாக வைத்து இருக்க வேண்டும்.

8. 'ஒரு முக்கியமான வேலையை அவசரமாகச் செய்ய வேண்டும். ஒரு டாக்குமென்டைத் தயாரிக்க வேண்டும்' என்றால், அந்தச் சமயத்தில் கையாள வேண்டியவை மூன்று. ஒன்று: 'அவசரப்படக் கூடாது' என்ற தீர்மானமான முடிவு. இரண்டு: அவசரத்தை முழுதுமாக விலக்கி, 'எப்படிச் செய்வது?' என்ற வரையறையான திட்டம் (**plan**). மூன்று: படபடப்பு இல்லாமல் ஒவ்வொரு காரியத்தையும்விடாமல் செய்யும் நிதானம். இவற்றைக் கையாண்டால், முடிக்க வேண்டிய நேரத்திற்கு முன்னாலேயே அந்த வேலை முடியும்.

9. அளவு கடந்த கோபம் வரும் சமயங்களில் நம் வாழ்க்கையில் நாம் பிறரைக் கோபமூட்டிய நிகழ்ச்சிகளை நினைவு கொள்ளல் வேண்டும்.

10. பேரம் பேசும் சந்தர்ப்பம் வந்தால், எதிராளியின் சௌகரியங்களையும், தேவைகளையும் ஆராய்ந்து பார்த்துப் பேசும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் நலம்.

தொழில் சிறப்பானது. அதில் அன்னையைச் செயல்பட வைக்கும் நெறிகளும் வழிகளும் மிக மிகச் சிறப்பானவை.

◆ ◆ ◆

# 8. கணவனும் மனைவியும்

35 ஆண்டுகளுக்கு முன்னர் நான் அன்னையைத் தரிசிக்க முதன் முதலில் வந்தேன். அன்றிலிருந்து இன்றுவரை எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஏராளம். எனக்கு ஏற்படும் அனுபவங்களை, நான் அன்னையின் கண்ணோட்டத்திலேயே புரிந்து கொள்ள முயல்கின்றேன். அன்னையின் ஆசி பெற்றுத் திருமணம் புரிந்து கொண்டவர்களின் வாழ்க்கை அனுபவம் அவற்றுள் ஒன்று. என்னுடைய அனுபவத்தில் அன்னையின் ஆசியைப் பெற்றுத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய வாழ்க்கை, சுமுகமும், அன்பும், ஆழ்ந்த பற்றுதலும் நிறைந்து மற்றவர்கள் வியக்கும் அளவில் சிறப்பாக அமைந்துள்ளது.

அதே சமயத்தில் திருமணம் பலருக்குச் சோதனையாகவும், வேதனையாகவும் அமைந்துவிடுவதை நம்மால் எண்ணிப் பார்க்காமலும், வருந்தாமலும் இருக்க முடியவில்லை.

கணவனுடன் வாழமறுத்துத் தன் பிறந்தகம் சென்ற மனைவி, மனைவியைக் கைவிட்டு நீண்ட காலமாக விலகி இருக்கும் கணவன் இவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வழியே இல்லையா? இருக்கின்றது. அதுவும் அன்னையின் வழியில் நிச்சயம் இருக்கின்றது.

அன்னையைப் பொறுத்த வரையில் சிறிய பிரச்சினை, பெரிய பிரச்சினை என்று வேறுபாடு இல்லை. நமக்குத்தான் ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. பிரச்சினைக்கு ஆளானவர் அன்னையை நோக்கி மனநெகிழ்வுடன் தம் பிரச்சினையைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டால், அன்னையும் பிரச்சினையும் சந்தித்த மாத்திரத்தில் பிரச்சினை தீர்வது இயற்கை. கோலிக் குண்டை இழந்த சிறுவனையும், பதவியை இழந்த அமைச்சரையும், மனைவியைப் பிரிந்து வாடும் கணவனையும், அன்னை சமமாகக்





கருதுவதுடன், அவர்களின் பிரச்சினைகளையும் சமமான எளிமையுடன் தீர்க்கின்றார்.

‘தாயார், தகப்பனார் முகத்தில் நீ விழித்தால் நான் உன்னோடு வாழ மாட்டேன்’ என்று சபதமிட்டு, சபதத்தை நிறைவேற்றிய பெண்களும் உண்டு. ஆனால், நம் சமூகத்தில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மனைவியால் புறக் கணிக்கப்பட்ட ஆண்களைவிட அதிகம். இந்தக் கட்டுரையின் பொதுக்கருத்து கணவனுக்கும், மனைவிக்கும் பொருந்தும். என்றாலும் மனைவிக்கு முக்கியத்துவம் கொடுத்து விளக்கங்களை அமைத்து இருக்கின்றேன்.

திருமணத்திற்கு மூன்று அம்சங்கள் உண்டு. 1. முற்பிறவியில் நிர்ணயிக்கப்பட்டு ஆத்மாவால் இணைக்கப்பட்ட ஆவித் துணைவரே கணவன் மனைவியர். 2. கணவன் பொருள் தேடுகின்றான். மனைவி குடும்பத்தையும், குழந்தைகளையும் பராமரிக்கின்றாள். பொருளுக்கு ஓர் ஆணும், பொறுப்புக்கு ஒரு பெண்ணும் தேவை. அந்த வகையில் ஒவ்வொரு மனிதனுக்கும் மனைவி தேவை; ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவன் தேவை. 3. ஒவ்வொரு நபருக்கும் விருப்பு வெறுப்பு களையும், ஆழ்ந்த உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்ள மற்றொருவர் தேவை. உடலாலும், உள்ளத்தாலும் ஒன்றுபட்ட இருவராலேயே அவ்வாறு பகிர்ந்து கொள்ள இயலும். ஒருவர் மனத்தால் மற்றொருவர் சிந்திக்கின்ற சிறப்பு கணவன் மனைவியராகிய ஆண் பெண்களுக்கு இடையேதான் தோன்றுகின்றது.

முதல் அம்சம் ஆத்மிகம். இரண்டாவது அம்சம் பொருளாதாரம் பற்றிய சமூக உறவு. மூன்றாவது அம்சம் அன்பும், தியாகமும் நிறைந்த மனித உறவைப் பற்றியது. கணக்கில் சேராத, எழுத்தில் விவரிக்க இயலாத பலதரப்பட்ட திருமண நிலைகளை இங்கு தவிர்த்து, வாழ்க்கையின் நெறிக்கும், மனச்சாட்சிக்கும் கட்டுப்பட்ட மனிதர்களின் நிலையை மட்டுமே கருதி இதை எழுதுகின்றேன்.

ஆத்மிக அம்சம் சாத்திரத்திற்கும், மனித வாழ்க்கைக்கும் முக்காலும் பின்னணியாக இருப்பதால், அது பெரும்பாலோரை அதிகமாகப் பாதிப்பதில்லை. இரண்டாவது அம்சத்தில் பொருளாதார அமைப்பில் குறை இல்லை என்றால், அநேகமாகப் பிரச்சினை இருக்காது. ஆனால், 'கணவனுக்கு வருமானம் இல்லை. மனைவிக்குக் குடும்பப் பொறுப்பு இல்லை' என்ற நிலை ஏற்பட்டால், அந்தப் பற்றாக்குறைப் பிரச்சினை குடும்பத்திற்குள் வந்து தாம்பத்ய உறவைப் பாதிக்கும். பற்றாக்குறை நீங்கினால் பிரச்சினையும் நீங்கும். மூன்றாவது அம்சம் நிறைவான அம்சமாக அமைந்துவிட்டால் குடும்பம் இனிதாக இருக்கும். கலகலப்பும், மகிழ்ச்சியும் அங்கே நீங்காமல் குடி இருக்கும்.

கணவன் மனைவி பிரச்சினைகள் பெரும்பாலும் தோன்றுவது இந்த அம்சங்களுக்கு மாறுபட்ட குறைபாடுகளால்தாம். இந்த அம்சத்தின் பகுதிகளை, தன்மை, குணம், சுபாவம், பண்பு என்ற வகைகளாகப் பிரிக்கலாம்.

கணவன் கருமியாக இருப்பான்; மனைவி தாராளம் தண்ணீர்பட்ட பாடாக இருப்பாள். மனைவி முழுச் சோம்பேறியாக இருப்பாள்; கணவன் சுறுசுறுப்பானவனாக இருப்பான். மனைவி பொறுமைசாலியாக இருப்பாள்; கணவன் முன்கோபியாக இருப்பான். கணவன் பண்பிற் சிறந்த குடியில் பிறந்தவனாக இருப்பான்; மனைவி சிற்றினக் குடும்பத்தில் பிறந்தவளாக இருப்பாள். இந்த மாறுபட்ட குண இயல்புகளால் பிரச்சினைகள் பூதாகாரமாகத் தோன்றிவிடுகின்றன.

இந்த மாறுபாடுகள் நண்பர்களிடமோ, அண்டை அயலாரிடமோ, தொழில் பங்காளிகளிடமோ, உடன் வேலை செய்பவர்களிடமோ தோன்றினால், உறவைக் குறைத்துக் கொள்ளலாம்; அவசியமானால் முறித்துக் கொள்ளலாம். ஆனால், உறவினர்களிடம் அந்தக் கண்டிப்பைக் காட்டிவிட முடியாது. பெரும்பாலும் உறவினர்கள் ஒருமித்த குண இயல்பு உடையவர்களாக இருப்பதால், இந்த மாறுபாடுகள் அதிகம் இரா.





நெருங்கிய உறவுக்குள் திருமணம் நடந்தால், இந்த மாறுபாடுகள் விரிசலாகும் அளவுக்கு விபரீதமாக மாட்டா. புது உறவு, தூரத்துச் சொந்தம் போன்ற சம்பந்தங்களில்தாம் இந்தக் குறைபாடுகள் அதிகமாகக் காணப்படும்.

'கணவன் மனைவி என்ற பந்தம் ஏற்பட்டபிறகு, உறவுதான் முக்கியம். அந்த உறவு பலப்படுவதற்கான காரியங்களை மட்டுமே செய்ய வேண்டும். பலவீனப்படுத்தக் கூடிய எதையும் செய்துவிடக் கூடாது' என்பது யாருக்குத்தான் தெரியாது? என்றாலும் குடும்பத்தில் ஏதாவது முக்கிய நிகழ்ச்சி வரும் பொழுது, சமயம் பார்த்துக் கொண்டு தயாராக இருக்கும் பிரச்சினை, தலை நீட்ட ஆரம்பித்துவிடும்.

ஒரு சுகாதார அதிகாரியின் மாப்பிள்ளை ஒரு விபத்தில் இறந்துவிட்டான். தந்தி வந்தது. எல்லோரும் அலறிப் புடைத்துக் கொண்டு கிளம்பியபொழுது, பெரிய இடத்தில் பிறந்த அவருடைய மருமகள் தனக்கு வரப்பிடிக்கவில்லை என்று சொன்னதுடன், வீணையை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போய்விட்டாள்! வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளிகளை, 'எப்பொழுது புறப்படப் போகிறீர்கள்?' என்று கேட்கும் பண்பற்ற கணவனைப் பற்றி, பண்புள்ள குடும்பத்தில் பிறந்த மனைவி என்ன நினைப்பாள்?

இத்தகையச் சிறிய சிறிய முரண்பாடுகள் வாழ்க்கையில் முட்டுக்கட்டைகளாக நிலைத்துவிடுவதும் உண்டு. ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்கும் போக்கு இருந்தால் போரும், பூசலும் இல்லை. அதற்கு மாறாக, ஒருவர் விட்டுக்கொடுக்க, மற்றொருவர் பிடிவாதமாக இருந்தால், முடிவு மோசமாகத்தான் இருக்கும்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்ற பல திருமணங்கள் சோகத்தில் முடிவதற்கு இந்த மாறுபாடுகளும், வேறுபாடுகளுமே காரணங்களாக அமைந்துவிடுகின்றன. வாழ்க்கை கலைத்துப் போடப்பட்ட சீட்டுகளாகிவிடுகின்றது.

கணவனும் மனைவியும் மாறுபட்ட திசைகளில் வேறுபட்டவர்களாகப் போய்க் கொண்டு இருக்கின்றார்கள்.

யாரும் விரும்பிப் போகவில்லை. வெறுத்துத்தான் போகின்றார்கள். விருப்பமான வாழ்க்கையைப் பெற இந்த வெறுப்பு உதவுமா?

'மண வாழ்க்கையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள்தாம்' என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். எத்தனை மோசமான கணவனாக இருந்தாலும், மனைவிக்கு அவன்தான் மகுடம். மகுடத்தைக் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் 'வாழ்க்கை' என்ற ராஜ்யம் ஏது?

கைவிடப்பட்ட மனைவிக்கு ஆராய்ச்சியும், உபதேசமும் பயன்படா. அதுவே பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் பயன்படும். அதற்கு முதல் வழி—சிறந்த வழியும்கூட—மனைவி, தன்னைத் தானே அறிதல். அதாவது கணவனோடு முறிவு ஏற்படுவதற்குத் தான் எந்த அளவு காரணம் என்பதை அறிதல் வேண்டும். அதன் பின்னர் அந்தக் காரணத்தையும் அதனால் ஏற்பட்ட கோபதாபங்களையும் முழுதுமாக விலக்க வேண்டும். கணவனின் தவற்றை மறக்க வேண்டும். முறிவு ஏற்படும் அளவுக்கு, தான் பொறுமை இல்லாமல் நடந்து கொண்டதை எண்ணி வருந்த வேண்டும். எந்த நிலையிலும் கோபதாபங்கள் முண்டிக் கொண்டு வாராத அளவுக்கு மனத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பக்குவ நிலையில் அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டால், கைமேல் பலன் கிடைக்கும். கைவிட்ட கணவன், அவள் காலடியில் வந்து நிற்பான்.

ஓர் ஆடிட்டருக்கு 5 குழந்தைகள் பிறந்தபிறகு பதவி உயர்வு கிடைத்தது. மனைவி மீண்டும் கருக் கொண்டாள். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் அவர். ஆனாலும், படிப்பு அவரை உச்சிக்கு உயர்த்திவிட்டது. படிப்பும், பதவியும் இருக்கவே, பெரிய இடத்துச் சம்பந்தமாகக் கிடைத்தது. இருந்தாலும் அவருடைய பெற்றோர்களுக்குத் திருப்தியே





ஏற்படவில்லை. "அப்பொழுது அந்தப் பதவிக்கு அந்தக் கல்யாணம். இப்பொழுது கிடைத்து இருக்கின்ற பெரிய பதவிக்கு ஏற்ற மாதிரி இன்னொரு கல்யாணம். உன் மனைவியைத் தள்ளி வை. இலட்சாதிபதி வீட்டில் பெண் எடுக்கலாம். நகையும், பணமும் ஏராளமாகக் கிடைக்கும்" என்று அவர்கள் ஆசையைத் தூண்டிவிட, ஆடிட்டரும் சம்மதித்தார். 'இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டால் சிறைக்குப் போக வேண்டும்' என்பதைக்கூட அறியாத பரிதாபத்திற்கு உரியவராக இருந்தார் அவர். மனைவி தாய் வீட்டுக்குப் பிரசவத்திற்குப் போனாள். கணவர் பெண் பார்க்கப் போனார்! எப்படியோ இந்த விஷயம் மனைவியின் காதுகளுக்கு எட்டியது. அவர் துடித்துப் போனார். அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

அதற்கு ஏழாவது நாள் கணவர் அவரைத் தேடி வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

இந்த உண்மைக் கதையில் கணவர் தவறு செய்ய இருந்தார். மனைவி அதற்காகக் குமுறி வெடிக்காமல் கணவர் செய்ய இருந்த தவற்றைப் புறக்கணித்து, தமக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்று அன்னையைப் பிரார்த்தித்தார். அவருக்கு வேண்டியது கிடைத்தது. இதை விட்டுவிட்டு 'தவறே செய்யாத மனைவி கணவனின் தவற்றை எதற்காக மன்னிக்க வேண்டும்?' என்று குதர்க்கமாகக் கேட்டால், அதற்கு நியாயமான பதிலே இல்லை. கைவிட்ட கணவனைத் தடுக்கும் சக்தி உனக்கில்லை. உன்னால் உன்னைத் திருத்திக் கொள்ள முடியும். முடிந்ததை முழுமையாகச் செய்தால், அன்னை மீதிக் காரியத்தைக் கவனித்துக் கொள்வார்.

தவறே செய்யாத மனைவியை, கணவன் வேறொருத்தி மீதுள்ள நினைவால் கைவிட்டுவிட்டால் என்ன செய்வது? மனைவியின் மீது குறையில்லாவிட்டால் பிரார்த்தனை உடனே பலிக்கும். குறையற்ற நிலையில் பிரார்த்தனை பலன் அளிக்காமல் போனால், அங்கு அஸ்திவாரத்தில் வேறு ஏதோ குறை இருக்கும். அதை ஆத்ம சமர்ப்பணத்தின் மூலம்

தீர்க்கலாம். ‘நம் மீது குறை இல்லை. நமக்குத் தெரிந்த குறை எதுவும் இல்லை’ என்ற நிலையில், முறிவுக்குக் காரணத்தைக் கண்டு பிடிப்பது கடினம். அப்பொழுது திருமணக் காலத்தில் நிகழ்ந்த முக்கியக் கட்டங்களை அன்னையிடம் முறையிட்டால், நம் அறிவுக்குப் புலப்படாத அந்தக் காரணம் அன்னையின் ஒளிக்குப் புலப்படும். வேதனை விலகும்; பிரச்சினை தீரும்.

இவ்வாறு அன்னையிடம் முறை இடுவதைத்தான் நான் சமர்ப்பணம் என்கின்றேன். இதில் கவனிக்கத்தக்கது ஒன்று உண்டு. சமர்ப்பணம் செய்யும்பொழுது பழைய நிகழ்ச்சிகள் ஆத்திரத்தைக் கிளறிவிடும். அதற்கு இடம் கொடுக்கலாகாது. மனம் எந்த அளவுக்கு நிதானமாக இருக்கின்றதோ, அந்த அளவுக்குச் சமர்ப்பணம் பலிக்கும். கணவனால் கைவிடப்பட்ட பெண்ணிடம், ‘நிதானமாகப் பிரார்த்தனை செய்’ என்று சொல்ல முடியாது. சொன்னால், ஆத்திரம்தான் வரும். ஆத்திரம் நீங்கும் வரையில் விஷயம் தள்ளிக் கொண்டே போகும்.

அன்னையிடம் உள்ள விசேடங்களில் ஒன்று என்னவென்றால், சமர்ப்பணத்தைத் தொடங்கியபிறகு ஆத்திரத்தைக் கிளப்பக் கூடிய உணர்வுகள் அடங்கிப் போகும். ஆனால், அணைந்து விடாது. அன்னையிடம் பிரார்த்தனை செய்யும்பொழுது, ‘கோபம் வரக்கூடாது. நிதானத்தைக் கொடுங்கள்’ என்று மற்றொரு பிரார்த்தனையும் செய்து கொண்டால், அன்னை நிதானத்தைக் கொடுத்துவிடுகின்றார். சமர்ப்பணத்தை மேற்கொண்டால், காரணம் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பிரச்சினை தீர்ந்து விடும். அது தீர்ந்தபிறகு காரணம் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

30, 35 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பெரிய இடத்துப் பெண்ணுக்கு வரன் தேடினார்கள். 40 வரன்களுக்குமேல் வந்து போனார்கள். கடைசியில் ஒரு வேலை இல்லாத பட்டதாரியைத் தேர்ந்து எடுத்தார்கள். பிள்ளை வீட்டார் அந்தச் சம்பந்தத்தை முடிக்க, அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டினார்கள். நிச்சயதார்த்தம் நடந்தது. அன்றிரவே பிள்ளையின் தகப்பனார்,





‘நிச்சயத்தை ரத்துச் செய்ய வேண்டும். எனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் இல்லை’ என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். பெண் வீட்டார்கள் கலகலத்துப் போய்விட்டார்கள். நிச்சயதார்த்தப் பத்திரிகை எழுதும் வரையில் உற்சாகம் காட்டிய அவர், இப்பொழுது ஏன் கத்திரித்துக் கொண்டு போக நினைக்கின்றார்? காரணம் புரியவில்லை. இந்த நிலையில் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டுப் போய்விட்டார்கள் மாப்பிள்ளை வீட்டார்கள்.

நாலைந்து நாட்களுக்குப்பிறகு பிள்ளையின் தந்தை, “வீடு எழுதி வைத்தால் கல்யாணம். இல்லையேல் கல்யாணம் இல்லை” என்று பெண்ணின் தகப்பனாருக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்து இருந்தார்.

நிச்சயதார்த்தம்வரை உவகையோடு உறவாடியவர், அதே நட்புடன் ஒரு வீட்டைச் சீதனமாகக் கொடுக்கும்படிக் கேட்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு ஏன் இப்படிக் கிரிமினல் புத்தியோடு போராடுகிறார்? யாருக்கும் எதுவும் புரியவில்லை. வீட்டில் உள்ள ஒரு பெரியவருக்கு மட்டும் அது புரிந்திருந்தது. “இது கர்மம். 20 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்ணின் தாயார் தம் தம்பிக்கு இரண்டாவது திருமணம் செய்ய வேண்டும் என்று முயன்றார். ஆனால், அது நடக்கவில்லை. அந்தப் பாவம் இன்று அவருடைய பெண்ணை நோக்கி வந்து இருக்கின்றது” என்றார் அவர்.

50 வயதுள்ள ஒரு செல்வருக்கு 5 பிள்ளைகள். வயது வந்த பிள்ளைகளையும், மனைவியையும், மிகப் பெரிய சொத்தையும் விட்டுவிட்டு, தலைக்கு மீறிய பிள்ளைகளையும், தலை நரைத்த கணவனையும் உதறித் தள்ளிவிட்டு வந்த ஒரு பெண்மணியை ஊர் அறியக் கல்யாணம் செய்து கொண்டு ஆரவாரமாக விழாக் கொண்டாடினார். அவருடைய முதல் மனைவி, “யாரைச் சொல்லியும் குற்றம் இல்லை. அன்று என் தாயார் இதையே செய்தார். இன்று என் கணவர் அதைத் திரும்பச் செய்கின்றார்” என்றார்.

ஒரு பெண்ணுக்கு நிச்சயம் செய்த மாப்பிள்ளையைக் குறுக்கே புகுந்து குழறுபடி செய்து தம் பெண்ணுக்கு மணம் முடித்தார் ஒருவர். அவருடைய கடைசிப் பெண், திருமணமான 5 ஆண்டுகள் கழித்துக் கணவனால் விலக்கப்பட்டு வாழா வெட்டியானாள்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். இப்படிப் பட்டவர்களும் தம்முடைய அல்லது தம் முன்னோர்கள் செய்த தவற்றுக்காக வருந்தி அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொண்டு துன்பத்திலிருந்து கரை சேர்ந்திருக்கின்றார்கள்.

பிரச்சினையின் தோற்றுவாயான காரணம் தெரிந்ததாக இருந்தாலும் சரி, தெரியாததாக இருந்தாலும் சரி, இன்றைய நிலை என்ன? ‘கணவன் கைவிட்டுச் சென்று ஓராண்டு காலமாகின்றது. போனவர் போனவர்தானா? அல்லது திரும்பி வருவாரா? தெரியவில்லை. எதிர்காலத்தை நினைத்தால் இருள் மயமாக இருக்கின்றது. நினைக்கவே பயமாக இருக்கின்றது. இந்தக் குழப்பமான நிலையில் எதைச் செய்வது? எதை நினைப்பது? எதை நினைத்தாலும் கசப்பாக இருக்கின்றது. குழந்தையின் மேல்கூடக் கோபம் கோபமாக வருகின்றது. அவ்வளவு ஏன்? தன் மேலேயே வெறுப்பு ஏற்படுகின்றது. யாராவது ஆறுதலாகப் பேசினால்கூட, “இவர்கள் எல்லாம் ஏன் இப்படி உயிரை வாங்குகின்றார்கள்?” என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஏன் பிறந்தோம்? எத்தனைக் காலத்திற்கு இந்தச் சித்திரவதை? என்பவை போன்ற விரக்தியான நினைவுகள் சவுக்கைச் சுழற்றுகின்றன. யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை.

இப்படி எல்லாம் அலையிடை அகப்பட்ட துரும்பைப் போல அல்லற்படும் மனம் அன்னையை நினைத்தால், ஆறுதலோடு அமைதி கிடைப்பதையும், உள்ளத்தில் குளிர்ச்சி பரவுவதையும் உணர முடியும். தாங்க முடியாத அளவுக்கு இருந்த மனப்பாரம், பொறுத்துக் கொள்ளக் கூடிய அளவில் குறைந்து போகும். ‘இந்த ஆறுதல், அமைதி, பொறுமை போன்றவை மனத்திலே





எழுந்துவிட்டால், பிரச்சினை விலகுவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தோன்றிவிட்டன’ என்று பொருள்.

சிலருக்கு உடன் பலன் கிடைக்காமல் நாள் கடந்து போகலாம். அவர்கள் ஆத்ம சமர்ப்பணம் செய்ய வேண்டும். அன்னையோடு இடையறாத தொடர்பு கொண்டு பிரச்சினைக்குக் கருவியாக அமைந்த தம் தவற்றை எடுத்துச் சொல்லி, அந்தத் தவற்றை இனிச் செய்யாமல் இருப்பதாகச் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். முதலில் சமர்ப்பணம்; அடுத்துச் சங்கற்பம். இந்த இரண்டும் கர்ம பலனை அழிக்கும்; பிரச்சினைக்கு எழுவாயாக இருந்த காரணத்தை நீக்கும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் பாண்டிச்சேரிக்கு வந்து சமாதிதரிசனம் செய்வது நல்லது. அது பிரார்த்தனைக்கு வலுவைக் கொடுக்கும். ஆனால், மனநிலையும், மற்ற சந்தர்ப்பங்களும் சரி இல்லாத நிலையில், அவர்களால் பிரயாணம் செய்ய முடியாமலும் போகலாம். அப்படியானால் இருந்த இடத்திலேயே செய்யக் கூடியது ஏதேனும் இருக்கின்றதா? இருக்கின்றது. விரதத்தைக் கடைப்பிடிக்கலாம். நான் வழக்கமான விரதத்தைச் சொல்லவில்லை. இது முற்றிலும் மாறான விரதம். மனத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பிரார்த்தனையை வலுப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படும் விரதம். மனத்தை அலையவிடும் செயல்களைக் கட்டுப்படுத்தி ஒருமுகமான பிரார்த்தனையில் சிந்தனையைச் செலுத்தும்பொழுது, விரதம் கைகூடுகின்றது; பிரார்த்தனை பலிக்கின்றது; பாலையாக இருந்த வாழ்க்கையில் வசந்தம் மலர ஆரம்பிக்கின்றது.

✶✶✶

# 9. இழந்ததைப் பெறலாம்

தொலைந்து போன நகை, பறிபோன உத்தியோகம், திருடு போன பணம், கைவிட்ட வாழ்க்கை போன்றவையும் அந்த நேரத்தில் நேர்ந்துவிட்ட இழப்புகளே. ஆனால், நான் இங்கே கூறப் போவது இந்த இழப்புகளைப் பற்றி அல்ல. இழந்த பெருஞ் செல்வத்தைப் பற்றி.

'ஒரு காலத்தில் 100 வேலி நிலம் இருந்த பண்ணை அது. இப்பொழுது ஒன்றும் இல்லை. அந்தக் காலத்தில் 60 பஸ்கள் ஓடின. இப்பொழுது ஒரு பஸ்தான் ஓடுகின்றது. இந்தப் பகுதிக்கு கவர்னர் வந்தால் இவர்தாம் வரவேற்பார். இன்று நொடித்துப் போய் மூலையில் கிடக்கின்றார்' என்பது போன்ற நிலைக்குத் தாழ்ந்துவிட்டவர்களைப் பற்றியே இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உத்தியோகத்தை இழந்த அதிகாரிக்கும், பொருள்களைப் பறி கொடுத்தவர் களுக்கும், பதவியை இழந்த அரசியல்வாதிக்கும்கூட இனி நான் சொல்லப் போகும் கருத்துகள் எல்லாம் முழுமையாகப் பொருந்தும். என்றாலும், பெருஞ்செல்வத்தை இழந்து இன்று நிலை தாழ்ந்து வறுமையில் உழல்பவர்களையே மனத்தில் கொண்டு இதை எழுதுகின்றேன்.

'30 வருஷம் வாழ்ந்தவர்களும் இல்லை; 30 வருஷம் கெட்டவர்களும் இல்லை' என்ற ஒரு பழமொழி உண்டு. 'செல்வம் சகடக்கால் போல் வரும்' என்றும் சொல்வார்கள். அவற்றில் உள்ள உண்மையை நான் புறக்கணித்துப் பேசவில்லை. அவற்றை ஆராய்வதை விட்டுவிட்டு அதற்கும் அப்பால் உள்ள இரு உண்மைகளை நான் கருதுகின்றேன்.

மேலை நாடுகளில் செல்வர்களுடைய செல்வம் தொழில்களில் முதலீடு செய்யப்பட்டபிறகு, நம்முடைய பழமொழிகளில் உள்ள





உண்மை பொய்த்து, 30 ஆண்டுகள், 70 ஆண்டுகள், 130 ஆண்டுகள், என்ற நிலைகளில் தொடர்ந்து அந்தத் தொழில் நிறுவனங்கள் ஆல் போல் தழைத்து, செல்வ நிலையையும் பன்மடங்காகப் பெருக்கி, வளமாக வளர்ந்து கொண்டு வருகின்றன. அதற்கு மாறி வரும் அரசியல் நிலையும், புதிய சட்டங்களுமே காரணங்கள். 'அன்னையின் பக்தர்கள் எல்லாச் சட்டங்களுக்கும் அப்பாற் பட்டவர்கள்' என்பது, அந்த உண்மைகளுக்கும் எல்லாம் மேலான உண்மை. அன்னையின் பக்தர்களால் பெற்ற செல்வத்தை இழக்க முடியாது. இழந்தது போன்று தோற்றும் செல்வத்தை, மீண்டும் அவர்களால் பெற முடியும்.

90 வயதுள்ள ஒரு முதியவர் தம் வாழ்க்கையில் சந்தித்த செல்வத்தை இழந்தவர்களின் பட்டியலைப் புரட்டிப் பார்த்தால், இழந்தவர்கள் இழந்தவர்களாகவே இருப்பார்கள். பதினாயிரத்தில் ஒருவர் உருண்டு புரண்டு இழந்த செல்வத்தைப் பெற்றவராக இருப்பார். முழுச் செல்வத்திற்கும் ஆபத்து வந்து, ஆட்டம் கண்டு, முழுதும் கவிழ்வதற்குள் எப்படியோ சமாளித்துக் கரைசேர்ந்த செல்வர்களும் உண்டு. ஆனால், எல்லாமே போய்விட்டபிறகு, அந்தப் புயலைக் கடந்து மலை போல் நின்ற செல்வர் எவரும் இல்லை. நிற்கும்பொழுது மலை. கரைந்துவிட்டால் மண். இதுதான் செல்வ நிலை.

கரைந்த மண்ணையும் கரையாத மலையாக்க வல்லது அன்னையின் அருள்.

ஒரு கோடி ஆஸ்தியை இழந்த ஓர் அமெரிக்கர், தம்மைத் திவாலாக ரிஜிஸ்டர் செய்யப் புறப்பட்டுக் கொண்டு இருந்தார். அப்பொழுது அவருடைய நண்பரான ஓர் அன்னையின் பக்தர் அவரைத் தடுத்து நிறுத்தி, "அன்னையைப் பிரார்த்தனை செய்து கொண்டால், இழந்த செல்வம் இரண்டு மடங்காகப் பெருகும்" என்று கூற மாஜி கோடீஸ்வரர் மனம் நெகிழ்ந்து அன்னையிடம் தொடர்ந்து வேண்டுதல் செய்ய, ஓராண்டுக்குள் அவர் இழந்ததைப் பெற்று, அடுத்த ஆண்டு இரண்டரைக் கோடி

இலாபம் ஈட்டியதை, நான் அடிக்கடி கட்டுரைகளில் குறிப்பிடுவதுண்டு.

அன்னையை ஏற்றுக் கொண்டவர்கள், அவர்கள் இழந்த செல்வம் எத்தனைப் பெரியதாக இருந்தாலும், எத்தனைக் காலம் கடந்து போயிருந்தாலும், அதை மீண்டும் பெறக் கூடிய வாய்ப்பைப் பெறுகின்றார்கள். அவர்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நம்பிக்கை. நம்பிக்கை பல வகைகளிலும், பல அளவுகளிலும் இருக்கும். “நோய் தீர்கின்றது, பரீட்சை பாஸாகின்றது, வேலை கிடைக்கின்றது என்பதால் 20 ஆண்டுகளுக்கு முன்னால் நான் இழந்த செல்வத்தை மீண்டும் பெறுவேன் என்பதை என்னால் நம்ப முடியவில்லை” என்று நினைப்பது இயல்பு. அந்த நினைப்பு உள்ளவர்களுக்கு இந்தக் கட்டுரை பயன்படாது. ‘யாரோ சிலருக்கு அப்படி நடக்கிறது என்றால், அவர்கள் ஜாதகம் அப்படி’ என்று நினைப்பவர், தமக்கு நம்பிக்கை இல்லை என்பதை வேறு வகையில் சொல்கின்றார் என்றாகிறது. தமக்குத் தெரிந்த நாலுபேர் அன்னையை வழிபடுகின்றார்கள் என்பதற்காக அன்னையை வழிபட ஆரம்பிக்கின்ற ஒருவருக்கு, அந்த நாலுபேர்தான் முக்கியம். அன்னை இல்லை.

‘நீண்ட காலத்திற்கு முன்னால் பெருஞ்செல்வம் கற்பூரமாய்க் கரைந்து போயிற்று. அதை மீண்டும் பெற வேண்டும்’ என்று எண்ணும் ஒருவருக்கு, அன்னையிடம் உண்மையான நம்பிக்கை ஏற்பட வேண்டியது அவசியம். ‘அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனையால் இழந்ததை நிச்சயம் பெறுவோம்’ என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம். அத்தகையவர்களுக்கு இதில் சொல்லப்படும் கருத்துகள் மிகவும் உதவும். ஒரு வகையில் சொல்லப் போனால், நான் தெரிவிக்கும் கருத்துகள் எல்லாம் வெறுங் கருவிகள்தாம். நம்பிக்கை மட்டுமே சக்தியுடையது. கருவிகள் துணைக்கு வரும்; வழி காட்டும்; ஒளியூட்டும். அவ்வளவுதான்!





‘அன்னைக்கு எல்லாவற்றையும் ஆள்கின்ற, முறை செய்கின்ற சக்தி எப்படி ஏற்பட்டது? ஏன் அமைந்தது?’ எனில், அன்னையின் ஒளிப்பொறி மனித இதயத்தில் வந்து தங்கியவுடன், அது அவனுடைய வாழ்க்கை முழுதும் பரவி, தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயல்கின்றது. ஸ்ரீ அரவிந்தரின் யோகமான பூரண யோகம், வாழ்க்கையை ஏற்றுக் கொள்கின்ற யோகம்; புறக்கணிக்கும் யோகம் இல்லை. ஆகவே அவ்வொளி அவனுடைய ஆத்மாவை ஆட்கொண்டதைப் போல அவனுடைய வாழ்க்கையையும் ஆட்கொள்கின்றது. மேலும் அவ்வொளிக்கு முக்காலமும்–இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்–கட்டுப்பட்டது. மனித மனம் நிகழ்காலத்தில் செயல்படுகின்றது. கடந்தகாலத்தை மனித மனம் நினைவுபடுத்திக் கொள்ளத்தான் முடியும். எதிர்காலத்தைக் கற்பனைதான் செய்ய முடியும். அவனுடைய மனத்தால் நிகழ்காலத்தை மட்டுமே கட்டி ஆள முடியும். ஆனால், அன்னையின் ஒளி மூன்று காலங்களையும் கட்டி ஆள்கின்றது. அதற்கு அந்தத் திறன் இயல்பாக அமைந்தது. இன்று நம் வாழ்க்கையை அன்னைக்குச் சமர்ப்பிப்பது போல், பக்தன் கடந்தகால வாழ்க்கையையும் சமர்ப்பித்துவிட்டால், சென்றகால நிகழ்ச்சிகள் அந்த ஒளியின் ஆட்சியின் கீழ் வரும்; அதன் பலனைப் பெறும்.

அன்னையின் ஒளியும், ஒரு பிரச்சினையும் சந்தித்து விட்டால், அந்தப் பிரச்சினை தீர்கின்றது. கடந்தகாலப் பிரச்சினை இன்று தீர வேண்டுமானால் அன்னையின் ஒளியும், அந்தப் பிரச்சினையின் கூறுகளும் இன்று சந்திப்பதற்கு நம்மாலானவற்றை எல்லாம் செய்ய முன்வர வேண்டும். இதுவே முறை. முறையை முழுதும் விளக்கும்முன், ‘செல்வம் எப்படி இழக்கப்பட்டது? எந்த முறையில் இழக்கப்பட்டது’ என்பனவற்றை நோக்குவோம்.

பெரும்பாலும் பெருஞ்செல்வத்தை இழந்தவர்கள் நிர்வாகத் திறமை இல்லாத காரணத்தாலேயே இழந்தவர்களாக இருப்பார்கள். “அவர்களுக்கு 7 கிராமங்களில் நிலம். உள்ளூரில்

மட்டும் 400 ஏக்கர். ஆறு பேர் உடன் பிறந்தவர்கள். 50 வருடங்களுக்கு முன்னால் அவர்கள் சிறப்பாக வாழ்ந்தனர். குதிரைச் சவாரி செய்து நிலத்தைச் சுற்றி வருவார்கள். சகோதரர்கள் ஒருவர்பின் ஒருவராய் இறந்துபோய், கடைசியில் ஒருவர் மட்டுமே மிஞ்சினார். அவர் காலம் வரையில் சொத்து அப்படியே இருந்தது. அவரும் போய்ச்சேர்ந்தார். அவர் போய்ச் சேர்ந்த கொஞ்ச காலத்திற்குள் சொத்து முழுதும் போய் விட்டது!" என்று 1000 ஏக்கர் நிலத்தைக் கட்டி ஆண்ட ஒரு குடும்பத்தைப் பற்றி என்னிடம் ஒருவர் சொன்னார்.

பெரிய செல்வத்தோடு பெரிய நிர்வாகமும் சேர்ந்திருக் கின்றது. அடுத்த தலைமுறைக்குச் சொத்து மாறும்பொழுது நிர்வாகத் திறமையுள்ளவர் ஒருவர் இல்லை என்றாலும், அப்படி ஒருவர் இருந்து அவருக்கு மற்றவர்கள் கட்டுப் படவில்லை என்றாலும், அந்தச் செல்வம் சிதறிச் சீரழிந்து போகின்றது.

திறமையுள்ளவர்கள் நிர்வாகத்தில் கவனத்தைச் செலுத்தாமல் ஆடம்பரப் பொழுதுபோக்குகளில் திளைத்துத் திரியும்பொழுது சொத்துகள் அழிந்து போவதுண்டு. சூதும், குதிரைப் பந்தயமும் பல பெரிய குடும்பங்களைக் கீழ் நிலைக்குக் கொண்டு வந்து இருக்கின்றன. விலை மாதரைச் சுற்றி வண்டாக அலைந்தவர்கள், மதுக்கடலில் மூழ்கி முக்குளித்தவர்கள், வீண் பெருமைக்காகத் தானத்தை அள்ளி வீசியவர்கள், தம்மை மிஞ்சியவர் எவரும் இல்லை என்ற கர்வம் கொண்டு எல்லோரையும் பகைத்துக் கொண்டவர்கள், பரம்பரைப் பண்பைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுப் பண்பற்ற செயல்களில் ஈடுபட்டவர்கள், எதிரிகள் என்று நினைக்கப்படுபவர்களை வன்மத்துடன் வாரிச் சுருட்டிக் குழியில் போட்டு மூடியவர்கள், 'காசை வீசி'க் காரியங்களைச் சாதித்தவர்கள் – இவர்களைப் போன்றவர்கள் – சொத்தை இழந்தவர்கள் பட்டியலில் இடம் பெறுவார்கள்.





இந்தப் பட்டியலைப் பூர்த்தி செய்வதற்கு முன்னால் நான் சொல்ல விரும்புகின்ற ஒன்று உண்டு. அது இதுதான்: "சொத்து அழிந்ததற்கு ஒரு காரியம் அல்லது பல காரியங்கள் அடிப்படையாக இருக்கும். இந்த ஒவ்வொரு காரியத்திற்கும் அடிப்படையில் ஒரு மனப்பான்மை (**attitude**) உண்டு. அந்த மனப்போக்கு, அல்லது குணம், அல்லது சுபாவம் இன்றும்கூட அவர்களிடம் இருக்கும். பொருளை இழந்தோர் அதற்கான மூல காரணத்தையும், அதற்கு அடிப்படையாக இருந்த மனப் பான்மையையும் அதாவது குணம், சுபாவம், தன்மைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்த பின்னர் இன்று அந்த மனப்போக்கை மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும்".

முதலாவதாக நம்பிக்கையும், இரண்டாவதாகச் சொத்தை இழப்பதற்குக் காரணமான குணத்தையும் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கும் மனநிலையும் ஏற்பட்டுவிட்டால், பக்தனின் பங்கு பெரும்பாலும் முடிந்துவிட்டது. நம்பிக்கையே போதுமானது. அதோடு பாதகமாக இருந்த தன் குணத்தையும் மாற்றிக் கொள்ள முன்வரும்பொழுது, அவன் இழந்ததைப் பெறக் கூடிய முழுத் தகுதியையும் பெற்றுவிடுகின்றான். பிறகு பிரார்த்தனைகூட அவ்வளவு முக்கியம் இல்லை. தன் நடைமுறைச் செயல்களை அந்தப் புதிய மனப்பான்மையுடனும், குறிப்பாக பழைய மனப்பான்மையின் வாடை சிறிதும் இல்லாமலும் செய்தால், பக்தன் அன்னையை நினைப்பதற்கு முன்னால் அன்னை அவனை நினைப்பார். அன்னை, பக்தன் பிரார்த்தனை செய்வதற்கு முன்னாலேயே பலனைக் கொடுத்துவிடுவார். இந்த நிலையில், 'நினைவே வழிபாடு' என்ற நோக்கோடு செயல்களைப் புரிந்து கொண்டு இழந்ததைப் பெறப் பிரார்த்தனை செய்தால், அந்தப் பிரார்த்தனை அபரிமிதமான அளவில் பலனைக் கொடுக்கும்.

சொத்தை இழந்தவர்களில் பெரும்பாலோர் இதற்கு இசைய மாட்டார்கள். அவர்கள் பிடிவாதக்காரர்களாகவும், தம்முடைய குணம், சுபாவம், பழக்க வழக்கங்களை முக்கியமாக

நினைப்பவர்களாகவும் இருப்பார்கள்; எதையும் விட்டுக்கொடுக்கக் கூடிய தாராள நோக்குடையவர்களாகவும் இருக்கமாட்டார்கள். அவர்களை மாற்றுவது நம் குறிக்கோள் இல்லை. 'எப்படிச் செய்தால் இழந்த நம் சொத்தைப் பெற முடியும்?' என்று அவாவுகின்றவர்களும், 'இன்று நம் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டால் அதற்குரிய பெரும்பலன் கிடைக்கும்' என்பதைத் தெரியாதவர்களும் நிறையவே இருக்கின்றார்கள். அவர்களுக்கு அது தெரிந்தால், நம்முடைய கருத்துக்கு இசைவார்கள். அப்படித் தங்களை மாற்றிக் கொள்ள முன் வருபவர்களுக்கு ஏராளமான விளக்கங்கள் தேவை. அவைதாம் இங்கே தரப்பட்டிருக்கின்றன.

திவாலான ஒருவர் கடைக் குமாஸ்தாவாகப் போனார். அவர் மனைவி படித்திருந்ததால் வேலைக்குப் போனார். மாதத்திற்கு 2000 ரூபாய் செலவு செய்த குடும்பம், இப்பொழுது 200 ரூபாயில் நடக்க வேண்டும். (இப்பொழுது என்றால் இன்று, நேற்று அன்று; முப்பது ஆண்டுகளுக்குமுன்பு) பற்றாக் குறையோடு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்த நிலையில் ஒரு நாள் அவர் மனைவியார் தம் பிறந்த வீட்டிற்குப் போயிருந்தார். அவர் போனவுடனே அவரைப் பார்க்கப் புறப்பட்டுவிட்டார் கணவர். புறப்பட்டவர் சும்மா போகவில்லை. தாம் புறப்பட்டு வருவதாக ஒரு தந்தி கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். தந்தி போய்ச் சேர்ந்தும் மாமியார் வீட்டில் யாரும் சந்தோஷப் படவில்லை. 'இப்படி ஊதாரித்தனமாய்ச் செலவழித்துத் தாமே இருந்த சொத்தை எல்லாம் அழித்தார், இன்னும் புத்தி வரவில்லையே!' என்று முணுமுணுத்தார்கள். அவர்கள் முணுமுணுப்பிலும் அர்த்தம் இருக்கின்றது. எந்த மனப் பான்மையுடன் இன்று தேவை இல்லாத செலவைச் செய்து ஒரு தந்தி கொடுத்தாரோ, அதே மனப்பான்மையால்தான் அன்று அவருடைய பெருஞ்செல்வம் அழிந்தது.

சுமார் 40 ஆண்டுகளுக்குமுன்பு நான் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தபொழுது ஓர் ஆசிரியர் இருந்தார்.





அவர் ஒரு கேரள அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். மிக மிக அடக்கமானவர். அவர் பங்குக்கு அன்று 18 இலட்ச ரூபாய் வந்தது. அவர் பியூனிடம் ஐந்து ரூபாய் கொடுத்து ஏதாவது வாங்கிவரச் சொன்னால், மீதியைக் கேட்க மாட்டார்; எடுத்துக் கொள்ளச் சொல்வார். அவர் ராஜ பரம்பரை. அது சரி. குலத்தளவே ஆகுமாம் குணம்! அதே சமயத்தில் இன்னொரு வரையும் நினைவு கூர வேண்டும். வாழ்ந்து கெட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பள்ளியில் அட்டெண்டராகச் சேர்ந்து, பிறகு கிளார்க்காக உயர்ந்து 183 ரூபாய் சம்பளம் வாங்கினார். அவர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்பொழுது கண்டக்டரிடம் நோட்டைக் கொடுத்தால் சில்லறை வாங்க மாட்டார். 'நீயே வைத்துக் கொள்' என்பார். சொத்துப் போய்விட்டது. ஆனால், சொத்துப் போகக் காரணமாக இருந்த அவருடைய குணம் மட்டும் இன்னும் போகவில்லை.

இன்னொருவர் பெருஞ்சொத்தைக் குறுகிய காலத்தில் தொலைத்தவர். அவரைப் பார்க்க அவருடைய நண்பர் ஒருவர் வந்தார். நண்பரிடம் அவர் 'குடும்பத்தை எப்படி நல்ல முறையில் நடத்த வேண்டும்?' என்று விரிவாக விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தார். அதைக் கேட்டுக் கொண்டு இருந்த அவருடைய அண்ணன், "நீ ஒன்றும் செய்ய மாட்டாய். ஆனால், பிறருக்கு உபதேசம் மட்டும் நன்றாகச் செய்வாய். உன்னுடைய சொத்துப் போனதற்குக் காரணமே இதுதான். என்று நீ பிறருக்கு யோசனை சொல்வதை நிறுத்துகின்றாயோ, அன்றுதான் உருப்படுவாய்" என்று எரிச்சலுடன் கூறினார்.

இதுபோல் சொத்துப் போனதற்குக் காரணமாக இருந்த ஒவ்வொரு குணத்திற்கும் பல பொருத்தமான உதாரணங்களைக் கொடுக்கலாம்.

முதலில் தேவைப்படுவது அன்னை மீது நம்பிக்கை. அடுத்தது, 'செல்வம் நம் குடும்பத்தைவிட்டு எப்படிப் போயிற்று?' என்ற விவரமான அறிவு. நம் ஆராய்ச்சியின் அடுத்த கட்டம்,

‘அந்தப் பழக்கங்களுக்கு அடிப்படையான, குணங்கள் எவை? கடைசியாக அந்தக் குணங்கள், இன்று நம்மிடம் எந்த வடிவத்தில், எந்தப் பழக்கத்தில், எந்தச் செயலில் தங்கியுள்ளன?’ என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பலருக்கு இது புரியாது. ‘அப்படி எந்தக் குணமும் நம்மிடம் இல்லையே’ என்று சட்டென்று சொல்லிவிடுவார்கள். இது ஆழ்கடலில் முத்துக் குளிக்கின்ற வேலை. இதில் தேடல் அவசியம். ‘தேடிக் கண்டு கொண்டேன்’ என்பார்கள். இப்படிக் கண்டுகொள்வதை, தன்னை வரவு செலவுக் கணக்குப் போட்டுப் பார்த்துச் சமர்ப்பிப்பதை, ‘உண்மை அறிதல்’ என்கிறார் அன்னை.

ஒரு பக்தர் இந்தக் கட்டங்களை எல்லாம் தாண்டி வந்து விட்டார் என்றால், அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கும் அடுத்த கட்டம் முதிர்ந்த முடிவு (decision). “எக்காரணத்தை முன்னிட்டும் அந்தப் பழைய குண இயல்புகள் வெளிப்படும்படி நான் நடக்க மாட்டேன். அந்தப் பழைய பழக்க வழக்கங்களை, இனி நான் கிஞ்சிற்றும் அனுமதிக்கப் போவதில்லை” என்ற தீர்மானத்திற்கு வருவதற்குப் பெயர்தான் ‘தீர்ந்த முடிவு’. ‘தீர்ந்த முடிவு’ என்றால், மாற்றம் இல்லாத முடிவு.

இதற்கும் விளக்கம் தேவை என்று நினைக்கின்றேன். இதை ஏதோ ஓர் உந்துதலுக்காக எடுத்த முடிவாக நினைக்காமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டியது முதல் பயிற்சி. அது முடிவை உறுதிப்படுத்தும். அதற்குத்தான் கணக்குத் தேவைப்படுகின்றது. மனத்தை பழைய நிகழ்ச்சிகளை நோக்கிச் செலுத்தி, ஓர் ஆய்வை நடத்தி, அன்றைய மனநிலையை இன்றைய மனநிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து, ‘பிரார்த்தனையால் இன்றைய நிலை மாறும்’ என்ற வாய்ப்பைச் சிறப்பாகச் சிந்தித்து, ‘எந்தக் குணங்களை மாற்றுவது எளிது, எது கடினம்?’ என்று சோதித்து, ‘எந்தப் பழக்கங்களை விட்டுவிட முடிவு செய்தால் அதை நிறைவேற்றலாம்? எவற்றை நீக்க முற்பட்டால் அவை நம்மை மீறிச் செல்லும்?’ என்றெல்லாம் கணக்குப் போட்டு, நல்லவற்றையும், அல்லாதவற்றையும் வரவு செலவுகளாகக்





கருதி, ஆய்ந்து, தோய்ந்து, ஒரு தேர்ந்த தெளிவுக்கு வந்து ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

அத்தகைய உறுதிப்பாட்டுடன் எடுக்கப்பட்ட முடிவு, அந்த பக்தரைப் புதிய மனிதராக்கும். அந்த முடிவை ஏற்றுக் கொண்டவுடன் புத்துணர்வும், புதுப் பொலிவும், தெம்பும், இதுவரை இல்லாத தெளிவும், தைரியமும், எதிர்காலத்தை விடியல் ஆக்குகின்ற நம்பிக்கை ஒளியும் நெஞ்சில் ஊடுருவி, ஜீவனில் புகுந்து, அவருக்கு ஒரு புனர்ஜன்மத்தைக் கொடுக்கும். அன்று புதிதாய்ப் பிறந்த அந்த பக்தரின் வாழ்வில், அடுத்து நடப்பவை எல்லாம் அற்புதங்களே. ஸ்ரீ அரவிந்தரின் ‘சாவித்ரி’ என்ற காவியத்தில், ‘அற்புதங்கள் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகும்!’ என்ற ஒரு வரி உண்டு. அந்த வரியே அந்த பக்தரின் வாழ்க்கையாக அமையும்.

‘இனி உன் குடும்பத் தலைவன் நீ இல்லை. அன்னை உன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கின்றார். உன் நம்பிக்கையாலும், உன் குணங்களை மாற்றிக் கொள்ள நீ செய்த முடிவாலும், அந்த முடிவின் முழுமையாலும் நீ பவித்திரம் அடைந்துவிட்டாய். அதன் மூலம் உன் வாழ்வை நீ அன்னைக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டாய். அன்னை இனி உன்னை முறை செய்தும், வகை செய்தும் வழி நடத்துவார்’.

மாற்றமும் ஏற்றமும் பெற்ற மனத்தில் நம்பிக்கை பிறந்து பெருகிக் கொண்டே இருக்கும். ஒப்பு நோக்கக் கூடிய எந்தப் புற நிகழ்ச்சிகளும் இல்லாமல், அதற்கு அவசியமும் இல்லாமல் நம்பிக்கை தானே வளரும். ஆழ்ந்த அமைதி நமக்கு நிழல் கொடுக்கும். ‘என்ன நடக்கின்றது?’ என்பது அறிவுக்குப் புலப்படாமல் இருக்கும். ஆனால், ஜீவனுக்குப் புலப்படும். புற நிகழ்ச்சிகள் நமக்குப் புரியவும் செய்யலாம்; புரியாமலும் போகலாம். அன்னையின் சந்நிதியில் காரியமும், காரணங்களும் தனித்தனிக் கோலங்களாக இருக்கின்றன.

அவை எப்படிப்பட்ட கோலங்கள்?

நாம் பணி புரியும் இடத்திலும், உறவினர்களைச் சந்திக்கின்றபொழுதும், நண்பர்களிடையே பழகும்பொழுதும் ஒரு சிறப்பான மாறுபாட்டைக் காணலாம். திடீரென்று நம் நிலை உயர்ந்துவிட்டது போல எண்ணி அவர்கள் நம்மை மேன்மையாக நடத்துவார்கள். ஒரு காலத்தில் யாரை நாம் தேடிப் போய் உதவி கேட்டோமோ, அவர்கள் நம் வீடு தேடி வந்து நமக்கு உதவி செய்வார்கள். சிரமப்பட்டு முடிக்க வேண்டிய காரியம், மிக எளிதில் முடியும். இதுவரை நம்மைக் கண்டால் வெறுத்து விலகிப் போனவர்கள், இப்பொழுது விருப்புடன் நம்மை நாடி வருவார்கள். நம் வீட்டைத் தாண்டிப் போகும்பொழுது திரும்பிக்கூடப் பார்க்காத வசதி மிக்க உறவினர்கள், இப்பொழுது ‘என்ன சௌக்கியமா?’ என்று நம் வீட்டுக் கதவைத் தட்டி நலம் விசாரித்துவிட்டுப் போவார்கள். அரிதாகக் கிடைக்கக் கூடிய ஒரு பொருளுக்கு எல்லோரும் ஆலாய்ப் பறக்கின்றபொழுது, நமக்கு அந்தப் பொருள் மிகச் சுலபமாகக் கிடைக்கும். நாம் விவசாயியாக இருந்து பயிர் செய்தால், ஊருக்கு மிஞ்சிய விளைச்சல் நம்முடையதாகத்தான் இருக்கும். நேற்றுவரை நம்மைத் தூற்றிப் புடைத்தவர்கள், இன்று போற்றி மகிழ்வார்கள். உள்ளூரில் வாழும்போது நம்மை உதாசீனப்படுத்தியவர்கள் வெளியூர்வாசிகளானபிறகு, நம்மைச் சந்திக்க ஊர்விட்டு ஊர் வந்து உறவாடிவிட்டுப் போவார்கள்.

சுருங்கச் சொன்னால், ‘நமக்கு நம் பெருஞ்செல்வம் திரும்பிவரப் போகின்றது’ என்பதை, நாம் மனத்தைத் திருத்தித் தெளிவான முடிவை எடுத்தவுடன், மற்றவர்களுக்கு எல்லாம் தெரிந்துவிட்டன போன்ற நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கிவிடும்.

‘நாம் எடுத்த முடிவை அன்னை ஏற்றுக் கொண்டார்; ஆசீர்வாதம் செய்துவிட்டார்; முடிவு நிறைவு பெறும்; பரிபூரணமாகப் பூர்த்தியாகும்’ என்பதற்குக் கீழ்க்கண்ட இவை சிறப்பான அறிகுறிகள்.





1. ஜீவன் முழுதும் சாந்தம் பரவும்.

2. அமைதி நிலையாக நம்மிடம் குடி கொள்ளும்.

3. ஏற்பட்ட நம்பிக்கை, காரணம் புரியாத அளவுக்கு வளரும்.

4. மனம் மகிழ்ச்சியாக இருக்கும்.

அதற்குமேல் நமக்கு வருவது அதிர்ஷ்டம் இல்லை. ‘அதிர்ஷ்டம்’ என நாம் புரிந்து கொண்டு இருப்பது அளவோடு வரக்கூடியது. அது நமக்கு அன்னை கொடுக்கும் பரிசு. அது அளவற்றது. அது வெள்ளமாகப் பெருகி வழியும். எது எப்படி யானாலும் நமக்கு இப்பொழுது வருவது, நாம் ஏற்கனவே இழந்ததைவிடப் பெரியது. அது ஒப்பிட முடியாத அளவுக்கு மிகப் பெரியதாக இருக்கும்.

‘அதிர்ஷ்டம்’ என்பது வாழ்க்கை கொடுப்பது. நீ இப்பொழுது பெற்றிருப்பது அன்னை. உன் வாழ்க்கையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர் தம் கையால் உனக்கு வழங்கிய பெருங்கொடை. அதிர்ஷ்டத்தின்கை பெரியது. ஆனால், அதற்கு ஒரு கைதான் உண்டு. அன்னைக்கு ஆயிரம் கைகள். உன்னைச் சந்திக்கும் ஒவ்வொரு நபரின் மூலமாகவும், நிகழ்ச்சியின் மூலமாகவும் உனக்கு இடையறாது அன்னை வாரி வழங்கிக் கொண்டே இருப்பார்.

இறுதியாக ஒன்று. இது செல்வத்தைப் பற்றிய கட்டுரை என்றாலும், இதில் கூறியுள்ள கருத்துகள் அனைத்தும், உத்தியோகம், பதவி, வாழ்க்கை ஆகியவற்றில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பொருந்தக் கூடிய உண்மைகள்.

✶✶✶

# 10. கர்மவினையும் அன்னையின் அருளும்

தவிர்க்க இயலாத ஒரு சிக்கலில் சிக்கிக் கொண்டு விழி பிதுங்கும்பொழுது அதனை, 'தலைவிதி' என்கின்றோம். இந்தத் 'தலைவிதி' என்பது என்ன? 'முற்பிறவியில் செய்த வினையால் விளையும் பயன்களை யாராலும் தவிர்த்துக் கொள்ள முடியாது. அவற்றை அனுபவித்தே தீர வேண்டும்' என்று தீர்ப்பு அளிப்பதுதான் தலைவிதி. தலைவிதியால் மட்டுமன்று; ஆரம்பக்கால வாழ்க்கையில் நாம் செய்த செயல்களே பிற்கால வாழ்க்கையின் முடிவாகவும் அமைகின்றது. செயல்களின் காரணமாக விளையும் பலன்களை எந்த விதத்திலும் தவிர்க்க முடியாது. செய்த வினைக்கு ஏற்ப, அதன் பலனை அனுபவித்தேயாக வேண்டும். இது தொன்று தொட்டு வரும் வினைக் கொள்கையாகும்.

'வினையால் விளையும் பலனைத் தவிர்க்க முடியாது' என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன. சாபம் பெற்றவன் சர்வேச்வரனாகவே இருந்தாலும், அதிலிருந்து மீள முடியாது. அதன் விளைவுகளை அவன் சந்தித்தேயாக வேண்டும். 'தசரதனுக்கு ஏற்பட்ட புத்திர சோகம், சாபத்தால் வந்தது' என்பது நமக்கெல்லாம் தெரியும். ஒரு சமயம் வைகுண்டத்தில் துவார பாலகர்கள் காவல் செய்து கொண்டு இருந்தபொழுது, சில ரிஷிகள் மகாவிஷ்ணுவைத் தரிசிப்பதற்காக வந்தார்கள். அப்பொழுது மகாவிஷ்ணு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால், அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டார்கள் துவார பாலகர்கள். அதனால் கோபமுற்ற ரிஷிகள், அவர்களைச் சபித்தார்கள். எனவே அவர்கள் மனிதப் பிறவி எடுக்க வேண்டியதாயிற்று. பின்பு அவர்கள் மகாவிஷ்ணுவிடம்





சென்று முறையிட்டார்கள். "சர்வ வல்லமை பொருந்திய என்னாலும் சாபத்தை மாற்ற முடியாது" என்று மகாவிஷ்ணு கூறிவிட்டார்.

ஊழ்வினையின் வலிமையை வேறொரு விதத்திலும் பார்க்கலாம். இராமனாக அவதரித்த மகாவிஷ்ணு, வாலியை மறைந்திருந்து அம்பு எய்து கொன்றதால், அவர் கண்ணனாக அவதரித்தபொழுது கண்ணுக்குப் புலப்படாத வேடர்கள் எய்த அம்பினால் இறக்க வேண்டியதாயிற்று. இதிலிருந்து கடவுளர்களேயானாலும் வினைப்பயனை ஏற்றேயாக வேண்டும் என்பது தெளிவாகிறது.

அன்பர்களுக்குத் தேவையானதை, அவர்கள் கேட்காமலே கொடுக்கின்ற தெய்வம் அன்னை. அன்னையை நினைத்த மாத்திரத்திலேயே அன்பர்களிடத்தில் அவருடைய அருள் செயல்பட ஆரம்பித்துவிடுகின்றது. அன்பர்கள் வெளியிடாத விருப்பங்களையும் அன்னை பூர்த்தி செய்து வைக்கின்றார். அன்பர்கள் தம் பிரச்சினைகள் தீர வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டவுடன், அன்னையின் அருள் அவற்றைத் தீர்த்து வைப்பதோடு, அவை மீண்டும் தோன்ற இயலாதவாறு அவற்றின் மூல வேர்களை அழித்தும்விடுகின்றது. அது அன்னையின் அருளுக்கு உரிய தனித் தன்மையாகும்.

துறவிகள், தவசிகள் போன்றவர்களை அணுகி, "கர்ம வினையினால் வந்த நோய், துன்பங்களை விலக்கி அருள் செய்ய வேண்டும்" என்று கேட்பவர்களுக்கு, "கர்மவினையினால் வந்தவற்றைப் போக்க முடியாது. அதை அனுபவித்தேயாக வேண்டும்" என்பார்கள் அவர்கள். ஆனால், அன்னையின் அருள் கர்மவினையால் வந்த துன்பங்களையும் எளிதில் விலக்கிவிடும்.

வாழ்க்கையில் சிறப்புப் பெறுவதற்குப் பெருந்தடையாக இருப்பது கர்மவினையே. 'அன்னை தெய்வத்தின் அவதாரம்' என்று உணர்ந்து அன்னையை ஏற்றுக் கொண்ட அன்பர்களின்

கர்மவினைகள், முற்றுமாக அழிந்து போகின்றன. அன்னையை ஏற்றுக் கொண்ட பன்னிரண்டு மாதங்களுக்குள் அன்பர்களின் செல்வமும், சமூக அந்தஸ்தும் இருமடங்காகப் பெருகி விடுகின்றன. அது அன்னையை ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வோர் அன்பரின் வாழ்க்கையிலும் ஏற்படுகின்ற முன்னேற்றமாகும்.

கர்மவினையை அன்னையின் அருள் விலக்கிவிட்டதற்கு ஓர் உண்மை நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறலாம்.

ஓர் அரசாங்க அதிகாரி நேர்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். பொறாமை காரணமாக, அவர் மீது இலட்ச ரூபாய்க்கு மோசடி வழக்கு ஒன்றைப் போட்டுவிட்டார் அரசியல் செல்வாக்குள்ள ஒருவர். அது பொய் வழக்குதான் என்றாலும், அதிகாரிக்கு நியாயம் கிடைக்க வழி இல்லை. 'தண்டனையை அனுபவிக்க வேண்டிய கட்டம் வெகு தூரத்தில் இல்லை' என்பது தெளிவாகிவிட்டது.

அதிகாரிக்கு, 'இதிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ள மாட்டோமா?' என்ற தவிப்பு. ஒரு நாடி ஜோதிடரை அணுகி, தம் கிரக நிலையை அறிந்து கொள்ள விரும்பினார். நாடி ஜோதிடர், "நீங்கள் சென்ற பிறவியில் உங்கள் முதலாளியை மோசம் செய்தீர்கள். அந்த வினையால் விளைந்ததுதான் இந்த மோசடி வழக்கு. நீங்கள் இதிலிருந்து தப்புவது கடினம்" என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்.

அதைக் கேட்டபிறகு கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையையும் முழுதுமாக இழந்துவிட்டார் அதிகாரி.

அவருடைய நெருங்கிய உறவினர் ஒருவர், 'அவர் பொய் வழக்கிலிருந்து மீள வேண்டும்' என்று அன்னையைப் பிரார்த்தித்துக்கொண்டு ஆசிரமத்திற்கு மூன்று ரூபாய்களைக் காணிக்கையாக அனுப்பிப் பிரசாதத்தைப் பெற்று, அதை அந்த அதிகாரியிடம் சேர்ப்பித்தார்.





அதிகாரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒன்பது. ஒவ்வொன்றும் கடுமையான தண்டனைக்கு உரியதாகும். அவர் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்ட பதினான்காம் நாள், "ஒன்பது குற்றங்களிலும் அந்த அதிகாரி சம்பந்தப்படவில்லை என்று தீர்ப்பு அளித்து அவரை விடுதலை செய்துவிட்டார்கள்" என்ற செய்தி, தந்தியின் மூலமாகக் கிடைத்தது.

அன்னையின் அருளுக்குப் பாத்திரமானவுடனேயே அன்பர்களின் கர்மவினைகள், முழுதுமாக விலகிப் போகின்றன; இப்பிறவியில் செய்த வினையானாலும், முற்பிறவியில் செய்த வினையானாலும், அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன.

'வாழ்க்கையில் வளம் பெறுவதற்குத் தடைகள்தாம் காரணமாக இருக்கின்றன. அத்தடைகள் இருப்பதற்குக் காரணம் கர்மவினைகளே' என்று நாம் முன்பு குறிப்பிட்டிருந்தோம். அன்னையை ஏற்றுக் கொண்ட அன்பர்களுக்குத் தடையற்ற வளர்ச்சி ஏற்படுவது திண்ணம். அது, 'அவர்களிடம் இருந்த கர்மவினையை அன்னை அழித்துவிட்டார்' என்பதற்கு அடையாளம்.

ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவர், ஒரு பாராளுமன்றத் தொகுதியில் தம்மை அபேட்சகராக நிறுத்த வேண்டும் என்று கேட்டுத் தம் கட்சிக்கு விண்ணப்பித்துக் கொண்டார். அனுமதி கிடைக்கவில்லை. அதனால் ஏமாற்றமும், வேதனையும் அடைந்த அவர், அன்னையிடம் முறையிட்டுக் கொண்டார். அதற்குப்பிறகு சில நாட்களுக்குள் வேறொரு மாநிலத்தில் உள்ள பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டியது. தேர்தலில் நின்று வெற்றி பெற்றதோடு, அவர் மத்திய அரசில் ஓர் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

மூடிக் கொண்டுவிட்ட அவருடைய எதிர்காலக் கதவு, அவர் அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டதும் படீரென்று திறந்து கொண்டதோடு, அவரே எதிர்பார்க்காத வகையில் அவரை அமைச்சராக்கி உயர்த்திவிட்டது அன்னையின் அருள்.

'அன்னையைச் சரண் அடைந்தவரின் வாழ்க்கை இரு மடங்காக வளர்ந்து சிறக்கின்றது' என்பதற்கு இன்னோர் அன்பரின் அனுபவம், உதாரணமாக அமைகின்றது.

அவர் அன்னையின் பக்தர்; தொழில் அதிபர். அவருடைய தொழில் வளர்ச்சிக்கு இரண்டு இலட்ச ரூபாய் உடனடித் தேவையாக இருந்தது. வங்கியில் கடனுக்கு விண்ணப்பித்தார். 'உங்களின் தொழிலுக்கு அத்தனைப் பெரிய தொகை கிடைக்காது' என்று அவருடைய விவரம் புரிந்த நண்பர்கள் அவரைக் குழப்பினார்கள். ஆனால், அவர் குழம்பவில்லை. "நான் விரும்பிய தொகையை அன்னையின் அருள் பெற்றுக் கொடுக்கும்" என்று அவர் நம்பிக்கையோடு பதில் அளித்தார்.

அவர் நம்பிக்கை எதிர்பார்த்ததைவிட அவருக்கு அதிகமாகப் பெற்றுத் தந்துவிட்டது. வங்கியில் இரண்டு இலட்ச ரூபாய்தான் கடனாகக் கேட்டார். ஆனால், வங்கியோ, 'அவருடைய தொழிலில் சிறந்த எதிர்காலம் இருக்கிறது' என்று தீர்மானித்து அவருக்கு நான்கு இலட்ச ரூபாயைக் கடனாக அளிக்க முன்வந்தது!

இவ்வாறு இருமடங்காக நன்மைகள் கிடைக்கின்றபொழுது முற்பிறவிகளில் செய்த 'கர்மவினைகள் யாவும் விலகிவிட்டன' என்பதை உணர வேண்டும். வேறு வகை உலகியல் நடைமுறையில் பார்த்தால், இந்த வகையிலான வளர்ச்சி இலட்சத்திலோ, கோடியிலோ ஒருவருக்குத்தான் ஏற்படும். அதற்கும் உதாரணங்கள் இருக்கின்றன.

பன்னிரண்டு வயதில் கிழிந்த கால் சட்டையுடன் சென்னைக்கு வந்த ஓர் அனாதைச் சிறுவன், தன் நாற்பதாவது வயதில் 12 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சொத்துக்கு அதிபதியானான். அதே போல அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொடி பிடித்துக் கோஷம் போட்ட ஒருவர், அவருடைய கட்சியின் அகில இந்தியத் தலைவராக உயர்ந்தார்.





இலட்சத்திலோ, கோடியிலோ ஒருவர் மட்டுமே பெறக் கூடிய இத்தகைய உயர்வினை, அன்னையை வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு அவருடைய அருளுக்குப் பாத்திரமான ஒவ்வொருவரும் பெறலாம்.

ஒரு கட்சியில் சாதாரணத் தொண்டராக இருந்த ஒருவர், ஒரு முறை அன்னையைத் தரிசிப்பதற்காக பாண்டிச்சேரிக்கு வந்தார். அவருக்கு அன்னையிடம் பக்தி இருந்த அளவுக்குப் பணம் இல்லை. அந்தக் காலத்தில் இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கக் கூடிய வசதிகளற்ற ஒரு விடுதியின் அறையில்தான் அவரால் தங்க முடிந்தது. அன்னையைத் தரிசித்தபிறகு அவருடைய நிலையில் மாற்றமும், ஏற்றமும் ஏற்படத் தொடங்கிவிட்டன. ஒரு பத்து ஆண்டுகளுக்குள் அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அமைச்சராகவும், மாநில முதல் அமைச்சராகவும் உயர்ந்துவிட்டார்.

இவரைப் போலவே வாழ்க்கையின் உச்சிக்கு உயர்ந்தார் ஒரு வியாபாரி. ஏழு கோடி ரூபாய் அளவில் வியாபாரம் செய்து வந்த அந்த வியாபாரி, அன்னையைப் பூரணமாக ஏற்றுக் கொண்டபிறகு, மூன்று ஆண்டுகளில் நூற்று நாற்பது கோடி ரூபாய் அளவுக்கு அவருடைய வியாபாரம் பெருகிவிட்டது.

அன்னையை ஏற்றுக் கொள்வதற்காக என்ன செய்ய வேண்டும்? ஆசனம், பிராணாயாமம், மந்திரம், பூஜை போன்றவற்றைச் செய்ய வேண்டுமா? 'தேவையில்லை' என்று கூறுகின்றார் அன்னை. மனத் தூய்மையும், உண்மையான ஈடுபாடும்தான் தேவை. மனத் தூய்மையோடு உண்மையான ஈடுபாடும் கொள்ளும் பொழுது அன்னையின் அருள் செயல்பட்டு அரிய பெரிய கொடைகளை வழங்குகின்றது.

போக்க முடியாத கர்மவினைகளையும், பிராயச்சித்தத்தால் மட்டுமே தவிர்க்கக் கூடிய பழவினைகளையும்கூட அன்னையின் அருள் அழித்துவிடும். அதற்காக நாம் செய்ய வேண்டியது

இதுதான்; 'இதுவரை செய்த தவறுகளை இனிச் செய்வதில்லை' என்று உறுதிப்பாடும் அதனைப் பின்பற்றுவதும்தான். அவ்வாறு நாம் நம்மைத் தோல் உரித்துக் கொண்டதும், அன்னையின் அருள் நாம் செய்த தவறுகளையும், அதனால் விளையக் கூடிய தீய பயன்களையும் அழித்துவிடுகின்றன.

சில சமயங்களில் சாபத்திலிருந்து விமோசனம் அடைந்த பலரின் கதைகளை நாம் புராணங்களின் வாயிலாக அறிகின்றோம். அந்தக் கதைகளில் விமோசனம் அளிப்பவர்கள், சில நிபந்தனைகளை வைப்பது வழக்கம். 'இன்ன நிலையில் அல்லது இந்தக் காலத்தில் சாபம் நீங்கும்' என்பது போலவிருக்கும் அந்த நிபந்தனைகள், 'அகலிகைக்கு ஏற்பட்ட சாபம், ஸ்ரீ ராமன் அவதரித்தபிறகு, அவர் பாதம் கல்லாகச் சமைந்த அவள் மீது தீண்டும்பொழுது விலகும்' என்று காலக்கெடு வைத்து அளித்த சாப விமோசனத்தை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஆனால், அன்னையின் அருளைப் பெறுவதற்கு இந்தக் காலக்கெடு எல்லாம் தேவை இல்லை. 'எந்தக் கணத்தில் அன்னையின் அருள் அன்பரின் மீது பற்றுகின்றதோ, அந்தக் கணமே அவரைப் பற்றிக் கொண்டிருந்த தீமை விலகி விடுகின்றது. இத்தகைய அன்னையின் மகத்தான அருளைப் பெறுவது சுலபம்' என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். மீண்டும் மீண்டும் அதை நினைவு கூர வேண்டும். ஆமாம், மனப்பூர்வமான வழிபாடும், அன்னையிடம் உள்ளன்போடு கூடிய ஈடுபாடும் மிக மிக இன்றியமையாதவை.

'பிரச்சினை தோன்றுவதற்குக் கர்மவினையே காரணம்' எனவும் 'கர்மவினையை அன்னையின் அருள் விலக்கி விடுகின்றது' எனவும் முன்னர் கூறியுள்ளோம். இனி, 'அன்னையின் அருளைப் பெற என்ன செய்ய வேண்டும்?' என்பதைப் பற்றி விளக்குவோம்.





முதலாவதாக, 'பிரச்சினை தீர வேண்டும்' என்று அன்னையைப் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். பிரார்த்தனை செய்த பின்பும் அது விலகாமல் இருந்தால் அடுத்துச் செய்ய வேண்டியது பிரச்சினை எப்படிப் படிப்படியாக வளர்ந்து இப்போதுள்ள நிலையை அடைந்துள்ளதோ, அதனை அன்னையிடம் முறையாக எடுத்துச் சொல்ல வேண்டும். அவ்வாறு பிரச்சினை தோன்றிய வரலாற்றை உண்மையாக எடுத்துச் சொல்லும் பொழுது, அன்னையின் அருள் ஆத்மாவைச் சூழ்ந்து நிற்கும் கர்மவினையின் மீது விழுகின்றது. அந்தச் சந்திப்பே நமக்குக் கர்மவினையிலிருந்து கிடைக்கும் விடுதலையாக அமைகின்றது.

ஒரு கர்மத்தைப் போக்க வேண்டுமானால் அதைப் போக்குவதற்கான மாற்றுக் கர்மங்கள் உண்டு. 'அழுக்கு' என்பது ஒரு கர்மமாகும்பொழுது, அதைப் போக்குவதற்கான 'துப்புரவு' மாற்றுக் கர்மமாகிறது. இதைப் போன்று கர்மத்தைத் துலக்குவதற்கான மாற்றுக் கர்மங்களைச் செய்வதற்குரிய சூழ்நிலைகளை அன்னையின் அருளே உருவாக்கிக் கொடுத்து நம்மை வழி நடத்தும். மாற்றுக் கர்மங்களைச் செய்ய வேண்டிய அன்பருக்குத் தெரியாமலே இந்த அற்புதத்தை நிகழ்த்துகின்றது அன்னையின் அருள். அன்னை உருவாக்கித் தரும் சூழ்நிலைகளை மட்டும் புரிந்து கொண்டு அன்பர் செயல்பட்டால், மாற்றுக் கர்மங்களை அன்னையின் அருளே முன்நின்று நிகழ்த்துகின்றது. அன்பர் புரிந்து கொள்ள வேண்டியதும், புரிந்த வழியே செயல்படுவதும்தான் முக்கியம். அதனால் அன்னையின் அருள் தடையின்றிச் செயல்பட்டு ஊழ்வினைகளைக் களைந்து உயர்வுகளை வாரி வழங்கும்.

'ஜோதிடக் கணக்குப்படி ஆயுள் முடியப் போகின்றது' என்ற நிலையில் அன்னையை அணுகி அன்பர்களான பலர், விதிக்கு விதி செய்து 'மாரகம்' என்ற மரண காலக் கெடுவைக் கடந்து நீண்ட காலம் வாழ்ந்ததற்கும், வாழ்வதற்கும் பல சான்றுகள் உண்டு.

அன்னையின் அருளுக்கு ஜோதிடத்தைப் பொய்யாக்கி மரணத்தைத் துரத்தும் ஆற்றல் அதிகம் உண்டு.

ஆத்ம ஞானத்தைப் பெற வேண்டுமானால், நீண்ட காலம் தவம் இருக்க வேண்டும். அப்படி நீண்ட காலம் தவம் செய்தாலும், ஆத்ம ஞானம் கிடைப்பது நிச்சயம் இல்லை. ஏனெனில் அந்தப் பேறு ஒரு சிலருக்கே கிட்டுகின்றது. ஆனால், அன்னையை ஏற்றுக் கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் ஆத்ம ஞானத்தை அடிப்படையான அளவில் அன்னை வழங்கி விடுகின்றார். அதற்கு நீண்ட காலமும் தேவை இல்லை; கிடைக்க வேண்டிய பலனும் தடைப்படுவது இல்லை. 'இது எப்படி?' என்ற வினா எழும்புமானால், அதற்கு இது பதில்;

''கர்ம வினைகளை முற்றும் போக்குகின்ற அருளுக்கு ஆத்ம ஞானத்தை வழங்குவதில் யாதொரு தடையும் இருக்க முடியாது''.

✶✶✶



# 11. கைகொடுத்த நம்பிக்கை

பதினைந்து ஏக்கர் நிலத்தில் தென்னை பயிர் செய்து, ஆண்டு தோறும் நல்ல அறுவடை செய்த அனுபவம் எனக்குண்டு. அதைத் தொடர்ந்து 100 ஏக்கர் நிலம் வாங்கி, அதில் தென்னைப் பயிர் செய்யத் திட்டமிட்டேன். என் நண்பர் என் திட்டத்தில் அக்கறை காட்டவே, 'எங்கேனும் 100 ஏக்கர் தரிசு நிலம் விலைக்குக் கிடைக்குமா?' என்று தேட ஆரம்பித்தேன். நான் நினைத்த மாதிரி நூறு ஏக்கர் பரப்பில் தரிசு நிலம் கிடைக்கவில்லை. ஒரு மலைப்பாங்கான இடத்தில் நூறு ஏக்கர் முந்திரிக் காடு ஒன்று விலைக்கு வருவதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு முந்திரிப் பயிர் சம்பந்தமான முன் அனுபவமோ, அல்லது ஆர்வமோ இல்லை. 'தானாகத் தேடி வருகின்ற ஒன்றை ஏற்றுக் கொள்வது சிறந்த பலனை அளிக்கும்' என்பது அன்னையின் அருள் மொழி. அம்மெய்ம்மொழியின் உந்துதலால், எனக்கு முற்றிலும் புதியதான முந்திரி மரங்கள் நிரம்பிய அந்த நூறு ஏக்கரையும் வாங்குவது என்று தீர்மானித்தேன்.

அந்த இடத்தை ஒட்டி ஆயிரம் ஏக்கர் நிலம் இருந்தது. அரசாங்க தஸ்தாவேஜுகளின்படி அந்த இடம் 'ஒரு காடு' என்றே சொல்லப்பட்டு வந்தது. அதில் உண்மையும் இருந்தது. விவசாயத்தையே கண்டிராத காட்டுபூமி அது. அங்கே தண்ணீர் கிடைப்பது அரிது. கோடைக் காலத்தில் அங்கே குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் கிடைக்காது. அங்குள்ள ஓர் எழுபதடிக் கிணற்றைத் தவிர மற்ற கிணறுகள் எல்லாம் வறண்டுவிடும். 'இத்தகைய நிலவளம், நீர்வளம் அற்ற ஓர் இடத்தில் நிலம் வாங்க வேண்டாம்' என்றும், 'மனித நடமாட்டம் இல்லாத அந்தக் காட்டில் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு இராது' என்றும் என் அன்பர்கள் என்னை எச்சரித்தார்கள். அன்னையின் அருளில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. ஆகவே அறிவார்ந்த அவர்களின் எச்சரிக்கையை மீறி,

அன்னையின் அருளையே துணையாக்கிக் கொண்டு செயல் பட்டேன். 125 ஏக்கர் நிலத்தை வாங்கி, அதைப் பண்படுத்தி, பயிர் செய்ய, நான் அல்லும்பகலும் அயராது உழைத்தேன். ‘பயனற்றது’ என்று ஒதுக்கப்பட்ட நிலம், பயன் மிக்கதாய் மாற்றமும், ஏற்றமும் பெற்றது. ஆரம்பத்தில் என் உழைப்பையும், உறுதியையும் ‘பைத்தியக்காரத்தனம்’ என்று கருதியவர்கள், இறுகிக்கிடந்த இந்த மண்ணின் வறட்டுத்தனத்தை நீக்கி, ‘விளைச்சல்’ என்னும் விந்தையைச் செய்து காட்டிய என்னை, இப்பொழுது வியப்புடன் பாராட்டினார்கள். அதனால் அதுவரை அங்கு கவனிப்பாரற்றுக் கிடந்த காடுகளும், மேடுகளும், அருகே இருந்த நகரத்தைச் சேர்ந்த செல்வர்களின் கவனத்துக்கு உரியனவாயின. அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த அத்தனை நிலங்களும் நல்ல விலைக்குப் போயின.

என் முந்திரிக் காட்டிற்கு மிக அண்மையில் ஒரு கிராமம் இருந்தது. அங்கு மழை இல்லை. மழை பெய்தாலும் சேகரித்துப் பாதுகாப்பதற்கு ஏரிகள் இல்லை. அதனால் அங்கு உள்ளதெல்லாம் வானம் பார்த்த பூமிதான். மழை ஒத்துழைத்தால் அதில் மணிலா, மற்றும் புன்செய்ப் பயிர்கள் விளையும். இல்லாவிட்டால் பஞ்சம் விளையும். அங்கு நிலம் விளைவதைவிடப் பஞ்சம் விளைவதே அதிகம். அங்குள்ள மக்கள் தம் பஞ்சத்தைப் போக்கப் படாத பாடுபட்டார்கள்.

அங்கு மண் மட்டும் வறட்சியாக இல்லை. மனிதர்களும் வறட்சியாக இருந்தார்கள். ‘மண்ணிற்கும் மனிதத் தன்மைக்கும் அங்குப் பொதுவாக இருந்த வறட்சியைப் போக்காவிட்டால் அந்தக் கிராமம் உயிர் பெற்று உலவ முடியாது. அங்கே நானே நிலத்தைத் திருத்த மட்டும் வரவில்லை; அங்குள்ளவர்களின் நெஞ்சத்தைத் திருத்தவும் வந்திருக்கிறேன்’ என்று என் உள்ளுணர்வு பேசியது.

எப்படித் திருத்துவது? உலக நீதிகளைச் சொல்லியா? ஏற்கனவே அங்கு நீதிகள் செத்துக் கிடந்தன. நியாயங்கள் தோற்றுக் கிடந்தன. பசியாக இருப்பவர்களுக்கான பாடத்தை, சோற்றுப் பானையிலிருந்தே தொடங்க வேண்டும். அதாவது





வளத்தைக் காட்டி அதன் வழியே வாழ்க்கையைக் காட்டி, பிறகே அவர்களைப் பண்பாளர்களாகப் பயிர் செய்ய வேண்டும். ஆகவே அவர்களுக்குரிய பாடத்தை, ‘பயிரில்’ இருந்து தொடங்க நினைத்தேன்.

பயிர் செய்ய வேண்டுமானால் பணம் வேண்டும். ஆனால், மக்களிடமோ பணம் இல்லை. அவர்கள் பணத்தைப் பெறுவதற்குச் சர்க்காரில் கடன் வாங்கலாம், அல்லது நிலத்தைப் பாங்க்கில் அடைமானம் வைத்துக் கடன் வாங்கலாம். கிராம மக்களிடம் அவற்றிற்கெல்லாம் நம்பிக்கை இல்லை. பாங்க்குகளில் பயிர்த் தொழிலுக்குக் கடன் கொடுக்கும் வழக்கம் அப்பொழுது இல்லை. ஏனென்றால், அந்தக் காலத்தில் பாங்க்குகள் தேசிய மயமாக்கப்படவில்லை. ஆனாலும் முயன்று அந்தக் கிராமத்து மக்களுக்குப் பயிர்க் கடன் வாங்கிக் கொடுப்பது என்று தீர்மானித்தேன்.

என் முன்னால் இரண்டு பிரச்சினைகள் எதிர் முளைத்தன. ஒன்று, கிராம மக்களிடம், ‘பாங்க்கில் கடன் வாங்குவதால் உங்கள் நிலம் பறி போய்விடாது’ என்ற நம்பிக்கையை ஊட்ட வேண்டும். ‘கிராம மக்களுக்குப் பணம் கொடுத்தால், அதை வசூல் செய்ய முடியாது’ என்ற பாங்க்குகளின் பயத்தைப் போக்க வேண்டும். ‘இவ்விரண்டையும் செய்துவிடலாம்’ என்ற என் உறுதியை, என் நண்பர்கள், ‘வேண்டாம் இந்த விஷப்பரீட்சை!’ என்று கூறிக் கலைக்க முயன்றார்கள். ஆனாலும் நான் கலையவில்லை.

இந்தச் சமயத்தில் கிராமத்தில் உள்ளவர்கள் ஒன்று கூடி, ‘இனி சாராயம் காய்ச்சுவதோ, குடிப்பதோ இல்லை’ என்று முடிவு செய்ததாகக் கேள்விப்பட்டேன். இது ஒரு நல்ல சகுனமே. ‘இது போன்ற உணர்வு பூர்வமான மாற்றங்கள், கொடுத்த பணத்தை வசூல் செய்வதற்கு உதவக் கூடியவை அல்ல’ என்பது எனக்குத் தெரியும். ஆனால், ‘விளையும்’ என்று நம்பிக்கை இல்லாமல் விதைக்க முடியாது அல்லவா?

என் நிலத்தைத் திருத்துவதற்கு ஒரு பாங்க்கில் கடன் வாங்கி இருந்தேன். நான் அதை இலாபகரமாகப் பயன்படுத்தியதை

அறிந்த ஒரு மிகப் பெரிய பாங்க், பெரிய அளவில் கடன் வாங்கி, என் திட்டத்தைத் தீவிரப்படுத்துமாறு என்னை அழைத்தது.

‘அந்தக் கிராமத்திற்கு எந்த வகையிலாவது கடன் கொடுத்து உதவ முடியுமா?’ என்று அந்த பாங்க்கிடம் கேட்டேன். அந்த பாங்க்கில் உள்ளவர்களுக்கு நான் கொடுத்த திட்டத்தில் நம்பிக்கையோ, விருப்பமோ இல்லை. கடனைக் கொடுத்து விட்டுக் கிராமத்துக்குப் போய் அலைந்து திரிந்து வசூல் செய்கின்ற சிரமத்தை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை. இந்நிலையில் அந்த பாங்க்கின் சேர்மன் எனக்கு அறிமுகமானார். ‘கிராமத்திற்குக் கடன் கொடுக்க வேண்டும்’ என்று அவரிடம் நான் வற்புறுத்தினேன். அதன் பயனாக சேர்மனின் ஒப்புதலோடு என் திட்டத்தை அந்த பாங்க் ஒப்புக் கொண்டது. ஆனால், பாங்க் அதிகாரிகள் சேர்மனின் உத்தரவை மறுக்க இயலாமல் பொருமினர். ‘கிராமத்திற்குக் கடன் கொடுத்தால் வசூலிப்பது நடக்காத காரியம்’ என்று அவர்கள் தீர்மானமாக நினைத்ததுதான் அதற்குக் காரணம். என் நண்பர்களும் அவ்வாறே நினைத்தார்கள்.

அவர்களின் நினைவை நான் ஒரேடியாக அலட்சியப்படுத்தி விட முடியாது. ஏனென்றால் பாங்க் அதிகாரிகள், என் நண்பர்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்போடுதான் நான் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய ஒரு நிலை இருந்தது. கிராமத்தின் கணக்குப்பிள்ளை, மணியக்காரர் போன்றவர்கள் கூட என் திட்டத்தை ஆதரிக்கவில்லை. ஆனாலும் நான் அதில் தீவிரமாக இருந்தேன்.

நான் பாங்குக்கு இப்படி ஒரு திட்டத்தைக் கொடுத்தேன்; ‘ஒரு சிறிய திட்டத்தைத் தயார் செய்து அதற்கு பாங்க் கடன் வழங்க வேண்டும். அறுவடைக்குப்பிறகு, கொடுத்த கடனை கிராமத்திலிருந்து வசூலித்து பாங்க்கில் சேர்ப்பிப்பது என் பொறுப்பு. அடுத்து, கடன் முழுதும் வசூலாகிவிட்டால், அடுத்த ஆண்டு கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்க முன்வர வேண்டும்’ என்று பாங்க் அதிகாரிகள் வந்து கிராமத்தைப் பார்வை





இட்டார்கள். அந்த அதிகாரிகள் என் திட்டத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், தம்முடைய சேர்மனின் ஆணையைத் தழுவியது போன்ற ஒரு நிலையை உருவாக்குவதற்காக, சிறு அளவில் சோதனை செய்து பார்க்க ஒப்புக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து பாங்க்கின் சேர்மனே நேரில் வருகை புரிந்து கடன் வழங்கும் திட்டத்தைக் கிராமத்தில் ஆரம்பித்து வைத்தார்.

கடன் வழங்குவதற்கு இன்னும் சில வாரங்களே இருந்தன. அப்பொழுது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலரும், என் தோப்பில் பல வருடங்களாக வேலை செய்பவர்களும், நான் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கவிருப்பதாக எண்ணிக் கவலையுடன், “நீங்கள் நல்ல எண்ணத்துடன் உதவி செய்ய நினைக்கிறீர்கள். ஆனால், கிராமத்தில் உள்ள யாருமே, நாங்கள் உள்பட நல்லவர்கள் இல்லை. அவனவன் கடனை வாங்கி வாயில் போட்டுக் கொண்டுவிடுவான். கடைசியில் பொறுப்புக் கொடுக்கிற நீங்கள்தான் மொத்தக் கடன் தொகைகளையும் கட்ட வேண்டியதிருக்கும்” என்று அச்சுறுத்தினார்கள். பாங்க்குக்காரர்களும், “உங்களை நம்பித்தான் கடன் கொடுக்கிறோம்” என்றனர்.

இப்படிக் கடைசிவரை எச்சரிக்கைகள் என்னைச் சூழ்ந்த வேலிகளாக அமைந்தன. என் திட்டத்தை, ‘பயன்மிகு திட்டம் ஒன்றின் முன்னோடி’ என்று பாராட்டி, என்னை உற்சாகப் படுத்தும் ஆர்வலர் யாரும் அப்போது இருக்கவில்லை. ஆனாலும், நான் என் திட்டத்தை ஆக்க பூர்வமானதாக்க ஒவ்வொரு கணமும் தீவிரமாக இருந்தேன்.

இந்தத் திட்டம் இந்தியத் துணைக்கண்டத்திலேயே யாரும் செயல்படத் துணியாத ஒன்றாகும். இது இங்கு வெற்றிகரமாக அமையுமானால் இந்தியா முழுதும் செயல்படுத்தக் கூடிய வாய்ப்பு ஒன்று உருவாகும். அதே சமயத்தில் இது இங்கே தோல்வி அடையுமானால், பயிர்த் தொழிலுக்குக் கடன் கொடுக்கும் எந்த ஒரு திட்டமும் எதிர்காலத்தில் ஏற்படாமலே போய்விடக் கூடும். இந்தத் திட்டத்தின் சிக்கலான பகுதி,

'கொடுத்த பணத்தைக் கிராமத்திலிருந்து எப்படி வசூல் செய்வது?' என்பதுதான். ஆனால், எனக்கு இது ஒரு பிரச்சினையாகவே தோன்றவில்லை. 'எந்த ஒரு பணியினையும் உண்மையான நம்பிக்கையோடு செய்தால், செலவழிக்கப் படுகின்ற பணம் நற்பணிக்குப் போய்ச் சேருமானால், சந்தேகத்திற்கு இடமின்றி நல்ல பலன் கிடைக்கும்'. நான் அன்னையிடமிருந்து தெரிந்து கொண்ட உண்மை இது.

'கொடுத்த பணத்தைக் கிராமத்து மக்கள் பயிர்ச் செலவுக்குத்தான் உபயோகப்படுத்துவார்கள்' என்ற முழு நம்பிக்கையோடு நான் செயல்பட்டேன். "பயிர் நன்றாக விளையும். அமோகமான மகசூல் கிடைக்கும். விவசாயிகள் வாங்கிய கடன் தொகையை பாங்கில் கட்டிவிடுவார்கள்" என்று நம்பினேன். 'செயல்களுக்கு நாமே கர்த்தாவாக இல்லாமல், அவற்றை அன்னையிடம் சமர்ப்பித்துவிட்டு நம்பிக்கையோடும் நல்ல எண்ணத்தோடும் நாம் செயல்பட்டால், கிராமத்து மக்களின் எண்ணமும், செயலும் நல்லனவாகவே அமையும் என்று முழுமையாக நம்பினேன்'.

விவசாயிகளுக்கு அறுபத்து மூவாயிர ரூபாய் பயிர்க் கடனாகக் கொடுக்கப்பட்டுவிட்டது. அதன் மூலம், ஒரு கிராமத்தை ஒரு பாங்க், சுவீகாரம் செய்து கொள்ளும் திட்டம், இந்தியாவிலேயே முதன் முதலாக அந்தக் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டது.

உரிய காலத்தில் மழை பெய்தது ஆச்சரியம் என்றால், விவசாயிகள் சோம்பலை உதறி எறிந்துவிட்டு உடனே பயிர்த் தொழிலை ஆரம்பித்தது ஆச்சரியம்! கிராமம் முழுமையும் மணிலாப் பயிராகக் காட்சி அளித்தது. வாங்கிய பணத்தை முறையாகச் செலவு செய்திருந்தார்கள்.

ஒரு கிராமத்து மக்கள் இப்படி ஒட்டு மொத்தமாக நாணயமானவர்களாக மாறிய முதல் சந்தர்ப்பம் அதுதான். அந்த வருடம் தேவையான காலங்களில் எல்லாம் சீராக மழை பெய்தது. மணிலாப் பயிரின் கொடிய விரோதிகளான பூச்சிகள் அந்த வருடம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. மொத்தத்தில்





அபரிமிதமான விளைச்சல். அமோகமான அறுவடை. அது மட்டுமன்று. அதுவரை 90 ரூபாய் விற்ற மணிலா மூட்டை 180 ரூபாய்க்கு விற்று இரண்டு மடங்கு வருமானத்தைக் கொடுத்தது. மணிலாப் பயிர் செய்து பெரிய பண அறுவடையையே செய்துவிட்ட விவசாயிகள், மகிழ்ந்தும், நெகிழ்ந்தும் போனார்கள்.

உரிய நேரத்தில் கை கொடுத்து, கை நிறையப் பணத்தைப் பார்க்க உதவி செய்த பாங்க்கை அவர்கள் மறக்கவில்லை. ஓடோடிச் சென்று பணத்தைக் கட்டினார்கள். ஒரு விவசாயி மாலை ஆறரை மணிக்கு பாங்க்கில் போய் நின்று கொண்டு, "இன்று பணம் கட்ட நேரமாகிவிட்டது. நாளைக்கு வந்து கட்டுங்கள்", என்ற பாங்க் அலுவலர்களின் பேச்சைக் கேளாமல் பிடிவாதம் பிடித்து, கட்ட வேண்டிய கடனைக் கட்டி விட்டுத்தான் பாங்க்கைவிட்டு வெளியேறினார். எல்லோருமே வாங்கிய கடனை வட்டியுடன் சேர்த்துக் குறித்த காலக் கெடுவுக்குள் கட்டி முடித்தனர்.

சமுதாயத்தில் யாருமே கெட்டவர்கள் அல்லர். கெடுக்கப் பட்டவர்கள். அதாவது சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றால் கெடுக்கப்பட்டவர்கள். ஆன்ம நேயத்துடன் அணுகி, அவர்களை 'நம்பிக்கை' என்னும் மத்தால் கடைந்தால், நமக்குக் கிடைப்பது அமிர்தம் போன்ற வெண்ணெய் ஆகும். அங்கே மண்ணை வாங்கப் போன எனக்கு, அமிர்தமும் கிடைத்தது அன்னையின் அருளே!

இனிதான் ஒரு முக்கியமான செய்தி: இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, அனைத்து இந்தியாவிலிருந்தும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள், பாங்க்குகளால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டன. அன்னையின் அருளைத் துணையாகக் கொண்டு தமிழகத்தில் எங்கோ ஓர் மூலையில் உள்ள சின்னஞ்சிறு கிராமத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு திட்டம், இன்று நாடு தழுவிய நலம் தரும் திட்டமாக உருப் பெற்று ஓங்கி வளர்ந்து வருகிறது.

✶✶✶

# 12. தேடி வந்த செல்வம்

அன்று நான் குடும்பத்தோடு ஸ்ரீ அரவிந்தாசிரமத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். வாசல் கதவை மூடிப் பூட்டவிருந்த சமயத்தில் என் மைத்துனியும், அவருடைய கணவரும் விருந்தாளிகளாக வந்து சேர்ந்தனர். அன்று ஆசிரமத்தில் தங்கி விட்டு மறு நாள் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்பது என் திட்டம். இந்த நிலையில் விருந்தினர்கள் வருகை புரிந்திருக்கிறார்கள்!

அதுவும் இக்கட்டான நிலை, வந்திருக்கும் விருந்தினர்களை மட்டும் வீட்டில்விட்டுச் செல்வது அவர்களை அவமதித்தது போலாகிவிடும். எங்களுடன் அவர்களை அழைத்துச் சென்றாலோ, என்னுடைய தெய்வ நம்பிக்கையை அவர்கள் மீது திணிப்பது போலாகிவிடும். என்ன செய்வது? என் சங்கடத்தை உணர்ந்து கொண்ட என் மைத்துனியின் கணவர், “நாங்களும் உங்களுடன் வரலாமா?” என்று கேட்கவே, என்னுடைய பிரச்சினை தீர்ந்து விட்டது. எல்லோருமாகப் புதுச்சேரிக்குப் புறப்பட்டோம்.

ஆசிரமத்தில் தரிசன நாள்கள் மிக விசேடமான நாள்களாகும். ஆனால், நாங்கள் சென்ற நாள், அது போன்ற விசேட நாள் அன்று. ஆனாலும் எங்களைப் பொறுத்த வரையில், அதை ஒரு விசேடமான நாள் என்றே கூற வேண்டும். அன்னையின் திருவருளால் மகான் ஸ்ரீ அரவிந்தர் தவம் நோற்ற அறைக்குச் செல்ல அன்று என் குடும்பத்தினருக்கு அனுமதி கிடைத்திருந்தது.

அன்னை மகாசமாதி அடைந்தபிறகு, ஸ்ரீ அரவிந்தருடைய அறை தினமும் திறக்கப்பட்டு, பக்தர்கள் அனுமதிக்கப் படுகிறார்கள். அதற்குமுன் அன்னையின் அனுமதியைப் பெற்றவர்கள் மட்டுமே ஸ்ரீ அரவிந்தருடைய அறைக்குச் செல்ல முடியும். ஒரு சிலரை மட்டுந்தான் அன்னை அனுமதிப்பது வழக்கம். அதுவும் ஒரு சில நாட்களில்தாம், அன்னையின்





அனுமதி கிடைக்கும். இத்தனை கிடைத்ததற்கரிய ஒரு வாய்ப்பினை நான் இழக்க விரும்பவில்லை. ஆகவேதான் என் அன்புக்குரிய அந்த விருந்தாளிகளுக்காக என்னுடைய பிரயாணத்தை என்னால் ஒத்திப் போட முடியவில்லை.

என் சகலர் (மைத்துனியின் கணவர்) ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடம் **(Regulated market)** ஒன்றில் சூபரின்டெண்டெண்ட் பதவி வகித்து வந்தார். அங்கு நான்கு வருடங்களாக அவர் வேலை பார்த்து வருகின்றார். அது ஒரு தற்காலிகமான பதவிதான். நிரந்தரப் பதவியைப் பெறுவதாக இருந்தால், அரசால் நடத்தப்படும் சர்வீஸ் கமிஷன் மூலம் அவர் தேர்வு பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை அவர் செய்தாரா, இல்லையா என்பது எனக்கு அப்பொழுது தெரியாது. ஆனால், அவர் வேறு வேலைகளைத் தேடி விண்ணப்பங்களை அனுப்பி இருந்தார் என்பதும், கூட்டுறவு அலுவலகம் ஒன்றில் அவர் ஆபீஸராகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார் என்பதும் என் சகலர் சொல்ல எனக்குத் தெரிய வந்தன.

இந்த நல்ல செய்தியை எங்களிடம் சொல்லிவிட்டுப் போகவே, அப்பொழுது அவர் தம் மனைவியுடன் வந்திருந்தார். எனக்கு அதைத் தெரிந்து கொண்டபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ‘புது உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ள இருக்கும் சமயத்தில் அன்னையின் ஆசியும் அவருக்குக் கிடைக்கப் போகிறது’ என்று நான் நினைத்துக் கொண்டேன். இல்லா விட்டால், எங்களோடு அவரும், அவர் மனைவியும் ஆசிரமத்துக்கு வரத் தூண்டப்பட்டிருப்பார்களா?

ஸ்ரீ அரவிந்தருடைய அறைக்குப் பக்தர்களை அனுமதித்துத் தரிசனம் செய்வித்து அனுப்புகிற பொறுப்பை, ஆசிரமத்தில் உள்ள ஒரு சாதகரிடம் கொடுத்திருந்தார் அன்னை. நானும், என் குடும்பத்தினரும் ஆசிரமத்துக்குச் சென்றவுடன், “உங்களுடன் வந்திருக்கும் உங்கள் விருந்தினர்களும் ஸ்ரீ அரவிந்தரின் அறைக்கு வந்து தரிசனம் செய்ய விரும்புகிறார்களா?” என்று கேட்டார் அந்தச் சாதகர்.

அவ்வாறு அவர் கேட்டது அன்னையின் அருளே என்று நினைத்தேன். ஏனென்றால், முன்அனுமதி பெற்றவர்களுக்குத் தவிர அந்த வாய்ப்புக் கிடைப்பது அரிது. என்னுடைய விருந்தினர்களும் அதை உணர்ந்தவர்களாய் ஸ்ரீ அரவிந்தரின் அறைக்கு வரவிரும்பவே, அந்தச் சாதகர் அன்னையிடம் சென்று ஒப்புதலைப் பெற்று வந்து, அவர்களையும் அறைக்குள் அனுமதிக்க ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீ அரவிந்தருடைய அறைக்கு எங்களை அழைத்துச் சென்றவர் வயது முதிர்ந்த சாதகர். ஏறக்குறைய முப்பதாண்டு காலம் ஸ்ரீ அரவிந்தரின் அருகிருந்து சேவை செய்தவர் அவர். ஸ்ரீ அரவிந்தர் மோனத் தவம் புரிந்த அந்த அறையில் எல்லையற்ற அருளும், அமைதியும் நிறைந்திருந்தன. ஸ்ரீ அரவிந்தர் அங்கே பூத உடலில் இல்லாவிட்டாலும், உணர்வாலும், உள்ளத்தின் நெகிழ்வாலும் அறியப்படுகின்ற சூட்சும உடலால் இருக்கத்தான் செய்கிறார். எனக்கு அவர் தெரிந்தார்; பலவற்றைத் தெரிவித்தார். செலுத்த வேண்டியதைச் செலுத்தி, பெறற்கரியதைப் பெற்றுக் கொண்டு அறையைவிட்டு வெளியேறியபோது, அந்த முதிய சாதகரும் எங்களுடன் தொடர்ந்து வந்தார்.

அவர் மெல்லிய குரலில் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியும் அன்னையைப் பற்றியும் பல விவரங்களைக் கூறினார். 1950 வரை ஸ்ரீ அரவிந்தரும் அன்னையும் ஒன்றாய் அமர்ந்து தரிசனம் தந்த இடத்தை எங்களுக்குக் காட்டினார். 1950–ஆம் ஆண்டுக்குப்பிறகு அன்னை மட்டும் அமர்ந்து தரிசனம் அளித்து வந்த இடத்தையும் காண்பித்தார். தரிசன காலங்களில் பக்தர்கள் எப்படி ஒருவர்பின் ஒருவராய் அமைதியாய்ச் சென்று அவர்களுடைய ஆசிகளைப் பெற்றுத் திரும்புவார்கள் என்பதையும் விளக்கினார்.

ஸ்ரீ அரவிந்தரிடம் குடிகொண்டிருந்த அமைதி எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதையும் அவர் அப்போது கூறினார்.





ஒரு சமயம் ஸ்ரீ அரவிந்தருடைய அறைக்கு வெளியே பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. கூடவே காற்றும் பேய்த் தனமாக வீசியது. அப்பொழுது ஸ்ரீ அரவிந்தரின் அறை ஜன்னல்கள் அனைத்தும் மூடப்படாமல் இருந்தன. அப்படி இருந்தும் அந்த அறைக்குள் காற்றோ, மழையோ தலை காட்டவில்லை. இயற்கையையும் தலை வணங்கச் செய்தது ஸ்ரீ அரவிந்தரின் பேரருட் சக்தி.

மகானுடைய அறையைவிட்டு வெளியே வந்தபிறகும், அவர் அங்கு உபயோகித்த நாற்காலி, புலித்தோல் விரிக்கப்பட்ட படுக்கை, நூல்கள் ஆகியவை, அவர் இன்றும், இப்பொழுதும், இக்கணமும் இருப்பதைப் போன்றதோர் உணர்வை இதயத்தில் பரப்பின. உலக ஆரவாரத்திலிருந்து உள்ளத்தை மீட்டு, எல்லையற்ற அமைதியை அதில் இட்டு நிரப்புவதை உணர்ந்த உவகையோடு வீட்டுக்குத் திரும்பினோம்.

மறு நாள் காலையில் நான் ஒரு நாளிதழைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அருகில் இருந்த என் சகலர், அன்றைய நாளிதழில் வந்திருந்த செய்தி ஒன்றைத் தெரிவித்தார். ‘மார்க்கெட் கமிட்டி சூபரின்டெண்டெண்டுகளுடைய மாதச் சம்பளம் ரூ.140லிருந்து ரூ.200ஆக உயர்த்தப்பட்டுள்ளது’ என்பதுதான் அந்தச் செய்தி. அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. எவ்வாறு தங்களுடைய சங்கம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக இந்தச் சம்பள உயர்வு கிடைத்திருக்கிறது என்பதை, அவர் ஆர்வத்தோடு விவரித்தார்.

“இது ஒரு நல்ல செய்திதான். சந்தோஷப்பட வேண்டிய திருப்பம்தான். ஆனால், நான் அந்தப் பதவியிலிருந்து கூடிய விரைவில் விலகப் போகிறேன். கூட்டுறவுப் பிரிவில் எனக்குக் கிடைக்கப் போகும் மாதச் சம்பளம் ரூ.140தான். இனிக் கிடைக்க இருக்கும் சம்பள உயர்வால் எனக்கு யாதொரு பலனும் இல்லை” என்று சோகத்தோடு கூறி முடித்தார் சகலர்.

அவருடைய சோகம் நியாயமானதே. எந்தச் சம்பள உயர்வுக்காக அவரும், அவரைச் சார்ந்தவர்களும் பல காலம் பாடுபட்டு வெற்றி அடைந்தார்களோ, அந்த வெற்றியின் பலனைத் தம்மால் அனுபவிக்க முடியவில்லையே என்று அவர் வருந்தியதை, என்னால் உணர முடிந்தது.

என்னைப் பொறுத்த வரையில் செய்தித்தாளில் காணப்பட்ட அந்தச் செய்தி, 'அன்னையின் அருளால் அவருக்குக் கிடைத் திருக்கிறது' என்றே தோன்றியது. அன்னையோடு சம்பந்தப் படுகின்றவர்களுக்கு அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ அருள் கிட்டுவதை, நான் பல நூறு தடவைகளில் பார்த்திருக்கிறேன்.

'என் சகலர் இப்பொழுது பார்த்து வரும் உத்தியோகத்திலிருந்து விலகாமல் இருக்க வேண்டும். கிடைத்திருக்கும் சம்பள உயர்வை அனுபவிக்கவும் வேண்டும்' என்று நான் விருப்பப்பட்டேன். ஆனால், 'என் கருத்தை அவர் ஏற்பாரோ, மாட்டாரோ?' என்ற தயக்கம் எனக்கு. என்னைவிட அவர் வயதில் சிறியவர்தாம். ஆனாலும், என் விருப்பத்தை என்னால் தெரிவிக்க முடியவில்லை. அவர் அன்னையைப் பற்றிச் சிறிதும் அறியாதவர்; அன்னையிடம் ஈடுபாடோ, பக்தியோ இல்லாதவர். இந்த நிலையில் அன்னையைப் பற்றிக் கூறுவது அன்னையின் மீதுள்ள என் நம்பிக்கையை அவர் மீது திணிப்பது போலாகிவிடும் என்பதால் நான் ஏதும் சொல்லவில்லை.

அவருக்கு ஒரு பக்கம் அதிகச் சம்பளம் பெறும் உத்தியோகம் கிடைத்ததில் மகிழ்ச்சி; இன்னொரு பக்கம் இதுவரை வகித்து வந்த பதவியிலிருந்து விலகிப் போகிறோமே என்பதில் வேதனை. இத்தகைய இரு விதமான எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஆட்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த அவரிடம், "இப்பொழுது இருக்கும் உத்தியோகத்திலேயே தொடர்ந்து இருந்து கொண்டு, அதிகமாகக் கிடைக்கவிருக்கும் ஊதியத்தைப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு விருப்பம் இல்லையா?" என்று கேட்டேன்.





"எனக்கு விருப்பம்தான். ஆனால், **probation** பூர்த்தியாகாததால் என்னுடைய வேலை நிரந்தரமாக்கப்படவில்லை" என்று பதில் அளித்தார் அவர். அதற்குமேல் நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

என் சகலர் வெளியில் சென்றிருந்த ஒரு சமயத்தில் என் மைத்துனியோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். தன் கணவரைப் போலவே அவருக்கும் சம்பள உயர்வு கிடைப்பதில் சந்தோஷம். பதவியைவிட்டு விலகுவதில் வருத்தம். அப்பொழுது நான், "உன்னுடைய கணவர், 'என் வேலை இன்னும் நிரந்தரமாக்கப் படவில்லை' என்று சொன்னதன் பொருள் என்ன?" என்று கேட்டேன்.

"அவர் அக்கவுண்ட் டெஸ்ட் பாஸ் செய்யவில்லை. அதனால்தான் அவர் பதவியும் நிரந்தரமாக்கப்படவில்லை" என்றார் என் மைத்துனி.

"அதனால் என்ன? இன்னொரு முறை எழுதிப் பாஸ் செய்து விடலாமே?"

"இரண்டாவது தடவையும் எழுதிப் பார்த்துவிட்டார். பாஸ்தான் ஆகவில்லை".

அவருடைய பேச்சிலிருந்து நான் கடைசியாகவும் தெரிந்து கொண்டது: அவரும், அவர் கணவரும் உத்தியோகத்தை விடவோ, அதன் மூலம் கிடைக்கவிருக்கும் கூடுதலான சம்பளத்தை இழக்கவோ விரும்பவில்லை. அது புரிகிறது. ஆனால், இன்னொன்றைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை. அக்கவுண்ட் டெஸ்டில் அவர் ஏன் பாஸாக முடியவில்லை? அதைப் பற்றி அவர்கள் மனம் திறந்து பேசவில்லை. ஏதோ ஒரு தயக்கம் அவர்கள் மனத்தில் திரை போட்டு மறைக்கிறது. அதை நான் ஏன் விலக்கிப் பார்த்து விளங்கிக் கொள்ள முயல வேண்டும் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

நான் என் மனைவியிடம், "அவர் இன்னொரு தடவை, 'அக்கவுண்ட் டெஸ்ட் எழுத அனுமதிக்க வேண்டும்' என்று

விண்ணப்பித்து அனுமதி பெற்றுப் பரீட்சை எழுதலாமே?" என்று சொல்லிக் கொண்டிருந்தது என் மைத்துனியின் காதில் விழுந்திருக்க வேண்டும்.

"மூன்றாவது தடவை பரீட்சை எழுதுவதற்கு என் மாமாவின் உதவியால் அனுமதி கிடைத்தது. அப்பொழுதும் அவரால் வெற்றி பெற முடியவில்லை", என்று துக்கத்தோடு கூறினார் என் மைத்துனி.

என் மனைவிக்கு அன்னையைப் பற்றியும், அன்னையின் அருட்பெருஞ்சக்திகளைப் பற்றியும் நன்கு தெரியும் என்பதைச் சாட்சியமாக வைத்து விளக்கியபின், "உன் கணவருக்கு அன்னையின் அருளால் இந்த ஊதிய உயர்வு கிடைத்திருக்கிறது. அன்னை வழங்கிய ஒன்றை அனுபவிக்காமல் விலகிப் போக முடியாது. அதற்கு அக்கவுண்ட் பரீட்சை இனி நிச்சயம் இடையூறாக இருக்க முடியாது. உன் கணவர் திறமையாகப் பணியாற்றக் கூடியவர் என்ற நற்பெயர் எடுத்திருக்கிறார். அதனால் அவருடைய மேலதிகாரி அவருக்குப் பரீட்சை எழுத இன்னும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பார் என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது" என்றேன்.

அதில் அவருக்கோ, அவர் கணவருக்கோ நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. என் சகலர் புதிய உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ள முடிவு செய்துவிட்டார். அந்த உத்தியோகத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால், சிறிது காலம் அவர் பயிற்சி பெற்றாக வேண்டும். அந்தப் பயிற்சி முடியும் வரையில் தன் மனைவியை எங்கள் வீட்டில் இருக்கும்படிச் சொல்லிவிட்டு, தம் கிராமத்துக்குக் கிளம்பிப் போய்விட்டார்.

என் சகலரின் வேலையைப் பற்றியோ அல்லது அவருடைய எதிர்காலத்தைப் பற்றியோ அதிக அக்கறை காட்ட வேண்டாம் என்று என் மனைவி என்னை எச்சரிக்கை செய்தாள். அதற்குக் காரணம், உத்தியோகத்தில் உள்ள சிக்கலைப் பற்றி என் சகலரும், என் மைத்துனியும் மனம் திறந்து பேச விரும்பாததுதான்.





நாட்கள் நகர்ந்தன. மேலும் சில புதிய செய்திகள் கிடைத்தன. ஓர் அரசியல்வாதியின் சிபாரிசால் நான்காவது தடவை பரீட்சை எழுதவும் என் சகலருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனாலும் பலன் இல்லாமல் போய்விட்டது. அது மட்டுமன்று; விவசாயப் பாடத்திலும் ஒரு பரீட்சையை அவர் பாக்கி வைத்திருந்தார்.

இதுவரை புரியாமல் இருந்து வந்த புதிர் எனக்குத் தெளிவாகிவிட்டது. இத்தனை குறைகளை வைத்துக் கொண்டு என் சகலர் தற்போதைய வேலையில் நீடிப்பது என்பது நடவாத காரியம்.

இந்த நிலையில் அவருக்கு எதிர்பாராத விதமாக அன்னையின் அருள் கிடைத்திருக்கிறது. பயிற்சியைப் பூர்த்தி செய்து புதிய உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டபிறகு, ஆறு ஆண்டு காலம் பணியாற்றிய பின்னரே அவருக்கு ரூ.200 சம்பளம் கிடைக்கும். அதில் இன்னொரு சோகமும் இருந்தது. இதற்கு முன்னால் அவர் பார்த்த வேலையில் நான்காண்டுகள் பணி செய்திருந்தாலும் அது கணக்கில் சேராமல் போய்விடும். இதில் ஒரு நான்கு வருடங்கள், இனியோர் ஆறு வருடங்கள் – ஆக மொத்தம் பத்து வருடங்கள் விரயமாகப் போய்விடுகின்றன. பத்து ஆண்டுகள் என்பதை அரசாங்க உத்தியோகத்தில் ஒரு சாதாரண விஷயமாகக் கருத முடியாது. ஒரு நாளாக இருந்தாலும் அது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

எந்த அருள் அவருக்குச் சம்பள உயர்வைக் கொடுத்ததோ, அந்த அருள் செயல்படுவதற்கு அவருடைய நம்பிக்கையும், ஒத்துழைப்பும் தேவை. இந்த இரண்டுந்தான் தனக்குத் தேவை என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. நானும் அதை அவரிடம் எடுத்துச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை.

அருள் வலியது; அற்புதங்களை நிகழ்த்தக் கூடியது. அது முன்வந்து பூக்கும்; காய்க்கும்; கனியும். பொறுமையாக இருப்பது,

விலகி நிற்பது, நிகழ்வது எதிலும் சம்பந்தப்படாமல் சாட்சியாக இருந்து பார்ப்பது என்ற அளவில் நான் இருந்தேன்.

ஒரு நாள் எனக்குத் தெரிந்த அன்பர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். என்னிடம் அவர், "நான் ஆறு ஏக்கர் நிலத்தில் செய்திருந்த பயிர் அழிந்து போகும் நிலையில் இருந்தது. நான் அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டேன். அதனால் அழிவிலிருந்து மீண்டு பயிர் அற்புதமான விளைச்சலைக் கொடுத்தது" என்றார்.

அவர் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த என் மைத்துனிக்கு, அன்னையின் அருளில் நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும். அவர் என்னிடம் வந்து, "என் கணவருக்குக் கிடைத்திருக்கும் புதிய வேலையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று முதல் முறையாக மனம் திறந்து கேட்டார்.

நான் அதையே விரும்பினேன். அவருடைய கணவரின் வேலையைப் பற்றி நான் என்ன புரிந்து கொண்டிருந்தேனோ, அதை அவரிடம் சுருக்கமாகக் கூறினேன். மேலும், "அன்னையின் அருளில் நம்பிக்கை வைத்து, செய்ய வேண்டிய முயற்சியைக் குறை இல்லாது செய்தால், எல்லாச் சிக்கல்களும் தீர்ந்து நல்ல வழி பிறக்கும்" என்றேன்.

சில நாட்களுக்குப்பிறகு என் சகலர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரும் அவர் மனைவியும் தனியாகக் கலந்து பேசினார்கள். பிறகு அவர் என்னிடம் வந்து, புதிய உத்தியோகத்தை விட்டுவிட்டுப் பழைய உத்தியோகத்திலேயே தொடர்ந்து இருப்பது என்றும், எப்படியாவது எல்லாப் பரீட்சைகளையும் எழுதிவிடுவது என்று தானும், தன் மனைவியும் முடிவு எடுத்திருப்பதாகவும் கூறினார். இந்த முடிவுக்குக் காரணம் அவருடைய மனைவி அவரிடம் அன்னையின் அருளைப் பற்றி எடுத்துக் கூறியதுதான் என்பதை நான் புரிந்து கொண்டேன். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

என் சகலர் இந்த முடிவை எடுத்த நாளிலிருந்து அவரைச் சூழ்ந்து கொண்டிருந்த தொல்லைகள் மெல்ல மெல்ல மறைய





ஆரம்பித்தன. உதவிகள் அவரைத் தேடிவரத் தொடங்கின. அவருடைய மேலதிகாரி இளகிய மனம் படைத்தவர். அவர் என் சகலருக்கு இன்னும் ஒரு முறை பரீட்சை எழுதுவதற்கு அனுமதி கொடுத்தார். பரீட்சை சம்பந்தமான விஷயங்களில் அவருக்குத் தெரிந்த ஒருவர் பேருதவியாக இருந்தார். எல்லாத் தரப்புகளிலிருந்தும் அவருக்குத் தேவைக்கு அதிகமான உதவிகள் கிடைத்தன. அவர் எழுதிய இரண்டு பரீட்சைகளிலும் வெற்றி பெற்றார். இருந்த உத்தியோகத்திலேயே அவர் நிரந்தரமாக்கப்பட்டு, கூடுதலாகக் கிடைத்த சம்பளத்தையும் பெற்றுக் கொண்டார்.

இரண்டு ஆண்டுகள் சென்றன. அவர் என் வீட்டுக்கு வந்தார். இப்பொழுது மாற்றலாகி இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலை பார்ப்பதாகக் கூறினார். "அத்தனை தூரத்தில் உள்ள ஒரு மாவட்டத்துக்கு நீங்கள் ஏன் மாற்றலாகி இருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன். "இப்பொழுது நான் செகரெட்டரி பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளதால் அங்கே போக நேரிட்டது" என்றார் அவர்.

அந்த மாவட்டத்துக்கே அவர்தான் மேல் அதிகாரி. மாவட்டத்தில் உள்ள எல்லா சூபரின்டெண்டெண்டுகளும் அவருடைய ஆணைக்கு உட்பட்டுத்தான் செயலாற்ற வேண்டும். சமீபத்தில் அவர் பணி புரிந்து வந்த மார்க்கெட் கமிட்டித் துறை விரிவாக்கப்பட்ட காரணத்தால், பல செகரெட்டரிப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. என் சகலருக்குச் சூபரின்டெண்டெண்ட் பதவியில் பத்து வருட அனுபவம் இருந்ததால் அவருக்குச் சுலபமாகச் செகரெட்டரி பதவி உயர்வு கிடைத்தது. இந்தத் துறை மட்டும் விரிவு செய்யப்படாமல் இருந்திருந்தால், அவருக்குக் காரியதரிசிப் பதவி கிடைப்பதற்கு இன்னும் ஆறேழு ஆண்டுகள் பிடித்திருக்கும்.

பாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டவர், அன்னையின் அருளில் நம்பிக்கை வைத்தவுடனேயே உச்சிக்கு உயர்ந்துவிட்டார்.

★★★

# 13. பாலையிலும் பசுஞ்சோலை

அன்பர் ஒருவருடைய பெண் எம்.எஸ்ஸி.வரை படித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருந்தாள். வேலை அவ்வளவு சுலபமாகக் கிடைத்துவிடுமா? கிடைக்கவில்லை. அந்த அன்பர் அது பற்றி எனக்குக் கவலையுடன் எழுதி இருந்தார். "அன்னை இருக்க அஞ்சல் ஏன்? 'கவலை' என்ற சுமையை நீங்கள் ஏன் சுமந்து மூச்சுத் திணறுகிறீர்கள்? அதை அன்னையிடம் சமர்ப்பித்துவிட்டு நீங்கள் லேசாகிவிடுங்கள். உங்கள் பெண்ணுக்கு உடனே வேலை கிடைத்துவிடும்" என்று நான் அவருக்குப் பதில் அனுப்பினேன்.

அதற்கு அவர் ஒரு பதில் எழுதியிருந்தார். அதில், "உங்கள் அறிவுரை எனக்குக் கைமேல் பலன் அளித்துவிட்டது. என்னுடைய கவலையை அன்னையிடம் கோரிக்கையாகச் சமர்ப்பித்துவிட்டு நான் சுமையற்று இருந்தேன். உடனே என் பெண்ணுக்கு உள்ளூரிலேயே வேலை கிடைத்துவிட்டது. எக்கணம் நம்மை ஒப்படைக்கிறோமோ, அக்கணமே ஆட்கொண்டு அருள் மழை பொழியும் அன்னையின் மாட்சிதான் என்னே!" என்று உருக்கத்துடன் குறிப்பிட்டிருந்தார் அவர்.

அந்த அன்பர் அன்னையின் உண்மையான பக்தர். அரசில் என்.ஜி.ஓ.வாகப் பணி புரிந்து வந்தார். மிகவும் நேர்மையானவர். பணியை, 'கடனே' என்று செய்யத் தெரியாதவர்; கண்ணைப் போலக் கருதுபவர். உண்மையான உழைப்புக்கு அவர் ஓர் உதாரணம். பழகுவதற்கு இனியவர். மற்றவர்களுடைய சுக துக்கங்களில் கலந்தும், கரைந்தும் போகக் கூடிய மனம் படைத்தவர். எல்லோருக்கும் அன்பர்; நண்பர்.

அவருக்கு நான்கு குழந்தைகள். எல்லாக் குழந்தைகளுமே புத்திசாலிகள். தம் வருமானத்திற்கு ஏற்ப, தம் குழந்தைகளுக்குச்





சிறந்தவற்றை எல்லாம் தேடிக் கொடுக்க வேண்டும் என்ற இலட்சியம் படைத்தவர் அவர். எல்லாக் குழந்தைகளையுமே பட்டப் படிப்புக்குக் குறையாமல் படிக்க வைத்தார்.

அவருடைய மூத்த மகன் பி.யூ.ஸி.யில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று மிகச் சிறப்பாகப் பரீட்சையில் தேறி இருந்தான். 'எப்படியாவது இன்ஜினீரிங் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும்' என்பது அந்தப் பையனின் ஆசை.

அவனுடைய ஆசையை அவன் தந்தையின் பொருளாதார நிலையால் பூர்த்தி செய்ய இயலுமா? பொறியியல் படிப்புக்கு மொத்தம் 5 ஆண்டுகள். அத்தனை நீண்ட காலத்திற்காகும் கல்லூரிச் செலவைத் தந்தையால் சரிக்கட்ட இயலுமா? இந்தச் சிக்கலான கேள்விக்கு எந்தப் பக்கம் இருந்தும் சாதகமான பதில்வர வழி இல்லை.

அரசில் பணி புரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தார்கள். ஆனால், எல்லோருக்கும் அன்று. ஒரு குறிப்பிட்ட சம்பளம் பெறுபவர்களின் பிள்ளைகளுக்குத்தாம் அந்தச் சலுகை. அதற்கு மேற்பட்ட சம்பளக்காரர்களின் பிள்ளைகள் அந்தச் சலுகையைப் பெற முடியாது. அந்த அன்பர் அரசாங்கம் நிர்ணயித்த தொகைக்குமேல் கொஞ்சம் கூடுதலாகச் சம்பளம் பெறுபவர். அதனால் அவருடைய பிள்ளைக்குச் சலுகை கிடையாது. அரசாங்கச் சட்டங்களே அலாதியானவை. சிலருக்குப் பரிகாரம். அதுவே பலருக்குப் படிகாரம்.

எப்படியாவது பொறியியல் கல்வியைப் பெற ஆசைப்பட்ட பிள்ளையை, எப்பாடு பட்டாவது படிக்க வைக்க முடிவு செய்தார் தந்தை.

அடுத்த பிரச்சினை, இன்ஜினீரிங் கல்லூரியில் இடத்தைத் தேடிப் பிடிப்பது. தகுதியை மட்டும் வைத்துத் தேர்வு செய்வதாக இருந்தால், அந்தப் பையனுக்கு நிச்சயம் இடம் கிடைத்துவிடும்.

ஆனால், 'தகுதியைவிடச் சிபாரிசுக்கே முதன்மையான இடம்' என்ற நிலையில் மதிப்பெண்களுக்கு மதிப்பு ஏது?

சிபாரிசுக்கு யாரைப் பிடிப்பது?

அந்த அன்பர் அரசுப் பணியில் இருந்ததால் பல பெரிய மனிதர்களைத் தெரிந்து வைத்திருந்தார். அவர்கள் உள்ளன்போடு உதவி செய்தால், பையனுக்குக் கல்லூரியில் இடம் கிடைப்பது ஒரு பிரச்சினையே இல்லை. ஆனால், அக்கறையும், அனுதாபமும் கொண்டு யார் உதவுவார்கள்? மனத்தில் கூட்டல், கழித்தல் கணக்குகளை எல்லாம் போட்டுப் பார்த்தார். அவர் போட்ட கணக்கு உள்ளூர்ப் பிரமுகர் ஒருவரைத் தேர்ந்து எடுத்தது.

அந்தப் பிரமுகர் மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். அவரால் எதுவும் முடியும்; எல்லாம் முடியும். வெளியூருக்குச் சென்றிருந்த அவர், அன்றுதான் ஊருக்குத் திரும்பி இருந்தார். அன்பர் அளவற்ற நம்பிக்கையுடன் அவரைச் சந்திப்பதற்காகக் கிளம்பினார். அவருடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தபொழுது அன்பரின் நம்பிக்கை ஆட்டம் கண்டுவிட்டது. அவரைச் சந்திப்பதற்காகப் பல பெரிய புள்ளிகள் வாசலில் காத்துக் கிடந்தார்கள். பிரமுகர் அவர்களுக்குப் பேட்டி அளித்து முடிப்பதற்கே நீண்ட நேரமாகிவிடும். அதற்குப்பிறகுதான் அந்த அன்பருக்குப் பேட்டி கிடைக்கும். ஒருவேளை பேட்டி கிடைக்காமல்கூடப் போய்விடலாம். "அப்படி ஓர் ஏமாற்றத்தைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கத்தான் வேண்டுமா? அதைவிட இப்பொழுதே புறப்பட்டுவிட்டால் பிறகு ஓர் ஏமாற்றத்தைச் சந்திக்க வேண்டிய அவசியம் இருக்காதே!" என்று எண்ணினார்.

ஆனாலும், 'இவ்வளவு தூரம் வந்துவிட்டு அவரைச் சந்திக்காமல் போவது, நாமே நம் முயற்சியை அலட்சியப்படுத்துவது போன்றதாகும். எவ்வளவு நேரமானாலும் பொறுமையாகக் காத்திருந்து பிரமுகரைப் பார்த்துவிட்டுத்தான் செல்ல வேண்டும்' என்று தீர்மானித்தார்; காத்திருந்தார். பெரும்புள்ளிகள் எல்லாம்





பிரமுகரைச் சந்தித்துவிட்டுப் போனபிறகு, அவருடைய முறை வந்தது. சென்றார். பிரமுகரைச் சந்தித்து, தம் கோரிக்கையைத் தெரிவித்தார். அவரும் தன்னாலான உதவியைச் செய்வதாக வாக்களித்தார். ஆனால், அன்பருக்கு அது தேர்தல் வாக்குறுதியைப் போலத் தோன்றியதே தவிர, தேர்ந்த வாக்குறுதியாகத் தோன்றவில்லை. பெரு நம்பிக்கையோடு சென்ற அவர், முழுதுமாக நம்பிக்கையை இழந்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினார்.

அதற்குப்பிறகு ஒரு நாள் அவர் என்னைச் சந்தித்தார். நடந்தவற்றை எல்லாம் சோர்வான குரலில் தெரிவித்தார்.

அது தேவையற்ற சோர்வு. அன்னையின் பக்தர்கள் நிச்சயம் சோர்வின் சொந்தக்காரர்களாக இருக்கக் கூடாது. கை கொடுத்து உதவ அன்னையின் அருள் காத்துக் கொண்டிருக்கும் பொழுது அதை நாடாமல், வேறு எங்கோ அலைந்து அல்லல் படுவது அறிவீனம். அன்னையிடம் வேண்டிக் கொண்டால் அவருடைய பிரச்சினை சாதகமாக மாறிவிடும்.

இவற்றை எல்லாம் நான் அவருக்குத் தெரிவிக்கவில்லை. நான் தெரிவித்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் அவர் அப்போது இல்லை. பிரச்சினைகளை எதிர் நோக்கும் பொழுது பாறையாக நின்றால்தான் வெல்ல முடியும். ஆனால், அவரோ பனிக்கட்டி. எதிர் விளைவுகளைச் சந்திக்கும்போது அவர் உடைந்தும், உருகியும் போகிறார். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவரேதான் அவரை உருக்காகச் செய்து கொள்ள வேண்டும்.

அவர் தம்முடைய குறைகளை எல்லாம் கொட்டித் தீர்த்து விட்டு, "அன்னையிடம் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்போம்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

நதி எங்கே ஓடினாலும் இறுதியில் அது கடலில்தான் சங்கமிக்கின்றது. அதைப் போல் அந்த அன்பரும் எங்கெங்கோ

அலை பாய்ந்துவிட்டு, கடைசியில் அன்னையின் அருளில் சங்கமித்துவிட்டார். அதில் எனக்கும் மகிழ்ச்சி. இனி அவர் பாதையில் படர்ந்திருக்கின்ற இருட்டு மறையும்; வெளிச்சம் தோன்றும்.

தேர்வு முடிவுகள் வெளியாயின. அவருடைய பையனுக்குப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டது! இந்தச் செய்தியைத் தெரிவிப்பதற்காக என்னைச் சந்தித்த அவர், “அன்னை உண்மையிலேயே உன்னதமானவர்!” என்று நாத் தழுதழுக்க நாலைந்து தடவைகள் கூறிக் கண்ணீர் சொரிந்தார்.

அன்னையின் அருள் நிரூபணமானது; சோதனைகளை நீக்கிச் சுகம் அளிக்க வல்லது. அந்த அன்பரைப் போன்று தேவைகளால் நிரப்பப்பட்ட மனிதர்கள், நிவாரணம் கிடைக்கும்பொழுதே அன்னையை உணர்கின்றார்கள். அவர் அன்னை அல்லவா? குழந்தைகளின் பசி அறிந்து பாலன்னம் படைக்கின்றார்.

அந்த அன்பர் என்னிடம் கூறிய வேறொரு நிகழ்ச்சி: அவர் ஒரு நாள் தம் சைக்கிளில் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு கூட்டம் ஒரு பெண்ணைச் சுற்றி நின்று கொண்டிருந்தது. அன்பர் அந்தக் கூட்டத்தில் ஒருவராய்க் கலந்தார். அந்தப் பெண்ணுக்கு என்ன நேர்ந்தது? விசாரித்தார். அந்தப் பெண்ணுடைய குழந்தை எங்கோ வழி தவறிப் போய்விட்டது. பெற்றவள் தேடிப் பார்க்காத தெருவே இல்லை. ஆனால், குழந்தையைத்தான் கண்டு பிடிக்க முடியவில்லை.

இனிக் குழந்தை கிடைக்கும் என்ற நம்பிக்கை இழந்த நிலையில், பாசக் கதறலாய் வெடித்து, அழுகை வெள்ளத்தில் அடித்துப் போகப்பட்ட அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது, அந்த அன்பருக்கும் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. தம்முடைய உணர்வில் மட்டுமன்று; மற்றவர்களுடைய உணர்விலும் ஊடாடிக் கரைந்து போகக் கூடிய மெழுகு அவர். அந்தப்





பெண் அழ அழ, அவருக்கும் அழுது கதற வேண்டும் என்ற ஓர் உந்தல் ஏற்பட்டது. அவர் தொண்டைக் குழியில் அழுகை புரண்டு கொண்டு வந்தது. அதை அடக்க வேண்டும். அப்படியானால் அழுது புலம்பும் அந்தப் பெண்ணை இனி அவர் பார்க்கக் கூடாது. என்ன செய்யலாம்?

சட்டென்று சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கூட்டத்திலிருந்து விலகிப் போய் ஒரு வீட்டுப் பக்கமாகத் திரும்பி நின்று கொண்டார். “அன்னையே! அந்தப் பெண்ணின் பரிதாபத்தை என்னால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. காணாமல் போன அவளுடைய குழந்தையை மீண்டும் அவளுக்குக் கொடுங்கள். அதுவும் இப்போதே கொடுங்கள். இல்லாவிட்டால் அவள் நெஞ்சு வெடித்துச் செத்துப் போய்விடுவாள். அன்னையே! அருள்க! அவளுக்குக் குழந்தையை உடனே தருக!” என்று அன்னையிடம் இறைஞ்சினார்.

அப்போது கூட்டத்துக்குள்ளிருந்து வந்த ஒரு கூச்சல், அவரைக் கலைத்தது. அது என்ன கூச்சல்? அந்தப் பெண்ணுக்கு நடக்கக் கூடாதது ஏதேனும் நடந்துவிட்டதோ? கேள்விகள் அவரை உலுக்கின. சைக்கிளை அப்படியே போட்டுவிட்டுக் கூட்டத்தை ஊடுருவிக் கொண்டு பாய்ந்தார்.

அங்கு ஓர் அதிசயம்தான் நடந்திருக்கிறது. யாரோ ஒருவர் காணாமல் போன குழந்தையைக் கண்டு பிடித்து அழைத்து வந்து அந்தப் பெண்ணிடம் சேர்ப்பித்திருக்கிறார். அதைக் கண்டு கூட்டமே மகிழ்ச்சி ஆரவாரம் செய்திருக்கிறது. அதுதான் கூச்சலாக எதிரொலித்தது, அந்த அன்பரை இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறது!

அந்தத் தாய் ஆனந்த மிகுதியால் குழந்தையைக் கட்டித் தழுவி உச்சி மோந்து கொண்டிருந்தாள். அதைப் பார்த்து விட்டுக் கண் கலங்கி நின்ற அன்பர், “அன்னையே! உங்களுக்கு நமஸ்காரம், உங்களிடம் நான் வேண்டிக் கொண்ட அக்கணமே

தாயிடம் குழந்தையைக் கொண்டு வந்து சேர்த்த உங்கள் அருளின் விரைவு எத்தனை மகத்தானது?" என்று உள்ளுருகினார்.

அந்த அன்பரைப் பற்றித் தெரிவிக்க இன்னும் சில உண்டு. சுமார் 30 வருடங்களுக்கு முன்னால் எனக்கு அவர் அறிமுகமானார். அதற்குப்பிறகு நண்பர் ஒருவருடைய வீட்டில் நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசுவதுண்டு. அவரைப் பற்றி என் நண்பர் மிக உயர்வாகப் பேசுவார். அப்போது, "அந்த அன்பர் தம் பணியில் உண்மையாகவும், திறமையாகவும் உழைக்கக் கூடியவர். பண்பில் சிறந்தவர். பழகுவதற்கு இனியவர்" என்றெல்லாம் புகழ்ந்து உரைப்பார் அவர்.

நடுவில் பல வருடங்கள் நானும், அன்பரும் சந்திக்க முடியாமல் போய்விட்டது. ஏனெனில், நானும் அவரும் வெவ்வேறு ஊர்களுக்குச் செல்லும்படியான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எதிர்பாராத விதமாக நாங்கள் இருவரும் வேறு ஓர் ஊரில் சந்திக்க நேரிட்டது. அப்பொழுது அவர் நடுத்தர வயதுடையவராக இருந்தார். அவருக்குப் பதவி உயர்வு கிடைத்து இருந்தது. 'மிகவும் கடுமையாக உழைத்து மேல் அதிகாரிகளின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற வேண்டும்' என்ற குறிக்கோளோடு பணியில் ஈடுபட்டிருந்தார்.

அதற்குப்பிறகு நானும் அவரும் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்கள் நிறையவே ஏற்பட்டன.

அவர் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் முகம் மிகவும் வாடிப் போயிருந்தது. "எனக்கு நீங்கள் உதவ முடியுமா?" என்ற கேள்வியுடன் பேச்சைத் தொடங்கினார் அவர்.

"புரியவில்லை, விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றேன் நான்.

"நியாயமாக எனக்குக் கிடைக்க வேண்டிய உத்தியோக உயர்வு கிடைப்பதில் ஏன் தடை ஏற்பட வேண்டும்?" என்று கேட்டார் அவர். திகைத்த நான், "அந்தச் சூழ்நிலையைப் பற்றிப் புரியும்படியாகக் கூறுங்கள்" என்றேன்.





"பதவி உயர்வு கொடுக்கும்முன் அதற்குத் தகுதி யுள்ளவர்களின் பெயர்களைப் பட்டியல் செய்து மேல் அதிகாரிக்கு அனுப்புவார்கள். வேலை காலி இருக்கும் இடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அந்தப் பட்டியலிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுத்துப் பதவி உயர்வு கொடுப்பார்கள். மற்றவர்களை உயர் பதவி காலியாகும்பொழுது அப்பதவிக்கு உயர்த்துவார்கள். என்னுடைய பெயர் அந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை. என்னுடைய பெயரையும் பட்டியலில் சேர்க்க வேண்டும் என நான் மனுச் செய்தேன். என்னுடைய மனுவை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்கள். அதனால் எனக்குப் பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு இப்பொழுது மட்டுமன்று; எப்பொழுதுமே இல்லாமல் போய்விடும். இது நியாயமற்றது. இதை எடுத்துச் சொல்ல, நான் இத்தனை காலமும் உழைத்த உண்மையான உழைப்பால் முடியவில்லை. உழைப்பால் பெற முடியாததைச் சிபாரிசால்தான் பெற முடியும். எனக்கு உதவக் கூடிய வகையில் உங்கள் சென்னை நண்பர்களில் யாரேனும் இருக்கிறார்களா? அவர்களைக் கொண்டு எனக்கு உத்தியோக உயர்வு கிடைக்குமாறு உதவுவீர்களா?" என்று கேட்டார் அவர்.

நான் அவருக்கு ஏதேனும் செய்துதானாக வேண்டும். ஆனால், அவர் கோரிய வழியில் அன்று; என் வழியில். அதற்கு அவர் என் வழியில்வரத் தயாராக இருக்க வேண்டும். ஆனால், என் வழி அவர் வழி அன்று.

அவர் அன்னையைப் பற்றியோ அல்லது ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியோ அப்போது அறிந்திருக்கவில்லை. அது மட்டுமன்று. அப்போது அவர் பரம நாத்திகராக இருந்தார். அந்தக் காலத்தில் அவர் மட்டுமல்லாது, பெரும்பாலான இளைஞர்களும் நாத்திகத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள். எனக்கும் ஆசிரமத்தோடு தொடர்பு ஏற்பட்டு ஒரு சில வருடங்களே ஆகியிருந்தன. ஆகவே, அவரிடம் அன்னையைப் பற்றியும் ஸ்ரீ அரவிந்தரைப்

பற்றியும் பேசுவதற்கு எனக்குத் தயக்கம். ‘அன்னையிடம் வேண்டிக் கொள்ளுங்கள். உங்களுக்கு நிச்சயம் நியாயம் கிடைக்கும்’ என்று அவரிடம் கூற வேண்டும் போலத் தோன்றினாலும், ‘அதை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்’ என்பது எனக்குப் புரியாமல் இல்லை. அதே சமயத்தில் எனக்கு இன்னொன்றும் புரிந்தது. ‘நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளா விட்டாலும் காதால் கேட்டுக் கொள்ள மறுக்க மாட்டார்’ என்பதுதான் அது.

உடனே நான் பாறையை அகழ்ந்து நீரூற்றைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். ஆமாம்; அவரிடம் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றியும், அவர் இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதைப் பற்றியும், அவருடைய யோகத்தைப் பற்றியும், அன்னையின் பெருமைகளைப் பற்றியும் பல நிகழ்ச்சிகளை மேற்கோளாகக் காட்டி எடுத்துரைத்தேன். பின்னர், “நீங்கள் ஸ்ரீ அரவிந்தர் சமாதியைத் தரிசிக்க விரும்புகிறீர்களா?” என்று கேட்டேன்.

அவர் பதிலளிக்கவில்லை. ஆனால், நான் கூறியதை ஏற்றுக் கொண்டதைப் போன்ற இணக்கமும், இளக்கமும் அவர் கண்களிலும், முகத்திலும் தெரிந்தன. போதுமே! கற்பாறை உடைந்துவிட்டது. இனி நீரூற்றுக் கசியலாம்; அல்லது பெருகலாம். பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அதற்கு நான் தயார். அவர் தயாரா? ஒரு கேள்விக் குறியாய் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு சென்றார் அவர்.

பத்து நாட்கள் சென்றன. அவர் மீண்டும் என்னைச் சந்திக்க வந்திருந்தார். இப்போது அவர் முகம் வேக்காடாக இல்லை. பூக்காடாக இருந்தது. “டெபுடி தாசில்தாராகப் பதவி உயர்வு பெற்றவர்கள் பட்டியலில் என்னுடைய பெயரும் வந்திருக்கிறது. நான் அப்பதவியை ஏற்றுப் பணி செய்ய வேண்டிய நாள் வெகு தூரத்தில் இல்லை!” என்று கூறி, தம் மகிழ்ச்சியையும், வியப்பையும் தெரிவித்துக் கொண்டார்.





“உண்மையிலேயே இது மகிழ்ச்சியும், வியப்பும் நிறைந்த செய்திதான். பதவி உயர்வு கொடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் உங்கள் பெயரும் பிறகு சேர்க்கப்பட்டதா?” என்று கேட்டேன் நான்.

“இல்லை ஆனால், பதவி உயர்வு கொடுக்கப்பட்டவர்கள் பட்டியலில் என் பெயர் இடம் பெற்றிருக்கிறது” என்றார் அவர்.

“ஆச்சரியமாக இருக்கிறதே!” என்றேன் நான்.

“எனக்குக்கூட ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. நான் பத்து நாட்களுக்கு முன்னால் உங்களைச் சந்தித்தபோது, ‘ஸ்ரீ அரவிந்தரின் சமாதியைத் தரிசிக்க விரும்புகிறீர்களா?’ என்று என்னை நீங்கள் கேட்டீர்கள். சுத்தமாகக் கடவுள் நம்பிக்கையே இல்லாத எனக்கு, முதலில் அது பைத்தியக்காரத் தனமாகத் தோன்றியது”.

“முயற்சி என்ற விதையை ஊன்றாவிட்டால் கடவுளின் அருளால் எதுவும் முளைத்துவிடாது” என்று என் பகுத்தறிவு சண்டித்தனம் செய்தது. ‘உன் முயற்சியால் எதுவும் நடக்கவில்லை. நீ விதைக்கலாம். ஆனால், உன்னால் அதை முளைக்க வைக்க முடியாது. எது முளைக்க வைக்கிறதோ, அதுதான் மூல சக்தி; கடவுள் சக்தி. நீ இதுவரை அறிவின் வாலைப் பிடித்துக் கொண்டு ஓடினாய்’.

“என்ன நடந்தது? அது உன்னைக் கீழே தள்ளி நன்றாக உதைத்தும்விட்டது. இனி நீ அருளின் ஒளியைத் துணையாகக் கொள். நீ விதைத்தவை எல்லாம் முளைக்கும். ஓடு, ஸ்ரீ அரவிந்தர் சமாதியை நோக்கி!” என்று என்னுள் எழுந்த ஒரு புதிய குரல், என் பிடரியைப் பிடித்துத் தள்ளியது. நான் ஓடினேன். ஸ்ரீ அரவிந்தர் சமாதியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன். அழுக்கு அகன்றதும் என் மனத்தை அழுத்திக் கொண்டிருந்த பளு மறைந்துவிட்டது. ‘இனி எது கிடைத்தாலும்—

அது ஏமாற்றமாகவே இருந்தாலும் – அதை ஸ்ரீ அரவிந்தர் அன்னையின் பிரசாதமாக ஏற்றுக் கொள்வது' என்ற தீர்மானத்துடன் நான் வீட்டிற்குத் திரும்பினேன்.

"அதற்குப்பிறகு எது நடக்க முடியாததோ, எது மனித சக்திக்கு அப்பாற்பட்டதோ, அது நடந்துவிட்டது! பதவி உயர்வு கொடுப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறாத என் பெயர், பதவி உயர்வு பெற்றவர்களின் பட்டியலில் எப்படி இடம் பெற்றது? இது நடைமுறைக்கு அப்பாற்பட்ட விஷயம். ஆனால், இது எப்படி நடந்தது? ஸ்ரீ அரவிந்தரின் அருளால் நடந்தது; அன்னையின் அருளால் நடந்தது" என்று உணர்ச்சிப் பூக்கள் கண்ணீரில் மலர விரித்துரைத்தார் அன்பர்.

பிறகு அவர் நாத்திகர் அல்லர்; ஆத்திகர்; அன்னையின் அணுக்கமான பக்தர்.

ஆக, ஒரு பாறை உடைந்துவிட்டது! அதன் அடியிலிருந்து நான் ஒரு சிறு நீரூற்றைத்தான் எதிர்பார்த்தேன். ஆனால், அதிலிருந்து பெருகி வந்ததோ, பெரு வெள்ளம்!

அன்னையின் அருள் பாலையிலும் சோலையாகும்; தொலையாத துயரங்களையும் விரட்டி அடிக்கும் விடிகாலைப் பொழுதாகும்.

★★★



# 14. சுற்றுச் சுவர்

அன்னையின் அணுக்கமான பக்தர் ஒருவருக்கு ஏற்பட்ட ஓர் இன்னலை, அன்னையின் அருள் எவ்வாறு ஊடுருவி ஆறுதல் அளித்தது என்பதை இங்கே அவரே கூறுகின்றார்:–

நான் புதுச்சேரியில் குடியேறி இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. நான் வசித்து வந்த பகுதியில் குடி நீருக்குப் பஞ்சமே இல்லை. எந்த நேரத்தில் குழாயைத் திறந்தாலும் நீர் பிரவாகமாக வரும். நாளாக நாளாக இந்த நிலை தலைகீழாக மாறிவிட்டது. அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

நான் குடி வந்த சமயம் அந்தப் பகுதியில் ஒரு சில வீடுகளே இருந்தன. ஆனால், கடந்த இரண்டு வருடங்களுக்குள் புதிது புதிதாக நிறைய வீடுகள் முளைத்துவிட்டன. அதற்கேற்ப குடிநீர் வசதியைப் பெருக்காததால், தண்ணீருக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. 'புதிதாகக் குடிநீர் டாங்க் ஒன்று கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அது கட்டி முடிக்கப்பட்டு விட்டால் தண்ணீருக்குப் பஞ்சம் இருக்காது' என்றெல்லாம் பரவலாக பேசிக் கொண்டார்கள். ஆனால், எதுவுமே நிகழும் போலத் தோன்றவில்லை.

'பொழுது விடிந்தால் தண்ணீர் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது. நான் மாடிப் பகுதியில் குடியிருந்ததால் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை தலையாய பிரச்சினையாகிப் பயமுறுத்தியது. மாடியில் தண்ணீரைத் தேக்கி வைக்க ஒரு தொட்டிகூட இருந்தது. ஆனால், கீழே இருந்து மாடிக்கு நீரை உந்திக் கொண்டு வருவதற்கு மோட்டார் பொருத்தி இருக்க வேண்டும் அல்லவா? அப்படிச் செய்திருக்கவில்லை. ஏனோ வீட்டுக்காரருக்கு ஓர் அரை ஹெச்.பி. மோட்டாரைப் பொருத்தித் தருவதற்கு மனம் இல்லை. ஆகவே, அந்த வீட்டைக் காலி

செய்துவிட்டு வேறொரு வீட்டுக்குக் குடி பெயர வேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டது'.

புதுச்சேரியில் வாடகைக்கு வீடு கிடைப்பது மிகவும் கடினம். 'பூர்வஜன்மத்தில் புண்ணியம் செய்திருந்தால்தான் புதுச்சேரியில் வீடு கிடைக்கும்' என்பது நடைமுறை வழக்கமாக இருந்தது. ஒருவேளை வீடு கிடைத்தாலும், வீட்டுக்காரர் கேட்கும் வாடகையை நினைத்தால் மயக்கமே வந்துவிடும். நகரத்தை ஒட்டினாற் போல் வீடு கிடைக்க வேண்டுமானால் பகீரதப் பிரயத்தனம் செய்தால் தவிரக் கிடைக்காது. அதிலும் கீழ்ப் பகுதியில் வீடு கிடைப்பதானால் கஷ்டத்தைச் சொல்ல வேண்டியதே இல்லை.

நான் அல்லும் பகலும் வீட்டைத் தேடிச் சோர்ந்து போனேன். 'புரோக்கர்கள் இல்லாமல் இனி முடியாது' என்ற நிலை. அவர்கள் அசகாய சூரர்கள் மட்டுமல்லர்; ஆகாய வீச்சுக்காரர்களும்கூட. அவர்களுடைய பழக்க வழக்கங்களை அருகிலிருந்து பார்த்தால், அவர்களோடு ஓர் ஐந்து நிமிடம்கூட நம்மால் பழக முடியாது என்பது புரிந்து போகும். புதுச்சேரி உள்ளூராக இருந்தால் எனக்கு அறிமுகமான பலர் இருப்பார்கள். அவர்கள் மூலமாகக் காலியான வீடுகளைத் தேடிப் பெற வாய்ப்பு இருக்கும்.

நானோ புதுச்சேரியில் புதிதாக வந்து குடியேறியவன். அதனால் இங்கே எனக்கு அறிமுகமானவர்கள் மிகக் குறைவு. ஆகவே, புரோக்கர்களைவிட்டால் எனக்கு வேறு வழி இல்லை. அவர்கள் நமக்குக் காட்டுகின்ற வீடுகளில் சில நாம் எதிர்பார்க்கிற மாதிரி அமைந்திருக்கும். ஆனால், வீட்டுக்காரர்கள் சொல்கின்ற வாடகையைக் கேட்டால் நமக்குத் தலையைச் சுற்றும். 'ஓரளவு நியாயமான வாடகையுள்ள நல்ல வீடு வேண்டும்' என்று கேட்டால், அதற்கும் புரோக்கர்கள் அயர மாட்டார்கள். நம்மை அழைத்துச் சென்று சில வீடுகளைக் காட்டுவார்கள். அவர்கள் 'வீடு' என்று காட்டுகின்ற கூடுகளில், பறவைகளால்தான் வசிக்க முடியுமே தவிர நம்மால் முடியாது.





யார் செய்த புண்ணியமோ, கடைசியாகப் புதுச்சேரியின் மேற்குப் பகுதியில் நகரத்தை ஒட்டினாற் போல் நியாயமான வாடகைக்கு ஒரு வீடு கிடைத்தது. வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். இனிச் சிறிது காலத்துக்கு வீடு தேடும் தொல்லையில் இருந்து விடுபட்டு இருக்கலாம் என்ற நிம்மதியோடும், நிறைவோடும் அந்த வீட்டுக்கு உடனே குடி போய்விட்டேன்.

அது தெற்குப் பார்த்த புதிய வீடு. அந்த வீட்டில் நான் முதன் முதலில் குடியேறி இருந்தேன். வீட்டுக்கு மேற்குப் பக்கத்தில் நான்கு வீடுகள் இருந்தன. கிழக்குப் பக்கத்திலும், வீட்டின் பின்பக்கத்திலும் காலி மனைகளே இருந்தன. எதிர்ப் புறத்தில் நான்கு வீடுகள். குழாயைத் திருகிவிட்டால் அருவியாய்த் தண்ணீர் கொட்டியது. வீடும் பார்ப்பதற்குக் களையாக இருந்தது. எனக்குப் பரம திருப்தி.

இரவு நேரங்களில் ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்குச் சென்று சமாதியைத் தரிசித்துவிட்டுப் பதினொரு மணிக்கு வீட்டுக்குத் திரும்புவது என் தினசரி வழக்கம். அன்றிரவு வழக்கம் போல் ஆசிரமத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பினேன். அணிந்திருந்த கைக் கடிகாரத்தைக் கழற்றி, ஜன்னல் ஓரமாக இருந்த சிமெண்ட் அலமாரியில் வைத்துவிட்டுப் படுக்கப் போய்விட்டேன்.

மறு நாள் காலையில் வெளியே புறப்படும்போது கைக் கடிகாரத்தை எடுப்பதற்காக அந்த சிமெண்ட் அலமாரியின் அருகே சென்றேன். அங்கே அது காணப்படவில்லை. 'அது எப்படிக் காணாமல் போயிருக்க முடியும்?' என்று என்னால் யூகிக்க முடியவில்லை. ஏனென்றால், என்னைத் தவிர அக்கடிகாரத்தை உபயோகிக்கக் கூடிய வேறு யாரும் என் வீட்டில் இல்லை. அது வேறு எப்படித்தான் போயிருக்கக் கூடும்? சிந்தித்தேன்.

'நாங்கள் உறங்கியபின், யாரோ ஒரு நபர் ஜன்னல் வழியாக ஒரு கோலை உள்ளேவிட்டு அந்தக் கடிகாரத்தைத்

திருடி இருக்க வேண்டும்' என்று முடிவு செய்தேன். அந்த அலமாரி மேற்குப் புறத்தில் ஜன்னல் ஓரமாக அமைந்திருந்தது. ஆதலால் வீட்டின் மேற்குப் புறத்துக்குச் சென்று ஜன்னல் சுவரில் ஏதேனும் தடயம் தெரிகிறதா என்று பார்த்தேன். சுவரில் கால்களை ஊன்றி, ஜன்னல் கம்பியைத் தாவிப் பிடிப்பதற்குத் திருடன் முயன்று இருக்கிறான் என்பதற்கு அடையாளமாக அவனுடைய கால் விரல்களின் ரேகைகள் சுவரில் பதிந்து இருந்தன. அதன் மூலம் என் கடிகாரத்தைத் திருடன் ஒருவன் திருடிச் சென்றுவிட்டான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

அந்தத் திருட்டு இந்த வீட்டுக்கு வந்து இருபது, இருபத்தைந்து நாட்களுக்குள் நடந்துவிட்டது. 'இனிக் கவனமாக இருக்க வேண்டும்' என்று என் மனைவியையும், மற்றவர்களையும் எச்சரித்ததோடு, இரவில் படுக்கப் போகுமுன் எல்லா ஜன்னல்களையும் மூடி உள் கொக்கியைப் போடும்படியும் சொல்லியிருந்தேன். பொதுவாக, 'ஜன்னல் ஓரங்களில் எந்த ஒரு பொருளையும் வைக்க வேண்டாம்' என்றும் கூறியிருந்தேன்.

இரண்டு நாட்கள் சென்றபின், மூன்றாவது நாள் காலையில் எழுந்து பார்த்தால், எங்களுக்காக ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. கிழக்குப் புறமாக உள்ள அறையில் இருந்த துணிகள் மாயமாக மறைந்திருந்தன. அந்தத் துணிகளோடு இருந்த ஐந்து புதிய புடவைகளும் காணாமல் போய்விட்டன.

திருடனுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது, என் வீட்டினரின் கவனக் குறைவுதான். அவர்கள் படுக்கைக்குச் செல்லும்முன் ஜன்னல் கதவுகளை எல்லாம் சாத்தினார்களே தவிர, கொக்கிகளைப் போடவில்லை. அத்தனை போதாதா? திருடன் ஜன்னல் கதவுகளைத் திறந்து குச்சியை அறைக்குள் விட்டு, அங்கிருந்த துணிகளை எல்லாம் ஒட்டு மொத்தமாக அபேஸ் செய்து கொண்டு போய்விட்டான்.

ஆக, 'சிறிது கவனக் குறைவாக இருந்தாலும், வீட்டில் உள்ள பொருள்கள் களவு போய்விடும்' என்ற அபாய நிலை





ஏற்பட்டுவிட்டது. எங்கள் வீட்டை மட்டுமே திருடன் குறி வைத்திருக்கிறான் என்பதற்குச் சில சான்றுகள்:

எங்கள் வீட்டின் அருகே இருந்த வீடுகளில் திருட்டுப் போகவில்லை. சிலர் ஜன்னல் கதவைத் திறந்து போட்டிருந்தாலும் கூட, திருடன் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. திருடன் விரும்பியிருந்தால் கவனக் குறைவாக உள்ளவர்களின் வீட்டிலும் கைவரிசையைக் காட்டி இருக்க முடியும். ஆனால், அவனுடைய கவனம் முழுக்க முழுக்க எங்கள் வீட்டிலேயே திரும்பியிருந்தது. 'இதற்கு என்ன காரணம்?' என்று நான் மற்றவர்களிடம் கேட்டேன்.

அதற்கு அவர்கள் 'தெருவில் உங்கள் வீடுதான் கடைசியாக இருக்கிறது. வீட்டின் கிழக்குப் பகுதியும், பின்பகுதியும் காலி இடங்களாக இருப்பதாலும், அந்த இடங்கள் வெளிச்சம் இல்லாமல் இருட்டாக இருப்பதாலும் உங்கள் வீடு திருடுவதற்கு வாட்டமாக இருக்கிறது' என்றார்கள்.

அவர்களுடைய விளக்கம் ஏற்புடையதே. திருடன் எங்கள் வீட்டுக் காம்பவுண்ட் சுவரைத் தாண்டி உள்ளே வருவதற்கு வெட்ட வெளியாக இருக்கும் மேற்குப் பக்கந்தான் வழியாக இருக்க வேண்டும் என்பது தெளிவாயிற்று. பக்கத்து வீட்டுக்குச் சுற்றுச் சுவர் கட்டப்படவில்லை. அதனால் திருடன் அந்த வீட்டின் பின்புறத்தில் நுழைந்து வெட்ட வெளியாக இருக்கும் மேற்குப் பக்கமாக முன்னேறி, எங்கள் வீட்டுக்கு வந்து போகிறான். இதனால் யார் கண்ணிலும் படாமல் வருவதற்கும் போவதற்கும் திருடனால் முடிகிறது. வீட்டின் மேற்குப் பக்கமாகத்தான் அவன் வந்து போகிறான் என்பதற்கான தடயங்கள் நிறையவே காணப்பட்டன.

இவற்றை எல்லாம் நான் ஒரு துப்பறியும் நிபுணரின் திறனோடு தெரிந்து வைத்திருப்பதால் என்ன பயன்? திருடனிடமிருந்து எப்படித் தினம் தினம் தப்புவது? ஒவ்வொரு

நாளும் மிகவும் எச்சரிக்கையோடு ஜன்னல் கதவுகளைச் சாத்தி, கொக்கி போட்டு வைத்தால்தான் அவனிடமிருந்து தப்பிக்கலாம். அவ்வளவு கவனம் நம் வீட்டில் உள்ளவர்களுக்கு இல்லை என்பதை, இரண்டாவது தடவையாகத் திருட்டுப் போனதிலிருந்தே நான் தெரிந்து கொண்டுவிட்டேன்.

இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு வழி இருந்தது. இந்த வீட்டைக் காலி செய்து வேறொரு வீட்டுக்குப் போய்விடுவதுதான் அந்த ஒரே வழி. ஆனால், ஏற்கனவே வீட்டைத் தேடிப் படாதபாடுபட்டுப் போன எனக்கு இன்னொரு வீட்டைப் பற்றி நினைக்கவே கசப்பாக இருந்தது. வேறு என்னதான் செய்வது? அதுவும் புரியவில்லை.

என்னுடைய வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். எனக்கு ஏற்பட்டிருந்த தொல்லையையும், நஷ்டத்தையும் அறிந்து கொண்ட அவர், வீட்டில் உள்ள எல்லா ஜன்னல்களுக்கும் வலைக் கம்பி போட்டுத் தந்தார். செலவைப் பார்க்காமல் இந்த முக்கிய வசதியைச் செய்து தரத் தாமே முன்வந்த வீட்டுக் காரரைப் பாராட்ட எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. ‘இனித் திருடன் தொடர்ந்து கொடுத்து வந்த தொல்லைகள் தொலைந்து போகும்’ என்று நிச்சயமாக நம்பினேன்.

என் நம்பிக்கை இரண்டு நாட்கள்கூட நீடிக்கவில்லை. மீண்டும் நள்ளிரவுத் திருடனின் நடமாட்டம் ஆரம்பமாகிவிட்டது. இரவு ஒரு மணிக்குமேல் வீட்டுக்கு வெளியே திருடன் நடமாடும் காலடி ஓசையும், அவன் பிடிக்கும் சுருட்டுப் புகையின் நெடியும் எங்களை நிம்மதியாகத் தூங்கவிடவில்லை. ஜன்னல்களை வலைக் கம்பிகள் போட்டு அடைத்தபிறகும், அவன் ஏன் என் வீட்டை இரவுப் பிசாசாகச் சுற்றி வருகிறான்? புரியவில்லை.

‘போலீஸில் புகார் செய்யலாமா?’ என்று நினைத்தேன். ‘அதனால் பெரிய பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை’ என்றது என் உள்ளுணர்வு. ஆகவே, நான் பேசாமல் இருந்துவிட்டேன்.





திருடனும் சளைக்காமல் ஒவ்வோர் இரவும் வந்து போய்க் கொண்டிருந்தான். அவன் எதற்காக அப்படி வந்து போகிறான்? தெரியவில்லை. ஆனால், அவன் ஏதோ திட்டத்துடன் வந்து போகிறான் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

நாங்கள் மிகவும் விழிப்புடன் இருந்தோம். படுக்கப் போவதற்கு முன்னால் எல்லாக் கதவுகளையும், ஜன்னல்களையும் கவனமாகத் தாழிட்டோம். ஆளுக்கு ஆள் சரி பார்த்தோம். ‘நாம் இத்தனை ஜாக்கிரதையாக இருப்பதால், திருடனுடைய திட்டம் எதுவும் பலிக்கப் போவதில்லை’ என்று எங்களை நாங்களே தைரியப்படுத்திக் கொண்டோம்.

ஒரு நாள் இரவு இரண்டு மணி இருக்கலாம். கொல்லைப் புறக் கதவு உள்ள இடத்தில் ஏதோ ஒரு சத்தம் கேட்கத் தொடங்கியது. அதற்குக் காரணம் புரிகிறது. அந்தக் கதவின் அருகில் திருடன் என்னவோ செய்கிறான். ‘செய்யட்டும். இந்த நேரத்தில் கொல்லைக் கதவைத் திறக்க வேண்டாம்’ என்று முடிவு செய்து வீட்டுக்குள்ளேயே அடங்கி இருந்துவிட்டோம்.

பொழுது விடிந்தது. கொல்லைக் கதவைத் திறந்து பார்த்தோம். அப்போது இரவில் திருடன் செய்த காரியம் என்னவென்று தெரிந்தது. அவன் கடப்பாரையைக் கொண்டு நெம்பிக் கதவைத் திறக்க முயன்றிருக்கிறான். கதவிலும், சுவரிலும் உள்ள வடுக்கள், அவனுடைய திட்டம் என்ன என்பதைத் தெளிவாகக் காட்டின.

அந்தக் கதவு அத்தனை கனமானது அன்று. திருடன் இன்னும் கொஞ்சம் முயன்றிருந்தால் அந்தக் கதவைச் சுலபமாகப் பெயர்த்து எடுத்திருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யவில்லை. ஏன்? ஜன்னலுக்கு வலைக் கம்பி போட்டவுடன் அவனுக்கு ஆத்திரம் வந்திருக்க வேண்டும். அதனால், ‘நீங்கள் வலைக் கம்பி போட்டால் என்ன? நான் கதவை உடைத்துக்

கொண்டு வந்து கொள்ளை அடிப்பேன்' என்று கூறுவது போல இந்தக் காரியத்தைச் செய்துவிட்டுப் போயிருக்கிறான்.

அவனுடைய எச்சரிக்கை அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. அவன் ஒரு கடுமையான போராட்டத்தைத் திட்டமிட்டுச் செய்து வருகிறான். 'எப்படியும் வீட்டுக்குள் புகுந்து திருடிவிட வேண்டும்' என்று குறி வைத்துவிட்டான். 'இனியும் இந்த வீட்டில் தொடர்ந்து இருப்பது சரியல்ல' என்று நினைத்தேன். ஆனால், புதுச்சேரியில் அவசரத்திற்கு வீடு கிடைப்பது அரிதாயிற்றே! 'வீடு தேடி அலையும் தொல்லை இன்னும் நம்மை விட்டபாடில்லை' என்று மனம் கசந்தேன். 'அந்தத் திருடனை வாராமல் தடுப்பதற்கு வழி ஏதும் இல்லையா?' என்று நானே என்னைக் கேட்டுக் கொண்டேன்.

ஏன் இல்லை? அதற்கு ஒரு வழி இருக்கிறது. பக்கத்து வீட்டுக்குச் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுவிட்டால், திருடன் வருவதற்கு வசதியாக இருக்கும் வழி அடைபட்டுப் போகும். அதுதான் அவனுடைய நடமாட்டத்தை அறவே ஒழிப்பதற்கான ஒரே வழி. பக்கத்து வீட்டின் சொந்தக்காரர் பிரான்ஸில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். அவர் எனக்கு அறிமுகமானவர் இல்லை. இப்போது அவருடைய வீட்டில் வசிப்பவர்கள், வாடகைக்குக் குடி இருப்பவர்கள். என்னுடைய நலத்துக்காகப் பக்கத்து வீட்டின் சுற்றுச் சுவரை உடனடியாகக் கட்டும்படி வீட்டின் சொந்தக்காரரை நான் கேட்டுக் கொள்ள முடியாது. அது நாகரிகம் அன்று. ஒருவேளை நான் அவ்வாறு கேட்டுக் கொண்டாலும், "உங்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்றால் உங்கள் வீட்டுக்காரரையே மேற்குப் பக்கச் சுவரையும் கட்டச் சொல்லுங்கள்" என்றுதான் அவர்களிடமிருந்து பதில் வரும். மேற்குச் சுவரைக் கட்ட வேண்டியவர் பக்கத்து வீட்டுக்காரரே தவிர, என் வீட்டுக்காரர் இல்லை. அப்படி இருக்க, 'நீங்கள் மேற்குச் சுவரைக் கட்டுங்கள்' என்று என் வீட்டுக்காரரை நான் எப்படிக் கேட்க முடியும்?





பல சிந்தனை நெருடல்கள். வீட்டில் நிம்மதியாக வசிக்க முடியாமலும், வீட்டைக் காலி செய்ய முடியாமலும் நான் தவித்தேன்; சலித்தேன்.

அந்த அன்பர் அன்னையிடம் உண்மையான பற்றும் நம்பிக்கையும் கொண்டவர். அவரை நான் தினமும் சந்தித்துப் பேசுவதுண்டு. அவரிடம் திருடன் எனக்குக் கொடுக்கும் தொல்லையைத் தெரிவித்து, "என் தொல்லை தீர ஏதாவது ஒரு வழி சொல்லுங்களேன்!" என்று கேட்டுக் கொண்டேன்.

'நீங்கள் அன்னை ஸ்ரீ அரவிந்தர் படங்களைக் கையில் ஏந்திக் கொண்டு வீட்டைச் சுற்றி வாருங்கள். இப்படி மூன்று நாள்களுக்குச் செய்யுங்கள். பிறகு என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என்றார்.

நான் அவர் கூறியபடியே மூன்று நாட்களும் அன்னை ஸ்ரீ அரவிந்தர் படங்களைக் கையில் ஏந்திக் கொண்டு வீட்டைச் சுற்றி வந்தேன். அந்த மூன்று நாட்களிலும் திருடன் வரவில்லை. அவன் நான்காவது நாளும் வரவில்லை. அந்த அன்பர் கூறிய முறையை நான் கையாண்டு பத்து நாட்களுக்கு மேலாகி விட்டன. திருடனின் நடமாட்டம் முற்றும் நின்றுவிட்டது. அதற்கு என்ன காரணம்? புரியவில்லை. இப்போது எனக்குச் சிறிது நிம்மதி. கூடவே, 'திருடன் மறுபடியும் வந்து தொந்தரவு கொடுப்பானோ?' என்ற பயம்.

ஒரு நாள் காலை நான் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தபோது, அங்கே எனக்காக ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. பக்கத்து வீட்டின் எதிரில் செங்கல்லும், ஆற்று மணலும் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடந்தன. அவை இரவோடு இரவாக வந்திறங்கி இருக்க வேண்டும். 'எதற்காக? சுற்றுச் சுவர் கட்டவா? இருக்க முடியாது. இத்தனை காலமாக அதைக் கட்டாமல் போட்டவர்களுக்கு இப்போது என்ன அதிலே அக்கறை? வேறு

ஏதோ வேலை செய்யப் போகிறார்கள். அதற்காகவே அந்தக் கட்டுமானப் பொருட்கள் வந்திருக்கின்றன' என்று நினைத்தேன்.

மறு நாள் காலையில் கொத்தனார்களும், சிற்றாட்களும் பக்கத்து வீட்டுக்கு வந்தார்கள். அந்த வீட்டைச் சுற்றிக் கடைக்கால் எடுத்துச் சுற்றுச் சுவரைக் கட்ட ஆரம்பித்து விட்டார்கள்! என் கண் முன்னால் நிகழ்ந்த அந்தக் காட்சியை என்னால் நம்ப முடியவில்லை. இரண்டே நாட்களில் சுற்றுச் சுவர் எழும்பிவிட்டது. அதனால் என் வீட்டின் மேற்குப் பக்கத்துத் திறந்த வெளியும் அடைபட்டுவிட்டது.

பிரான்ஸ் நாட்டில் இருந்த அந்தப் பக்கத்து வீட்டுச் சொந்தக்காரருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவர் அங்கு இருந்தபடியே புதுச்சேரியில் உள்ள ஒரு காண்ட்ராக்டரை ஏற்பாடு செய்து தன் வீட்டுக்குச் சுற்றுச் சுவரைக் கட்டிவிட்டார்.

அது எப்படி நிகழ்ந்தது? இந்தப் புரியாத புதிருக்கு விடை, 'அன்னையின் அருள்' என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? அதற்குப்பிறகு மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. அந்தத் திருடன் திரும்பி வரவே இல்லை!

✶✶✶



# 15. அன்னையின் அருளில் நம்பிக்கை

1985–ஆம் வருடம், நவம்பர் மாதம் 12, 13 தேதிகளில் தமிழ்நாட்டிலும், சென்னை மாநகரிலும் மழை விடாதுபெய்து கொண்டிருந்தது. அதோடு புயலும் சேர்ந்து கொண்டது. பிறகு வெள்ளப் பெருக்குக்குக் கேட்பானேன்?

அது சென்னையில் தாழ்வான பகுதியில் உள்ள மாடி வீடு. அதன் கீழ்ப் பகுதியில் "அமுதசுரபி" வாசக அன்பர் ஒருவர் வசிக்கிறார். மாடிப் பகுதியில் வீட்டின் சொந்தக்காரர் வசிக்கிறார்.

12–ஆம் தேதி இரவு மழை பலத்தது. ஏற்கனவே அந்த வீட்டைச் சூழ்ந்து கொண்டிருந்த தண்ணீரின் மட்டம் அதற்குப் பிறகு நிமிடத்திற்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டே போயிற்று. வீட்டின் கீழ்ப் பகுதியில் வசித்து வந்த அன்பருக்கு அதைப் பார்த்ததும் பயம். "எந்த நேரத்தில் வீட்டுக்குள் வெள்ளம் புகப் போகின்றதோ?" என்ற அச்சத்தில், தம் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு போய் மாடியில் வசித்து வந்த வீட்டுக் காரரின் குடும்பத்தினரோடு தங்கிவிட்டார் அவர்.

பொழுது விடிந்தது. 13–ஆம் தேதி. மழை இன்னும் பலமாகக் கொட்டிக் கொண்டிருந்தது. அன்பர் கீழே எட்டிப் பார்த்தார். வெளியே பரவிக் கிடந்த வெள்ளம், தன் வீட்டிற்குள்ளும் புகுந்திருப்பதைக் கண்டார். அவரும், மற்றவர்களும் எப்படியோ சமாளித்துக் கொண்டு கீழே இறங்கி வந்து கதவைத் திறந்து பார்த்தார்கள். வீட்டிற்குள் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் பரவிக் கிடந்தது. அவரும் மற்றவர்களும் சேர்ந்து, சில முக்கியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு போய் மறுபடியும் மாடி வீட்டில் அடைக்கலம் புகுந்து விட்டார்கள்.

வீட்டுக்காரர் அகதிகளாக வந்து சேர்ந்த அன்பருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் அன்புடன் உணவு முதலான வசதிகளைச் செய்து கொடுத்தார்.

மழையில் கரைந்தது பகல். மாலை நேரம் ஒரு பொல்லாத எதிரியைப் போலத் துரத்திக் கொண்டு வந்தது. மழையின் வேகம் அதிகமாயிற்று. வீட்டில் புகுந்த தண்ணீரின் மட்டமும் உயர்ந்து கொண்டே போயிற்று. அது மாடி வீடு என்றாலும் தாழ்வான பகுதியில் உள்ள வீடு. வெள்ளம் மாடிக்கும் வந்து விடக் கூடிய அபாயம். கணத்திற்குக்கணம் கூடிக் கொண்டே போயிற்று.

மாடியையும் வெள்ளம் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டால், பிறகு நிற்பதற்குக்கூட இடம் இல்லை. வேறு பாதுகாப்பான இடத்தைத் தேடிப் போகலாம் என்றாலோ, அந்தப் பகுதி முழுதும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது. அதைக் கடந்து செல்ல எளிய மனித சக்தியால் இயலாது.

இனி என்ன செய்வது? தெரியவில்லை.

உயிருடன் தப்புவது எப்படி? புரியவில்லை.

தெரியாத, புரியாத, உதவியை எங்கிருந்தும் எதிர்பார்க்க முடியாத அந்த நெருக்கடியான நிலையில், 'அன்னையின் அருள் ஒன்றால்தான் உதவ முடியும்' என்று தீர்மானித்த அந்த அன்பர், அன்னையை வேண்டிக் கொண்டார்.

பிறகு நிகழ்ந்தது என்ன?

அதை அவரே கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

"நான் அன்னையைத் தீவிரமாகப் பிரார்த்திக்க ஆரம்பித்தேன். வேறு சிந்தனையே இல்லாமல் அன்னையை வேண்டிக் கொண்டேன். படிப்படியாக மழை நின்றது. நீர் மட்டமும் குறைந்து வந்தது. மறு நாள் பொழுது விடிந்ததும் கீழே எட்டிப் பார்த்தபொழுது தண்ணீர் முழுதுமாக வடிந்திருந்தது".





சாதாரண மனிதனின் நம்பிக்கை, புறச் சூழ்நிலைகளிலும், மற்றவர்கள் மீதும்தான் உள்ளது. சில சமயங்களில் இந்த நம்பிக்கை கைகொடுப்பதில்லை. அவன் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகிறான். அப்பொழுது, தான் செய்து கொள்ளும் பிரார்த்தனையின் மீது அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிடுகின்றது. அதாவது பிறர் மீது வைத்த நம்பிக்கைக்குப் பதில் தன் மீதே அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிடுகின்றது. அந்தச் சென்னை அன்பரின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சி, பிறர், பிறவற்றின் மீது இருந்த நம்பிக்கை மாறி தன் (சுய) நம்பிக்கையால் கிடைத்த பலனைக் குறிக்கின்றது.

இனி வேறொரு நிகழ்ச்சியை நோக்கலாம்.

1983–லிருந்து அந்த அன்பர் என்னோடு கடிதத் தொடர்பு வைத்திருப்பவர். அவர் அவ்வப்போது எனக்குத் தன் நிலையை விளக்கிக் கடிதம் எழுதி, என் ஆலோசனையைக் கூறுமாறு கோருவார்.

ஆரம்பத்தில் அவர் எழுதிய கடிதம், அவருக்கு இருந்த நம்பிக்கை–அதாவது மற்றவர்கள் மீதும், புறச் சூழ்நிலைகள் மீதும் இருந்த நம்பிக்கை–ஆட்டம் கண்டுவிடவே, 'இனி என்ன செய்வது?' என்று அறியாமல் திணறிக் கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டியது. இந்தச் செய்தி 'அமுதசுரபி' செப்டம்பர் 84 இதழ்க் கட்டுரையில் வெளியாகி இருக்கின்றது.

அந்தப் பெண் வாசகர் ஒரு வங்கியில் கிளார்க்காகப் பணி புரிபவர். அவருக்கு மூன்று சகோதரிகள். குடும்பத்தில் அவரையும் சேர்த்து நான்கு பெண்களும் திருமண வயதை அடைந்துவிட்டவர்கள். மூத்த சகோதரர் திருமணமானவர். அவருக்குத் தம் தங்கைகளுக்குத் திருமணம் முடிக்க வேண்டுமே என்ற நினைப்பே இல்லை. பெற்றோர்களும் அதற்கான முயற்சியைச் செய்யவில்லை.

நான்கு பெண்களுமே உத்தியோகம் பார்ப்பவர்கள். ஆனாலும் அவர்களுக்கு அமைதி இல்லை. மூத்த பெண் ஒரு பள்ளி ஆசிரியை. 'நமக்கு வயதாகிவிட்டதே! இனி நமக்கு ஊர், உலகத்தைப் போலத் திருமணம் நடக்குமா?' என்ற கவலை சதா சர்வகாலமும் அவரை வாட்டியது. அதனால் அவருக்குத் தம் பணியில் ஈடுபாடு இல்லாமல் போய்விட்டது. அடுத்த பெண் வங்கிக் கிளார்க். அவர் தம் துறை சம்பந்தப்பட்ட சில தேர்வுகளை எழுதினார். அத்தனையிலும் தோல்வி. அதனால் அவருக்கு மனவேதனை. மூன்றாவது பெண்ணுக்குத் தபால், தந்தித் துறையில் வேலை. அதுவும் உள்ளூரில் அன்று; வெளியூரில். அங்கு அவருக்குத் தனியாக இருக்க வேண்டிய நிலை. அதனால் விளைந்தன பல தொல்லைகள். கடைசிப் பெண் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் பெண்ணாக இருந்த காரணத்தால், அவருக்கு நிறுவனத்தில் ஏற்பட்ட சில சங்கடங்கள்.

'இந்தப் பிரச்சினைகள் விலக அன்னை அருள் செய்ய வேண்டும்' என அந்த வங்கிப் பெண் எனக்கு எழுதி இருந்தார்.

"அன்றாடம் அன்னையிடம் உங்களுடைய குறைகளையும், உங்கள் சகோதரிகள், அவர்களுடைய குறைகளையும் எடுத்துக் கூறி, அவற்றை விலக்குமாறு கேட்டு வந்தால், அன்னை அவற்றை விலக்கி உதவுவார்" என்று நான் அவருக்குப் பதில் எழுதினேன்.

அதற்கு ஏற்ப அவரும், அவருடைய சகோதரிகளும் அன்றாடம் அன்னையிடம் வேண்டிவர, அவர்களுடைய குறைகளும் ஒவ்வொன்றாக நீங்கி வந்தன.

முதல் பெண்ணுக்குத் திருமணம் முடிந்து ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இரண்டாவது பெண் அதுவரை தோல்வியையே தந்து கொண்டிருந்த தேர்வில் வெற்றி பெற்றார். வெளியூரில் வேலை பார்த்துக் கொண்டிருந்த





மூன்றாவது பெண் மாற்றலாகி உள்ளூருக்கே வந்து குடும்பத்தோடு சேர்ந்து கொண்டார். நான்காவது பெண்ணுக்கு வேறொரு நல்ல நிறுவனத்தில் இரண்டு மடங்கு சம்பளத்தில் வேலை கிடைத்தது.

இந்த நிகழ்ச்சிகள் அந்த நான்கு சகோதரிகளுக்கும் பிரார்த்தனையின் சிறப்பைப் புரிய வைத்ததோடு தன்னம்பிக்கை யையும் பரிசாக அளித்தன.

இந்தக் கட்டத்தில் அந்த வாசகர் (வங்கிப் பெண்) எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில் உள்ள செய்தியைப் பார்ப்போம்:

"நான் என்னைப் பற்றி உங்களுக்கு ஏற்கனவே எழுதி இருக்கின்றேன். இடையில் நீண்ட நாட்களாக உங்களுக்குக் கடிதம் எழுத முடியாமல் போய்விட்டது. என் தந்தை காலமாகி விட்டார். அன்னையின் அருளால் என் அக்காவிற்குத் திருமணமாகி ஓர் ஆண் குழந்தையும் பிறந்துள்ளது. என் இரண்டு தங்கைகளுக்கும் தேவையான நகைகளைச் சேகரித்து வைத்திருக்கிறேன். எனக்கு அடுத்த தங்கைக்கு ஒரு வரன் கூடி வந்துள்ளது. அது நல்லபடியாக நடந்தவுடன் என் கடைசித் தங்கைக்குத் திருமணம் முடிய வேண்டும். அதுவும் முடிந்த பிறகு கடைசியாகக் கல்யாணத்திற்கு நிற்பவள் நான் ஒருத்திதான். அண்ணன் இருந்தும் எந்த வித உதவியும் இல்லை. தந்தையும் காலமாகிவிட்டார். என் தாயோ பலவித நோய்களால் பாதிக்கப் பட்டுள்ளார்".

"இந்த நிலையில் என் எதிர்காலம் என்னவாகுமோ என்று கவலையாக இருக்கிறது. இப்பொழுது எனக்கு வயது 30. இது வரை நம்பிக்கையோடு இருந்து வந்த எனக்கு, இப்பொழுது நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. நான் வருந்தியும், உருகியும் அன்னைக்குத் தினமும் பிரார்த்தனை செய்து வருகின்றேன். பலன் ஏற்படவில்லை. மேற்கொண்டு நான்

எப்படிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்? எப்படிப் பிரார்த்தனை செய்து கொண்டால் எனக்கு நல்ல எதிர்காலம் ஏற்படும் என்பதற்கு உங்கள் உதவியை நாடுகின்றேன். உங்கள் அறிவுரையை எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்''. இது கடிதம். கடிதத்தில் ஒரு செய்தி. 'நான் வருந்தியும் உருகியும் அன்னைக்குத் தினமும் பிரார்த்தனை செய்து வருகின்றேன். பலன் ஏற்படவில்லை' என்பது அந்தச் செய்தி. இருக்கட்டும், இதற்குப் பிறகு வருவோம்.

'நம்பிக்கை இரு வகையின' எனப் பார்த்தோம். ஒன்று: மற்றவர்கள் மீதும், சூழ்நிலைகள் மீதும் வைக்கப்படும் நம்பிக்கை. மற்றொன்று: தன்னுடைய செயலில் வைக்கும் நம்பிக்கை. முதல் வகையான நம்பிக்கை உதவிக்கு வாராதபொழுது தன்னம்பிக்கை உதவியதை மழையால் தவித்த சென்னை அன்பரிடத்தும், வங்கியில் பணி புரியும் அன்பரிடத்தும் பார்த்தோம்; ஆனால், இரண்டாவது அன்பருடைய வாழ்க்கையில், தன்னம்பிக்கையே ('இதுவரை நம்பிக்கையோடு இருந்து வந்த எனக்கு, இப்பொழுது நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது') உதவாமல் போய்விட்டது என்பதைப் பார்க்கின்றோம். 'நான் வருந்தியும், உருகியும் அன்னைக்குத் தினமும் பிரார்த்தனை செய்து வருகின்றேன். பலன் ஏற்படவில்லை' என அவர் விரக்தியோடு குறிப்பிடுகின்றார். 'தன்னம்பிக்கை' என்பதன் வேர்கள் வீழ்ந்த இடம் இதுதான்.

'தன்னம்பிக்கை இழந்த ஒருவர் என்ன செய்ய வேண்டும்?' என்பதை இனிப் பார்ப்போம்.

அன்னைக்குப் பிரார்த்தனை செய்வதால் பலன் ஏற்படுகின்றது. அதனால் பிரார்த்தனை தன்னம்பிக்கையை விளைவிக்கின்றது. இது மற்றவர்கள் மீதும், சூழ்நிலைகள் மீதும் வைக்கும் நம்பிக்கையைவிடச் சிறந்தது. ஆனால், அன்னையின் அருளில் மட்டுமே வைக்கின்ற நம்பிக்கைக்கு உள்ள சிறப்பும், புனிதத்துவமும்





இதற்குக் கிடையா. தன்னம்பிக்கையில் ஏற்படுகின்ற பலன் ஒரு வரையறைக்கு உட்பட்டுத்தான் இருக்கும். அன்னையின் அருளில் மட்டுமே வைக்கின்ற நம்பிக்கைக்கு வரையறையே கிடையாது.

இந்த இடத்தில் மற்றவர் மீது வைக்கும் நம்பிக்கைக்கும், தன் மீது வைக்கும் நம்பிக்கைக்கும், அன்னையின் அருள் மீது வைக்கும் நம்பிக்கைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொள்வதானது, குழப்பத்தைத் தவிர்க்கும்.

மற்றவர் மீது வைக்கும் நம்பிக்கை, எங்கிருந்தோ நன்மையை எதிர்பார்க்கின்றது. தன் மீது வைக்கும் நம்பிக்கை, ஒரு துணையைப் (பிரார்த்தனையை) பற்றி, தனக்கு நன்மையைத் தேடிக் கொள்ள முயல்கிறது. இந்தச் சுய தேடல் முயற்சியால் நன்மைகள் கிடைக்கலாம். ஆனால், முற்றுமாகக் கிடைக்கும் என்று கூற முடியாது. அன்னையின் அருள் மீது வைக்கும் நம்பிக்கை, தேட வேண்டிய அவசியம் இல்லாமலே நன்மைகளை வாரி வழங்குகின்றது.

இளநிலை, இடைநிலை ஆகிய முன்னிரு நம்பிக்கைகளையும் கடந்து முதுநிலையாகிய அன்னையின் அருள் நம்பிக்கையைப் பெறுவதே அரியது; பெரியது.

அந்த வங்கி அன்பரைப் போல் தன்னம்பிக்கை இழந்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நான் சொல்லியே ஆக வேண்டும்.

அவர்கள் அதாவது தன்னம்பிக்கை இழந்தவர்கள் தளராது, அதனினும் உயர்ந்த (அன்னையின் அருள்) நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, குறுக்கிடும் இடையூறுகளைக் கடந்து செல்ல வேண்டும்.

அன்னையின் அருளில் மட்டுமே நம்பிக்கை வைக்கத் தெரிந்தவர்களுக்கு எந்தச் சிக்கலும் தீரும்; எந்தத் துன்பமும் விலகும். தீராத பிரச்சினை என்பதே இருக்க முடியாது.

✶✶✶

# 16. அன்பர்களின் வாழ்வில் அற்புதங்கள்

அவர் ஒரு வாசக அன்பர். ''அமுதசுரபி''யில் அன்னையின் அருளை விளக்கி எழுதப்படுகின்ற கட்டுரைகளைப் படிக்கின்ற வாய்ப்பு, தமக்குச் சமீப காலமாகக் கிட்டியதாக எழுதி இருந்தார் அவர். அதாவது 1985–இன் பிற்பகுதியில் அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதிலிருந்து அக்கட்டுரைகளை அவர் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து படித்து வருகிறார். அதன் மூலம் அவருக்கு அன்னை அருளில் நம்பிக்கை வளர்ந்துவிட்டது.

அந்த வாசகரின் கொழுந்தர் ஒருவர், வெளி நாட்டுக்குச் சென்று வேலை பார்க்கவும், மற்றவர்களைப் போல் நிறையச் சம்பாதிக்கவுமான ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, நீண்ட காலமாக அதற்கான முயற்சியைச் செய்து கொண்டிருந்தார். முயற்சி பயனற்றுப் போய், மனிதர் சோர்ந்து போய்விட்டார். என்றாலும் ஆசை அவரை அலைக்கழித்தது. அவருக்குத் தூக்கத்தில்கூட வெளி நாட்டுப் பயணத்தைப் பற்றிய ஏக்கம். 'இந்த நிலை இப்படியே நீடித்தால், அவருக்கு ஏதாவது ஆகி விடக் கூடும்' என்று வீட்டில் உள்ளவர்கள் கவலைப்பட்டார்கள்.

அந்தக் கட்டத்தில் அன்னையிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அந்த அன்பர், தம் கொழுந்தரிடம், ''அன்னையின் திருவுருவப்படத்தை ஆசிரமத்திலிருந்து வருவித்து அன்னையை வணங்கி வந்தால், உங்கள் எண்ணம் நிறைவேறும்'' என்று கூறி, அன்னையின் திருவுருவப்படம் ஒன்றையும் உடனடியாகப் பெற ஏற்பாடு செய்தார். கிடைத்த திருவுருவப்படத்தைத் தினமும் வணங்கி வந்தார் அவருடைய கொழுந்தர். ஒரு மாதம்தான் அவர் அன்னையை வணங்கினார். அதற்குள் பல ஆண்டுகளாக





அவர் கண்டு கொண்டிருந்த பகற் கனவு பலித்தேவிட்டது. ஆமாம்; அவருக்கு வெளி நாட்டில் வேலை கிடைத்துவிட்டது!

அவர் வெளி நாட்டுக்குச் சென்றபிறகு, அந்த அன்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில், ''என் கொழுந்தரின் விருப்பம் அன்னையின் அருளால் நிறைவேறியது. அவரும் வெளி நாட்டுக்குச் சென்றுவிட்டார். ஆனால், அங்கு அவருக்கு எதிர்பார்த்தபடி வேலை அமையவில்லை. அவருக்கு அங்கேயே ஒரு திருப்தியான வேலை கிடைக்க வேண்டும்'' என்று எழுதி இருந்தார். அதற்கு நான், ''நீங்களும், உங்கள் கொழுந்தரும் அன்னையைத் தினமும் வேண்டுங்கள். விருப்பம் நிறைவேறும் வகையில் அன்னை அருள் செய்வார்'' என்று பதில் எழுதினேன்.

ஒரு மாதத்திற்குப்பிறகு ஒரு நாள் அந்த அன்பரிடமிருந்து மறுபடியும் ஒரு கடிதம் வந்தது. ''இதற்குமுன், 'என் கொழுந்தர் தகுந்த வேலை கிடைக்காமல் வருந்துகின்றார்' என்று நான் உங்களுக்கு எழுதி இருந்தேன். உங்களுக்கு நான் அப்படி எழுதிய ஒரு மாதத்திற்குள்ளாகவே அதிசயிக்கத்தக்க விதத்தில் அவருக்கு ஒரு நல்ல வேலை கிடைத்துவிட்டது. அன்னையின் அருள் விரைவு என்னை மெய் சிலிர்க்க வைத்தது. என் நன்றிக் காணிக்கையாக அன்னைக்கு ஒரு சிறு தொகையை அனுப்பியுள்ளேன்'' என்று அதில் எழுதி இருந்தார்.

## 2

மற்றொரு வாசக அன்பர் சற்று வித்தியாசமானவர். அவருக்கு எல்லாமே பிரச்சினைகள். அவற்றால் குழப்பங்கள்.

அவர் எழுதி இருந்தார்: ''கடிதத்தை எப்படித் தொடங்குவது, எதிலிருந்து தொடங்குவது என்பன புரியாத அளவுக்கு என் வாழ்க்கை சிக்கலும், சிரமமும் நிறைந்தது. கடந்த சில வருடங்களாக என் வாழ்க்கையில் கருமேகங்கள் சூழ்ந்து, இடியும், மின்னலுமாக இருக்கின்றன. நீச்சல் தெரியாத ஒருவன் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும்பொழுது பற்றிக்

கொள்ள மிதப்புக் கட்டை ஒன்று கிடைத்தது போல, அன்னை அருளை விளக்கி வரும் 'அமுதசுரபி'க் கட்டுரைகள் என் கவனத்திற்கு வந்தன. அக்கட்டுரைகளைப் படித்ததன் பயனாக, இப்பொழுது எனக்கு ஓரளவு தன்னம்பிக்கை உருவாகியுள்ளது.

'எனக்கென்று நான் சில தனிப்பட்ட கொள்கைகளையும், வரையறைகளையும், சட்ட திட்டங்களையும் வகுத்துக் கொண்டு, என்னைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு அதற்கப்பால் வெளி வட்டத்தில் இருந்த சமூகத்தோடு பழகிக் கொண்டு வந்தேன். அது எலியும், தவளையும் முடிச்சுப் போட்டுக் கொண்டதைப் போலாகிவிட்டது. என்னால் சமூக நடைமுறைகளை அங்கீகரிக்கவோ, அவற்றோடு ஒத்துப் போகவோ முடியவில்லை. அதே சமயத்தில் என்னுடைய நடைமுறைகளைச் சமூகம் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை.

"நான் இந்தச் சூழ்நிலையில் நாலரை வருடங்களாகப் பணி புரிந்து வந்த அரசாங்க வேலையை விட்டுவிட்டேன். வால் போய் கத்தி வந்திருக்கிறது! நான் என்னை நம்பி இருக்கும் ஜீவன்களைக் காப்பாற்றியாக வேண்டுமே! அதற்காகவாவது நான் சமூகத்தோடு கொஞ்சம் ஒத்துப் போயாக வேண்டுமே! ஒத்துப் போனேன். எந்த விதப் பிடிப்பும் இல்லாமல் தனியார் நிறுவனம் ஒன்றில் இப்பொழுது பணி செய்து கொண்டிருக்கிறேன். குடும்பச் சூளை அணைந்து போகாமல் இருக்க, நான் நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறேன் என்பதுதான் உண்மையான நிலை".

"கடந்த 28 ஆண்டுகளாக நீ சம்பாதித்தது என்ன?" என்ற கேள்வி, என்னைக் குளவியைப் போலக் கொட்டிக் கொண்டே இருக்கிறது. என்னைச் சுற்றி இருட்டுச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. 'ஒன்றையும் சாதிக்க முடியாத நீ, எதற்காக மனிதப் பிறவி எடுத்தாய்?' என்று என் மனம் எழுப்பும் கேள்விக்கு வெட்கமும், வேதனையுமே பச்சாதாபமான பதில்களாகக் கிடைக்கின்றன". "தேவையான பொருட்





செல்வம் கிடைக்கவும், வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒளி தோன்றி வளர்ந்திடவும் அன்னையின் பாதாரவிந்தங்களை நாடுகிறேன். சொந்தமாகத் தொழில் செய்து முன்னேற அன்னையின் அருளைச் சரண் அடைகிறேன்".

தன்னை முழுதுமாக வெளிப்படுத்தி இருந்த அவருடைய கடிதத்திற்கு நான் பதில் எழுதினேன். அதன் சுருக்கம் இது.

"கடந்தகால உங்கள் வாழ்க்கையை, குறிப்பாக உங்கள் உத்தியோக வாழ்க்கையை, ஆரம்பக்காலம் முதல் இன்றுவரை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றின் எல்லைக் கோடுகளாக அமைந்த நிகழ்ச்சிகளை நினைவில் கொண்டு வந்து, அவற்றை வரிசைப்படுத்தித் தினமும் அன்னையிடம் தொடர்பு பிறழாமல் கூறி, அவற்றை அன்னையின் பொறுப்பில் விட்டுவிடுங்கள். அதைச் செய்யும்பொழுது இரண்டு முக்கிய நிபந்தனைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். (1) 'அன்னை அருள் என் வாழ்க்கையில் சூழ்ந்திருக்கும் சிக்கலை விலக்கிப் புத்துணர்வை உருவாக்கிக் கொடுக்கும். என் எதிர்கால வாழ்க்கை செம்மையாக அமையும்' என்று பூரணமாக நம்ப வேண்டும். (2) கடந்தகால நிகழ்ச்சிகளை அன்னையிடம் கூறி வரும்பொழுது மனத்தில் வெறுப்பு, பயம், ஆத்திரம், சோர்வு, முதலிய உணர்வுகள் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த முறையில் கடந்தகால வாழ்க்கையைக் கூறி வருவதுடன், ஒரு சிறு காணிக்கையையும் அன்னைக்கு (ஆசிரமத்துக்கு) அனுப்பி வையுங்கள். அன்னை உங்கள் கோரிக்கையைப் பூர்த்தி செய்து வைப்பார்".

அதற்குப்பிறகு நான்கு மாதங்கள் கழித்து அந்த அன்பரிட மிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தமக்குக் கிடைத்த அருட் செல்வத்தைப் பற்றி அவர் இவ்வாறு எழுதி இருந்தார்.

"அன்னை அன்பன் மகிழ்வோடு எழுதுவது. நீங்கள் எழுதிய வண்ணம் அன்னையை முழுதுமாக ஏற்றுக் கொண்டு என்

வாழ்க்கை, உத்தியோக நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி, தினந்தோறும் அன்னையிடம் கூறி வந்தேன். அன்னைக்கு என் எளிய காணிக்கையையும் அனுப்பி வைத்தேன். அன்னை எனக்கு அருள் பாலித்துவிட்டார். ஆம்; என் குறிக்கோள், என் தனிப்பட்ட வரையறைகளுக்கு ஏற்ப, எனக்கு ஒரு நல்ல வாய்ப்பை அருளிவிட்டார் அன்னை. சுய வேலைத் திட்டத்தின் **(Self Employment Scheme)** கீழ், நான் ஒரு தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பித்திருந்தேன். அதிகாரிகள் என்னைத் தேர்ந்து எடுத்து, சொந்தமாகத் தொழில் நடத்துவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து வருகிறார்கள். ஒளி மயமான ஓர் எதிர்காலத்தை எனக்கு வழங்கிய அன்னையின் அருட் சக்திக்கு நான் தலை வணங்குகிறேன்.

## 3

அவர் ஆசிரியையாகப் பணி புரிந்து வரும் ஓர் 'அமுதசுரபி' வாசக அன்பர். அவர் எழுதி இருந்தார்.

"நான் ஒரு தனியார் பள்ளியில் தலைமை ஆசிரியையாக இருக்கிறேன். எனக்குப் பல்லாண்டு கால அனுபவமும், தொழிலில் சிறப்பான தகுதியும் இருக்கின்றன. என்றாலும், மிகவும் குறைந்த ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டு வருகிறேன். சற்றுத் தொலைவில் சென்று பணி புரியத் தயாராக இருந்தால், எனக்கு நிச்சயமாகக் கணிசமான ஊதியம் கிடைக்கும். என் உடல் ஆரோக்கியம் அதற்கு இடம் கொடாததால், இங்கே காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன். நான் ஆரம்பக்காலத்தில் இங்கே உதவி ஆசிரியையாகத்தான் சேர்ந்தேன். பிறகு என்னைத் தலைமை ஆசிரியையாக நியமித்தார்கள். அதனால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், பதவி ஏற்ற கொஞ்ச காலத்திலேயே நான் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியதாகிவிட்டது".

"பள்ளியில் பணியாற்றி வரும் உதவி ஆசிரியர்கள் பலரும் மனச்சாட்சி இல்லாதவர்கள். அவர்கள் ஆசிரியருக்குள்ள





காரியங்களைத் தவிர, மற்ற எல்லா வேண்டாத காரியங்களையும் செய்து வருகிறார்கள். பள்ளி நேரத்தில் பேசிக் கொண்டிருப்பது, கதைப் புத்தகங்களைப் படிப்பது, பொய்க் காரணம் கூறிவிட்டுச் சினிமா பார்க்கச் செல்வது, தன்னிடம் 'டியூஷன்' வைத்துள்ள மாணவர்களுக்குக் கேள்வித் தாள்களைப் பரீட்சைக்கு முன்பே கொடுத்து, அவற்றுக்கான விடைகளையும் சொல்லிவிடுவது போன்ற பல காரியங்கள் அவர்களின் பட்டியலில் இடம் பெறுகின்றன. பெற்றோர்கள் அந்த ஆசிரியர்களைப் பற்றி ஏதேனும் புகார் கூறும்பொழுது, நான் சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க நேருகிறது; கண்டிக்கவும் வேண்டியிருக்கிறது. அப்படி விசாரணைக்கு ஆளாகும் ஆசிரியர்கள், என்னை விரோதியாக எண்ணுகிறார்கள். அத்தகைய ஆசிரியர்களை எப்படி உண்மையான ஆசிரியர்களாக்குவது? இதுதான் என்னுடைய முக்கியமான பிரச்சினை".

"இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று எனக்கு விளங்கவில்லை. இதற்கு அன்னைதான் வழி காட்ட வேண்டும். அன்னையின் அருளால் இதற்கு வழி பிறக்க வேண்டும் என்று விரும்புகிறேன். தங்களுடைய மேலான அறிவுரைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்".

அவருடைய கடிதத்திற்கு, "உதவி ஆசிரியர்களைக் கண்டு வேதனையோ, எரிச்சலோ அடையாமல் மனத்தை அமைதியாக வைத்துக் கொண்டு 'இந்தப் பள்ளி முன்னுக்குவர வேண்டும். இங்குப் பணி புரிகின்ற ஆசிரியர்கள் தவறான வழிகளைக் கைவிட்டு, நேர்மையாகப் பணி செய்ய வேண்டும்' என அன்னையிடம் தினமும் வேண்டிக் கொள்ள வேண்டும். பள்ளியில் பணிசெய்கின்ற நேரங்களில் ஒவ்வோர் ஆசிரியரையும் பார்க்கும்பொழுது அன்னையை நெஞ்சில் நினைத்துக் கொண்டு பழக வேண்டும். அவர்கள் மீது கோபமோ அல்லது குரோதமோ தோன்றாதபடி உங்கள் மனத்தை நிர்மலமாக வைத்துக் கொள்ள

வேண்டும். அன்னைக்குச் சிறிய காணிக்கை ஒன்றையும் அனுப்பி வையுங்கள்'' என்று நான் பதில் எழுதி இருந்தேன்.

அதற்குப்பிறகு பத்து மாதங்கள் சென்றுவிட்டன. அந்த ஆசிரியையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"கடந்த வருடம் நான் என்னுடைய பிரச்சினைகளைப் பற்றி எழுதி இருந்தேன். நீங்கள் அதற்கு எழுதிய பதிலில் கண்டபடி அன்னைக்குக் காணிக்கையை அனுப்பிவிட்டு, அன்னையைப் பிரார்த்தனை செய்து வந்தேன். எனக்கு எதிராகச் செயல்பட்டு வந்தவர்களை எல்லாம் கண்டபொழுது, அன்னையை நெஞ்சில் நினைத்துப் பழகி வந்தேன். அதனால் ஏற்பட்ட பலனைச் சொன்னால் உங்களுக்கே நம்பிக்கை வாராது. எந்த ஐந்து நபர்கள் எனக்கு எதிராகச் செயல்பட்டுத் துன்பத்தைக் கொடுத்து வந்தார்களோ, அவர்கள் ஐவரும் ஒருவர்பின் ஒருவராக, தாமாகவே வேலையை ராஜினாமாச் செய்துவிட்டுப் பள்ளியிலிருந்து விலகிவிட்டார்கள். இப்பொழுது எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இப்பொழுதுதான் பள்ளிக்கூடம் உண்மையிலேயே பள்ளிக்கூடமாக இருக்கிறது. என் மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மன நெகிழ்வுடன் அதில் எழுதி இருந்தார்.

'அன்னையின் அருள் தூணையும் துரும்பாக்கும். துரும்பையும் கரும்பாக்கும்' என்பதற்கு அன்பர்களின் வாழ்வில் நிகழும் அற்புதக் காட்சிகளே சாட்சிகள்.

✶✶✶



# 17. அன்னையின் அருளுக்கு இணை ஏது?

அந்த அன்பர் ஓர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். 'அமுதசுரபி'யில் வந்து கொண்டிருக்கும் ஸ்ரீ அரவிந்தர் அன்னையைப் பற்றிய கட்டுரைகளைப் படிப்பதற்கு முன்பே, அவர் ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு வந்திருக்கின்றார். அன்னையிடமும் ஸ்ரீ அரவிந்தரிடமும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

அவர் தம் ஆசிரியப் பணியைத் தொடங்கி இருபத்தாறு ஆண்டு காலமாகிறது. அதில் 10 ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராக இருந்து வருகின்றார். மாணவர் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவர் பணி புரிந்த பள்ளிகளில் மாணவர்கள் மிகவும் கணிசமான அளவில் தேர்வு பெற்றுள்ளார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாணவர்கள் 95 சதவிகிதத் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

பாராட்டுக்குரிய செயல்களைச் செய்து கொண்டு இருந்த அவர், படு மோசமான விளைவுகளைச் சந்திக்க நேர்ந்தது. அவருடைய சாதனையைக் கண்டு பொறாமையும், பொல்லாங்கும் கொண்ட சக ஆசிரியர்கள், அவர் மீது போர் தொடுத்தார்கள். அது நேரடிப் போர் அன்று. மறைந்திருந்து எய்கின்ற ராமபாணப் போர். சக ஆசிரியர்களால் மேல் அதிகாரிக்குச் சரமாரியாக அவர் மீது குற்றச்சாட்டுகள் பறந்தன. அத்தனையும் பொய்; பொறாமை. அந்த உமிகளை ஊதிப் பார்த்தால் உள்ளே இருக்கும் அரிசி மணி கண்களுக்குத் தெரிந்திருக்கும். மேல் அதிகாரி அந்தச் சிறிய முயற்சியைக்கூடச் செய்து பார்க்கவில்லை. அவரை, அவர் வேலை பார்த்து வந்த ஊரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள வேறோர் ஊருக்கு மாற்றல் செய்து உத்தரவு பிறப்பித்துவிட்டார்.

உண்மையில் உழைத்த மனிதருக்கு இப்படி ஒரு தண்டனையா? அவமானமும், அல்லலும் அவரைத் துவம்சம் செய்தன.

அந்த நிலையில் அவர் 'அமுதசுரபி'க் கட்டுரைகளைப் படிக்க நேர்ந்தது. அவற்றால் தூண்டப்பட்ட அவர், நடந்தவற்றை எல்லாம் எனக்கு விவரமாக எழுதிவிட்டுக் கடிதத்தை இப்படி முடித்திருந்தார்: "இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழி என்ன?"

எனக்குத் தெரிந்ததும், உடனடியாகப் பயன் அளிக்கக் கூடியதுமான ஒரே வழி அன்னை வழிதான்.

அந்த வழியை மொழியாகக் கொண்டு அவருக்குப் பதில் எழுதினேன்.

"சக ஆசிரியர்கள் எவ்வளவுக் குற்றங்களைக் கூறி இருந்தாலும், அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். 'நாம் அந்தக் குற்றங்களுக்கு அப்பாற்பட்டவரா?' என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மீது குற்றம் இல்லை என்பது தெளிவாகியபின்பு, குற்றம் சுமத்தியவர்கள் மீது எழும் ஆத்திரம், வெறுப்பு முதலியவற்றை மனத்திலிருந்து நீக்கிவிடுங்கள். குற்றம் சாட்டியவர்களில் யாராவது உங்களிடமிருந்து உதவியைப் பெற்றவராக இருப்பின், 'அவர்களுடைய தகுதியை ஆராயாது அவர்களுக்கு உதவி செய்தது தவறு' என உணர்ந்து, அதற்காக வருந்தி, 'இனி அம்மாதிரியான தகுதி இல்லாதவர்களுக்கு உதவி செய்வதில்லை' என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். அன்னையின் அருளில் பூரண நம்பிக்கை வைத்து, தினமும் உங்கள் குறையைக் கூறி, அதனை விலக்குமாறு அன்னையிடம் கேட்டு வாருங்கள். கேட்டது கிடைக்கும்" என்பதுதான் நான் எழுதிய பதில்.

சிறிது காலத்திற்குப்பிறகு, "நீங்கள் கூறியவற்றை நடை முறையில் பின்பற்றி வந்தேன். பலன் அதிசயிக்கத்தக்க அளவில் கிடைத்துள்ளது. என் ஊரிலிருந்து 40 கி.மீ.





தொலைவில் உள்ள ஒரு பள்ளிக்கு மாற்றப்பட்ட நான், இப்பொழுது என் ஊருக்கு அருகில் உள்ள வேறொரு பள்ளிக்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கிறேன். கலைந்து கிடந்த என் எண்ணத்தை அழகிய வண்ணமாக்கிய அன்னையின் அருட்சக்திக்கு இணை ஏது?" என்று வியப்புடன் எழுதி இருந்தார் அந்த அன்பர்.

## 2

இந்த அன்பர் பெங்களூர்வாசி. மே 84–இல், "தங்களுடைய கட்டுரைகளைக் கடந்த மூன்று வருடங்களாக 'அமுதசுரபி'யில் தொடர்ந்து படித்து வருகின்றேன். அவற்றைப் படிக்கத் தொடங்கியபிறகு, எனக்கு அன்னையின் அருளில் ஈடுபாடும், பக்தியும் உண்டாயின. பலருடைய சிக்கல்களும், துன்பங்களும், தொல்லைகளும் அன்னையின் அருளால் நீங்கியதை அக்கட்டுரைகளின் மூலமாக அறிந்தேன். அதைப் போல என்னுடைய பிரச்சினைகளையும் அன்னையின் அருள் தீர்த்து வைக்க வேண்டும் என்று அன்னையிடம் நம்பிக்கையோடு பிரார்த்திக்கின்றேன்".

"என்னுடைய மூத்த பெண்ணுக்குத் திருமணம் நடைபெற வேண்டுமே என்ற கவலை என் மனத்தைப் பாறையாக அழுத்திக் கொண்டிருக்கின்றது. திருமணத்திற்குத் தேவையான பொருள் வசதி இல்லை. அன்னையின் அருள்தான் கண்ணுக்குத் தெரியாத வரனைக் காட்டி, கையில் இல்லாத பொருள் வசதியைக் கொடுத்துத் திருமணத்தைக் கூட்டி வைக்க வேண்டும். இதற்கான அறிவுரைகளை எழுதி அனுப்புமாறு வேண்டுகின்றேன்" என்று எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார் அவர்.

"உங்கள் கடிதம் கிடைத்தது. அன்னையின் அருளில் பூரண நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். திருமணம் ஆக வேண்டிய உங்கள் மூத்த பெண்ணும், பெற்றோராகிய நீங்களும் அன்னையின் அருளில் முழுமையான நம்பிக்கை

கொண்டு, 'திருமணம் விரைவில் கூடிவர அருள் செய்ய வேண்டும்' என்று தினந்தோறும் வேண்டிக் கொள்ளுங்கள். அன்னைக்காக ஆசிரமத்திற்கு ஒரு சிறு காணிக்கையையும் அனுப்பி வையுங்கள். விரைவில் திருமணம் கூடி வரும்'' என்று இந்த அன்பருக்குப் பதில் எழுதினேன்.

அன்னையின் அருளால் இரண்டே மாதங்களில் தகுந்த வரன் கிடைத்து, போதுமான பணமும் கிடைத்து, அந்தப் பெண்ணுக்குச் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்து முடிந்தது.

வாழ்க்கை கடலைப் போன்றது. ஓர் அலை ஓய்ந்தால் மற்றோர் அலை சீறிக்கொண்டு வரும். இந்த அன்பரை நோக்கி இன்னோர் அலை பாய்ந்து வந்தது.

அவர் அதைப் பற்றி அடுத்து எழுதி இருந்தார். அதில்—

''எங்கள் வீட்டின் மாடிப் பகுதியில் 84, பிப்ரவரியிலிருந்து ஒரு விரிவுரையாளர் குடி இருந்து வருகின்றார். வந்த புதிதில் ஒட்டி ஒட்டிப் பழகிய அவர் குடும்பம், மூன்றாவது மாதத்திலிருந்து வெட்டிப் பேச ஆரம்பித்துவிட்டது. ஆகவே இப்பொழுது நாங்கள் அவரிடமோ, அவர் மனைவியிடமோ அவசியமானால் தவிரப் பேசுவதில்லை''.

''இன்னும் இரண்டு வாரங்களில் என் மூத்த பெண்ணும் மாப்பிள்ளையும் இங்கே வரப்போகின்றார்கள். காரணம், மாப்பிள்ளைக்கு பெங்களூர் அலுவலகத்திற்கு 'டிரான்ஸ்பர்' கிடைத்திருக்கின்றது. எனக்கு (அந்தப் பெண்ணின் தாயாருக்கு) சமீபத்தில் ஒரு அறுவை சிகிச்சை நடந்தது. அதனால் நான் சிறிது பலவீனமாக இருக்கின்றேன். அதோடு என் கணவர் உத்தியோகப் பணியின் காரணமாக அடிக்கடி வெளியூருக்குச் செல்ல நேரிடுகின்றது. இந்த நிலையில் என் பெண்ணும், மாப்பிள்ளையும் எங்கள் கூடவே இருந்தால் எனக்குப் பேராதரவாக இருக்கும்''.





''எங்கள் குடும்பம் வீட்டின் கீழ்ப் பகுதியில் இருக்கின்றது. அது சிறிய இடமாக இருப்பதால், பெண்ணும் மாப்பிள்ளையும் எங்களுடன் இருக்க முடியாது. ஆகவே, மாடியில் குடியிருப்பவர்கள் காலி செய்து கொடுத்தால்தான் அவர்கள் இருவரையும் எங்களுடன் தங்க வைக்க முடியும். குடி இருப்பவரிடம் எங்களுடைய நிலையை எடுத்துச் சொல்லி வீட்டைக் காலி செய்து கொடுக்கும்படிக் கேட்டால், அவர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அலட்சியமாக இருக்கின்றார். அன்னைதான் எங்களுக்குக் கருணை காட்ட வேண்டும். அன்னையின் அருளால் அன்றி, வேறு வகையில் குடி இருப்பவரைக் காலி செய்ய வழி இல்லை'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு நான் இவ்வாறு பதில் எழுதினேன்:

''அன்னையிடம் தினமும் உங்கள் கோரிக்கையைச் சொல்லுங்கள். அதை இடைவிடாது கூறிவர வேண்டியது முக்கியம். உங்கள் வீட்டில் குடியிருப்பவர் மீது கோபம், எரிச்சல், போன்றவற்றைக் காட்டுவதை முழுதுமாக விட்டுவிட வேண்டும். அவரைப் பற்றி உங்கள் வீட்டாரிடமோ, வெளியாரிடமோ குறை கூறிப் பேசுதலும் கூடாது. 'அவர் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போய்விட வேண்டும்' என்று எண்ணும்பொழுதும், அது பற்றிப் பிறரிடம் பேசும் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுதும் அன்னையை நினைத்துக் கொள்ள வேண்டும். அவசியமானபொழுது மட்டுமே அதைப் பற்றிப் பிறரிடம் கூற வேண்டுமேயன்றி, குறை கூறும் நோக்கில் கூறக் கூடாது. எந்தச் சமயத்திலும் அதைப் பிரச்சினையாக எண்ணி நாலுபேர் முன்னிலையில் குரோதமாகப் பேசி வேதனை அடைதலும் கூடாது. 'அன்னையின் அருள் குடியிருப்பவரைத் தானாகவே காலி செய்துவிட்டுப் போகுமாறு செய்யும்' என்ற முழு நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இவ்வாறு செயற்படும்பொழுது உங்கள் பிரச்சினை பனி போல் விலகிவிடும்''.

டிசம்பர் 85–இல் அந்த அன்பரின் கணவர் தம் அலுவலகம் சம்பந்தமாக, சென்னைக்குச் செல்ல வேண்டி இருந்தது. சென்னைக்குச் சென்ற அவர், பாண்டிச்சேரிக்கு வந்து ஸ்ரீ அரவிந்தர் அன்னை சமாதியைத் தரிசித்து, "மாடியில் குடி இருப்பவர் வீட்டைக் காலி செய்து கொடுக்க, நீங்கள் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

அன்று மாலை என்னைச் சந்திப்பதற்காக வந்திருந்தார். அப்பொழுது கூறினார்: "பெங்களூரில் குடி இருப்பவரைக் காலி செய்ய வைப்பது மிக மிகக் கஷ்டமான காரியம். சட்டம் குடி இருப்பவர்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது. அந்தப் பேராசிரியர் எங்கள் வீட்டுக்குக் குடி வந்து இன்னும் இரண்டு வருடங்கள் ஆகவில்லை. 'மூன்று வருடங்களுக்குப் பிறகுதான் வீட்டைக் காலி செய்து கொடுப்பேன்' என்று பிடிவாதமாகக் கூறுகிறார் அவர். இந்த நிலையில் நானே அவரைக் காலியாக இருக்கும் சில வீடுகளுக்கு அழைத்துச் சென்று காண்பித்தேன். ஆனால், அவர், 'எனக்கு இந்த வீடுகளெல்லாம் பிடிக்கவில்லை' என்று கூறிவிட்டார். அவரை எப்படிக் காலி செய்ய வைப்பது என்றே எனக்குத் தெரியவில்லை".

"அன்னை ஸ்ரீ அரவிந்தர் சமாதியில் நீங்கள் உங்கள் கோரிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறீர்கள். இனிப் பிரச்சினை விரைவில் விலகிப் போய்விடும். நான் முன்பு எழுதியிருந்தவாறு குடியிருப்பவரைப் பற்றி எப்பொழுது நினைவு வந்தாலும், அக்கணமே அன்னையை நினைத்துக் கொள்ளுங்கள். மனத்தில் குழப்பம், கவலை, குரோதம், கோபம் முதலியவற்றுக்கு இடம் கொடுக்க வேண்டாம். நம்பிக்கையோடு அன்னையை நினைத்து வந்தால், உங்கள் கோரிக்கையை அன்னை நிறைவேற்றி வைப்பார்" என்று கூறி, அவருக்கு விடை கொடுத்து அனுப்பினேன்.

10–01–1986 அன்று அவரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. அதில்–





"நான் சென்ற மாத இறுதியில் உங்களைச் சந்தித்துப் பேசியது நினைவு இருக்கலாம். நான் ஊர் போய்ச் சேர்ந்த பிறகு, நான் கொடுத்த காணிக்கையை ஏற்றுக் கொண்டு அன்னை பிரசாதத்தை ஆசிரமத்திலிருந்து அனுப்பி வைத்தார்கள். 'குடி இருப்பவர் வீட்டைக் காலி செய்து கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றார்' என்ற என் குறையை அன்று உங்களிடம் கூறினேன்".

"ஜனவரி 3–ஆம் தேதியன்று குடி இருப்பவர் வாடகைப் பணத்தைக் கொடுப்பதற்காக என்னிடம் வந்தார். வந்தவர் பணத்தைக் கொடுத்துவிட்டு, இரண்டு அல்லது மூன்று மாதங்களில்தான் வீட்டைக் காலி செய்யப் போவதாகவும், தனக்குச் சேர வேண்டிய முன்பணம் ரூபாய் ஆறாயிரத்தையும் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படியும் கூறிவிட்டுச் சென்றார்".

"குடி இருப்பவர் தாமாகவே முன்வந்து இந்தச் செய்தியைத் தெரிவிப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு பிடிவாதக் காரரைப் பிடித்துக் கொண்டு வந்து என் கண் முன்னால் நிறுத்தி, இப்படிச் சொல்ல வைத்த சக்தி எது? அன்னையின் அருட்பெருஞ்சக்தி. எங்களுக்குக் கருணை பாலித்து எங்களின் பாறை போன்ற பிரச்சினையைப் பனி போல நீக்கி அருளிய அன்னையின் சக்தியே மகத்தான சக்தி" என்று பரவசத்துடன் எழுதி இருந்தார் அவர்.

அவருக்கு பாண்டிச்சேரிக்கு வரவேண்டும் என்ற திட்டம் இல்லை. அவருக்குச் சென்னைக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பம் அவரைத் தானாகவே பாண்டிச்சேரிக்குக் கொண்டு வந்து அன்னை ஸ்ரீ அரவிந்தர் சமாதியின் முன்னால் நிறுத்தியது. இது அவருக்குப் பின்னால் ஏற்படவிருந்த நல்ல பலனுக்கு ஒரு சிறந்த அறிகுறி.

✶✶✶

# 18. அன்னையே துணை

அண்டை மாநிலத்திலிருந்து அந்த 'அமுதசுரபி' பெண் வாசகர், தன் குடும்ப நிலையை விளக்கி எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

அவருடைய கணவர் பாதுகாப்புத் துறையில் பணி புரிகின்றார். அவருக்கு ஐந்து குழந்தைகள். அதுவன்று பிரச்சினை. அவர் கணவர் பாரதத்தின் ஏதோ ஒரு மூலையில் வேலை செய்கிறார். குடும்பமோ இன்னொரு மூலையில் வாழ்ந்து வருகிறது. பாதுகாப்புத் துறையின் கிளைகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அவர் பறந்து போய்ப் பணி செய்ய வேண்டியதாயிருக்கும். குடும்பத்தையும்கூடத் தூக்கிக் கொண்டு பறக்க முடியுமோ? 'முடியாது' என்பதால், அவர் ஓர் இடம்; அவர் குடும்பம் ஓர் இடம். இதுதான் பிரச்சினை. ஓர் அவசரம் என்றால் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளப் பல நாட்கள் பயணம் செய்தாக வேண்டும்.

பிரிவு ஒரு சோதனை என்றால், அந்தப் பெண்மணிக்குக் குடும்பப் பொறுப்பு இன்னொரு சுமை. 'தந்தைக்குத் தந்தையாக இருந்து தம் குழந்தைகளைக் கட்டிக் காக்கவும், வழி காட்டி நடத்திச் செல்லவும், அன்புடன் ஆறுதல் சொல்லவும் தம் அன்புக் கணவர் அண்மையில் இல்லையே' என்று விழிகள் எல்லாம் வியர்த்துத் துன்புற்றார் அவர்.

இன்னொரு வகையிலும் அவருக்குத் துயரம் தொடர் கதையாக இருந்தது. அவருடைய கணவர் கடுமையான உழைப்பாளி, அப்படி இரு ஆண்டுகள் உண்மையாக உழைத்த பிறகும்கூட அவருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு கிடைக்கவில்லை. இது வாசக அன்பருக்கும், அவர் கணவருக்கும் மிகுந்த வேதனையை அளித்தது.

துயரம் அதோடு முடிந்துவிடவில்லை. மேலும் தொடர்ந்தது.





அந்த அன்பர் ஒரு முறை தம் கணவரின் பொருட்டு குழந்தைகளையும், குடும்பத்தையும் தம் பெரிய பெண்ணின் பொறுப்பில்விட்டுச் செல்ல நேர்ந்தது. ஆனால், அவர் தம் கணவரோடு வசித்த காலத்தில் ஊரில் இருந்த குழந்தைகளைச் சுற்றியே அவர் மனம் அலைந்தது. அவருக்கு வேதனையே விடியலாக வந்து, பொழுதாகக் கழிந்தது. இந்த நிலையில் ஒரு நாள் அவரும், அவர் கணவரும் தம் குழந்தைகளைப் பார்ப்பதற்காக ஆவலோடு ஊருக்கு வந்தபொழுது, வீட்டில் இரண்டாவது மகள் இறந்து கிடந்த காட்சியைத்தான் அவர்களால் காண முடிந்தது.

இத்தகைய சூழ்நிலையில் அந்த அன்பர், 'அமுதசுரபி'யில் வெளியாகிக் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிய கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்தார். அதன் மூலம் அரிதினும் அரிய கொடைகளை எளிதினும் எளிதாகப் பக்தர்களுக்கு அருளும் அன்னையின் சிறப்பை அறிந்தார் அவர்.

'இனிக் கவலைப்பட வேண்டியதில்லை, அதை அன்னை பனி போல் நீக்கிவிடுவார்' என்று அவர் தெளிந்தார்.

அவருடைய மிகப் பெரிய கவலை என்ன? நெடுந்தொலைவில் கணவர் வேலை பார்ப்பது. அவர் ஊருக்கே மாற்றலாகி வந்தால், நல்லதுதான். ஆனால், அது சாத்தியம் அன்று. தமிழ்நாட்டில்தான் அவர் பணியாற்றிய துறைக்கு கிளை இருந்தது. அவர் தமிழ் நாட்டிற்கு மாற்றலாகி வந்துவிட்டால்கூட அது சொந்த ஊரில் பணியாற்றுவது போலத்தான். ஏனென்றால், அவர் சில மணி நேரப் பயணத்தின் மூலம் ஊருக்கு வந்து தம் குடும்பத்தினரைச் சந்தித்துவிடலாம்.

ஆகவே, அந்த அன்பர் தம் கணவருக்குத் தமிழ்நாட்டில் மாற்றல் கிடைக்க வேண்டும் என்று அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டு ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு ஒரு சிறு காணிக்கையை அனுப்பி வைத்தார்.

அன்னையின் அருளால் விரைவிலேயே அவருடைய கணவரைச் சென்னைக்கு மாற்றல் செய்துவிட்டார்கள். அந்த அளவில் அன்பரின்

மனக் கவலை தீர்ந்தது. கவலைகளின் தொகுப்பானது வாழ்க்கை. அதில் ஒரு பிரச்சினை தீர்ந்தால் இன்னொரு பிரச்சினை முண்டிக் கொண்டு வரும். இப்பொழுது அந்த அன்பருக்குத் தம் மூத்த பெண்ணின் திருமணத்தைப் பற்றிக் கவலை.

அந்தப் பெண் பி.யூ.சி.வரை படித்திருந்தாள். நல்ல குணங்களும், கலகலப்பான சுபாவமும் கொண்ட அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நிகழ்ந்தாக வேண்டும். ஆனால், ஊர் ஊராக வலை போட்டுத் தேடி நல்லதொரு மணமகனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே அந்தப் பெண்ணை மணந்து கொள்ள ஒருவன் காத்திருந்தான். பெரியவர்கள் முன்நின்று திருமணத்தை முடிக்க வேண்டியதுதான் பாக்கி. இரு வீட்டுப் பெரியவர்களும் திருமணத்தை விரைவில் நடத்திவிட மிக ஆர்வமாக இருந்தார்கள். இது வரையில் சிக்கல் இல்லை. திருமணத்தை நடத்தப் பெருந்தொகை தேவைப்படுகின்றதே, அதுதான் பெண்ணின் பெற்றோருக்குப் பெரிய சிக்கலாக இருந்தது.

குடும்பத் தலைவர் ஒரு புறமும், குடும்பம் மற்றொரு புறமுமாக இருக்க நேர்ந்ததால் அவர்களுக்குச் செலவைச் சமாளிப்பதே மரணக் கிணற்றைத் தாண்டுவது போல் இருந்தது. இந்த நிலையில் ஒரு தொலை நோக்கோடு பெண்ணின் திருமணத்திற்குப் பணத்தைச் சேமித்து வைப்பது என்பது நடைமுறைச் சாத்தியம் அன்று. குடும்பத்தை ஒட்டுவதே ‘உன்னைப் பிடி, என்னைப் பிடி’ என்று இருக்கும்பொழுது, திருமணத்திற்காகத் திடீரென்று ஆயிரக் கணக்கில் பணத்தைப் புரட்டுவது எப்படி?

அவர்களுக்கு இரண்டு வீட்டு மனை நிலத்தைத் தவிர வேறு சொத்தில்லை. அவர்கள் அந்த மனைகளை விற்கத் தயாராக இருந்தார்கள். ஆனால், அவற்றை வாங்குவதற்கு யாராவது உடனடியாக முன்வர வேண்டும். அப்படியே வந்தாலும் திருமணத்திற்குத் தேவைப்படும் பணம் முழுதும் கிடைக்குமா என்பது சந்தேகம்.





இந்தச் செய்திகளை எல்லாம் உருக்கமாகக் குறிப்பிட்டிருந்த அந்த அன்பர், “எங்களுக்குத் தெய்வத்தைத் தவிர வேறு யாரும் துணை இல்லை. எங்கள் பெண்ணின் திருமணம் எந்த விதத் தடையும் இல்லாமல் சிறப்பாக நடைபெற வேண்டும். அதை நிகழ்த்தி அருளக் கூடிய அன்னையை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதைப் பற்றி விவரமாக எழுதுங்கள்” என்று கோரிக் கடிதத்தை முடித்திருந்தார்.

நான் அந்த அன்பருக்கு உடன் பதில் எழுதினேன். அதன் சுருக்கம் இது: “அன்னையின் அன்பர்களுக்குத் தேவையானவை இரண்டு. அவை நம்பிக்கையும், பக்தியுமாகும். ‘நாம் கோரியதை அன்னையின் அருள் பெற்றுத் தரும்’ என்று உறுதியாக இருப்பது நம்பிக்கை. எதைக் கோருகின்றோமோ, அது செயல்படுவதற்கான முயற்சியைப் பூரணமாகக் கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். கோரியதைப் பெறுகின்றவரை, அதோடு சம்பந்தப்பட்ட அனைத்துச் செயல்களையும் அன்னையைப் பணிந்து செய்துவர வேண்டும். இப்படிச் செய்வது பக்தி. இந்த இரண்டும் (நம்பிக்கையும், பக்தியும்) நிறைந்தவர்களுக்கு, தடையற்ற செல்வமும், குறைவற்ற சுகங்களும் பெருகிக் கொண்டே இருக்கும்”.

“ஆகவே, உங்கள் கணவருடைய உத்தியோக உயர்வு, உங்கள் பெண்ணின் திருமணம் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள மேற்கூறியவாறு அன்னையை வணங்கி வாருங்கள். அன்னை அருள் செய்வார். அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டு ஆசிரமத்திற்கு ஒரு சிறு காணிக்கையை அனுப்பி வையுங்கள்”.

நான் அந்தக் கடிதத்தை 1985, ஜூன் கடைசி வாரத்தில் எழுதி இருந்தேன்.

அந்த அன்பர் சில நாட்களுக்குள், அதாவது ஜூலை முதல் வாரத்தில் பதில் எழுதி இருந்தார். அதில், “உங்கள் கடிதம்

கிடைத்தது. அதைப் படித்ததிலிருந்து என் மனத்தில் மகிழ்ச்சியும், நிம்மதியும் ஏற்பட்டுள்ளன. என் துன்பங்கள் யாவும் மறைந்து விட்டன போன்ற ஓர் உணர்வு. அன்னையே எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டதைப் போன்றதோர் எண்ணம். ஒரு மகிழ்ச்சியான செய்தி. என் கணவருக்கு உத்தியோக உயர்வு கிடைத்துவிட்டது. 19 வருடங்களுக்கு முன்னால் கிடைத்திருக்க வேண்டிய இந்தப் பதவி உயர்வு, இப்போதுதான் கிடைத்திருக்கிறது. இது அன்னையின் அருளாலேயே கிடைத்திருக்கிறது''.

“உங்கள் அறிவுரைப்படி உடனே அன்னைக்குக் காணிக்கையை அனுப்பிவிட்டேன். பெண்ணின் திருமணத்தை அன்னையிடம் ஒப்படைத்துவிட்டு தினமும் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து வருகின்றேன். மாப்பிள்ளை வீட்டார் விரைவில் திருமணத்தை முடிக்க வேண்டும் என்று விரும்புவதால், திருமணத்தை அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடத்துவதாக முடிவு செய்துள்ளோம். அன்னைதான் குறித்த நாளில் திருமணத்தை முடித்துக் கொடுக்க வேண்டும்'' என்று எழுதி இருந்தார்.

நாட்கள் பறந்தன. திருமணத்திற்குத் தேவையான பணம் இன்னும் அவர்கள் கைக்குக் கிடைத்தபாடாக இல்லை. திருமண நாளோ நெருங்கிக் கொண்டிருந்தது. என்ன செய்வது? அவர்களால் செய்ய முடிந்தது எல்லாம் அன்னையை முழுமையாக நம்புவதுதான். அந்த அன்பரும், அவர் கணவரும் பாண்டிச்சேரிக்கு வந்து, ஸ்ரீ அரவிந்தர் அன்னை சமாதியை வணங்கிப் பிரார்த்தனை செய்து கொண்டு ஊருக்குத் திரும்பிப் போனார்கள். இது நிகழ்ந்தது, 1986, ஜனவரி மாதத்தில் என்று நினைக்கின்றேன்.

பின்னர் அந்த அன்பரிடமிருந்து வந்த கடிதம் மிக ஆறுதலாக இருந்தது. அதில், தம் பெண்ணின் திருமணம் சிறப்பாக நிகழ்ந்ததாகவும், அன்னையின் அருள் வியக்கும் விதத்தில் துணை புரிந்ததாகவும் எழுதி இருந்த அவர், மேலும் கூறுவார்:





“எங்களைப் பொறுத்தவரை என் மகளின் திருமணத்தை அன்னைதான் நடத்திக் கொடுத்துள்ளார். பார்த்தவர்கள் வியக்கும் வண்ணம் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அந்தப் பெருமை அன்னையையே சேரும். ஏனெனில், திருமணம் நிச்சயிக்கப்பட்டபொழுது எங்களிடம் பணம் இல்லை. எங்களுக்கு ஒரே சொத்தாக இருந்த இரண்டு வீட்டு மனைகளை விற்றுத் திருமணத்தை முடித்துவிடலாம் என்று சுலபமாக நினைத்து விட்டோம். ஆனால், அவற்றை விற்றபொழுதுதான் சிரமமே ஆரம்பமாகியது. விற்பனையின் மூலம் கிடைத்த பணம் திருமணச் செலவிற்குப் போதுமானதாக இல்லை. துண்டு விழும் தொகையை எங்களுக்கு வேண்டியவர்களிடமிருந்து கடனாகப் பெற முயன்றோம். அவர்களும் தருவதாக வாக்களித்து இருந்தார்கள்''.

“திருமணத்திற்கு இன்னும் நான்கே நாட்கள்தாம் இருந்தன. அது வரையில் கடன் கொடுப்பதாகக் கூறியவர்களிடமிருந்து எங்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. என்றாலும் பணம் கேட்டு நாங்கள் யாரையும் வற்புறுத்த முடியாது. என்ன செய்வது? இது போன்ற சூழ்நிலையில் மிகவும் தைரியமாக இருக்கக் கூடிய என் கணவர்கூட அதிகம் குழம்பிப் போய்விட்டார். “மேற்கொண்டு நாம் எப்படிச் சமாளிப்பது?'' என்று என்னைக் கேட்டார். “இந்தத் திருமணத்திற்கு ஆரம்பம் முதல் இன்றுவரை அன்னைதான் துணையாக இருக்கிறார். ஆகவே, அவர் எப்படியும் திருமணத்தை நல்லபடியாக முடித்துக் கொடுப்பார்'' என்று கூறினேன் நான். அன்று இரவு முழுதும் நானும், அவரும் அன்னையைப் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தோம்''.

“மறு நாளும் வந்துவிட்டது. திருமணத்திற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. கலக்கத்துடன் நாங்கள் அன்றையக் காலைப் பொழுதை வரவேற்றபொழுது, ‘கலங்காதீர்கள்’ என்று கூறுவதைப் போல எங்களுக்குத் தருவதாக வாக்களித்திருந்த ஒருவர் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அதைத்

தொடர்ந்து வேறு இடங்களில் நாங்கள் எதிர்பார்த்த பணமும் மளமளவென்று மழை போல் வந்து சேர்ந்துவிட்டது. திருமணமும் எந்த விதத் தடங்கலும் இன்றிச் சிறப்பாக நிகழ்ந்தது. எங்களை வாழ வைத்து, எங்கள் பெண்ணுக்கும் சிறப்பான வாழ்வைக் கொடுத்த அன்னையின் அருளை, மரணத் தறுவாயில்கூட நாங்கள் மறக்க மாட்டோம்''.

அந்த அன்பரைப் போன்று நம்பிக்கையும், பக்தியும் உள்ளவர்கள், அன்னையால் ஆசீர்வதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் நாளும் நன்மைகள் பலவற்றைப் பெற்று வாழ்வில் சிறக்கின்றார்கள்.

✶✶✶



# 19. அன்னையின் அருள் விரைவு

'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமன் எப்பொழுதும் பம்பரமாகச் சுழன்று கொண்டு இருப்பவர். பத்திரிகைப் பணி என்றும், எழுத்தாளர் சங்கப் பணி என்றும், ஏராளமான நண்பர்களுக்குப் பல வகைகளிலும் உள்ளன்போடு உதவும் நட்புப் பணி என்றும், படைப்புப் பணி என்றும், ஓய்வில்லாத இலக்கியச் சொற்பெருக்குப் பணி என்றும் நாளெல்லாம் தன்னைப் பணிகளுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துக் கொண்டு இருப்பவர் திரு. விக்கிரமன்.

'பணிகளுக்கு மட்டும்தானா பங்கு? எனக்கு இல்லையா?' என்று திரு. விக்கிரமனின் உடலுக்குள் இருந்து முணுமுணுத்தது பிணி. அவர் அதை அலட்சியப்படுத்திவிட்டு, தம் பெரும் பணிகளில் வழக்கம் போல ஈடுபட்டுவிட்டார். ஆனால், பிணி அலட்சியப்படுத்தத் தயாராக இல்லை.

'காய்ச்சல்' என்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டு அவர் உடலுக்குள் புகுந்த பிணி, என்னவென்று கண்டு பிடிக்க முடியாத அளவுக்குப் பல கிளைகளைப் பரப்பிப் பாய்ச்சல் காட்டியது.

திரு. விக்கிரமனுக்குச் சிகிச்சை அளித்த டாக்டர்கள் திணறிப் போனார்கள். அவர்கள் கொடுத்த மருந்துகளும், மாத்திரைகளும், பலனின்றிப் போனதோடு ஒரு பயங்கர நிலையையும் தோற்றுவித்து விட்டது. திரு. விக்கிரமனுக்கு ஆகாரம் இல்லை. பேச்சு இல்லை. படுக்கையைவிட்டு அவரால் அசையக்கூட முடியவில்லை. டாக்டர்களே பயந்து போய்விட்டார்கள்.

திரு. விக்கிரமன் உடல் நலமற்று இருப்பதைக் கேள்விப்பட்டு அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்த தொழில் அதிபர்கள் திரு. வி.ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள் பார்த்ததும் உருகிப் போய்விட்டார்கள்.

"இனி ஒரு கணம்கூட இங்கே வைத்திருக்க வேண்டாம். புறப்படுங்கள் விஜயா நர்ஸிங் ஹோமுக்கு" என்று சொல்லியதோடு விடாமல், திரு. விக்கிரமனை உடனே விஜயா நர்ஸிங் ஹோமுக்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்கும் அவசர ஏற்பாட்டைச் செய்தார்கள்.

அந்நிலையில் திரு. விக்கிரமனுக்கு, உடல் அவர் வசம் இல்லை; ஆனால், உணர்வு மட்டும் அவர் வசம் அதிகமாகவே இருந்தது. வீட்டைவிட்டு மருத்துவ விடுதிக்குப் புறப்படுகிற நேரம். அன்னையின் அணுக்க பக்தரான அவருக்குக் கொஞ்சம் கூடப் பயம் இருக்கவில்லை. 'என் மீது அன்பு செலுத்து கின்றவர்களின் திருப்திக்காக நான் மருத்துவ விடுதிக்குச் செல்கிறேன். அது அவசியம் இல்லாமலே அன்னையின் அருள் எனக்குச் சிகிச்சை அளிக்கும். இப்பொழுது அன்னையின் அருள் விரைந்து செயலாற்ற ஒரு தடை இருக்கிறது.

அன்னையின் அருளை முழுதுமாகச் செயல்படவிடாமல் தடுக்கிறது டாக்டர்கள் அளிக்கும் சிகிச்சை. நம்பிக்கையை டாக்டர்களின் பக்கம் திருப்பும்பொழுது அன்னையின் அருள் செயல்பட முடியாமல் தடைப்படுகிறது. அது எனக்குப் புரிகிறது. ஆனால், என்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்குப் புரியவில்லையே! என்றாலும் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அதனால் நான் செல்கிறேன். நான் உங்கள் அருளை நிரப்பிக் கொள்ள உங்களால் நியமிக்கப்பட்ட பாத்திரம் அல்லவா? காத்தருளுங்கள்' என்ற உள்ளுணர்வால் அன்னையிடம் பேசிவிட்டு, ஒரு காணிக்கையை ஆசிரமத்திற்கு அனுப்புமாறு தம் பெண் ஹேமாவிடம் சங்கேதமாகக் கூறிவிட்டு, மருத்துவ விடுதிக்குப் புறப்பட்டார் திரு. விக்கிரமன்.

அவருக்கு விஜயா நர்ஸிங் ஹோமில் சிகிச்சைகள் ஆரம்பம் ஆயின. அவருடைய நண்பர்களுக்கு அது எப்படியோ தெரிந்துவிட, அவரைப் பார்க்கச் சென்றவர்களின் கூட்டத்தால் நர்ஸிங் ஹோமே திணறிப் போய்விட்டது. அது மட்டும் அன்று;





தமக்கு ஏற்பட்ட சோதனையையும் வேதனையையும் வெளியே சிதறவிடாமல் உள்ளுக்குள்ளேயே அழுத்திக் கனன்று கொண்டிருந்த திரு. விக்கிரமனின் துணைவியாரை, ஆறுதல் கூற வந்தவர்களே அழுது புலம்பி உடைத்துச் சிதறவிட்டுவிடுவார்கள் போல இருந்தது. அவர் அந்தப் புதிய தாக்குதலையும் பொறுத்துக் கொண்டு ஒரு வேதாந்தியைப் போலக் கண்ணீர்விடாமல் கணவருக்குப் பணிவிடை செய்த காட்சி உருக்கமானது; சாவித்திரிக்கு இணையாக நினைக்கத் தூண்டியது.

எழுத்தாளர் டாக்டர் வாசவனும், மற்றும் பலப்பல நண்பர்களும் திரு. விக்கிரமனுக்கு நலம் தரவேண்டி அன்னைக்குக் காணிக்கை அனுப்பினார்கள். நானும் இச்செய்தியைக் கேள்விப்பட்டு, தொலைபேசியின் மூலமாகத் தொடர்பு கொண்டு, "அன்னையின் அருள் திரு. விக்கிரமனுக்கு நிறைய உண்டு. அவர் நலத்தோடு விரைவில் வீட்டுக்குத் திரும்புவார்" என்று தெரிவித்தேன்.

அன்னையின் அருள் அவருக்கு நிறையவே இருக்கின்றது. பயந்த மாதிரி அவருக்கு ஆபத்தான வியாதி எதுவும் இல்லை. சாதாரணத்திற்கும் கொஞ்சம் மேற்பட்ட டைபாயிடு காய்ச்சல். அவருக்கு ஷுகர் உண்டு. அது மிகுதியாகப் போய்விட்டதால், காய்ச்சலுக்காகக் கொடுக்கப்பட்ட மருந்து வேலை செய்யாமல் போய், நோயை இனம் கண்டு பிடிக்க முடியாதபடி மாறாட்டம் செய்து பேயாட்டமும் போட்டுவிட்டது. முதலில் ஷுகரின் வீச்சைக் குறைக்கச் சிகிச்சை. பிறகு காய்ச்சலைத் துரத்தச் சிகிச்சை.

இப்பொழுது பூரண நலத்தோடு வீட்டுக்குத் திரும்பிவிட்ட திரு. விக்கிரமன், அலுவலகத்திற்கும் போய்வர ஆரம்பித்திருக்கிறார். "எல்லாம் அன்னையின் அருள்" என்று கண்ணீர் மல்கித் தழுதழுக்கின்றார் திரு. விக்கிரமன்.

இந்தத் தழுதழுப்பே அன்னையின் அருளை விரைவில் கூட்டுகின்றது.

# 2

அறியாமையால் தவறு செய்துவிடுகின்ற அன்பர்களுக்குக் கூட, தம் எல்லையற்ற கருணையை வழங்கி அவர்களின் துயரைக் களைகின்றார் அன்னை. அதற்குச் சான்றாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சற்று அருகில் போய்ப் பார்க்கலாம்.

அந்தப் பெண் தமிழகத்தில் வசிப்பவர்; மத்திய அரசுப் பணியில் இருப்பவர்; 'அமுதசுரபி' வாசகர். அவர் ஏப்ரல் 84–இல் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில், "என்னைத் திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்து இருந்த ஒருவர், என்னைப் பிரிந்து சென்றுவிட்டார். அவர் திரும்பி வந்து என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு அன்னையின் அருள் கிட்டுமா?" என்று கேட்டிருந்தார்.

"நிச்சயமாகக் கிட்டும். அன்னையின் அருளில் பூரண நம்பிக்கை வைத்துத் தினமும் பிரார்த்தனை செய்து வாருங்கள். உங்களை மணந்து கொள்வதாகக் கூறியவர், "மனம் மாறித் திரும்ப வேண்டும்" என்ற கோரிக்கையை அன்னையிடம் சமர்ப்பித்துக் கொண்டே இருங்கள். அவர் உங்களைப் பிரிந்து சென்றதற்கு எந்த வகையிலாவது நீங்கள் காரணமாக இருந்தால், அதற்காக வருந்தி, இனி 'அந்தத் தவற்றைச் செய்வதில்லை' என்று முடிவு எடுத்துக் கொண்டு, அன்னையிடம் நடந்த தவற்றுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சினை பனி போல் மறைந்துவிடும்" என்று நான் பதில் எழுதினேன்.

நவம்பர் 84–இல் அந்தப் பெண்ணிடமிருந்து மற்றும் ஒரு கடிதம் வந்தது. அதில், "நீங்கள் எழுதி இருந்தபடியே நான் அன்னையைப் பிரார்த்தனை செய்து வந்தேன். என் தவறுகளை எல்லாம் மன்னித்து அருள் செய்யுமாறும் வேண்டிக் கொண்டேன். அதன் பயனாக என்னைப் பிரிந்து சென்ற அவர், இந்த ஆகஸ்ட் முதல் வாரத்தில் திரும்பி வந்தார். என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போனதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.





என்னைத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆனால், அவரிடம் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. 'பொறுப்பற்றதனமாக என்னைப் பிரிந்து சென்ற அவரை, எப்படி நம்பித் திருமணம் செய்து கொள்வதற்குச் சம்மதம் தெரிவிப்பது?' என்ற குழப்பத்தாலும், சந்தேகத்தாலும் திருமணத்திற்குச் சம்மதிக்காமல் நாட்களைக் கடத்திக் கொண்டு இருந்தேன். இப்படி இரண்டு மாதங்கள் சென்றன. இந்த இடைவெளியில் எங்களுக்குள் பல பிரச்சினைகள் முளைத்துவிட்டன.

அதனால் அவர் என்னிடம் சண்டை போட்டுக் கொண்டு மறுபடியும் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார். அவர் எங்குச் சென்றார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அன்னையின் அருளால் திரும்பி வந்த அவரை, மறுபடியும் என்னிடமிருந்து பிரிந்து செல்லுமாறு செய்தது எது? அதனால் நான் மிகவும் துயரமும், வேதனையும் அடைந்துள்ளேன். நானும் அவரும் திருமணம் செய்து கொண்டபிறகு கணவன் மனைவியராக ஆசிரமத்திற்கு வருவதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன். என் பிரார்த்தனைக்கு அன்னை செவி சாய்த்து நானும் மற்ற பெண்களைப் போலத் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த அனுக்கிரகம் செய்வாரா? அன்னை எனக்கு அளித்த வாய்ப்பை நான் நழுவவிட்டுவிட்டதால், அவர் திரும்பி வந்து என்னைத் திருமணம் செய்து கொள்வாரா? தங்கள் ஆலோசனையைத் தயவு செய்து எழுதுங்கள். மிகுந்த துயரத்தில் இருக்கும் எனக்குத் தங்கள் பதில்தான் ஆறுதல் அளிக்கும்" என்று எழுதி இருந்தார்.

அதைத் தவிர வேறொரு செய்தியையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் அவர். அது அவருடைய உத்தியோகத்தைப் பற்றியது. அவர் இப்படி எழுதியிருந்தார்.

"மத்திய அரசு அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வரும் நான், வேறோர் அலுவலகத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்து இருந்தேன். 'உனக்கு அந்த வேலை கிடைக்காது' என்று பலரும் கூறினார்கள். என்றாலும், நான் அன்னையை வேண்டிக் கொண்டு

அந்த வேலைக்கு விண்ணப்பத்தை அனுப்பினேன். அன்னையின் அருள் அந்த வேலைக்கு என்னைத் தகுதியானவள் என்று நினைக்க வைத்து, என்னைத் தேர்ந்தெடுக்குமாறும் அந்த நிறுவனத்தைச் செய்துவிட்டது. இதில் ஓர் ஆச்சரியம் என்னவென்றால், எனக்கு அந்த வேலை கிடைக்காது என்று கூறியவர்களே நான் வேலைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டு இருக்கும் செய்தியைச் சொன்னதுதான்! அதனால் எனக்கு இரட்டை மகிழ்ச்சி. ஆனால், நான் தேர்ந்து எடுக்கப்பட்டு ஒரு மாதமாகியும், இதுவரை எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் இருந்து வருகின்றது. ஏதோ சில சிக்கல் களினால் அந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாகக் கேள்விப்பட்டேன். 'வந்த வாய்ப்பு நழுவிவிடுமோ?' என்று கவலையாக இருக்கிறது. இந்த நிலையில் நான் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கமாக எழுத வேண்டுகிறேன்''.

நான் கீழ்க்கண்டவாறு அந்த அன்பருக்குப் பதில் எழுதினேன்.

''(1) உங்களுக்கு வாக்களித்தவர் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் எங்கோ போய்விட்டாலும், அவர் திரும்பிவர வேண்டும்; திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் அன்னையை வேண்டியதால் அன்னையின் அருள் உங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, உங்கள் கண்களிலிருந்து மறைந்து போனவரை, உங்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது. அன்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, திரும்பி வந்தவரை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு திருமணம் செய்து கொள்வதற்குப் பதிலாக, 'அவரை நம்பித் திருமணம் செய்து கொள்ளலாமா, கூடாதா?' என்ற சந்தேகம் உங்களுக்கு வந்து விட்டது. இது விரும்பத்தக்கது அன்று. வந்தவரைத் திரும்பிப் போகுமாறு செய்தது எது? என்று நீங்கள் கேட்டு இருக்கின்றீர்கள். அப்படிச் செய்தது எது என்பதை நீங்களே அறிந்து கொள்ளலாம். தவறு நடந்துவிட்டது. இது இரண்டாவது தடவையாக நடந்த தவறு. முதலில் நடந்த தவற்றை மன்னித்து, சொல்லிக் கொள்ளாமல் போனவரைத் திரும்பி வருமாறு செய்தது அன்னையின் அருள்.





அன்னை கருணையுடன் அளித்ததை முறையாக ஏற்றுக் கொள்ளாமல், வேண்டாத சந்தேகங்களுக்கு இடம் கொடுத்தது தவறு என்பதை உணர்ந்து, அன்னையிடம் மறுபடியும் வேண்டிக் கொள்ளுங்கள். 'இனி இது போன்ற தவற்றைச் செய்ய மாட்டேன்' என்று அன்னையிடம் மன்னிப்புக் கேளுங்கள். அன்னையின் அருள் மறுபடியும் உங்களுடைய அன்பரை உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்''.

(2) கிட்டத்தட்ட வேலை வாய்ப்பும், அவர் திரும்பி வந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தும், ஒரே சமயத்தில் பிரிந்தும் போய் இருக்கின்றன. ஆகவே அவர் அன்னையின் அருளால் திரும்பி வந்து சேரும் சமயத்தில், அந்த வேலை வாய்ப்பும் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும். நீங்கள் வேலையைப் பற்றிக் கவலைப் படாமல், நான் கூறியுள்ளபடி உங்கள் தவற்றைத் திருத்துவதில் கவனத்தைச் செலுத்துங்கள்.

ஐந்து மாதங்களுக்குப்பிறகு, அதாவது, மார்ச் 85–இல் அவரிடமிருந்து மூன்றாவதாக ஒரு கடிதம் வந்தது.

அதில், ''தங்களின் அறிவுரைப்படி அன்னையின் அருளை வேண்டிக் கொண்டு நான் காத்திருந்தேன். இரண்டு தடவை மாயமாக மறைந்து போனவர், அன்னையின் அருளால் என்னைத் தேடி வந்தார். நானும் உடனே திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தேன். இப்பொழுது நாங்கள் திருமணம் செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றோம். அவ்வப்போது அறிவுரை வழங்கி எனக்குத் துணை நின்ற தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'அமுதசுரபி'யில் கட்டுரை எழுதும் பணியை நீங்கள் தொடர்ந்து செய்துவர வேண்டும். அதன் மூலம் என்னைப் போலப் பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்'' என்று எழுதி இருந்தார்.

அந்தப் பெண்ணின் அன்பர் திரும்பியதும், அவரின் வேலை சம்பந்தப்பட்ட உத்தரவும், தடையை உடைத்துக் கொண்டு

வந்திருக்க வேண்டும். அவர் அதைப் பற்றி எழுதவில்லை. தன் திருமணத்தைப் பற்றித் தெரிவித்த மகிழ்ச்சியில், அதை எழுத அவர் மறந்து போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைக் குறிப்பிட அவர் மறந்திருக்கவே மாட்டார்!

அதற்குப்பிறகு ஒரு நாள் அந்த அன்பரும் அவர் கணவரும் பாண்டிச்சேரிக்கு வந்து ஸ்ரீ அரவிந்தர் அன்னை சமாதியைத் தரிசித்துவிட்டு என்னையும் சந்தித்தார்கள். ஒவ்வொரு மாதமும் அன்னைக்குக் காணிக்கை அனுப்பி வருவதாகக் கூறிய அந்த அன்பரின் கண்களில் கண்ணீர்ப் பூக்கள் அரும்பின.

அவை அவர் அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்திய நன்றிப் பூக்கள்.

✶✶✶



# 20. ஆட்கொள்ளும் அற்புதம்

'அமுதசுரபி' வாசக அன்பர் ஒருவர் அக்டோபர் 84–இல் ஒரு கடிதம் எழுதி இருந்தார். மணிமணியான கையெழுத்து. முழுமையான முகவரியைக் கொடுத்திருந்தார். அவர் ஒரு கிராமவாசி.

அன்பரின் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த செய்தி, அவர் தந்தையைப் பற்றியது. அவருடைய தந்தை அடக்கமான, அப்பாவியான மனிதர். அப்படிப்பட்ட மனிதரின் நடவடிக்கைகளில் திடீரென்று மாறுதல் ஏற்பட்டுவிட்டது. சதா புலம்பவும், கூச்சல் போடவும் தொடங்கினார். உண்ணும்பொழுதுகூட 'ஐயையோ', 'அம்மா' என்று புலம்பாமல் இருக்க மாட்டார். வர வர அவரே அவருக்குத் தொந்தரவாகிவிட்டதோடு, மற்றவர்களுக்கும் பெரிய தொந்தரவாகிவிட்டார். அவரை யாராலும், எதனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

கிராமத்தில் அவரைப் பற்றிய பேச்சுதான் முக்கியமான பேச்சாக அடிபட்டது. சிலர் அவரைப் 'பைத்தியம்' என்று கேலி செய்தார்கள். இன்னும் சிலர், "அவரை மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்று சிகிச்சை செய்து பாருங்களேன்!" என்று ஆலோசனை வழங்கினார்கள்.

கேலி, கிண்டல், ஆலோசனை போன்ற தாக்குதல்களால் வாசக அன்பரும், அவர் தாயாரும் மிகவும் மனம் ஒடிந்து போய்விட்டார்கள். 'தந்தைக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும்' என்று அவருக்கு மட்டும் அக்கறையும், கவலையும் இல்லையா? நிறையவே இருந்தன. ஆனால், அவற்றுக்குப் பல தடங்கல்கள் இருந்தன. அந்தக் கிராமத்தில் மருத்துவ விடுதி இல்லை. அவரைத் தொலை தூரத்தில் இருக்கும் நகரத்தில் உள்ள மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சிகிச்சை

நடக்கும் காலம் வரையில் தந்தையோடு அந்த அன்பரும் தங்கியிருக்க வேண்டும். அவர் அப்படித் தங்கிவிட்டால், குடும்பத்தில் கவனிக்க வேண்டிய அன்றாட வேலைகளைக் கவனிப்பதற்கு வேறு ஆண் பிள்ளைகள் இல்லை. வீட்டை விட்டு வெளியே கிளம்பிப் போய்ப் பழக்கம் இல்லாத தாயாரையும் தந்தைக்குத் துணையாக அனுப்ப முடியாது.

இந்த நிலையில், 'என்ன செய்வது?' என்று அவருக்குப் புரியவில்லை. எல்லா விவரங்களையும் எனக்கு எழுதி, "என் தந்தைக்கு நலமாக நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டிருந்தார் அவர்.

ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு ஒரு சிறு காணிக்கையை அனுப்பி வைத்துவிட்டு, தினமும் அன்னையைப் பிரார்த்தனை செய்யும்படி அவருக்கு எழுதினேன் நான். ஆறு மாதங்களுக்குப்பிறகு அவரிடமிருந்து மீண்டும் ஒரு கடிதம் வந்தது.

"என் குடும்ப வாழ்வில் அன்னை பல அருளாசிகளை வழங்கி இருக்கின்றார். சதா புலம்பிக் கொண்டும், உறக்கமின்றித் திரிந்து கொண்டும் இருந்த என் தந்தை, இப்பொழுது அமைதியாக இருக்கின்றார். தன்னால் இயன்ற அளவு வேலைகளைச் செய்து கொண்டும் வருகின்றார்" என்று அந்தக் கடிதத்தில் எழுதி இருந்தார் அவர்.

## 2

பல குழந்தைகளை ஈன்றெடுத்த அன்னையாகிய ஒரு வாசக அன்பர், எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து சில வரிகள் இவை:

"நான் அன்னையைச் சிந்தித்து வந்தனை செய்து வருவதால், பல காரியங்கள் நன்மையாகக் கூடி வருகின்றன. "அன்னையின் அருளால் என் குழந்தைகள் ஒவ்வொருவரும் பரீட்சையில் தேற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டதோடு அன்னைக்கு ஒரு சிறிய காணிக்கையையும் அனுப்பி வைத்தேன்.





பரீட்சையில் என் இளைய மகனைத் தவிர மற்ற பிள்ளைகள் எல்லாம் வெற்றி பெற்றார்கள். என்றாலும் என் இளைய மகன் வெற்றி பெறாததால், என் மனம் மிகவும் வருந்தியது. அன்னையிடம் என் குறையை முறையிட்டு, ஏதேனும் ஒரு வழியைக் காட்டுமாறு பிரார்த்தித்துக் கொண்டேன்.

பள்ளி திறக்கப்பட்டது. என் இளைய மகனும் பள்ளிக்குச் சென்றான். சென்ற வருடம் படித்த அதே நான்காவது வகுப்பிலேயே அவனை உட்கார வைத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு ஒரு வாரம் சென்றது. எதிர்பாராத செய்தி ஒன்றை என் மகன் மூலம் அனுப்பி இருந்தார் அவனுடைய வகுப்பு ஆசிரியர். 'நான்காவது வகுப்பில் தேறாதவர்களுக்கு மறுபடியும் ஒரு பரீட்சை வைக்கப்படும். அதில் வெற்றி பெற்றவர்கள், ஐந்தாவது வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்' என்பதுதான் அந்தச் செய்தி.

இப்படிப்பட்டதோர் அற்புத நிகழ்ச்சி நடைபெற இருப்பதற்கு அன்னையின் அருளே காரணம் என்பது எனக்கு நன்றாகவே விளங்கியது. இதற்குமுன் அந்தப் பள்ளியில் இப்படிப்பட்ட பரீட்சை நடத்தப்பட்டதில்லை. அதனால் எனக்கு மகிழ்ச்சி; பரபரப்பு. பரீட்சைக்கு இன்னும் இரண்டே நாட்கள்தாம் இருந்தன. இதற்குள் என் மகனைத் தயார் செய்ய வேண்டும். அது அவ்வளவு சுலபமானதன்று. அவனுக்கு விளையாட்டுத்தனம் அதிகம். ஒரு முழு வருடமும் படிக்காமல் கோட்டைவிட்டவன், இந்த இரண்டு நாட்களுக்குள் என்ன படித்துவிடப் போகிறான்? பஞ்சை வேண்டுமானால் திணிக்கலாம். படிப்பைத் திணிக்க முடியுமா? அவன் எப்படிப் பரீட்சையில் தேறப் போகிறான்? 'பரீட்சைக்கு வழி செய்த அன்னையின் அருள் மேற்கொண்டும் வழி காட்டும்' என்று பரிபூரண நம்பிக்கையோடு அவனைப் பரீட்சைக்குத் தயார் செய்தேன்.

அவன் குறிப்பிட்ட நாளில் பரீட்சை எழுதி, தேவையான அளவு மார்க்குகளைப் பெற்றான். அவனைத் தேர்வு செய்து

ஐந்தாம் வகுப்பில் உட்கார வைத்துவிட்டார்கள். 'அவன் வெற்றி பெற்றதற்கு அன்னையின் அருள்தான் காரணம்' என்பதை நான் தெளிவாக அறிகின்றேன்''.

# 3

ஒரு வாசக அன்பர் தன்னுடைய கைக் கடிகாரம் காணாமல் போய்விட்டது என்றும், அதனால் தான் மிகவும் வேதனை அடைந்திருப்பதாகவும் எழுதி இருந்தார். அதில் அவர், ''காணாமல் போன அந்தக் கடிகாரத்தைத் திருப்பிப் பெற ஏதேனும் வழி சொல்ல வேண்டும்'' என்று கேட்டிருந்தார்.

அவருக்கு நான் பதில் எழுதினேன். அதில், ''எந்த ஒரு பொருளின் மீதும் அதற்குரிய கவனத்தைச் செலுத்தாவிட்டால், அது நம்மைவிட்டுப் போய்விடும். அதன் மீது யார் கவனத்தைச் செலுத்துகின்றார்களோ, அவர்களிடம் அது போய்ச் சேர்ந்து விடுகின்றது. உங்கள் கைக் கடிகாரத்தின் மீது செலுத்தத் தவறிய கவனத்தைக் கொடுப்பதற்கு நீங்கள் தயாராக இருப்பதோடு, நடந்துவிட்ட தவற்றுக்காக மனம் வருந்தி அன்னையிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். காணாமல் போன கடிகாரம் கிடைத்துவிடும்'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

சில நாட்களுக்குப்பிறகு அவரிடமிருந்து மேலும் ஒரு கடிதம் வந்தது. அதில், ''4-12-84 அன்று சுமார் 9.30 மணி அளவில் என் கைக் கடிகாரம் காணாமல் போய்விட்டது. இரவு 12 மணி வரையில் தேடினேன். அது கிடைக்கவில்லை. என் மனம் மிகவும் நொந்துவிட்டது. மறு நாள் (5-12-84) உங்களுக்கு அது பற்றிக் கடிதம் எழுதித் தபாலில் சேர்த்துவிட்டு, மறுபடியும் கடிகாரத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். அன்றிரவு 9.30 மணி அளவில், எந்த இடத்தில் அது காணாமல் போயிற்றோ, அதே இடத்தில் அது இருக்கக் கண்டேன். காணாமல் போன கடிகாரம் மீண்டும் அதே இடத்தில் எப்படிக் காணப்பட்டது? எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது; மிக மிக மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது'' என்று எழுதி இருந்தார் அந்த அன்பர்.





# 4

இந்தியாவில் இருக்கும் ஒரு வாசக அன்பரின் மகளும், மருமகனும் அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் உயர் பணியாற்றி வந்தார்கள். அவர்கள் இருவரும் இந்தியப் பிரஜைகளாதலால் அவர்களுக்கு அமெரிக்க அரசாங்கம் அங்கே தங்குவதற்கு 'விசா' என்ற அனுமதியை அளித்திருந்தது. குறிப்பிட்ட ஒரு தேதியில் அந்த விசா காலாவதியாகி விடுமாதலால், அதனை அவ்வப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை, 'மேற்கொண்டு விசாவைப் புதுப்பிக்க முடியாது' என்று கூறிவிட்டது அமெரிக்க அரசாங்கம். அதனால் சம்பந்தப்பட்ட இருவரும் உயர் பணியையும், மிகப் பெரிய வருமானத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதைக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைந்த அந்த வாசக அன்பர், இந்த விவரங்களை எல்லாம் எனக்கு எழுதி, பிரச்சினை தீர வழி கேட்டிருந்தார்.

''உங்கள் மகள், மருமகன் சார்பில் அன்னைக்கு ஒரு காணிக்கையை அனுப்பிவிட்டு, 'விசா புதுப்பிக்கப்படுவதில் ஏற்பட்ட சிக்கல் நீங்க வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளுங்கள். அன்னை எளிதில் சிக்கலை நீக்கி உதவுவார்'' என்று பதில் எழுதினேன் நான்.

சில மாதங்களுக்குப்பிறகு, டிசம்பர் 84-இல், அந்த வாசக அன்பர், இரண்டாவதாக ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில் அவர், ''நான் சில மாதங்களுக்குமுன்பு என் மகள், அவளுடைய கணவர் ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட பிரச்சினையைப் பற்றி உங்களுக்கு எழுதினேன். நீங்கள் உங்கள் பதிலில் குறிப்பிட்டிருந்தபடி அன்னைக்குக் காணிக்கை அனுப்பிவிட்டு மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டேன். அதற்குப்பிறகு அவர்களுடைய விசாப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிட்டது என்பதை, நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கொண்டு

அவர்கள் இருவரும் அமெரிக்காவில் தங்குவதில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. மணியார்டர் மூலம் அன்னைக்கு மீண்டும் காணிக்கை அனுப்பியுள்ளேன். அன்னையின் அருள் மகத்தானது'' என்று குறிப்பிட்டு இருந்தார்.

**5**

தமிழ்நாட்டில் வசிக்கும் ஒரு வாசகரின் கணவர், ஒரு மத்திய அரசு நிறுவனத்தில் பணி புரிந்து வருகின்றார். என்ன காரணத்தாலோ அவருக்குப் பதவி உயர்வோ, 5 வருடங்களாகச் சம்பள உயர்வோ கிடைக்கவில்லை. அந்த நிறுவனத்தில் 24 வருடங்களாகப் பணி புரிந்து வரும் அவருக்கு ஏன் அந்த நிலை? புரியவில்லை.

அந்த வாசக அன்பரின் தோழி ஒருவர் ஆசிரமத்திற்கு வந்திருந்தார். அவர் ஊருக்குத் திரும்பும்பொழுது அன்னையின் திருவுருவப்படம் ஒன்றை வாங்கிச் சென்று நம் வாசக அன்பரிடம் கொடுத்தார்.

அன்னையின் படம் வீட்டிற்கு வந்தவுடன் 5 வருடங்களாகத் தடைப்பட்டிருந்த சம்பள உயர்வு அவருடைய கணவருக்குக் கிடைத்துவிட்டது. இந்த விவரத்தைத் தெரிவித்து எனக்குக் கடிதம் எழுதி இருந்த அந்த வாசக அன்பர், விரைந்து செயல்படும் அன்னையின் அருளை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

✶✶✶



# 21. பூரண நம்பிக்கையின் பலன்

'அமுதசுரபி' வாசகர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் அன்னையின் அருள் அமுதைப் பருகி, விதியின் சோதனையிலிருந்தும், வேதனையிலிருந்தும் விடுபட்டு நன்மைகள் பலவற்றை நாளும் பெற்று இன்புற்று வருகின்றார்கள். அத்தகைய அன்பர்கள் சிலரின் கடிதங்களை, ஏராளமான நலன்களைப் பெற்றேயாக வேண்டிய மற்றைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

கீழ்க்கண்ட கடிதத்தைச் சென்னையிலிருந்து ஒரு பெண் வாசகர் எழுதி இருந்தார்.

"அன்னையின் கருணையை விளக்கி வரும் தங்களின் கட்டுரைகளை 'அமுதசுரபி'யில் படித்து வரும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று. எங்கள் குடும்பத்தில் நாங்கள் அன்னையை வழி காட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நானும், என் கணவரும் அவ்வப்போது அன்னைக்குச் சிறு சிறு காணிக்கைகளை அனுப்பி வைப்பது வழக்கம். ஸ்ரீ அரவிந்தர் அன்னை சமாதியைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளோம். அன்னையை நாங்கள் ஏற்றுக் கொண்ட நாள் முதலாக எங்கள் வாழ்க்கையில் பல அதிசய முன்னேற்றங்கள் ஏற்பட்டு எங்களுக்கு ஆனந்தத்தையும், வியப்பையும் அளித்து வருகின்றன அன்னையின் அருள். அதற்காக அன்னைக்கு நன்றி செலுத்த நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்''.

"அன்னையின் அருளால் பல சிரமங்களிலிருந்து விடுபட்டு எங்கள் குடும்பம் நிதானமாகப் போய்க் கொண்டிருந்த ஒரு கட்டத்தில், எங்கள் நலனில் அக்கறை கொண்ட குடும்ப நண்பர் ஒருவர், ஒரு வீட்டு மனையை வாங்கிப் போடும்படி எங்களை

மிகவும் வற்புறுத்தியதோடு, அவரே தேடி அலைந்து ஓர் இடத்தைப் பேசியும் முடித்துவிட்டார். எங்களுக்கு அது பெரிய மலைப்பாக இருந்தது. 'ஆயிரம் ரூபாய்கூட ஏற்பாடு செய்ய முடியாத நிலையில், அந்த மனையை ரூ.25,000 கொடுத்து வாங்குவது எப்படிச் சாத்தியம்?' என்று பயந்து என் கணவர், அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

ஆனாலும் அதனூடேயே, 'அன்னையின் கருணை வழி காட்டும்' என்ற நம்பிக்கையும் அவருள் நீரூற்றுப் போலப் பெருகியது. நானும், என் கணவரும், என் தாயாரும், என் குழந்தைகளும் உறுதியான நம்பிக்கையோடு அன்னையை இடைவிடாது வேண்டி வந்தோம். அந்த மனையை வாங்குவதற்கான முயற்சியையும் தொடங்கினோம். அன்னையின் அருளால் நண்பர்களும், உறவினர்களும் எங்களுக்கு மனமுவந்து உதவ முன்வந்தார்கள். தேவையான தொகை மளமளவென்று சேர்ந்து விட்டது. வீட்டு மனைக்கான பணத்தைக் கொடுத்துப் பத்திரப் பதிவும் செய்துவிட்டோம். இனி நாங்கள் அன்னையிடம் கேட்பது, 'வாங்கிய கடனை அடைக்க ஒரு வழி கிடைக்க வேண்டும்' என்ற வரம் ஒன்றைத்தான்''.

''அன்னையின் கருணைக்கு எல்லையே இல்லை. 'இப்படியும் கூட நடக்குமா' என்ற அளவிற்கு அன்னை உதவி செய்வார் என்ற முழு நம்பிக்கையோடு இந்தக் கடிதத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்''.

மதுரையில் இருந்து வந்த இந்தக் கடிதத்தை எழுதியவரும் ஒரு பெண் வாசகரே.

அவர் எழுதி இருந்தார்: ''நான் வெகு நாட்களாக 'அமுதசுரபி'யில் வெளியாகும் உங்களின் அன்னையைப் பற்றிய கட்டுரைகளைத் தவறாமல் படித்து வருகிறேன். என் பிள்ளைகளுக்குத் திருமணம் ஆக வேண்டி இருந்தது. 'அவர்களுடைய திருமணம் நல்லபடியாக முடிய வேண்டும்'





என்று அன்னையை வேண்டிக் கொண்டு ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு இரண்டு தடவை என் சிறு காணிக்கைகளை அனுப்பி வைத்தேன். அன்னையின் கருணையால் அவர்களுடைய திருமணம் சிறப்பாக முடிந்தது. மிகக் கொஞ்சமாகப் பக்தி செய்து மிக மிக அதிகமான பலனை அன்னையிடம் இருந்து பெற்றுக் கொண்ட நான், அளவில்லாத மகிழ்ச்சியை அடைந்துள்ளேன்''.

''சமீப காலமாக என் கணவரின் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர் பூரண ஆரோக்கியத்தைப் பெறவும், என் ஒரே பெண்ணுக்குச் சிறந்த வரன் அமையவும் அன்னையைப் பிரார்த்தனை செய்து கொண்டு ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு என் காணிக்கையை அனுப்பி வைத்துள்ளேன்''.

அந்தக் கடிதம் நாக்பூரிலிருந்து வந்திருந்தது. அதை எழுதியவரும் ஒரு பெண் வாசகர்தாம். அவருடைய கடிதத்திலிருந்து ஒரு பகுதியை மட்டும் தருகிறேன்.

''என் கணவர் ஒரு வியாதியினால் மிகவும் சிரமப்பட்டு கொண்டிருந்தார். மருந்தினால் தீராத அவருடைய வியாதியைத் தீர்த்து வைக்கும்படி அன்னையிடம் மனம் நெகிழ்ந்து வேண்டிக் கொண்டேன். அன்னையின் அருள் உடனே அனுக்கிரகம் செய்து, என் கணவரின் வியாதியைப் போக்கி, நலத்தை அளித்தது. அவருடைய வியாதியைத் தீர்த்து வைத்ததைப் போலவே என்னுடைய பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தையும் விலக்கி அருள் செய்ய வேண்டும் அன்னை''.

டெல்லியிலிருந்து வந்த இந்தக் கடிதத்தை எழுதியவரும் ஒரு பெண் வாசகர்தாம். அவரின் கடிதத்தில் காணப்பட்ட ஒரு முக்கியமான பகுதி இது:

''அன்னையின் அன்பராகிய நான், டெல்லியிலிருந்து உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். அன்னையைப் பற்றி நீங்கள் எழுதி வரும் கட்டுரைகளை 'அமுதசுரபி'யில்

நான் தொடர்ந்து படித்து வருகிறேன். உங்கள் கட்டுரைகளைப் படித்தபிறகு நான் அன்னையின் பக்தையாகிவிட்டேன்''.

"சமீபத்தில் என் கணவருடைய மோதிரம் ஒன்று காணாமல் போய்விட்டது. 'தொலைந்து போன அந்த மோதிரம் திரும்பவும் கிடைக்க வேண்டும்' என அன்னையைப் பூரணமான பக்தியோடும், நம்பிக்கையோடும் வேண்டிக் கொண்டேன். அன்னையின் அருளால் தொலைந்து போன அந்த மோதிரம், திரும்பவும் கிடைத்துவிட்டது''.

பெண் வாசகர்களுக்குத்தான் பிரச்சினைகள் அதிகம் இருக்கும் போலும்! அவர்கள்தாம் அதிகமாக எழுதுகின்றார்கள்.

இன்னொரு பெண் வாசகரும் தமக்குள்ள பிரச்சினையைப் பற்றி முதலில் ஒரு கடிதம் எழுதி இருந்தார். தம் கணவர் வேலை ஏதும் செய்யாமல் வீட்டில் வெட்டித்தனமாகக் காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பதாகவும், ஏதேனும் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் அவர் இடக்குச் செய்வதாகவும் கடிதத்தில் வேதனையுடன் குறிப்பிட்டிருந்த அவர், தமக்குத் தாமே இப்படிச் சில கேள்விகளையும் கேட்டுக் கொண்டிருந்தார்: 'அன்னையிடம் முழு நம்பிக்கை கொண்டுள்ள எனக்கு, அவரின் அருள் கிட்டுமா? வேலை என்பதை வேப்பங்காயாக நினைத்து வெறுக்கும் என் கணவர் மனம் மாறி வேலைக்குச் செல்வாரா?'

விரைவிலேயே அவரிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. அதில், "எனக்கு அன்னையின் அருள் கிட்டிவிட்டது. என் கணவரின் போக்கில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அவர் இப்பொழுது வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறார். அவர் அப்படி மாறியவுடன் வேலை கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. எங்களுக்குத் தெரிந்த ஒருவர், மைசூரில் உள்ள ஓர் எஸ்டேட்டில் என் கணவருக்கு வேலை வாங்கித் தருவதாக எழுதி இருக்கிறார். அந்த வேலைக்குப் போக என் கணவரும் சம்மதித்துவிட்டார். 'இவை யாவும்





அன்னையின் அருளால் நடந்துள்ள அற்புதங்கள்' என்று நான் பூரணமாக நம்புகிறேன்'' என்று எழுதி இருந்தார்.

கும்பகோணத்திலிருந்து ஜூலை 84–இல் கடிதம் எழுதிய அந்த அன்பரும் ஒரு பெண் வாசகர்தாம். அவர் எழுதி இருந்தார்:

"வணக்கம். கடந்த மே மாதத்தில் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தேன். அதில், 'என் பெண்ணின் திருமணம் நல்ல விதமாக முடிய வேண்டும்' என்று குறிப்பிட்டு இருந்தேன். அன்னையை நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்தேன். அன்னை என் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு அருள் செய்தார். அவர் அருளால் என் மகளின் திருமணம் சீரும் சிறப்புமாக ஊரார் வியக்கும் வண்ணம் நிகழ்ந்தது''.

"ஒரு மாதத்திற்குமுன்பு–அதாவது ஜூன் மாதத்தில்– திருமணத்தை வைத்திருந்தோம். ஜூன் முதல் வாரத்தில் இடைவிடாது மழை பெய்து கொண்டு இருந்தது. அதைக் கண்டு நாங்கள் அதிகம் கலங்கிப் போனோம். 'எந்தத் தடங்கலும் இல்லாமல் திருமணம் முடிய வேண்டும்' என்ற கவலை, எங்களை வாட்டி எடுத்தது. அன்னையிடம் ஈடுபாடு இல்லாத என் கணவர், நிர்ப்பந்தம் காரணமாக, 'எங்கள் பெண்ணின் திருமணம் தடங்கலின்றி நல்ல விதமாக முடிய வேண்டும்' என்று அன்னையை பிரார்த்தனை செய்து கொண்டு ஒரு காணிக்கையை ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு அனுப்பி வைத்தார். அருள் மழையைப் பொழிந்தார் அன்னை. எங்கள் பெண்ணின் திருமணம் குறிப்பிட்ட நாளில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. அதன் மூலம், விரைந்து செயலாற்றும் அன்னையின் அருட் சக்தியைத் தெளிவாகப் புரிந்து கொண்ட என் கணவர், இப்பொழுது அன்னையின் பக்தராக மாறிவிட்டார்''.

"இத்தனை நன்மைகளை எங்களுக்கு வாரி வழங்கிய அன்னையின் அருள், என் மகனுக்கு மட்டும் கிட்டவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவன் வேலை பார்த்து வரும் நிறுவனத்தை மூடிவிடப் போவதாகச் சொல்கிறார்கள். 'அவனுடைய எதிர்காலம் என்னவாகுமோ?' என்ற கவலை, எங்களை வருத்திக் கொண்டிருக்கிறது. அன்னையின் அருள் அவனுக்குத் துணை செய்து எங்கள் கவலையைப் போக்க வேண்டும்''.

நான் அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதினேன். ''உண்மையான நம்பிக்கையும், பக்தியும் உள்ளவர்களிடத்தில் அன்னையின் அருள் தடையின்றிச் செயல்பட்டுச் சகல செல்வங்களையும் பெற்றுத் தரும். ஆகவே நீங்களும், உங்கள் பிள்ளையும் பூரண நம்பிக்கையோடும், பக்தியோடும் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து வாருங்கள். அன்னை அருள் செய்வார்'' என்று நான் அதில் குறிப்பிட்டிருந்தேன்.

அக்டோபர் 84–இல் அந்த வாசக அன்பரிடமிருந்து மற்றும் ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் எழுதி இருந்தார்:

''நாங்கள் ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்குப் பணம் அனுப்பி அன்னையின் திருவுருவப்படத்தை வரவழைத்துப் பூஜை அறையில் வைத்து வணங்கி வருகின்றோம். வேலை செய்த நிறுவனம் மூடப்பட்டதால் வேலையை இழந்து வருந்திக் கொண்டு இருந்த என் மகனுக்கு, அன்னையின் அருளால் ஒரு நல்ல வேலை கிடைத்துவிட்டிருக்கிறது. அவனுக்கு இந்த வேலை நிரந்தரமாக வேண்டுமானால், இப்பொழுது தடையாகவுள்ள சில சிக்கல்கள் நீங்கியாக வேண்டும். 'அந்தச் சிக்கல்கள் நீங்கி அவனுடைய வேலை நிரந்தரமாக வேண்டும்' என்று அன்னையை வேண்டிக் கொண்டு, ஒரு காணிக்கையை ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்கு அனுப்பியுள்ளேன்''.

✶✶✶



# 22. அன்னையும், சுவாமிநாதன் என்றோர் அன்பரும்

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் சுவாமிநாதன். அவருடைய தந்தைக்கு இராணுவத்தில் உத்தியோகம். அவருக்கு வடநாட்டில் வாசம். சுவாமிநாதன் இங்கே தம் மாமாவின் வீட்டில் தங்கிப் படித்து வந்தார். அவர் படிப்பில் சூடிகையானவர். பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு கல்லூரிக்குச் சென்றார். நிலை அடியோடு மாறிப் போயிற்று. அவருக்குக் கல்வியில் கவனம் செல்லவில்லை. படித்தனவெல்லாம் மறந்து போயின. பிறகு பரீட்சையில் தேறுவது எப்படி? திரும்பத்திரும்பப் பரீட்சை எழுதினார். திரும்பத்திரும்பத் தோல்வியே கண்டார்.

வெறும் வாயை மெல்பவர்களுக்கு இது அவலாகக் கிடைத்தது. நண்பர்களும், உறவினர்களும் அவரை ஏளனம் செய்தார்கள். அவருக்கு இந்த ஏளனம் பெரிய அவமானமாக இருந்தது. 'இவர்கள் முன்னால் எப்படியாவது ஒரு பட்டத்தை வாங்கிவிட வேண்டும்' என்று சபதம் எடுத்துக் கொண்டார். ஆனால், அது முடியும் போல் தோன்றவில்லை. எதைப் படித்தாலும் அது பாறையில் பெய்த மழை நீரைப் போலல்லவா வழுக்கிக் கொண்டு ஓடிவிடுகின்றது!

என்ன செய்வது? புரியவில்லை.

இந்த நிலையில் அன்னையைக் கண்கண்ட தெய்வமாக எண்ணி வழிபடும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர், அவருக்கு அறிமுகமானார். அதைத் தொடர்ந்து அவர்களுக்குள் அடிக்கடி சந்திப்புகள் நிகழ்ந்தன. அப்பொழுதெல்லாம் அவர்கள் அன்னையைப் பற்றியும் விவேகானந்தர் போன்ற மகான்களைப் பற்றியும் பேசுவார்கள்.

அதற்குப்பிறகு சுவாமிநாதனிடம் நல்ல பல மாறுதல்கள் ஏற்பட்டன. மூடு பனி படர்ந்து கிடந்த அவர் மூளையில் பொல்லொன்று பூக்கள் மலர்ந்தது போல ஒரு புத்துணர்ச்சி பூத்தது. விவேகம் வந்ததும் படிப்பில் வேகம் வந்தது. அதைவிட, 'இந்தக் குறைந்த படிப்பை வைத்துக் கொண்டு மூக்கில் விரலை வைக்கும் மாதிரி ஒரு வேலையை வாங்கிக் காட்டுகிறேன். என்னை அவமானப்படுத்தியவர்கள் எல்லாம் அதைக் கண்டு அயர்ந்து போகட்டும்' என்ற வேகம் அவரிடம் அதிகப் பாய்ச்சல் காட்டியது. வடநாட்டு வங்கி ஒன்றுக்கு விண்ணப்பத்தை அனுப்பினார். 'பட்டதாரிகள்தாம் நாற்காலியில் உட்காரலாம்' என்ற விதி, முட்டுக்கட்டை போடாத காலம் அது. காலம் அவருக்குக் கனிந்தது. வடநாட்டு வங்கியில் அவருக்கு வேலை கிடைத்தது.

படிப்பை முடிப்பதற்கு முன்பே வேலை கிடைத்துவிட்டதால், அவமானப்படுத்தியவர்களை எல்லாம் ஆச்சரியத்திற்கு ஆளாக்கி விட்டு, வடநாட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார் சுவாமிநாதன். என்றாலும் பட்டத்தையும், தமிழ்நாட்டில் அன்னையைத் தனக்கு அறிமுகப்படுத்திய நண்பரையும் அவர் மறக்கவில்லை.

ஓய்வு நேரத்தில் உட்கார்ந்து படித்தார். அன்னையின் அருள் அவர் மூளைக்குள் பிரகாசித்தது. திறவாத கதவுகள் திறந்து கொண்டன. புரியாத பாடங்கள் புரியத் தொடங்கின. பரீட்சை எழுதி, பட்டம் வாங்கினார். தமிழ்நாட்டு நண்பருக்குத் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய விடியலைப் பற்றி அடிக்கடி எழுதினார்.

இப்பொழுது சுவாமிநாதன் அன்னையின் அன்பர் குழாத்துள் ஒருவராகவே மாறிவிட்டார். அவர் மாதா மாதம் அன்னைக்குக் காணிக்கை அனுப்பிக் கொண்டிருக்கின்றார். அவர் வேலை பார்க்கும் நகரில் பலர் அன்னையின் அன்பர்களாக இருந்தார்கள். அவர் அடிக்கடி அவர்களைச் சந்தித்து அன்னையைப் பற்றி உரையாடுவார். அவர்களோடு சேர்ந்து அன்னையை மையமாகக் கொண்ட தியானக் கூட்டங்களிலும் கலந்து கொள்வார்.





சுவாமிநாதன் தமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பற்றி, தமக்கு அன்னையை அறிமுகப்படுத்திய நண்பருக்கு எழுதி இருந்தார். அதை நான் இப்பொழுது இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

சுவாமிநாதனுக்குக் கோவையில் ஒரு நண்பர். அண்மையில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அவர் சுவாமிநாதனைப் பார்ப்பதற்காகத் தம் மனைவியுடன் புறப்பட்டு வருவதாக எழுதி இருந்தார். அவர் வருவதாகக் குறிப்பிட்ட நாளில் தம்பதிகளை வரவேற்பதற்காக ரெயில் நிலையத்திற்குப் போயிருந்தார் சுவாமிநாதன். தம்பதிகளும் வந்து சேர்ந்தனர். அவர்கள் ஏனோ ஏராளமான சாமான்களைக் கொண்டு வந்திருந்தனர். சுவாமிநாதன் போர்ட்டர்களைப் பிடித்து ஒரு தள்ளு வண்டியை வாடகைக்குப் பேசி, அந்தச் சாமான்களை அள்ளிப் போட்டுக் கொண்டு வண்டியை நிலையத்தின் தலை வாசலுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். தம்பதிகள் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது தலைமை டிக்கெட் பரிசோதகர் தம்பதிகளை நிறுத்தி, "உங்கள் சாமான்களை எடை போட வேண்டும்" என்றார். அந்தச் சமயத்தில் போர்ட்டர்கள் தள்ளு வண்டியிலிருந்து சாமான்களை இறக்கி டாக்ஸியில் ஏற்ற ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் சாமான்களை எடை போடுவது என்றால் எப்படி? வாசல்வரை கொண்டு வந்துவிட்ட சாமான்களை மறுபடியும் உள்ளே எடுத்துக் கொண்டு போக வேண்டும். அதுவரை மீட்டர் போடப்பட்ட டாக்ஸியை நிறுத்தி வைப்பது என்றால், வீண் தகராறு செய்வார் டாக்ஸிக்காரர். போர்ட்டர்கள் இரண்டு மடங்கு கூலி கேட்பார்கள். தள்ளு வண்டிக்கும் இரட்டிப்பு வாடகை கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான நிலையில் கொண்டு வந்து நிறுத்திவிட்ட தலைமை டிக்கெட் பரிசோதகரின் மீது

சுவாமிநாதனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவர் அந்தப் பரிசோதகரிடம் சென்று, "சாமான்களை எல்லாம் வெளி வாசலுக்குக் கொண்டு போய்விட்டார்கள். இனி எடை போட முடியாது" என்று கடுமையான குரலில் கூறினார்.

தம்முடைய உத்தரவு மறுக்கப்படுவதையும், மீறப்படுவதையும் எந்த அதிகாரியால் பொறுக்க முடியும்? உடனே அவர் ரயில்வே போலீஸுக்குத் தகவல் கொடுத்து சுவாமிநாதனைக் கைது செய்யச் சொன்னார். போலீஸாரும் வந்துவிட்டார்கள்.

அதுவரை கோபமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்த சுவாமிநாதனுக்கு, இப்பொழுது மனத்தில் கலவரம்; பீதி. 'வேண்டாத வம்பு ஒன்றை விலை கொடுத்து வாங்கி விட்டோமே' என்று உள் மனம் உறுத்திற்று. என்றாலும், இனி அவர் அதன் விளைவுகளைச் சந்தித்துத்தானாக வேண்டும். அவரைப் போலீஸ் பிடித்துக் கொண்டு போகப் போகின்றது. விருந்தாளிகள் 'அம்போ' என்று நடுத்தெருவில் நிற்கப் போகின்றார்கள். நாளைக்கு வெளியூரில் நடக்க இருக்கும் அலுவலகம் சம்பந்தப்பட்ட ஒரு பரீட்சையை எழுதப் போக வேண்டும். அவையெல்லாம் இனிச் சாத்தியம் இல்லை.

அந்த அதிகாரியிடமிருந்தும், போலீஸாரிடமிருந்தும் விடுபட இனி வழி என்ன?

இப்பொழுதுதான் அவருக்கு அன்னையின் நினைவு வந்தது! உடனே அவரைத் துவம்சம் செய்து கொண்டிருந்த எரிச்சலும், புகைச்சலும் நெஞ்சிலிருந்து அகன்றன. அமைதியாய்ச் சிந்தித்து, அமைதியாய்ப் புறச் சூழலை நோக்கினார்.

அந்தத் தம்பதிகள் ஸ்தம்பித்து நின்று கொண்டு இருந்தார்கள். அவரைச் சுற்றி நின்ற ஒரு கூட்டம், சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது. போலீஸ் எந்த நேரத்திலும் தோளில் கையைப் போட்டு அவரைத் தள்ளிக் கொண்டு போகும் தயார் நிலையில் இருந்தது.





தள்ளிக் கொண்டு போக வேண்டியதுதானே. அந்தப் பரிசோதகர்தாம் அதற்குப் பரிந்துரை செய்துவிட்டாரே! பிறகு ஏன் இந்தத் தாமதம்? எதை எதிர்பார்த்து இந்தத் தாமதம்?

'எதுவும் நடக்கக் கூடிய சூழ்நிலையில் எதையும் நடக்க விடாமல் செய்து கொண்டிருக்கும் அன்னையே! இப்பொழுது நீங்கள் ஓர் அற்புதத்தை நிகழ்த்தி, என்னை இந்த இக்கட்டான நிலையிலிருந்து காத்தருள வேண்டும்' என்று அன்னையை வேண்டிக் கொண்டார் சுவாமிநாதன்.

அதற்குப்பிறகு ஒரு கணம்தான்! அந்தப் பக்கமாக ஒரு ரயில்வே உயர் அதிகாரி வந்தார். போலீஸ் சூழ நின்று கொண்டிருந்த சுவாமிநாதனைத் தற்செயலாகப் பார்த்து எதையோ நினைவு கூர்ந்துவிட்டு, அவரிடம் வந்தார். "என்ன விஷயம்?" என்று கேட்டார். சுவாமிநாதனுக்கு எப்படியோ தெம்பு வந்துவிட்டது. நடந்ததை எல்லாம் கூறினார்.

"அவ்வளவுதானே? பெரிதாக ஒன்றும் நடந்துவிடவில்லை. ஆனால், கொஞ்சம் அத்து மீறிப் போய்விட்டது!" என்ற உயர் அதிகாரி, தலைமை டிக்கெட் பரிசோதகரைத் திரும்பிப் பார்த்தார். அவர் இவரைப் பார்த்ததும் குழைந்தார். அவருடைய கோபம் போன இடமே தெரியவில்லை.

உயர் அதிகாரி தலைமை டிக்கெட் பரிசோதகரிடம், "அவருக்கு இளஇரத்தம். ஏதோ கோபமாகப் பேசியதை எல்லாம் பொருட்படுத்த வேண்டாம், மறந்துவிடுங்கள்" என்றார்.

"நான் பொருட்படுத்தாமல் இருக்கத்தான் முயன்றேன். இவர்தாம் விடவில்லை. இவர் தம் செயலுக்காகக் கொஞ்சம் வருத்தம் தெரிவித்து இருந்தாலும் போதும்; இவரை விட்டிருப்பேன். ஆனால், இவரோ, 'நான் எப்படியாவது உள்ளே போய்த்தான் தீர்வேன்' என்ற தீர்மானத்தோடு சூடாகப் பேசிக் கொண்டிருந்தார்! என்றாலும், 'அதன் மோசமான விளைவால் இவர் பாதிக்கப்பட்டு

விடக் கூடாதே' என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்காக, இத்தனை பேர் கண் எதிரில் என்னை அவமானமாகப் பேசிய இவரை விடுதலை செய்துவிடவும் என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. நீங்கள் நல்ல சமயத்தில் வந்து என் சங்கடத்தைத் தீர்த்து, இவரையும் காப்பாற்றிவிட்டீர்கள்!'' என்று நிம்மதியாக மூச்சுவிட்டார் தலைமை டிக்கெட் பரிசோதகர்.

இடியாய் இடித்து, மின்னலாய் வெட்டுகின்ற வானம்தான் மழையைக் கொடுக்கின்றது! 'கைது... போலீஸ்' என்றெல்லாம் அதிகார ஆர்ப்பாட்டம் செய்த அந்தப் பரிசோதகரின் அடி மனத்தில் எவ்வளவு மனிதாபிமானம் நிறைந்திருக்கின்றது! அதைப் புரிந்து கொண்ட சுவாமிநாதன், அவரிடம் மனப் பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

உயர் அதிகாரி, சுவாமிநாதனைப் புன்னகையுடன் நோக்கினார். "என்னை உங்களுக்குத் தெரிகின்றதா?'' என்று கேட்டார்.

"தெரிகின்றது. சமயத்தில் வந்து உதவி செய்த கடவுளாகத் தெரிகின்றது!'' என்றார் சுவாமிநாதன் நன்றிப் பெருக்குடன்.

"நான் அதைக் கேட்கவில்லை. என்னை எங்கேயாவது சந்தித்த மாதிரி ஞாபகம் வருகின்றதா?''

"வருகின்றது. ஆனால், எந்த இடத்தில் என்பதுதான் புரியவில்லை''.

"நீங்களும் அன்னையின் அன்பர்களும் கூடி அடிக்கடி தியானக் கூட்டங்களை நடத்துகின்றீர்கள் அல்லவா? அந்தக் கூட்டங்களுக்கு நான் வருவேன். தியானம் செய்வேன். நான் அங்கே யாரிடமும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஆனால், நான் உங்களை அடையாளம் புரிந்து வைத்துக் கொண்டிருந்தேன். அது உங்களுடைய நெருக்கடியான கட்டத்தில் உதவி செய்ய எனக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. அன்னையின் அன்பர் ஒருவருக்கு





உதவி செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தை அன்னைக்குச் செய்த சேவையாக எண்ணி மகிழ்கின்றேன்'' என்றார் அந்த உயர் அதிகாரி.

சுவாமிநாதனின் நெருக்கடியான நேரத்தில் ஏற்கனவே தெரிந்த ஒருவரை அங்கு வருமாறு செய்தும், வந்தவர் ஓர் உயர் அதிகாரியாக இருக்குமாறு செய்தும் அபயம் கொடுத்து விட்டார் அன்னை.

சுவாமிநாதனைக் காப்பாற்ற வந்தவர் தெரிந்தவராக மட்டும் அல்லாமல், அன்னையின் அன்பராகவும் ஏன் இருக்க வேண்டும்? வந்தவர் தலைமை டிக்கெட் பரிசோதகரை நன்கு அறிந்தவராக இருந்தாலே போதுமானது. ஆனால், வந்தவர் ஓர் உச்ச அதிகாரியாக அமைந்தது ஏன்?

சுவாமிநாதன் பிரச்சினை ஏற்பட்டவுடன் அன்னையைத்தான் நினைத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர் தலைமை டிக்கெட் பரிசோதகரிடம் கோபத்தைக் கொட்டிவிட்டார். அதனால் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விட்டது. அதே சமயத்தில் சுவாமிநாதன் அன்னையிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். எனவே, பிறகு அவர் அன்னையை நினைத்தவுடன், அன்னை அவரிடம் கொண்டுள்ள நெருக்கமான உறவை உணர்த்தும் வகையில் தம் அன்பர் ஒருவரையே அவருக்கு உதவ அனுப்பி வைத்தார். 'வந்தவர் ஏன் அன்னையின் அன்பராக இருக்க வேண்டும்?' என்பதற்கு இது விளக்கம்.

சமூகக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் சுவாமிநாதன் ஒரு பெரிய புள்ளி அல்லர்; ஒரு சாதாரண வங்கி ஊழியர். ஆனால், சுவாமிநாதன் அன்னையை ஏற்றுக் கொண்டுள்ளதால், அவர் சமூகத்தின் எல்லையைக் கடந்து உயர்ந்து விளங்கும் உன்னத நிலையை அடைந்துவிட்டிருக்கின்றார். உண்மையில் சமூகத்தில் உள்ள எவரும் அவருக்கு நிகரானவர் அல்லர். எனவேதான் சுவாமிநாதனுக்குப் பிரச்சினையாக அமைந்து

தொல்லை கொடுத்த தலைமை டிக்கெட் பரிசோதகரைச் சமாளிப்பதற்கு ஓர் உச்ச அதிகாரியே முன்வந்து உதவினார். “வந்தவர் ஓர் உச்ச அதிகாரியாக அமைந்தது ஏன்?” என்பதற்கு இது விளக்கம்.

விளக்கங்கள் எல்லாம் அன்னையின் விலாசங்களே.

❄ ❄ ❄



# 23. நினைவுகள் எல்லாம் விளைவுகளாகும்

வடஇந்தியாவில் வாழ்ந்து வரும் ‘அமுதசுரபி’ வாசகர் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதி இருந்தார்.

அவர் அதில் குறிப்பிட்டு இருந்தார்: “நீங்கள் ‘அமுதசுரபி’யில் எழுதி வரும் அன்னையைப் பற்றிய கட்டுரைகளைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நானும், என் கணவரும் தவறாமல் படித்து வருகின்றோம். அதன் காரணமாக நாங்கள் அன்னையின் பக்தர்களாகிவிட்டோம்”.

“இப்பொழுதெல்லாம் நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளை அன்னையிடம் ஒப்படைத்துவிடுவது வழக்கம். அந்தப் பிரச்சினைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்ந்து போய் விடுகின்றன. ஆனால், புதுப்புதுப் பிரச்சினைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அதனால் எங்களுடைய நம்பிக்கை சில சமயங்களில் கலகலத்துப் போய்விடுகின்றது”.

“தற்சமயம் குளவியைப் போல எங்களைக் கொட்டிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் இரண்டு. ஒன்று, என் கணவரின் உத்தியோக உயர்வு; இரண்டு, எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கடன்”.

“என் கணவருக்கு எப்பொழுதோ கிடைத்திருக்க வேண்டிய உத்தியோக உயர்வு, இன்னும் கிடைத்தபாடாக இல்லை. இனிமேலாவது கிடைக்குமா என்பதும் சந்தேகமாக இருக்கின்றது. ஏனென்றால், என் கணவருக்கு உத்தியோக உயர்வு கிடைத்து விடக் கூடாது என்பதில் தீவிர கவனம் செலுத்தும் யாரோ ஒருவர் பலமாக முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு இருக்கின்றார்”.

“இரண்டாவதாகக் கடன். சமீபத்தில் நிறையக் கடன் வாங்கி ஒரு வீடு கட்டினோம். கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு கடனையும் அடைக்க வேண்டும்; குடும்பத்தையும் நடத்த வேண்டும் என்றால், இந்தக் காலத்தில் அது சாத்தியமா? பாரத்தையும், கடனையும் சுமந்து சுமந்து தலை சுற்றுகிறது; விழிகள் பிதுங்குகின்றன”.

“இந்த இரண்டு பிரச்சினைகளையும் நாங்கள் எப்படிச் சமாளிக்கப் போகின்றோம்? மனித யத்தனத்தில் எதுவும் முடியும் போல இல்லை. அன்னையைத்தான் நாங்கள் மலையைப் போல நம்பிக் கொண்டிருக்கின்றோம். ‘ஒரு தடவை பாண்டிச்சேரிக்கு வந்து ஸ்ரீ அரவிந்தர் அன்னை சமாதியைத் தரிசிக்க வேண்டும்’ என்று தீவிரமாக நினைக்கின்றோம். ஆனால், அதற்குத் தேவையான வசதி இல்லாததால், பயணம் ஒத்திப் போய்க் கொண்டே இருக்கின்றது”.

‘எல்லாவற்றிற்கும் அன்னையின் அருளையே நம்பிக் கொண்டிருக்கின்றோம். அன்னை எங்களுக்கு எப்போது அருள் செய்வார் என்பதை நீங்கள்தான் கூற வேண்டும்’.

அந்த அன்பருக்கு நான் பதில் எழுதி அனுப்புவதற்குள் அவரிடமிருந்து இரண்டாவது கடிதம் வந்துவிட்டது.

இந்தச் சமயத்தில் எல்லா வாசக அன்பர்களுக்கும் நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகம். ‘அல்லற்படுத்தும் அந்தப் பிரச்சினைகளை எல்லாம் அறவே நீக்கி உதவுகின்றது அளப்பரிய அன்னையின் அருள்’ என்பதை, முன்பெல்லாம் ஐரோப்பியநாட்டு அன்பர்களே அதிகம் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ‘அமுதசுரபி’யின் மூலம் தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் அன்பர்களும் அதிகம் தெரிந்து கொள்ளத் தொடங்கி இருக்கின்றார்கள். அதனால் தம் பிரச்சினைகளைத் தெரிவித்து எழுதும் அன்பர்களின் கடிதங்கள் நாள் தோறும் பெரிய எண்ணிக்கையில் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன.





ஒவ்வொன்றும் பிரச்சினை; ஒவ்வொன்றும் ஒவ்வொருவரின் வாழ்க்கை; அதை நான் மிக நுணுக்கத்துடன் அணுக வேண்டும். பிரச்சினைகள் வெளியே இருந்து வருவதில்லை. அவை நமக்குள் இருந்துதான் கையும், காலும் முளைத்து விஸ்வரூபம் எடுக்கின்றன. சம்பந்தப்பட்டவரே பிரச்சினையின் அடிப்படையை, மூல காரணத்தை அறிந்திருப்பதில்லை. ஒருவேளை அறிந்திருந்தாலும், மறக்காமல் அதை நினைவில் வைத்திருப்பதில்லை. இந்தச் சிக்கலை எடுப்பது என் வேலையின் முதற் கட்டம். இதைத் தொடர்ந்து பல கட்டங்கள் இருக்கின்றன. இறுதியாக, அன்னையின் கோட்பாட்டுக்குள் அன்பர்களின் பிரச்சினைகளைக் கொண்டு சென்று அன்னையின் அருள் வெளிச்சத்தில் அவற்றின் இருளைத் துடைத்து நான் ஒரு பதிலை எழுத வேண்டும்.

கையால் வாங்கிய கடிதங்களுக்குக் கையால் எழுதப் படுகின்ற கடிதங்கள் அல்ல அவை. நெஞ்சாலே பெறப்படுகின்ற கடிதங்களுக்கு அன்னையின் அருளை நிரப்பி அனுப்ப வேண்டிய நிலை.

‘கையிலே காசு, வாயிலே தோசை!’ என்கின்ற லௌகிக அவசரங்களுக்கு எல்லாம் இதில் இடம் இல்லை; இருக்கவும் கூடாது. வரும் கடிதங்கள் அதிகமாக அதிகமாக, எவ்வளவுதான் விரைவாக ஒரு பதிலை அனுப்பினாலும்கூட, இடையிலே ஏற்படுகின்ற கால தாமதம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது.

தாமதத்தையும் தபசாக நினைத்துவிட்டால், பிரச்சினையின் வெப்பம் சிறிது தணிந்து போய்விட்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். யோகம் காட்டில் இல்லை; நம் மனக் கூட்டில் இருக்கின்றது.

அந்த வடஇந்திய அன்பர் எனக்கு இரண்டாவது கடிதத்தை அனுப்புவதற்குள், நான் அவருடைய முதல் கடிதத்திற்குப் பதில் போட முடியாததற்குத் தாமதம் அன்று காரணம். அவர் முதல் கடிதத்தில் தம்முடைய முகவரியைக் குறிப்பிடவில்லை.

இரண்டாவதாக வந்த கடிதத்தில் அதை அந்த அன்பரே குறிப்பிட்டிருந்தார்: “இதற்கு முன்னால் நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி, அதற்குப் பதில் எழுதுமாறும் கேட்டுக் கொண்டிருந்தேன். கடிதத்தை அனுப்பியதற்குப் பிறகுதான் நான் என் முகவரியை எழுதாமல் மறந்து போனது ஞாபகத்திற்கு வந்தது. ஆகவே, என் முகவரியோடு இந்தக் கடிதத்தை எழுதி இருக்கின்றேன்’’.

அதற்குப்பிறகு அந்தக் கடிதத்தில் ஒரு முக்கியமான செய்தியைக் கொடுத்திருந்தார் அவர்: “நான் உங்களுக்கு என் முதல் கடிதத்தைத் தபாலில் சேர்த்தபிறகு, அன்னையை வேண்டிக் கொண்டு அன்னைக்கு ஒரு காணிக்கையை அனுப்பி இருந்தேன். அதற்கான பலன் உடனே கிடைத்துவிட்டது. நான் முதல் கடிதத்தில் முதல் பிரச்சினையாகக் குறிப்பிட்டிருந்த என் கணவரின் உத்தியோக உயர்வுப் பிரச்சினை தீர்ந்துவிட்டது. இதுவரை தடைப்பட்டு இருந்த பதவி உயர்வு, அன்னையின் அருளால் என் கணவருக்குக் கிடைத்துவிட்டது. இதற்கு எங்கள் நன்றியை அன்னைக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்’’.

அன்னைக்குக் காணிக்கை அனுப்பியவுடன் நீண்ட காலமாகத் தடைப்பட்டு இருந்த பதவி உயர்வு, தம் கணவருக்குக் கிடைத்துவிட்டதாக அந்த அன்பர் எழுதி இருந்தாரே, அது எப்படி அவ்வாறு நிகழ்ந்தது? இங்கே எல்லா அன்பர்களும் கூர்ந்து நோக்க வேண்டும்.

நாம் அன்னைக்கு மனப்பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் பிரார்த்தனை செய்து கொண்டாலும்கூட, அது சில சமயங்களில் பூரணமான பலனைக் கொடுக்காமல் இருந்துவிடுகின்றது. அப்பொழுது நம் கோரிக்கை நிறைவேறாமல் தாமதப்படும். அதே சமயத்தில் நாம் அன்னைக்குக் காணிக்கை அனுப்பி வைத்துப் பிரார்த்தனை செய்து கொண்டால், நம்முடைய பிரார்த்தனை பூரணமாகிவிடுகின்றது. அதனால் அதுவரை





தாமதப்பட்டு வந்த பலன் நமக்கு உடனடியாகக் கிடைத்து விடுகின்றது.

‘காணிக்கை அனுப்பினால்தான் பிரார்த்தனை பூரணம் அடையுமா?’ என்று கேட்கத் தோன்றுகிறதா? கேளுங்கள். கேட்டால்தானே விளக்கம் கிடைக்கும்? நீங்கள் அப்படிக் கேட்பதாக நினைத்துக் கொண்டு, முடிந்த வரையில் ஒரு விளக்கத்தைத் தர முயல்கிறேன்.

இப்பொழுது விவசாயத்தையும், பக்தியையும் பொருத்திப் பார்க்கலாம்.

பயிர் செய்வதற்கு முதற் கட்டமாக நாம் என்ன செய்கின்றோம்? நிலத்தை உழுது திருத்திச் சீர் செய்கின்றோம். நாம் மனப்பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் செய்து கொள்ளும் பிரார்த்தனை, நிலத்தில் செய்கின்ற இந்தச் சீருக்குச் சமானம். இதுவரை உழைப்பு அல்லது ஈடுபாடு மட்டுமே முன்நிற்கின்றன. அதற்கு அடுத்த கட்டம் விதை போடுவது. ‘விதை’ என்பது ஒரு பொருள். அந்தப் பொருள் இல்லாமல் விளைச்சல் இல்லை. விளைச்சல் இல்லாவிட்டால் பலனும் இல்லை. அதைப் போலக் ‘காணிக்கை’ என்ற பொருளைப் பிரார்த்தனையில் சேர்க்கும் பொழுது அது விளைகின்றது; பலனைக் கொடுக்கின்றது.

அருள் உலகத்திற்கு இந்தக் கணக்கு இல்லை.

நாம் வாழ்கின்ற இந்த உலகம் பொருள் உலகம்; பொருளை ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்ற உலகம். பிறப்புக்கு ஒரு பொருள். கற்கும் கல்விக்கு ஒரு பொருள். இல்லற வாழ்வுக்கு ஒரு பொருள். சந்ததிக்கு ஒரு பொருள். வாழும் வாழ்க்கைக்கு ஒரு பொருள். இறப்புக்கும் ஒரு பொருள். இவ்வாறு மனித வாழ்க்கையில் எந்த ஒரு நிலையிலும் பொருள் பொதிந்திருக்கின்றது. அதனால்தான் மனிதன் பொருள் இல்லாத எதையும் பொருட் படுத்துவதில்லை; எதிலும் ஈடுபாடு கொள்வதும் இல்லை.

அத்தகைய சூழலில் வளர்ந்துவிட்ட மனிதனை 'நம்பிக்கை' என்ற வளையத்திற்குள் கொண்டு போய் நிறுத்தத்தான் 'காணிக்கை' என்பது பயன்படுத்தப்படுகின்றது.

நிலம் மனிதர்களைத் தேடி வந்து 'எனக்குள் விதையுங்கள்' என்று சொல்வதில்லை. அதைப் போலவே அன்னையும், 'எனக்குக் காணிக்கை கொடுங்கள்' என்று கேட்டதில்லை. நிலத்தில் விதைத்து விளைச்சலைக் கண்ட முதல் மனிதன் நமக்கு உதாரணம். அதைப் போலவே, அன்னைக்குக் காணிக்கையைச் சமர்ப்பித்துப் பலனை முழுதுமாய்க் கண்ட அன்னையின் முதல் அன்பர் ஒருவர் நமக்கு உதாரணம்.

காணிக்கை நம் கோரிக்கையைப் பூரணம் ஆக்குகின்றது. அது முழுமையாகின்றபொழுது நம்முடைய பிரச்சினைகள் முற்றுமாகத் தீர்ந்து, நாம் எதிர்பார்த்ததற்கும் அதிகமான நன்மைகள் நமக்கு வரவாக வந்து சேர்கின்றன.

இனி அந்த வடஇந்திய அன்பரின் விஷயத்திற்கு வருவோம். இரண்டாவது கடிதத்தின் மூலம் அவருடைய முகவரி கிடைத்து விட்டது. இனி அவருக்குப் பதில் எழுதத் தடை இல்லை.

நான் அவருடைய இரு கடிதங்களுக்குமாகச் சேர்த்து இவ்வாறு ஒரு பதில் எழுதினேன்: "கடன் இரண்டு விதங்களில் ஏற்படுகின்றது. ஒன்று, கையிருப்புப் பணத்தை விரயப் படுத்துவதனாலோ அல்லது தேவையற்ற வகையில் செலவு செய்வதனாலோ ஏற்படும் கடன். மற்றொன்று, இருப்புப் பணத்தை ஒரு முதலீட்டில் போடுவதால் உண்டாகும் கடன். உங்களுடைய பிரச்சினை இரண்டாவது வகையைச் சேர்ந்தது. ஒரு சிறு தொகையை வைத்துக் கொண்டு பெரிய முதலீடுகள் செய்யும்பொழுது பிரச்சினை வரத்தான் செய்யும். அதைச் சமாளிக்க வேண்டுமானால், வருமானம் தேவையான அளவுக்குப் பெருக வேண்டும். ஆகவே, வருமானம் பெருக நீங்கள் அன்னையிடம் வேண்டி வந்தால், அன்னை நல்ல வாய்ப்புகளை





உருவாக்கி வருமானம் பெருக வழி செய்வார். உங்கள் கணவருக்குக் கிடைத்திருக்கும் உத்தியோக உயர்வே, உங்கள் வருமானம் பெருகுவதற்கு ஒரு வழியாக அமையலாம்".

தமிழ்நாட்டில் தென் பகுதியைச் சேர்ந்த ஓர் அன்பர் தமக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு நெருக்கடியைப் பற்றி எழுதி இருந்தார்.

"நான் சொந்தத்தில் ஒரு வீட்டு மனையை வாங்கிப் போட்டிருந்தேன். அதில் வீடு கட்ட முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினேன். முதலில் அன்னைக்கு ஒரு காணிக்கையை அனுப்பினேன். பின்னர் ஒரு கொத்தனாரிடம் வீடு கட்டும் பொறுப்பை ஒப்படைத்து, ரூபாய் ஐயாயிரத்தை அச்சாரமாகக் கொடுத்தேன். பணத்தை வாங்கிக் கொண்டு போனவர்தாம்! பிறகு கொத்தனார் அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. அவரைச் சந்தித்துக் கேட்டால், வேலைதானே? அடுத்த வாரம் ஆரம்பித்துவிடுவோம்" என்கின்றார். அப்படி எத்தனையோ அடுத்த வாரங்கள் ஓடிவிட்டன. ஆனால், அவர் வேலையை மட்டும் ஆரம்பித்த பாடாக இல்லை.

'அது மட்டும் அன்று. பொதுவாக நான் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், இப்படித்தான் சிக்கலாகிவிடுகின்றது. எவ்வளவு முயன்றாலும் பலன் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இந்த நிலை மாறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும், சால்ஜாப்புக் கூறி வரும் கொத்தனார் சட்டென்று வீட்டு வேலையைத் தொடங்குவதற்கும் ஒரு வழியைக் கூறும்படி வேண்டுகின்றேன்'.

அந்த அன்பரின் கடிதத்திற்கு நான் எழுதிய பதில் இது:

"பொதுவாக, நம் கடந்தகாலச் செயல்களுக்கும், எண்ணங் களுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஏற்பத்தான் நம்முடைய நிகழ்காலச் சூழ்நிலைகள் உருவாகின்றன. இந்த நிகழ்காலச் சூழ்நிலை களுக்கும் நம் கடந்தகாலச் செயல்களுக்கும் உள்ள தொடர்பை நாம்

கவனிப்பதில்லை. முயற்சி செய்வதால் அந்தத் தொடர்புகளை நாம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு அறிந்து கொண்டவுடனேயே பாதகமாக இருந்து வந்த சூழ்நிலை சாதகமாக மாறுவதை நிதர்சனமாகக் காணலாம். சில சமயங்களில் நமக்கு நாமே செய்து கொண்ட மதிப்பீட்டு அறிவு, புறச் சூழ்நிலையை ஓரளவு மாற்றினாலும், அது முழு நிவாரணமாக அமையாமல் இருந்து கொண்டிருக்கும். அப்பொழுது நம் கடந்தகால வாழ்க்கையில் எந்தச் செயல் இப்பொழுதுள்ள பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்ததோ, அந்தச் செயலை இப்பொழுது மாற்றிக் கொள்ள முன்வந்து, அதற்கு வகை செய்யும் அளவில் மனத்தையும் மாற்றிக் கொண்டுவிட்டால், சாதகமான சூழ்நிலை உருவாகும்; பிரச்சினையும் முற்றுமாக மறைந்து போகும்''.

“கடந்தகால வாழ்க்கையை நினைவுக்குக் கொண்டு வருகின்றபொழுது, மனத்தை நிதானமாகவும், உணர்ச்சி வசப்படாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்''.

‘இந்தக் கண்ணோட்டத்தில் உங்களின் கடந்தகால வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை நெஞ்சால் தொகுத்து அவற்றைத் தினமும் அன்னையிடம் எடுத்துக் கூறி வந்தால், உங்களுடைய கொத்தனார் பிரச்சினை தீர்வதோடு, உங்களின் எதிர்கால வாழ்க்கையும் பல வகைகளில் சிறப்பாக அமையும்’.

நான் இந்தக் கடிதத்தை 1984–இல் டிசம்பர் மாதம் எழுதினேன். அதற்குச் சரியாக ஓராண்டு காலத்திற்குப்பிறகு அந்த அன்பரிடமிருந்து மீண்டும் ஒரு கடிதம் வந்தது. அவர் அதில், “நான் வீடு கட்டுவதைப் பற்றி உங்களுக்கு எழுதி இருந்தது நினைவு இருக்கலாம். அன்னையின் அருளால் வீட்டைக் கட்டி முடித்துவிட்டேன். வரும் 15–12–85 அன்று புதுமனை புக இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று எழுதி இருந்தார்.





முந்தைய ஆண்டுவரை உருவாகாமல் போக்குக் காட்டிக் கொண்டு இருந்த வீடு, இப்பொழுது உருவாகிவிட்டது! இந்த வீட்டை உருவாக்கியவை செங்கல்லோ, சிமெண்டோ, அன்பருடைய பணமோ அல்ல. அவர் தம்மைத் தாமே ஒப்பு நோக்கிக் கொண்டதும், தம்மைத் திருத்திக் கொண்டதும்தாம் வீடு உருவாகக் காரணமாக இருந்த மூலங்கள்.

இதை அவர் சொல்லவில்லை. அதற்குக் காரணம், ‘சொல்ல வேண்டாம்’ என்பதாக இருக்க முடியாது. சொல்லத் தெரியாமல் போனதே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

பண் செய்த நிலத்தில் பயிர் விளைவதைப் போல, அன்னையின் வழியில் மனத்தை நேர் செய்து கொண்டால், நினைவுகள் எல்லாம் விளைவுகளாகும்.

✶✶✶

# 24. காணிக்கை

"உள்ளங்கை ஜலம், வில்ப பத்ரம், ஒரு பழம் இவற்றுள் எதையேனும் ஒன்றை எனக்குக் கொடுத்தால் போதும். உண்மையான பக்தியுடன் நீ சமர்ப்பிக்கும் ஒவ்வொரு சிறிய பொருளும் உன் முழுச் சொத்துகளையும் சமர்ப்பிப்பதற்கு ஒப்பாகும்!" என்று கூறுகின்ற பரம்பொருளாகிய இறைவன், மேலும் சொல்வார்: "அது போன்ற பக்தியுடன் நீ உன் இஷ்ட தெய்வத்திற்குச் செய்யும் சமர்ப்பணத்தையும் நானே பெற்றுக் கொள்கின்றேன். அது மட்டுமன்று; நீ எந்தத் தெய்வத்திற்கு உன்னை உண்மையுடன் சமர்ப்பணம் செய்தாலும் அதை ஏற்றுக் கொள்வதும் நானே". இன்னும் விளக்கமாகக் கூறுவதாக இருந்தால், மனத்தில் உள்ள பக்தியும், ஆர்வமும் முழுமையாகவும், தூய்மையாகவும் இருந்தால், தெய்வத்திற்குச் செய்யும் அர்ச்சனை மட்டுமில்லை; மற்ற மனிதர்களுக்குச் செய்யும் சேவையும் முடிவில் பரம்பொருளைச் சென்று அடைகின்றது.

இழந்த பார்வையைத் திரும்ப வேண்டுபவன் பார்வையைப் பெற்றபிறகு, தங்கத்திலோ, வெள்ளியிலோ கண் செய்து காணிக்கை செலுத்துகின்றான். கோயில்களில் அர்ச்சனை செய்யும்பொழுது தேங்காய் உடைப்பது வழக்கம். எப்படி ஒவ்வொரு மலருக்கும் ஒரு சிறப்புத் தன்மை இருக்கின்றதோ, அது போல ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனித் தன்மை உண்டு.

பிரச்சினைகள் தீர வேண்டும் என்று பிரார்த்திப்பவர் பொருளைக் காணிக்கையாக அளிப்பது வழக்கம். இந்த வழக்கம் எல்லா மதங்களிலும் உள்ள மக்களிடமும் இருக்கின்றது. அது அன்னையிடமும் பொருந்தும். ஆத்ம சிலாக்கியத்தை மட்டும் விழையும் அன்பர்கள் மலர், பத்ரம் (இலை), பழம் முதலியவற்றைக் கொடுப்பார்கள். இவ்வாறாக தெய்வ வழிபாட்டில் ஏதேனும் ஓர் உருவத்தில் காணிக்கை இடம் பெறுகின்றது.





முதியவரான வீரசைவ பிரம்மச்சாரி ஒருவர் அன்னையைத் தரிசிக்க வந்தார். ஆசிரமத்தில் அவருக்கு மேற்கூறிய விளக்கம் தெரிவிக்கப்பட்டது. "அன்னைக்குக் காணிக்கை அளித்தால், அது உங்களுக்குப் பெரிய நன்மையைத் தேடித் தரும்" என்று அவரிடம் கூறப்பட்டது. அவரோ, "நான் காணிக்கை செலுத்தப் போவதில்லை. எனக்குப் பொருள் இலாபம் வேண்டாம். அன்னையின் ஆசீர்வாதம் மட்டும்தான் தேவை" என்று கூறி, அன்னைக்கு மலர்க் காணிக்கையைச் செலுத்தி, அன்னையின் ஆசீர்வாதத்தைப் பெற்றதோடு ஆத்ம விளக்கமும் பெற்றார்.

அவர் ஒரு தொழில் அதிபர். 30 ஆண்டு காலமாகத் தொழில் செய்து வந்தும் பெரிய வளர்ச்சி எதுவும் இல்லை. ஆனால், அன்னையைத் தரிசனம் செய்தபிறகு அவருடைய தொழில் நிலை முற்றிலும் மாறிவிட்டது. இந்த முப்பதாண்டு காலத்தில் கிடைத்த ஆர்டர்களைவிட இந்த ஓராண்டு காலத்தில் ஆர்டர்கள் அதிகமாகக் கிடைத்தன. அதாவது தொழில் 30 மடங்கு உயர்ந்தது. என்றாலும் வருமானம் மட்டும் உயரவில்லை. பழைய வருமானமே நீடித்தது.

அதற்கு என்ன காரணம்? சிந்தித்தார். முன்பு அன்னையைத் தரிசிக்கச் சென்ற சமயத்தில், 'நான் காணிக்கை செலுத்தப் போவதில்லை. எனக்குப் பொருள் இலாபம் வேண்டாம். அன்னையின் ஆசீர்வாதம் மட்டும்தான் தேவை' என்று, தாம் கூறியது அவருக்கு நினைவு வந்தது. அவர் விரும்பியது போலவே அன்னையின் ஆசீர்வாதம் கிடைத்தது. ஆர்டர்களும் 30 மடங்கு பெருகின. 'பொருள் இலாபம் வேண்டாம்' என்றார். அதனால் இலாபம் கிடைக்காமல் போயிற்று. அவர் தம் தவற்றை உணர்ந்து அன்னையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு காணிக்கை செலுத்தினார். மூன்றே மாதங்களில் 30 ஆண்டு கால வருமானத்தைப் பெற்றார்.

வழிபாட்டில் காணிக்கைக்குள்ள முக்கிய இடத்தைச் சுட்டிக் காட்டும் நிகழ்ச்சியாக அது விளங்குகிறது.

வால்டேர் ஓர் அமெரிக்க வியாபாரி. ஆண்டுக்கு ஒரு கோடி வியாபாரமாகும் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். அவர் இளைய மகன் ஆசிரமத்தில் சேர்ந்துவிட்டார். மகனைப் பார்ப்பதற்கு அவர் ஆசிரமத்திற்கு வந்தார். மகன் தந்தையிடம் அன்னையைத் தரிசிக்குமாறு கூறினார். தந்தை மறுத்துவிட்டார். ‘எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை’ என்றும் கூறினார்.

அடுத்த முறை அவர் மகனைப் பார்ப்பதற்கு ஆசிரமத்துக்கு வந்தார். “நீங்கள் அன்னையைத் தரிசித்தே ஆக வேண்டும். பிறகு நீங்கள் அதன் மேன்மையை அறிவீர்கள்” என்று மகன் அதிகமாக வற்புறுத்த, அவரைத் திருப்தி செய்யும் நோக்கில் அன்னையைத் தரிசித்தார். அந்தக் கணமே வால்டரின் மனத்தில் அன்னையின் ஆன்மிக ஒளி, வெள்ளம் போலப் பெருக்கு எடுத்தது. அன்னையின் ஆளுமையில் தான் உடைந்து சிதறி ஒரு துளிப் பனியாய்ப் போனதை உணர்ந்தார். அதற்குப்பிறகு, ‘அன்னையின் தரிசனம் மகத்தானது என்று நீ ஏன் விளக்கமாகக் கூறவில்லை?’ என்று மகனைக் கடிந்து கொண்டார்.

இவ்வளவு பரவசமாகப் பேசிய வால்டர் அன்னைக்குக் காணிக்கை அளிக்கவில்லை. அதில் அவருக்கு விருப்பமும் இல்லை. இருப்பினும் அன்னையின் அருள் அவரை ஆட்கொண்டு, அவருக்குப் பதினைந்து ஆண்டு காலமாக இருந்து வந்த முதுகு வலியை, மருத்துவத்தின் மிக நவீனமான உத்திகளாலும் இன்னதென்று கண்டு பிடிக்க முடியாத அந்தப் பேய் வலியை நீக்கியது. இத்தனைக்கும் அவர் வேண்டுதல்கூடச் செய்து கொள்ளவில்லை. கேளாமலே கொடுப்பவர் அல்லவா அன்னை?

அதற்கு அடுத்த ஆண்டு மூன்றாவது முறையாக மகனைப் பார்ப்பதற்காகப் புதுவைக்கு வந்தார் வால்டர். அப்பொழுது அன்னை சமாதியாகிவிட்டார். தந்தையைப் போலவே மகனும் சில காரணங்களினால் அமெரிக்காவுக்குப் போய்வர நேர்ந்தது.

அன்னை தம்மைத் தரிசிக்க வருபவர்களுக்குப் பல வகையான ஆசீர்வாதங்களை வழங்குவார். அவர் குழந்தையுள்ளம் படைத்தவர்களைப் பார்த்தால், ‘கலகல’ என்று வாய்விட்டுச் சிரித்து ஆசீர்வாதம் செய்வார். ஆத்ம பக்குவம் நிறைந்தவர்களை மலர்ந்த பெரும்புன்னகையோடு வரவேற்று, அவர்களுடைய கண்களை உற்று நோக்கித் தீவிரமாக ஆத்ம சக்தியைப் பொழிவார். ஓரளவு பழகியவர்களைச் சில சமயம் கேலி செய்வார். மெய்யுருகிப் பரவசம் அடையக் கூடியவர்களின் இரு கரங்களையும் பற்றித் தம் கரங்களில் சேர்த்துக் கொண்டு ஆசீர்வதிப்பார். திருமணமான புதுத் தம்பதிகளாக இருந்தால், ஒருவர் கரத்தை எடுத்து மற்றவர் கையில் வைத்துப் புன்முறுவல் செய்வார்.





அன்னையின் புன்முறுவலை விளக்கப் புகுந்தால், கம்பனுக்கு ஏற்பட்ட தவிப்புத்தான் நமக்கும் ஏற்படும். கம்பன் முதலில் இராமனின் அழகைச் சொல்லிப் பார்க்கின்றான். ‘மையோ, மரகதமோ, மரி கடலோ...’ என்றெல்லாம் சொல்லிப் பார்த்தவனுக்கு, இராமனின் முழு அழகையும் சொல்லிய மாதிரி தோன்றவில்லை. பிறகு என்னதான் சொல்லலாம்? அதுவும் தோன்றவில்லை. ‘ஐயோ, இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்!’ என்று தம் திறம் தோற்ற தன்மையைக் கொண்டே இராமனுக்கு அழகு சேர்த்துவிடுகின்றான் கம்பன்.

அதே போல, அன்னையின் புன்முறுவலை விளக்க முனைந்தால், நம் திறம் தோற்கும். நம் திறம் தோற்கும் இடத்திலேதான் அன்னையின் புன்முறுவல் அழியா அழகுடன் வெளிப்படும்.

இனி வால்டரிடம் வருவோம். கடைசிச் சந்திப்பின்போது அன்னை அவருடைய கைகளை எடுத்துத் தம் கைகளில் வைத்து ஆசீர்வாதம் செய்தார். அன்னை அந்த அரிய பரிசை எல்லோருக்கும் கொடுத்ததில்லை. தம்முடைய பக்தராக இல்லாத வால்டருக்கு அந்த மகத்தான பரிசைக் கொடுத்தார் அன்னை.

அதைக் கண்ணுற்ற வால்டரின் மகன், அத்தகைய அற்புதமான பரிசைப் பெற்ற தம் தந்தை, ‘அன்னையின் பக்தராக வேண்டும்’ என்று விரும்பினார். என்றாலும், அவருடைய

இலட்சியம் அதைத் தடுத்தது. 'தந்தை என்பதற்காகத் தனிப்பட்ட அக்கறை காட்டலாகாது' என்ற இலட்சியம், அவரைப் பேசவிடாமல் தடுத்துவிட்டது.

வால்டர் ஆண்டு தோறும் தம் மகனைப் பார்ப்பதற்காக ஆசிரமத்திற்கு வந்து போய்க் கொண்டு இருந்தார்.

அவர் அப்படி வந்த ஒரு பயணத்தின்போது சென்னையில் உள்ள ஒரு பெரிய உர நிறுவனத்தினரைச் சந்தித்து, "அமெரிக்காவில் தொழில் தொடர்பான **Consultation** தேவைப்படுமா?" என்று கேட்டார்.

அது 1974. அன்னியச் செலவாணி கிடைக்காத காலம். அந்த நிறுவனத்தார், "எங்களுக்கு **Consultation** தேவை இல்லை. புதிதாகத் தொடங்க இருக்கும் ஒரு தொழிலுக்கு டாலர்தான் தேவை" என்றார்கள்.

"அதையும் என்னால் ஏற்பாடு செய்ய முடியும்" என்றார் வால்டர். அவர்கள் 70 கோடி ரூபாய்க்கு டாலர்கள் கேட்டார்கள். அமெரிக்க வங்கி ஒன்றில் அதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி, அது பற்றிய விவரங்களை எல்லாம் திரட்டிக் கொண்டு விடை பெற்றார் வால்டர்.

அப்பொழுது அவருடன் அவருடைய மகனும் சென்றிருந்தார். நிறுவனத்தைவிட்டு வெளியேறியதும் அவர் தம் தந்தையிடம், "இவ்வளவு பெரிய கடன் தொகையை உங்களால் ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

"அவர்கள் கேட்டார்கள். 'அதை ஏற்றுக் கொள்' என்று என் அந்தராத்மா கூறியது. ஏற்றுக் கொண்டேன். அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது" என்றார் தந்தை.

என்றாலும், அவருடைய மகனுக்கு மட்டும் ஏதோ ஒன்று தெரிந்த மாதிரி இருந்தது. 'உலகத்திலேயே இல்லாத ஒன்றானாலும், கற்பனைக்கே எட்டாத ஒன்றானாலும், மனம் பவித்திரமாக இருந்து, தாமே நிகழும் நிகழ்ச்சிகளை நம் அறிவால் புறக்கணிக்காமல்,





தொடர்ந்து நம் பங்கை மட்டும் செய்து கொண்டே போனால், அன்னையின் அருளால் அவை நிதர்சனமாக நடக்கும்' என்பது அவருக்குத் தெரியும். ஆனால், தெரிந்ததை அவர் தம் தந்தையிடம் தெரிவிக்கவில்லை.

வால்டர் அமெரிக்கா சென்றவுடன் ஒரு பெரிய வங்கியின் தலைமை நிர்வாகியைச் சந்தித்து, அந்தச் சென்னை நிறுவனத்தின் தேவையைப் பற்றிக் கூறி, "அதற்கு உங்களால் உதவ முடியுமா?" என்று கேட்டார்.

அந்த நிர்வாகி, "நீங்கள் நல்ல சமயத்தில் வந்திருக்கிறீர்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உர உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவுவதற்காக, சென்ற வாரம்தான் ஒரு புதிய பகுதியைத் தொடங்கினோம்" என்று கூறி, வால்டருக்கும், அவருடைய இந்திய நிறுவனத்திற்கும் 70 கோடி பணத்தைக் கொடுக்கச் சம்மதித்தார்.

வால்டர் அந்தச் சென்னை நிறுவனத்திற்கு வங்கியில் உதவித் தொகைக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், தமக்கு ஒரு தொகையைக் கமிஷனாகக் கொடுக்க வேண்டும் எனவும், அதற்கு இசைந்தால் ஒரு கம்பெனி ஆர்டராக எழுதி அனுப்புமாறும் தகவல் கொடுத்தார். அந்த நிறுவனம் 40 இலட்ச ரூபாய் கமிஷனுக்கு ஆர்டர் எழுதி அனுப்பியது.

அந்தத் துறையில் மேலும் ஆர்வம் கொண்ட வால்டர், தம் அடுத்த இந்தியப் பயணத்திற்காகத் திட்டமிட ஆரம்பித்த போது, அந்தச் சென்னை நிறுவனம் தற்போது பயன்படுத்தும் டெக்னாலஜியைவிட உயர்ந்ததொரு டெக்னாலஜி இருப்பதை அறிந்து, அதைப் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்துக் கொண்டார். பிறகு இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். அந்தச் சென்னை உர நிறுவனத்தினரைச் சந்தித்து, தாம் திரட்டிக் கொண்டு வந்த புதிய டெக்னாலஜியைப் பற்றி விவரித்தார்.

அதைக் கவனமாகக் கேட்ட அவர்கள், "உங்களுடைய புதிய டெக்னாலஜியைப் பயன்படுத்த இந்தியாவில் உள்ள எந்தத்

தனியார் நிறுவனத்தாலும் முடியாது. அதை இந்திய அரசாங்கம் மட்டுமே செய்ய முடியும். நீங்கள் எங்களுக்கு வாங்கிக் கொடுக்க இருக்கும் வங்கி டாலர் கடன் ஒன்றே போதும்'' என்றார்கள்.

வால்டர் உடனே டெல்லிக்குச் சென்றார். பல மத்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார். அனைவரும் அவருக்கு ஆதரவு தெரிவித்தார்கள். ஓர் அமைச்சர், "புதுத் திட்டத்தை 200 கோடியில் செய்யலாம்'' என்றார். மற்றோர் அமைச்சர், "இன்னும் அதிகச் செலவாகும்'' என்றார். கடைசியில் ரெயில்வே அமைச்சர் அதை, தாம் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார். திட்டத்தை முழுமையாகப் பரிசீலனை செய்து எல்லாம் சரியாக இருந்தால் 800 கோடியில் நிறைவேற்றுவது என முடிவு செய்து, மேலும் அது பற்றிய விளக்கத்தைக் கொடுக்குமாறு வால்டருக்குக் கடிதம் கொடுத்தது ரெயில்வேத் துறை.

திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், வால்டருக்கு சுமார் 5 கோடி ரூபாய் கமிஷனாகக் கிடைக்கும். அவர் இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்தார். அந்த டெக்னாலஜி பற்றிய எல்லா விவரங்களையும் முழுமையாகச் சேகரித்தார்.

சாதகரான மகன் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமாகப் போய் வந்து கொண்டு இருந்தபொழுது, தம் தந்தையின் வியாபாரம் முன்பைவிடப் பெருகி இருப்பதைப் பார்த்து, "இவையெல்லாம் அன்னையின் தரிசனத்தால் உங்களுக்குக் கிடைத்தன. உங்களுடைய முயற்சிகள் முழு வெற்றியைப் பெற வேண்டுமானால் நீங்கள் அன்னைக்கு 1000 டாலர் காணிக்கை அனுப்ப வேண்டும்'' என்று கூறினார்.

"நீ பக்தியின் காரணமாக அதிகமாகக் கூறுகிறாய். நான் செய்த முயற்சிகளுக்குரிய பலன் நிச்சயமாகக் கிடைத்தே ஆக வேண்டும். இதற்காக நான் ஏன் அன்னைக்குக் காணிக்கை செலுத்த வேண்டும்?'' என்று கேட்டார் வால்டர்.





மகன் விடவில்லை. இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் வருகிற வீரசைவ பிரம்மச்சாரியின் கதையைக் கூறி, "அன்னைக்கு 10 டாலராவது காணிக்கையாகக் கொடுங்கள்'' என்று வேண்டினார். வால்டர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

அதற்குப்பிறகு நிகழ்ச்சிகள் முரணாகத் திரும்ப ஆரம்பித்தன. சென்னை உர நிறுவனம், தான் தொடங்க இருந்த புதிய நிறுவனத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. அதற்கு இனி 70 கோடி டாலர் கடன் தேவை இல்லை. அதற்காக வால்டர் எடுத்துக் கொண்ட முயற்சியும், எதிர்பார்த்த கமிஷன் தொகையும் பலன் இல்லாமல் போயின. அவருடைய மனைவிக்கு அவர் இந்தியாவுக்கு அடிக்கடி போய் வருவது பிடிக்கவில்லை. "இந்தியாவுக்குப் போகவர அதிகச் செலவாகிறது. அதே வேலையை அமெரிக்காவில் இருந்து கொண்டு செய்யுங்கள்'' என்று கூறிவிட்டார். மனைவியின் குறுக்கீட்டை வால்டரால் அலட்சியப்படுத்த முடியவில்லை. அதன் காரணமாக இந்திய ரெயில்வே அமைச்சர் கேட்ட புதுத் திட்டம் பற்றிய விவரங்களை மேற்கொண்டு சேகரித்துக் கொடுக்க முடியவில்லை. அதனால் அது முயற்சிக் கட்டத்திலேயே முடிந்து போயிற்று.

ஏறக்குறைய அதே சமயத்தில் அமெரிக்க அரசாங்கம் புதுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதன்படி அரசு பல ஆயிரம் கோடி செலவில், பள்ளி, மருத்துவ விடுதி, நூலகம் போன்றவற்றிற்குப் புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க முன் வந்தது. பொதுவாக, அரசு ஆணை வந்தபிறகு சம்பந்தப்பட்ட நகராட்சி, மாநகராட்சி ஆகியவை அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைப் பெற்று அவற்றுக்கான கட்டிடங்களைக் கட்ட வேண்டும். நம் நாட்டில் இருப்பதைப் போன்ற அரசாங்க நடைமுறை அங்கேயும் உண்டு. பத்திரிகைகளில் டெண்டர் வரும். பலர் கொட்டேஷன் கொடுப்பார்கள். குறைவான தொகைக்குக் கொட்டேஷன் கொடுத்தவர்களுக்கு அந்தப் பணி ஒதுக்கீடு செய்யப்படும். இங்கு உள்ளதைப் போலவே அங்கும் இந்த

நடைமுறைகளைப் பூர்த்தி செய்யப் பல மாதங்களாகும். மேலும் ஒரு விசேடம்: அது அமெரிக்காவுக்கே உரியது.

புதிதாக ஒரு பள்ளிக் கட்டிடத்தைக் கட்ட வேண்டுமானால், ஏற்கனவே உள்ள பள்ளியின் கட்டிட அளவு எவ்வளவு, மக்கட் தொகை எவ்வளவு, பள்ளியில் பயிலும் மாணவர்களின் தொகை எவ்வளவு—என்பன போன்ற விவரங்களைக் குறிப்பதுடன், இனி வரும் 20 ஆண்டுகளில் அங்கு மக்கட் தொகையில் ஏற்படக் கூடிய அதிகரிப்பு, மாணவர் தொகையில் ஏற்படக் கூடிய அதிகரிப்பு, அந்தத் தேவைகளுக்கு ஏற்பச் செய்யப்பட வேண்டிய விரிவு ஆகிய விவரங்களையும் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் டெண்டர் கொடுக்க வேண்டும். மருத்துவ விடுதி, நூலகம் போன்றவற்றுக்கும் அவ்வாறே கணக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தக் கணக்குகளை எல்லாம் எடுத்து டெண்டர் கொடுப்பதற்குள் அந்த ஆண்டின் கடைசித் தேதி தாண்டி விடும். அவ்வாறு நேர்ந்தால் அந்த ஆண்டிற்காக ஒதுக்கப்படும் தொகையை, நகராட்சிகளும், மாநகராட்சிகளும் அரசுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இது அரசின் திட்டம். இதைப் போன்றதொரு பொது நலத் திட்டம் அங்கு முதன் முறையாக வந்ததால், எல்லாக் காண்ட்ராக்ட்டர்களும் அந்த நிலையைச் சமாளிக்க முடியாமல் திணறினார்கள்.

அவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டது வால்டரின் நிலை. கடந்த 30 ஆண்டுகளாக அவர் இதைப் போன்றதோர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் பல பணிகளை நீண்ட காலமாகச் செய்து வருவதால், நாட்டில் உள்ள அனைத்துக்குமான புள்ளி விவரங்கள் அவரிடம் தயாராக இருந்தன. 'அவரால் எல்லா மாநகராட்சிகளுக்கும் உடனடியாகத் திட்டங்களைத் தயாரிக்க முடியும். அவர் ஒருவராலேயே டெண்டருக்குக் குறித்த நேரத்தில் திட்டம் கொடுக்க முடியும்' என்ற நிலை. தொழிலில் அது உச்சபட்சமான அதிர்ஷ்ட நிலை.





அவர் 30 கோடி டாலருக்கும் அதிகமான திட்டங்களைக் கொடுத்து அங்கீகாரம் பெற்றார்.

"என் 30 ஆண்டு காலக் கடுமையான உழைப்பு, இப்பொழுது மொத்தமாகப் பலன் தரப் போகிறது. இப்பொழுது 30 கோடி டாலர்களுக்கான ஆர்டர் என் கையில்! இனி வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்" என்று வால்டர் தம் மகனிடம் பெருமையாகக் கூறினார்.

ஆனால், வேலையை ஆரம்பிப்பது அப்படி ஒன்றும் சுலபமாக இருக்கவில்லை. வேலையைச் செய்ய அவருக்கு ஓர் உத்தரவு வந்தது என்னவோ உண்மை. என்றாலும், அந்த உத்தரவை வைத்துக் கொண்டு வேலையை ஆரம்பித்துவிட முடியாது. "வேலையை ஆரம்பிக்கலாம்" என்று இன்னோர் உத்தரவு வரவேண்டும். 'சர்வீஸ் கமிஷனில் செலக்ஷனாகி விட்டாலும், போஸ்டிங் ஆர்டர் வந்த பிறகுதான் பணியில் சேர முடியும்' என்பதைப் போன்ற நிலை அது.

அமெரிக்கக் காங்கிரஸ் பாஸ் செய்த எல்லாச் சட்டங் களையும் ஜனாதிபதி ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட வேண்டும். இந்திய ஜனாதிபதிக்கும் அதே போன்று அதிகாரம் உண்டு. ஜனாதிபதி கையெழுத்துப் போடலாம்; மறுக்கவும் செய்யலாம். அமெரிக்கக் காங்கிரஸ் பாஸ் செய்த பொது நலச் சட்டம், அமெரிக்க ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக எடுத்துச் செல்லப்பட்டது. அதை அவர் ஏற்கவில்லை. தனக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்தச் சட்டத்தை ரத்துச் செய்து விட்டார்.

வால்டருக்குக் கைக்கு எட்டியது வாய்க்குக் கிட்டவில்லை. பெரிய பலன்கள் கிடைத்தாக வேண்டிய எல்லாச் சந்தர்ப்பங் களிலும் ஏமாற்றமே எதிர் நின்றது. அவருக்கு இந்த நிலையில் காணிக்கையின் மகத்துவம் புரிந்தது. என்றாலும் அவர் அன்னைக்குக் காணிக்கை அனுப்பவில்லை.

தொடர்ந்து வந்த தோல்விகளால் தொய்ந்து போன வால்டர், ஒரு கோடி பெறுமானம் உள்ள தன் நிறுவனத்தை, தம் பெரிய பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற்றார்.

அவருடைய பெரிய பிள்ளை தம் தந்தையைவிடத் திறமைசாலி. தொழிலைப் பல வழிகளிலும் புதுமைப்படுத்தினார். எல்லாம் சரியாகத்தான் இருந்தன. என்றாலும் எங்கேயோ கோளாறு; எதிலோ ஓட்டை. இரண்டே வருடங்களில் நிறுவனம் நொடித்துப் போய்விட்டது. அவர் சுத்தமாகத் திவாலாகிவிட்டார். திவால் ஆனதைக் கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

புதுவையில் இருந்த அவருடைய தம்பிக்கு இந்தச் செய்தி கிடைத்தது. 'ஒரு பத்து டாலரை அன்னைக்குக் காணிக்கை அனுப்பச் சம்மதித்தால் இழந்தவை எல்லாம் திரும்பி வரும்' என்று எழுத நினைத்த அவர், தம் அண்ணிக்கு அதை எழுதினார். அவருடைய கடிதம் கிடைத்ததும் அண்ணி அந்த விஷயத்தைத் தம் கணவருக்குக் கூறினார். அவர் இருபது டாலர் கொடுத்து அதைத் தம் தம்பிக்கு அனுப்பச் சொன்னார். இப்பொழுது வால்டரும் தம் பங்குக்கு 100 டாலர் சேர்த்து 120 டாலராக அனுப்பி வைத்தார். அதே வருடத்தில் இழந்த ஒரு கோடியும் திரும்பக் கிடைத்தது. ஆனால், திரும்பும்போது, அது இரண்டரைக் கோடியாக வந்தது!

இதுதான் காணிக்கைக்குள்ள சிறப்பு.

✶✶✶



# 25. தமிழர் மரபில் வாழ்க்கைப் பிரச்சினைகளும், அன்னையின் அருளும்

வேத காலத்திலிருந்து இன்றுவரை நம் வாழ்க்கை தெய்வீக நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததாகக் கூறப்படும் திருமூலர் வழியில் வந்த தமிழ் மக்களின் வாழ்க்கையில், ஆன்மிகமே முதல் இடத்தைப் பெற்று வருகின்றது. சிவன், விஷ்ணு முதலிய கடவுள்களை வழிபடும் தமிழர்கள் சைவ, வைணவ மரபுகளை உருவாக்கி அவற்றை வளர்ப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான ஆலயங்களை எழுப்பி இருக்கின்றார்கள். "எவ்வளவு உயர்ந்த வர்களாக இருப்பினும் – ஆண்டவனின் அவதாரமாகவே இருப்பினும் கூட – மனிதர்களுக்குக் கோயில் எடுக்கும் வழக்கம் தமிழர்களிடம் இல்லை" என்று டாக்டர் வாசவன் கூறி இருக்கும் கருத்து, இங்கு சிந்திக்கற்பாலது.

ஆன்மிகம் இவ்வுலகத்தைப் புறக்கணிக்கின்றது. அதனால் அது மனித வாழ்வைத் தெய்வீகமாக ஏற்றுக் கொள்வது இல்லை. அதன் காரணமாக மனித வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருக்கும் பிரச்சினைகளையும், அந்தப் பிரச்சினைகளை விளக்குவதற்கான வழி முறைகளையும் ஆன்மிகம் கண்டு கொள்வதே இல்லை.

சன்னியாசமும், யோகமும் போற்றுதற்குரிய பெரு நெறிகள். அவை வாழ்க்கையை வைரியாகக் கருதுகின்றன. அதனால் அவை வாழ்க்கையில் உள்ள சிக்கல்களைப் புறக்கணித்து விட்டு அப்பால் விலகிச் சென்றுவிடுகின்றன. ஆகவே வாழ்க்கையில் உழலும் பாமரர்களுக்கு அவற்றால் பயன் இல்லை.

அதே சமயத்தில் ஆன்மிகம், சன்னியாசம், யோகம் போன்ற மாறுபட்ட நெறிகளைப் படைத்துச் சுவாரசியமான சுழற்சி மையமாக இருக்கும் இறைவனைவிட்டும் (அவன் எவ்வளவுதான் புதிரானவனாக இருப்பினும்கூட) அவனால் விலகிப் போகவே முடிவதில்லை. அதனால் அவர்கள் இம்மைக்கு இவ்வுலகத்தையும், மறுமைக்கு இறைவனையும் ஏற்றுக் கொண்டு எப்படியோ திருப்தி அடைகின்றார்கள். 'உயர்ந்தோர்' எனப்படுபவர், மறுமைக்குப் புண்ணியம் சேரும் வகையில் இவ்வுலக வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றார்கள். மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள அவர்களை விட்டுவிட்டால், மிகுதியாக மிஞ்சி இருப்பவர்கள் சாதாரண மக்கள். அவர்களுடைய வாழ்க்கை, பிரச்சினைகள் நிறைந்ததாக அமைந்திருக்கின்றது. தம்மை வாட்டும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு அவர்கள் எப்படி எல்லாமோ முயன்று பார்க்கின்றனர். அதில் வெற்றி கிடைக்காத போது அவர்கள் தெய்வங்களின் துணையை நாடுகின்றனர்.

பொதுவாக, சாதாரண மக்கள் சிவபெருமானிடமோ, திருமாலிடமோ அந்தத் துணையை எதிர்பார்ப்பது இல்லை. வினைகளைத் தீர்ப்பவர் என்றும், பிரார்த்தனைகளுக்கு உடனே செவி சாய்ப்பவர் என்றும் விநாயகர் போற்றப்படுகின்றார். அவரைப் போலவே சாதாரண மக்களிடையே முருகன், காளி, ஐயப்பன், அம்மன் முதலிய கடவுளர்களின் ஆலயங்கள் பிரசித்தி அடைந்துள்ளன. ஓரிரு கோயில்களைத் தவிர அந்த அளவிற்கு சிவபெருமானை அல்லது திருமாலை வழிபடு தெய்வங்களாகக் கொண்ட கோயில்கள் உயரவில்லை.

திருமணம் கூடவும், குழந்தைப் பேறு கிடைக்கவும், செல்வம் உண்டாகவும், இவற்றைப் போன்ற பல கோரிக்கைகள் நிறைவேறவும், பல விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. துர்க்கை, வரலட்சுமி போன்ற தெய்வங்களை வேண்டி இந்த விரதங்கள் நோற்கப்படுகின்றன. பொதுவாக, தெய்வங்களுக்குள் மேலான தெய்வங்களாகக் கருதப்படும் சிவபெருமானும், திருமாலும், அவர்கள் உறையும் ஆலயங்களும் புண்ணிய





மூர்த்திகளாகவும், புண்ணியத் தலங்களாகவும் கருதப்படுகின்றனவே தவிர, அங்கே வாழ்க்கைச் சிக்கல்கள் தீர்வதற்கான கோரிக்கை எதுவும் வைக்கப்படுவது இல்லை.

அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும், 'உலகத்தையோ அல்லது வாழ்க்கையையோ புறக்கணிப்பது தவறு' என்று உறுதியாகக் கூறுகின்றார்கள். காயத்தைப் (உடலை) 'பொய்' என்று கூறும் கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 'காயத்தில் பொதிந்துள்ள பொய்யையும், உலகத்தைப் பிணித்துள்ள துன்பத்தையும்தாம் புறக்கணிக்க வேண்டும்' என்று அவர்கள் தெளிவுப்படுத்தி இருக்கின்றார்கள். 'யோகத்தின் குறிக்கோளே அதுதான்' எனவும் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

'பிரச்சினைகள்' என்பது என்ன? 'பொய்யின் வடிவங்கள்' என அவர்கள் கூறுகின்றார்கள். ஸ்ரீ அரவிந்தர் வகுத்துள்ள யோகத்தை ஏற்றுக் கொண்டு அதன் வழியே செல்கின்றவர்கள், முதலில் இவ்வுலகையும், வாழ்க்கையையும் ஏற்றுக் கொள்வதோடு, அவற்றில் இருக்கும் பொய்களை அடியோடு களையவும் முயல வேண்டும். அம்முயற்சியின் பயனாய் பொய் மறைய, பிரச்சினைகளும், அவற்றால் விளைகின்ற துன்பங்களும் அகலும்.

அதில் வெற்றி பெறுகின்றவர்கள் பொய்யை அழித்து, சத்தியத்தை நிலை நாட்டுகின்ற அன்னையின் உண்மையான தொண்டர்களாகி விடுகின்றார்கள். 'வறுமையைப் போக்க வேண்டும்' என்றோ, 'வியாதி தீர வேண்டும்' என்றோ, 'பெண்ணுக்குத் திருமணம் நடைபெற வேண்டும்' என்றோ, 'உத்தியோகம் கிடைக்க வேண்டும்' என்றோ மக்கள் அன்னையை நாடுகின்றபொழுது, அன்னை அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, வேறு ஒன்றையும் அருளுகின்றார். அந்த அன்பர்கள் அனைவரும் பொய்யை விடுத்து, சத்தியத்தை நாடுவதாகக் கருதி மகிழும் அன்னை, அவர்களின் பக்குவத்திற்கு ஏற்ப உள்ளொளியைப் பெருக்கித் தருகின்றார். உள்ளொளி பெருகி

வளர வளர, சம்பந்தப்பட்டவர்களின் எல்லாப் பிரச்சினைகளும் அடியோடு விலகிவிடுகின்றன. அவர்களுடைய இந்த விடுதலையானது, இறைவனை நோக்கித் தீவிரமாகச் செல்வதற்கான பேரூக்கமாக அமைந்துவிடுகின்றது.

இத்தகைய நிலையை அடைந்து நிற்கும் அன்னையின் அன்பர்கள், ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மிகமும், வாழ்க்கையும் வெவ்வேறானவை அல்ல. இவ்வுலகும், வாழ்வும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவை. அவற்றை ஒளி மயமாக்கி, போற்றுவதற்குரியதாகச் செய்ய வேண்டியது நம் தலையாய தொண்டு. அதுவே அன்னைக்குச் செய்யும் தொண்டுமாகும்.

அன்னையை நாடி வருகின்றவர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர்: அன்னையை, 'பராசக்தியின் திருவவதாரம்' என உணர்ந்தவர்கள். அவர்கள் தம் வாழ்க்கையைப் பூரணமாக அன்னைக்கும், அன்னையின் யோக நெறியான பூரண யோகத்திற்கும் அர்ப்பணம் செய்து கொண்டவர்கள். யோகத்தையே முதல் இலட்சியமாகக் கொண்டு அன்னைக்காக அன்னையின் அருகில் ஆசிரமத்தில் தங்கி இருக்கும் சாதகர்கள் அவர்கள். மற்றொரு பிரிவினர்: சிறு சிறு தொல்லைகளிலிருந்து விடுபடவும், வளங்களையும் நலங்களையும் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்தோடும் அன்னையை ஏற்றுக் கொண்டு குடும்பஸ்தர்களாக இருப்பவர்கள். இந்தப் பிரிவைச் சேர்ந்த அத்தனை பேர்களும் அவ்வப்போது ஆசிரமத்திற்கு வந்து செல்கின்றவர்கள்.

இந்தக் கட்டுரை அவர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காகவே எழுதப்படுகின்றது.

பிரச்சினைகள் நிரம்பியது மனித வாழ்க்கை. உதாரணத்திற்கு ஓர் இளைஞனை எடுத்துக் கொள்ளலாம். அவன் படித்துப் பட்டம் பெறுகின்ற வரையிலோ, ஒரு வேலையைப் பெறுகின்ற வரையிலோ, சுமை அவனுக்கு இல்லை; அவன் பெற்றோர்க்குத்தான். பிறகு





அவன் தனக்குக் கிடைத்த வேலையில் கால் ஊன்றி, அதற்குப் பிறகு திருமணத்தைச் செய்து கொண்டு வாழ்க்கையில் கால் ஊன்றி, தனக்கு என்று ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளும் பொழுது வாய்ப்புகளும், அவை தொடர்பான பிரச்சினைகளும் அவனை எதிர் கொள்கின்றன.

அவன் பலருடன் தொடர்பு கொள்ள வேண்டும்; பல காரியங்களைச் சாதிக்க வேண்டும்; பற்பல சூழ்நிலைகளில் சிக்கிச் சுழன்று மீண்டுவர வேண்டும். இத்தனையும் கொண்டதே வாழ்க்கை. ஆனால், ஆளுக்கு ஆள் வாழ்க்கையும், பிரச்சினைகளும் மாறுபடுகின்றன. அதாவது, 'ஆண்', 'பெண்' என்ற இன வேறுபாட்டாலும், வயது, குணம், பொருளாதாரம், உடல் திறன், மன வலிமை, அறிவு முதலானவற்றில் குறுக்கிடும் வேறுபாடுகளினாலும் மக்களிடையே காணப்படும் பிரச்சினைகளும் வேறுபடுகின்றன.

வேறுபடுகின்ற பிரச்சினைகளின் வேரினை வெட்டி வீழ்த்தவும், வாய்ப்புகளைப் பெற்றுப் பலன் அடையவும், தோல்விகளை எல்லாம் வெற்றியாக மாற்றவும், நாம் அன்னையை நாடும்பொழுது அன்னையின் அருள் எவ்வாறு செயல்படுகின்றது என்பதை இனி நோக்குவோம்.

அன்னை கூறிய முக்கியமான கருத்து ஒன்றினை முதலில் நினைவு கொள்ள வேண்டும். "இப்பொழுது மனிதன் பொய் கூறுவது போல உலக வரலாற்றிலேயே இந்த அளவிற்கு வேறு எப்பொழுதும் அவன் பொய் கூறியது இல்லை" என்கிறார் அன்னை. இன்றைய சூழ்நிலையில் ஒருவன் நல்ல முறையில் குடும்பம் நடத்த வேண்டுமானால், பல பொய்களைக் கட்டாயமாகப் பேச வேண்டி இருக்கின்றது. பொய் சொல்ல விரும்பாதவர்கள், பல சிக்கல்களுக்கு இரையாகி வாழ்க்கையின் கீழ் மட்டத்திற்குத் தள்ளப்படுகின்றார்கள்.

வாடகை வீட்டில் வசிப்பவர்கள் வீட்டுச் சொந்தக்காரரிடம், "நான் கொடுக்கும் வாடகைக்கு ரசீது வேண்டும்" என்று கேட்டால் அவர்களுக்கு ரசீது கிடைக்காது. அதற்குப் பதிலாக

அவர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டு வீட்டிலிருந்து விரட்டி அடிக்கப்படுவார்கள். "நல்ல பள்ளியில் இடம் பெறுவதற்கு முறையற்ற வகையில் பணம் கொடுப்பது இல்லை" என்று பிடிவாதம் காட்டுகின்றவர்களுடைய குழந்தைகளுக்கு ஏதோ ஒரு சராசரிப் பள்ளியில்தான் இடம் கிடைக்கும். தொகையைக் கொடுக்கத் தயங்காதவர்களுடைய குழந்தைகள்தாம் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து தரமான கல்வியைப் பெறுகின்றனர். நேர்மையைக் கடைப்பிடிக்கும்பொழுது ஏற்படும் எதிர் மறையான விளைவுகளை, இது போல அடுக்கிக் கொண்டே போகலாம். பொய் பேச விரும்பாவிட்டால் நல்ல உத்தியோகம் கிடைக்காது; நல்ல தொழிலைத் தொடங்க முடியாது. சுருங்கக் கூறினால், நல்லது எதையும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

இதிலிருந்து, "இப்பொழுது மனிதன் பொய் கூறுவது போல, உலக வரலாற்றிலேயே இந்த அளவிற்கு வேறு எப்பொழுதும் அவன் பொய் கூறியது இல்லை" என்ற அன்னையின் கூற்று எவ்வளவு உண்மை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அன்னையை ஏற்றுக் கொண்டவர்கள், 'பொய் கூறித்தான் நல்லவற்றைப் பெற வேண்டும்' என்பதில்லை. நம் மனத்தில் 'பொய் சொல்லக் கூடாது, தவறு செய்யக் கூடாது' என்ற எண்ணம் உண்மையாகவும், உறுதியாகவும் இருக்குமேயானால், நமக்குப் பொய் சொல்ல வேண்டிய சந்தர்ப்பமே நேராது. மேலும் நமக்குத் தேவையான நல்ல கல்வி, நல்ல வீடு, நல்ல உத்தியோகம், நல்ல சூழ்நிலை போன்றவை அபரிமிதமாகக் கிடைக்கும். "உன் மனத்தில், 'பொய் சொல்லக் கூடாது; தவறு செய்யக் கூடாது' என்ற எண்ணம் இருந்தால், பொய் சொல்லக் கூடிய சந்தர்ப்பத்தையே நான் உனக்குக் கொடுக்க மாட்டேன்" என்று கூறுகின்றார் அன்னை. மேலும் கூறுவார்: "பொய்யையும், முறையற்ற வகையில் வரும் வருவாயையும் நம்பி நடத்தும் வாழ்க்கையைவிட, உண்மையையும் நேர்மையையும் நம்பி நடத்தும் வாழ்க்கை, பன்மடங்கு வளமாக இருக்கும்".





'ஓரளவு நேர்மையை விட்டுக்கொடுத்தாலன்றி சௌகரியமான வாழ்க்கையைக் காண்பது என்பது சாத்தியமே இல்லை' என்று நம்புகின்ற சாதாரண மக்களுக்கு, அன்னையின் கூற்று நம்ப முடியாததாக இருக்கலாம். உதாரணமாக, "தவறு செய்தாலன்றி யாரும் செல்வராக முடியாது" என்று பெரும்பாலான மக்கள் நம்புகின்றார்கள். இந்தப் பின்னணியில் "அன்னையின் கூற்றில் எந்த அளவுக்கு உண்மை இருக்கின்றது?" என்பதைச் சிந்திப்போம்.

"உண்மை பொய்யைவிடப் பன்மடங்கு வலிமை பெற்றது. ஆகையால் உண்மையைக் கடைப்பிடிக்கும்பொழுது மிகப் பெரிய அளவில் சிறந்த பலன்களைப் பெற முடியும்" என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். உண்மையைக் கடைப்பிடிப்பது என்பது அவ்வளவு எளிதானது அன்று. அதற்கு மரணத்தையும் பொருட்படுத்தாத மனவலிமை வேண்டும். அத்தகைய மன வலிமையும், தியாக நோக்கும் ஓர் இலட்சிய வீரனுக்கே இருக்க முடியும். இந்த இடத்தில், 'ஒரு சாதாரண மனிதனால் உண்மையை உறுதியோடு பின்பற்ற இயலாதா?' என்ற ஐயப்பாடு எழுகின்றது.

அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு, வாழ்க்கையில் சாதாரணமாக ஏற்படக் கூடிய சிக்கல்களை அடியோடு மாற்றி அமைத்துவிடுகின்றார் அன்னை. அவர் தம் அன்பர்களிடம் படிந்துள்ள பொய்யை விலக்கி, கொஞ்சம் கொஞ்சமாக உண்மையைக் கடைப்பிடிக்கும் மனவலிமையைத் தம் அன்பர்களுக்குக் கொடுத்து விடுகின்றார். உதாரணமாக, வீடு தேவைப்படும் அன்பருக்கு, அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் வீடு ஒன்றைக் கொடுத்து, ரசீது கேட்க வேண்டிய அவசியத்தை இல்லாமல் செய்துவிடுகின்றார்.

இங்கு ஓர் அன்பரின் அனுபவத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அவர் ஒரு தொழிலதிபர். அரசாங்கத் துறைகளில் ஆக வேண்டிய காரியங்களை, பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து மிகச் சுலபமாக முடித்துவிடுவார்.

அந்த வழக்கம் அவருக்கு ஒரு வாழ்க்கை முறையாகவே அமைந்திருந்தது. அவர் அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு, புதிய தொழில் ஒன்றைத் தொடங்கி, அதற்காக அரசுடமை யாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கடன் கேட்டிருந்தார். அவர் கேட்டிருந்த தொகை ஆறு கோடி ரூபாயாகும். ‘அது சம்பந்தமான காரியங்கள் அனைத்தையும் தம் வழக்கத்திற்கு மாறாக நேர்மையான வழியில்தான் செய்ய வேண்டும்’ என்ற உறுதியோடு அவர் செயல்பட்டு வந்தார். முடிவில் கடன் தொகை உரிய காலத்தில் கிடைக்க ஏற்பாடாகி, அந்தத் தொகையும் எந்த விதச் சிக்கலும் இல்லாமல் அவர் கைக்குக் கிடைத்துவிட்டது. அந்தத் தொழிலும் அகடவிகட சாமர்த்தியம் எதுவும் இல்லாமல், முறையாக வளரத் தொடங்கியது. உடன் இருந்தவர்களும், அவரை நன்கு அறிந்தவர்களும் அதைப் பார்த்து வியந்தனர்.

அவர் ஆரம்பித்த தொழில் நாட்டு முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒன்று. அவருக்குக் கடன் கொடுத்த வங்கி, அவர் அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு முன்னால், பலரை அணுகி அத்தொழிலை ஆரம்பிக்குமாறு தூண்டியும்கூட, அவர்களில் யாரும் செவி சாய்க்கவே முன்வரவில்லை. அந்த நிலையில்தான் அந்த அன்னையின் அன்பர் அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு அந்த வங்கியின் உதவியை நாடினார். அவரைக் கண்டதும் பழம் நழுவி பாலில் விழுந்தது போலாகிவிட்டது வங்கியில் உள்ளவர்களுக்கு. ஆகவே, வங்கி தீவிரமாகச் செயல்பட்டு அவருக்குத் தேவைப்பட்ட தொகையை மறுமொழி இல்லாமல் வழங்கிவிட்டது. இதிலிருந்து அந்த அன்பருக்குத் தேவையான ஒரு சூழ்நிலையை அன்னை எத்தனை சிறப்பாக உருவாக்கிக் கொடுத்துவிட்டார் என்பதை உணரலாம்.

அன்பர்கள் தங்களுடைய வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளத் தேவையானவை: நேர்மையும், உண்மையும். இவற்றை முழு மனத்தோடு கடைப்பிடித்து ஆர்வத்தோடு செயல்பட்டு வந்தால், அவர்களுடைய வாழ்க்கையில் வளங்கள் குவியும்.





அன்னையை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கையில் ஏற்படுவது புதிய அத்தியாயம் இல்லை; ஒரு புதிய சகாப்தம் ஆகும். அதாவது, நாம் எடுத்த பிறவியில் இன்னொரு புதிய பிறவி கிடைக்கின்றது. அதற்குத் தக்கபடி புதிய எண்ணங்கள், புதிய பார்வைகள், புதிய மாற்றங்கள், புதிய ஏற்றங்கள் எல்லாம் ஏற்படுகின்றன.

அன்னையின் அன்பர்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம். அவர்களிடம் அன்னையின் அருள் செயல்படும் விதத்தை நோக்குவோம். கீழே கூறப்படும் யாவும் சாதகர்களைக் கருத்தில் கொண்டவை அல்ல; அவை அன்பர்களுக்காக மட்டுமே கூறப்படுபவை.

முதல் வகையைச் சேர்ந்தவர்கள், அறிவில் சிறந்தவர்கள். அவர்களுக்குத் தியானம் இயல்பாகவும், சுலபமாகவும் அமையும். அவர்கள் தியானத்தை மேற்கொண்டால் அறிவு தெளிவு அடையும். அந்தத் தெளிவால் அவர்களுடைய வாழ்க்கை ஒளி மயமாக அமையும். பொய், புரட்டுப் போன்றவை அவர்களிடமிருந்து விலகும். சில ஆண்டுகளுக்குப்பிறகு, “என் வாழ்க்கையில் இம்மாதிரியான நல்ல மாற்றங்கள் ஏற்படும் என்று நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை” என்று சொல்லும் அளவுக்கு, அவர்களுடைய வாழ்க்கை படிப்படியாக உயரும்.

இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள், உணர்ச்சியை மையமாகக் கொண்டவர்கள். அவர்களுக்கு பக்தி இயல்பாக அமையும். அவர்கள் தியானத்தை மிக எளிதில் பயிற்சி செய்வார்கள். அந்தத் தியானம் பக்தி பூர்வமாக அமையும். ஆனால், ஞான பூர்வமாக அமையாது. நெஞ்சிலிருந்து செய்யும் தியானம் அவர்களுக்கு மிகவும் பொருந்தும். அன்னையின் சத்தியப் பேரொளி, உணர்ச்சிகளின் மூலமாக அவர்களின் இதயத்தில் புகுந்து செயல்படுகின்றது. அவர்களுடைய வாழ்க்கை தொடர்ந்து முன்னேறும். அவர்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியும், வளமும் முக்கிய அம்சங்களாக அமையும்.

மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்கள், செயல் திறம் படைத்தவர்கள். அவர்களுக்கு ஞானம், பக்தி, தியானம் போன்றவை இயல்பாக அமைவதில்லை. என்றாலும் அவர்கள் எதையும் செம்மையாகச் செய்வதில் வல்லவர்களாக இருப்பார்கள். எனவே, தம் செயலை "அன்னைக்கு அர்ப்பணம் செய்தல்" என்பது அவர்களுக்கு மிகவும் பொருத்தமானது. காலக் கட்டத்தில் அவர்கள் எதனையும் தங்கள் திருப்திக்காகச் செய்யாமல் அன்னையின் சேவையாகச் செய்யும் நிலையை அடைவார்கள். அவர்களுடைய வாழ்க்கை விரிந்து பரந்து ஒளி மயமான சிறப்பால் நிரம்பி நிற்கும். அவர்கள் புதிய நிறுவனங்களை உருவாக்குவார்கள். விருதுகளைப் பெறுவார்கள். அவர்களுடைய சேவை சிறு அளவில் தோன்றி, பெரிய அளவில் வளர்ந்து நாடு முழுதும் பரவும். எல்லாக் கட்டங்களிலும் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

நான்காவது வகையைச் சேர்ந்தவர்கள், மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் அடங்காதவர்கள். "நான் சாதாரண மனிதன்; குடும்பத்தையும், உத்தியோகத்தையும் தவிர, வேறு எதையும் அறியாதவன். என் வாழ்க்கையில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. நீங்கள் சொல்வது மேல் நிலை மனிதர்களைப் பற்றி. அது எனக்கு ஒத்து வாராது" என்று கூறக் கூடியவர்கள் அவர்கள். 'அப்படிப்பட்டவர்கள் அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு சிறப்பு மிக்கவர்களாக மாறிவிடுவார்கள்' என்பது அனுபவத்தின் மூலம் தெளிவான உண்மை. அன்னையை ஏற்றுக் கொண்ட பிறகும்கூட அவர்கள் வழக்கம் போலவே செயல்படலாம். ஆனால், ஒரு மாறுதலுடன் அவர்கள் எந்த ஒரு செயலையும் அன்னையை நினைத்துத் தொடங்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், அதை 'நினைவே வழிபாடு' எனலாம். அவர்கள் அவ்வாறு தொடர்ந்து அன்னையை ஒவ்வொரு செயலையும் தொடங்குவதற்கு முன்னால் நினைவு கூர்வதால், அன்னை அவர்களுடைய எண்ணங்களையும், செயல்களையும், அவை பற்றிய சூழ்நிலைகளையும், கொஞ்சம் கொஞ்சமாக இருளின் பிடியிலிருந்து மீட்டு, ஒளியின் ஆதிக்கத்திற்குள் கொண்டு





வந்துவிடுகின்றார். அதன் பலனாக, பிரச்சினைகள் தாமாக விலகி, வாய்ப்புகள் நிறைந்து, அவர்களுடைய வாழ்க்கை அடுத்த கட்டங்களை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கின்றது.

இந்தக் கடைசி வகையினரை நான்கு பிரிவினராக வகைப்படுத்தலாம். அவர்கள் யார், யார்?

1. பிரச்சினை நிறைந்தவர்கள்;

2. பிரச்சினை இல்லாதவர்கள்;

3. ஆழ்ந்த உணர்ச்சி உள்ளவர்கள்;

4. சிறந்த உழைப்பாளிகள்.

அவர்களில் பிரச்சினை நிறைந்தவர்களைப் பற்றிச் சிந்திப்போம். 'மருத்துவத்திற்குக் கட்டுப்படாத வியாதி, பெற்றோருக்குக் கட்டுப்படாத பிள்ளைகள், வயது கடந்த நிலையிலும் திருமணம் ஆகாத பெண்கள், பல ஆண்டுகளுக்குமுன் வீட்டைவிட்டு ஓடி விட்டவர்களுடைய நிர்க்கதியாக நிற்கும் குடும்பம், வருடக் கணக்காகத் திரும்பி வாராத பணம், தொலைந்து போன நகைகள்' என அவர்கள் வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள். வேறு சிலருடைய வாழ்க்கையில் வேறு விதமான பிரச்சினைகள் இருக்கலாம். அத்தகையோரின் பிரச்சினைகள் எதனாலும் தீர்க்க முடியாத நிரந்தரப் பிரச்சினைகளாக இருக்கும்.

அவர்கள் அன்னையை ஏற்றுக் கொண்டு, 'பிரச்சினை தீர வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து கொண்டால், பாறையைப் போல அடைத்துக் கொண்டு நிற்கும் பிரச்சினை பனி போல் நீங்கும்.

பிரச்சினை நிறைந்தவர்களின் பிரிவில் ஓர் உட்பிரிவும் உண்டு. 'பிரச்சினை' என்பது பொதுவாகத் தானாக ஏற்படுவதுதான் வழக்கம். அதற்கு மாறாக, சிலர் பிரச்சினையைத் தாமே தேடிக் கொள்வதும் உண்டு. உதாரணமாக, வசதி மிக்க ஒருவர்

ஊரிலேயே நாணயம் கெட்ட ஒருவருக்கு, 'கடன் கொடுக்க வேண்டாம்' என்று உறவினர்களும், நண்பர்களும் கூறியதைப் புறக்கணித்துவிட்டுக் கடன் கொடுக்கின்றார். பிறகு கொடுத்த பணம் திரும்பி வாராத நிலையில் தம்மைத் தாமே நொந்து கொள்கின்றார் அவர். தமக்குக் கணிதம் வாராது என்று தெரிந்தும்கூட, பொறியியல் கல்லூரியில் சேர்ந்து ஒவ்வொரு வருடமும் தேர்வில் தவறித் திண்டாடுகின்றார்கள் சிலர். 100 ஏக்கருக்குமேல் சொத்துள்ள செல்வர் ஒருவர், எம்.ஏ. படித்த தம் அழகிய பெண்ணுக்கு 35 வயதுவரை திருமண முயற்சி எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, காலம் கடந்த நிலையில், 'என்ன செய்வது?' என்று தெரியாமல் கவலையில் மூழ்குகின்றார்.

மேற்கூறியவர்கள் தவறான நோக்காலும், பிடிவாதத்தாலும் வேண்டுமென்றே பிரச்சினையை உற்பத்தி செய்பவர்கள். அவர்களுடைய பிரச்சினை உடனே தீர வேண்டுமானால், அவர்கள் தமது குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கிக் கொள்ள முன்வந்து புதுக்கிய மனத்துடன் அன்னையைப் பிரார்த்தனை செய்தால், பிரச்சினை உடனே தீரும். பொதுவாக, தன்னை மாற்றிக் கொள்ள முன்வருபவர்கள் மிகவும் குறைவு. மன மாற்றமின்றிக்கூட அன்னையிடம் செய்யும் பிரார்த்தனை பலன் அளிக்கும். ஆனால், உடனே பலன் கிடைக்காது. நிதானமாக, காலப் போக்கில் பலன் கிடைக்கும்.

வாழ்வில் பிரச்சினைகள் நிறைந்த அவர்களுக்கு, 'வீடு கட்ட வேண்டும்', 'பெரிய உத்தியோகத்திற்குப் போக வேண்டும்' என்பன போன்ற ஏராளமான எதிர்பார்ப்புகள் இருக்கலாம். அவர்கள் அன்னையை ஏற்றுக் கொண்ட ஒரு வார காலத்திற்குள் அவை ஆச்சரியப்படும் வகையில் திடீரென்று பூர்த்தியாகிவிடும். இரண்டாவது பிரிவில் குறிப்பிட்டபடி குறைகள் இருக்குமானால், அவற்றை விலக்கியவுடன் அபிலாஷைகள் பூர்த்தியாகிவிடும். குறைகளை நீக்கிக் கொள்ளாவிட்டாலும்கூட அன்னையை ஏற்றுக் கொண்ட காரணத்தால், அவை நிதானமாகப் பூர்த்தியாகும்.





பிரச்சினை இல்லாதவர்கள்: அவர்கள் குண நலனும், செயல் திறமும் படைத்தவர்கள்; பெரிய எதிர்பார்ப்புகளை வாழ்க்கையில் வைத்துக் கொள்ளாமல் அமைதியாக வாழ்பவர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏதும் எழுவதே இல்லை. அவர்கள் முழு மனத்துடன் அன்னையைத் தம் தெய்வமாக ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் வாழ்வில் 'அற்புதம்' என்று கருதும்படியாகப் பல அரிய நிகழ்ச்சிகள், அடுத்தடுத்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். அவர்கள் அன்னையை வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்ட ஓர் ஆண்டுக்குள்ளேயே தம் செல்வம், செல்வாக்கு, தொழில், பதவி முதலியவற்றில் இருமடங்கு முன்னேற்றத்தைக் காண்பார்கள்.

கீழ்க்கண்ட சில உதாரணங்கள் இந்தக் கூற்றுக்குச் சான்றுகளாக அமைகின்றன.

பாதிரிமார்களையே தலைமை ஆசிரியராகப் போடும் நூறாண்டு காலப் பழக்கமுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில், திறமைகள் நிறைந்த ஒருவர் ஆசிரியராக இருந்தார். எத்தனை திறமை உள்ளவராக இருந்த போதிலும்கூட அவர் ஒரு பாதிரியாராக இல்லாத காரணத்தால், அவர் பணி செய்த பள்ளியில் எந்தக் காலத்திலும் தலைமை ஆசிரியராக உயரவே முடியாது. தலைமை ஆசிரியராகக்கூட உயர முடியாத அவர், வாழ்க்கையில் எப்படித்தான் உயரப் போகின்றார்? எதிர் காலமே இருண்டுவிட்டதைப் போன்ற மனநிலையில் அவர் அன்னையை நாடினார். எட்டடிகூடத் தாண்டமுடியாத நிலையில் இருந்த அவர் எண்பதடியைத் தாண்டிவிட்டார்! ஆம்; அவர் அமெரிக்காவில் பட்டம் பெற்று ஒரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக உயர்ந்துவிட்டார். சில அரசுத் துறைகளில் குமாஸ்தாவாக வாழ்க்கையைத் தொடங்கினால், தலைமைக் குமாஸ்தாவாக வேண்டுமானால் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெறலாம். அதிகாரியாக உயர வேண்டுமானால் துறை சம்பந்தமான கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், அன்னையை ஏற்றுக் கொண்ட குமாஸ்தா அன்பர் ஒருவர், அத்தகைய துறை சம்பந்தமான கல்வித் தகுதி எதுவும் இல்லாமலே அதிகாரியாக உயர்ந்துவிட்டார். அது எப்படி? ‘குமாஸ்தாவாகப் பணியைத் தொடங்கிய ஒருவர், திறமையின் காரணமாக அதிகாரியாக உயரலாம்’ என்ற புதுச் சட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்ததால், அந்த அன்பர் உத்தியோகத்தின் உச்சிக்கு உயர்ந்தார். அவருக்காகவே அந்தச் சட்டம் வந்ததைப் போல அமைந்துவிட்டது சந்தர்ப்பம்.

அரசியல் தொண்டராக வாழ்க்கையைத் தொடங்கிய ஒருவருக்குப் பெரிய ஆசைகள் எல்லாம் இல்லை. தாம் செல்வாக்குள்ள ஒரு தொண்டராக உயர்ந்தாலே போதும் என்றும், ‘அதிகம் போனால் ஒரு முனிசிபல் கவுன்சிலர் பதவி கிடைத்தால் பெரிய அதிர்ஷ்டம்’ என்றும் சிறிய ஆசைகளில் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்த அவர், அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு, எம்.பி. ஆகவும் உயர்ந்து புகழ் பெற்றார்.

தெருவில் தலைச் சுமையாகப் பொருள் விற்றுக் கொண்டு இருந்த ஒருவர், அன்னையின் அன்பராக மாறியபிறகு மொத்த வியாபாரியாக உயர்ந்தார்.

‘எப்படியாவது திருமணம் நடந்தால் போதும். குமாஸ்தா மாப்பிள்ளை கிடைத்தாலே பெரிய யோகம்’ என்று ஏக்கப் பெரு மூச்சுவிட்டுக் கொண்டு இருந்த பல பெண்கள், அன்னையை நாடி வந்தபிறகு கனவு காணக்கூட இயலாத அளவுக்கு உயர் நிலையில் உள்ள மணமகனைக் கைப்பிடித்து மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்க்கையைப் பெற்று இருக்கின்றனர்.

இனி ஆழ்ந்த உணர்ச்சி உள்ளவர்களைப் பார்க்கலாம். அவர்கள் அமைதியாகச் செயல்படுவார்கள். குடும்பத்தினரிடம் அவர்கள் ஆழ்ந்த அன்பைச் செலுத்துவார்கள். நண்பர்களிடம் உணர்வு பூர்வமாக நட்பாடுவார்கள். அவர்கள் உணர்ச்சியை முன்நிறுத்தியே எதையும் சிந்திப்பார்கள்; செயலாற்றுவார்கள்.





ஆழமான சிந்தனை அமைத்துத் தரும் பாட்டையில் அவர்களின் வாழ்க்கை நிதானமாகச் சென்று கொண்டு இருக்கும். அவர்கள் அன்னையை நாடினால் அவர்களின் ஆழமான உணர்வு உப்பாகக் கரைந்து புதுவெள்ளமாகப் பெருக்கு எடுக்கும். அந்தக் கணத்திலேயே அவர்கள் அன்னையை முழுதுமாக ஏற்றுக் கொண்டுவிடுவார்கள். அவர்களுக்குத் தியானம், சடங்கு முறைகள் என்பன எல்லாம் ஒத்து வாரா. உணர்வு பூர்வமாக அன்னையை ஏற்றுக் கொண்டு, நிரந்தரமாக நெஞ்சில் வைத்து வழிபாடு செய்யக் கூடிய அவர்கள் சிறப்பாகக் குடும்பத்தையும், தொழிலையும் நடத்துவார்கள். அவர்களுக்கு அன்னையின் நினைவு பின்னணியாகத்தான் இருக்குமே தவிர, முன்னணியில் இருக்காது. ஆனால், அன்னையிடம் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகும்.

உதாரணமாக, அன்பர் ஒருவர், 1972–இல் அன்னையின் பக்தரானார். அப்பொழுதைய அவர் வருமானம் ரூபாய் ஆயிரம். அவர் அன்னையை ஏற்றுக் கொண்டபிறகு பத்தே வருடங்களில், அதாவது 1982–இல் பெரிய கோடீஸ்வரராகிவிட்டார்.

மற்றோர் அன்னையின் பக்தர், 1940–இல் பிரைவேட்டாகப் படித்து எம்.ஏ. பட்டம் பெற்று கல்லூரி ஆசிரியராக வேண்டும் என விரும்பினார். அவர் விரும்பிய விதமே எல்லாம் நடந்தன. ஆனால், அவர் எதிர்பாராத ஒன்றும் நிகழ்ந்தது. அதாவது, ‘கல்லூரி ஆசிரியரானால் போதும்’ என்று நினைத்தவருக்கு, பத்தே ஆண்டுகளில் துணை வேந்தர் பதவி மட்டுமல்லாது, அதைவிட உயர் பதவிகள் பலவும் கிடைத்தன. அந்தக் காலத்தில் சர் பட்டம் பெற்றவர் மட்டுமே துணை வேந்தர் பதவியை எட்ட முடியும். ஆனால், அந்த அன்பர் சர் பட்டம் பெற்றவர் இல்லை. அன்னை அளப்பரிய கருணை நிறைந்தவர். எதிர்பார்ப்பதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான நன்மைகளைக் கொட்டி குவிக்கக் கூடியது அன்னையின் அருள்.

ஆழ்ந்த உணர்ச்சி நிறைந்த அன்பர்கள், தாங்கள் ஏற்றுக் கொண்டு இருக்கும் பணியில் அன்னையின் விதி முறைகளைக் கடைப்பிடித்தால், அவர்கள் எந்த மட்டத்தில் இருந்தாலும் அவர்களுடைய நிறுவனத்தில் உச்சிப் பதவிக்கு உயர்ந்து விடுவார்கள். அதற்கும் ஓர் உதாரணம் இருக்கின்றது. ஓர் அகில இந்திய அரசுச் சார்பு நிறுவனத்தில் 'ஆபீஸர் கிரேடு' என்பது 6 நிலைகளில் இருந்தது. அந்நிலைகளுக்குக் கீழே குமாஸ்தா வேலை. ஆபீஸருக்கு மேலே 'எக்ஸிக்யூடிவ் கிரேடுகள்'. அந்த கிரேடுகளின் உச்சியில் சேர்மன் பதவி. சேர்மன் பதவிக்கு மட்டும் மத்திய அரசாங்கத்திலிருந்து புகழ் வாய்ந்த அதிகாரிகளை நியமிப்பது வழக்கம். ஆக, 'அந்த நிறுவனத்தில் பணியாற்றும் யாரும் சேர்மன் பதவியை எட்ட முடியாது' என்பது நிர்வாகத்தில் உள்ள நிலை. ஒருவர் அந்த நிறுவனத்தில் உள்ள 6 கிரேடுகளில் கடைசி கிரேடு அதிகாரியாக வந்தபொழுது அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டுப் பக்தரானார். பக்தரானது மட்டுமல்லாது, அவர் அன்னையின் விதி முறைகளையும், நெறிகளையும் தம் வாழ்விலும், பணியிலும் கடைப்பிடித்தார். அவர் சில ஆண்டுகளுக்குள்ளேயே படிப்படியாக உயர்ந்து, அந்த நிறுவனத்து அதிகாரிகள் யாரும் பெற்றிராத, பெற முடியாத சேர்மன் பதவியை எட்டி, நீண்ட காலம் அந்தப் பதவியை வகித்து, தனக்கும், நிறுவனத்துக்கும் பெருமை சேர்த்தார்.

இனி, 'சிறந்த உழைப்பாளிகள்' என்ற பிரிவினரை நோக்குவோம். அவர்களில் பெரும்பாலோர் தமக்காகவும், தம் குடும்பத்திற்காகவும் கடுமையாக உழைக்கக் கூடியவர்கள். சேலத்திலிருந்து எனக்குக் கடிதம் எழுதி இருந்த ஓர் அன்பர், வயதில் இளைஞர்; வியாபாரி. அதிகாலையில் நாலரை மணிக்கு எழுந்து சரக்குக் கொள்முதல் செய்யக் கிளம்பிப் போனால், மனிதருக்கு மூச்சுவிடக்கூட நேரம் இருக்காது. இரவு 10 மணிக்குக் கடையைக் கட்டும் வரையில் பம்பரமாகச் சுழலும் அவர், அதற்குப் பிறகுதான் கணக்கு எழுத உட்காருவார். 11.30 மணிக்குக் கணக்கை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி, ஆறி





உலர்ந்த உணவை உட்கொண்டுவிட்டுக் கண் அயர்ந்தால், அதிகாலையில் நாலரை மணிக்கு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து சரக்குக் கொள்முதல் செய்ய ஓட வேண்டும்.

அவரைப் போல வாழ்க்கையில் முன்னேறக் கடுமையாக உழைப்பவர் பலர். இந்தப் பகுதி அவர்களைக் குறிக்கும்.

'கடுமையாக உழைத்தும் கை நிறைந்த பலன் கிடைக்க வில்லையே!' என்று சோர்வுப் பெரு மூச்சுவிடுபவர்கள் அன்னையிடம் வந்தால், தங்கள் உழைப்பெல்லாம் கொம்புக் கனியாக மாறுவதையும், பெரு மூச்செல்லாம் பெரிய வெற்றிகளாகக் கிடைப்பதையும் நாட்கணக்கிலேயே சந்திக்கலாம். சாதாரணக் கடை வியாபாரி அன்னையின் பக்தராக மாறுவாரேயானால், ஊரில் உள்ள கடைகளில் அவர் கடையே முதன்மையானதாக வளர்ந்து, செல்வாக்கையும், செல்வத்தையும் குவிக்கும். ஒரு மாணவன் அன்னையிடம் வந்தால், அவனே வகுப்பில் முதல் மாணவனாகப் பிரகாசிப்பான். ஒரு விவசாயி அன்னையை ஏற்றுக் கொண்டால், அதற்குப்பிறகு அவருடைய ஊரில் அதிகப் பட்ச மகசூல் எடுக்கும் விவசாயியாக அவர்தாம் இருப்பார். அன்னையிடம் தம்மை ஒப்புக் கொடுத்த ஒரு விஞ்ஞானி, தம்முடைய துறையில் வியத்தகு சாதனைகளைப் புரிந்து ஏராளமான பட்டங்களையும், விருதுகளையும் பெறுவார்.

மேற்கூறியவர்களுக்கு விதி விலக்காகவுள்ள வேறு சிலரைப் பற்றியும் சிறிது சிந்திப்போம்.

"நான் நீண்ட நாட்களாக அன்னையை வணங்குகின்றேன். என் வாழ்க்கையில் பல நல்ல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நான் உண்மையை உபாசிப்பவன். 'வஞ்சகம் இல்லாமல் உழைப்பவன்' என்ற நல்ல பெயரை நான் எடுத்து இருக்கின்றேன். 'இதுவரை கட்டுரையில் வந்த செய்திகள் எல்லாம் பலரின் வாழ்வில் உண்மையாக நிகழ்ந்தவை' என்பதை நான் அனுபவபூர்வமாக உணர்கின்றேன். ஆனால், என் வாழ்க்கையில் இதுவரை அந்த வியக்கத்தக்க பெரு மாறுதல்கள் ஏதும் ஏற்படவில்லை. இது ஏன்

என எனக்குப் புரியவில்லை'' என்று, சிலர் எப்பொழுதாவது கூறுகின்றார்கள்.

அவர்கள் கூற்றிலும் உண்மை இருக்கின்றது. குறைபடும் அந்த அன்பர்களின் வாழ்வில் பாதகமான சில அம்சங்கள் இருக்கும். அவை அன்னையின் அருள் செயல்படுவதைத் தடை செய்யும். எனவேதான் அவர்களுக்குக் கிடைத்து இருக்க வேண்டிய பெரும்பலன்கள் கிடைக்காமலே போய்விடுகின்றன. பாதகமான அம்சங்களை உணர்ந்து அவற்றை விலக்கிக் கொள்ள முன்வந்தால், இதுவரை கிடைக்காத பெரும்பலன்கள், உடனே ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து கிடைக்க ஆரம்பிக்கும்.

பாதகமான அம்சங்களைக் குணங்களாகக் கொண்ட சிலரையும் இங்கே நாம் அடையாளம் கண்டு கொள்வோம்.

1. இலட்சியம், நாணயம், கௌரவம், உழைப்புப் போன்ற உயர்ந்த இயல்பு படைத்த சிலர், சிறு தெய்வ வழிபாடு உள்ள வர்களாக இருப்பார்கள். நம் மரபில் சித்து விளையாட்டுகளைத் தூற்றுவது இல்லையாயினும் போற்றுவது இல்லை. ஆன்மிக நெறி முறைகளைப் பின்பற்றுகின்றவர்கள், சிறு தெய்வ வழி பாட்டினை ஏற்றுக் கொள்வதில்லை. வள்ளல் பெருமானார் இராமலிங்க சுவாமிகள், 'சிறு தெய்வ வழிபாடு கூடாது' என்று கூறுகின்றார்.

அந்தச் சிறு தெய்வங்கள் தமது பக்தர்களுக்கு வேண்டிய வற்றைக் கொடுத்து, அவர்களின் ஆத்மாவைத் தம் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்கின்றன. அவை தம்மைவிட்டுப் போக பக்தர்களை அனுமதிப்பதில்லை. இறைவனின் ஒளி, சத்தியம், அருள், பேரருள் போன்றவை, அந்தச் சிறு தெய்வங்களுக்குப் பிடிக்கா. சித்து விளையாடும் சாமியார்களுக்கும் அந்தக் குணம் உண்டு. சிறு தெய்வ வழிபாடோ, சித்தாடும் சாமியார் களிடம் தொடர்போ உள்ள அன்னையின் பக்தர்களுக்கு அன்னையின் அருள் கிடைப்பது இல்லை. அந்த பக்தர்கள்





எதனோடு தொடர்பு கொண்டாலும், அதனுடன் உண்மையான ஈடுபாட்டுடன் இருக்கக் கூடியவர்கள். மேலும், அவர்கள் பிறரின் புத்திமதியைச் செவி சாய்த்துக் கேட்கத் தயாராக இல்லாதவர்கள். அவர்களாகவே தமது தவற்றை உணர்ந்து அந்தப் பிடியிலிருந்து விலகும்வரை, அன்னை அருளின் முழுப் பலன் அவர்களை வந்தடையாது.

2. அம்மாதிரியான பக்தர்கள் அநேகமாக உயர்ந்த பரம்பரை யிலிருந்து வந்தவர்களாக இருப்பார்கள். நற்பண்புகளைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். பிறரிடம் உதவியை எதிர் பார்ப்பதைக் கேவலமாகக் கருதக் கூடியவர்கள். வாழ்க்கையில் இது போற்றத்தக்க உயர்ந்த பண்பாகும். ஆனால், அவர்கள் அந்தக் கொள்கையை எங்கே கடைப்பிடிக்க வேண்டும் என்பது புரியாமல் தெய்வத்திடமும் செயல்படுத்துவார்கள். மனிதர் களுக்குரிய சட்டம், தெய்வத்திற்கும் உரிய சட்டம் ஆகாது அல்லவா?

'தெய்வத்திடம் நான் எதையும் கேட்க மாட்டேன்' என்று கூறிய சிலரை நான் பார்த்திருக்கின்றேன். அவர்களுக்கு அன்னை வழங்கும் அருள், ஆத்ம விளக்கத்திற்குப் பயன் படுவதுடன் நின்றுவிடுகின்றது. அன்னையின் அருள் அதற்கும் மேலே சென்று அவர்களுடைய வாழ்க்கையில் வளம் பெற உதவுவது இல்லை. ஏன்?

'ஆத்ம சமர்ப்பணம்' என்பது முழுமையாக அமைய வேண்டும். 'தெய்வத்திடம் நான் எதையும் கேட்க மாட்டேன்' என்பது, தனது சொந்தத் திறமையின் காரணமாக எழுந்த அகம்பாவமாகும். இந்த அகம்பாவம் நாம் தெய்வத்தைச் சென்றடையும் வழியில் முட்டுக்கட்டையாக நின்றுவிடுகின்றது. ஆகவே, இந்த முட்டுக்கட்டையை முதலில் நீக்கிவிட வேண்டும். 'மிச்ச சொச்சம்' என்று எதையும் நம்மிடம் வைத்துக் கொள்ளாமல், பரிபூரண சரணாகதி தத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் தெய்வத்திடம் நமக்குள்ள நம்பிக்கையும், பிடிப்பும்

அதிகமாகின்றன. இந்தப் பிடிக்குள் தெய்வம் அடங்கும். ‘அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே’ என்பது மூதுரை.

‘கேட்பதும், கேட்டுப் பெறுவதும் சிறந்த தெய்வ வழிபாடு’ என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதில் பிழை ஒன்றும் இல்லை. தெய்வத்திடம் நாம் ஒன்றைக் கேட்டுப் பெறும் பொழுது நாம் பெறுவது பொருள் மட்டும் அன்று; அருளுமாகும். நம் திறமையால் பொருளீட்டும்பொழுது செல்வம் பெருகும். அன்னையின் மீது பக்தி கொண்டு பொருளீட்டும்பொழுது செல்வத்தோடு சேர்ந்து அன்னையின் அருளும், ஒளியும் பெருகும். திறமையினால் மட்டுமே பொருளீட்டும்பொழுது திறமை குறையும் சமயத்தில் செல்வம் வடிந்து போகும் நிலை ஏற்படுவதுண்டு. அன்னையின் மீது பக்தி கொண்டு பொருளீட்டும் பொழுது நம் திறமை நம்மைக் காலை வாரிவிட்டாலும், அன்னையின் அருள் துணை நின்று செல்வத்தைப் பெருக்கும்.

3. மற்றொரு வகையினரிடம் ஏதாவது ஒரு குணக் குறைபாடு இருக்கும். கோபமும் ஒரு பெரிய குணக் குறைபாடே. ஒரு கோபக்காரப் பெரியவருக்கு வயது 80. அவர் தமக்குச் சொந்தமான 27 ஏக்கர் நிலத்தை விற்க முயன்றார். அன்றைய நிலவரப்படி அந்த நிலம் எட்டாயிரத்திலிருந்து பத்தாயிரம்வரை விலை போகலாம். ஆனால், ‘அதை 27000 ரூபாய்க்குக் குறையாமல் விற்றுவிட வேண்டும்’ என்ற அவருடைய பிடிவாதத்தால், 12 ஆண்டு காலமாக அதை விற்க முடியவில்லை. அவர் அன்னையைத் தரிசனம் செய்வதற்காக ஆசிரமத்திற்கு வந்துவிட்டுப் போனார். அதுவரை விற்காமல் கிடந்த அவருடைய நிலத்திற்கு மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

ஓர் உர நிறுவனம் அவருடைய நிலத்தை ரூ.81,000க்குக் கிரயம் வாங்குவதற்கு முன்வந்தது. ஒப்பந்தம் செய்து கொள்ள இருந்த நிலையில், அவர் தம் முன்கோபத்தால் பொரிந்து தள்ள, ஒப்பந்தம் எழுதப்படாமல் விஷயம் முறிந்து போய்விட்டது. பிறகு அவர் தம் தவற்றை உணர்ந்து அன்னையின் சமாதிக்குச்





சென்று, ‘என்னுடைய நிலம் அதே விலைக்கு விற்க வேண்டும்’ என்று பிரார்த்தித்துவிட்டு வீடு திரும்பினார். ஏற்கனவே ஒப்பந்தமாகும் நிலையில் கைகழுவிவிட்டுப் போன உர நிறுவனத்தின் மானேஜர், அந்தப் பெரியவரை எதிர்பார்த்து வீட்டில் காத்துக் கொண்டு இருந்தார். பழைய தொகைக்கே கிரயம் நல்லபடியாக முடிந்தது.

இன்னொருவர், திறமைகள் பலவற்றுக்குச் சொந்தக்காரராக இருந்தார். ஆனால், அவர் பிரகாசமான வாழ்க்கைக்கு அன்னியராக இருந்தார். அவருடைய திறமைகள் இருண்டு கிடந்தன. வறுமை அவரைக் கசக்கிப் பிழிந்தது. ஒரு முறை சொந்த வேலையாக பாண்டிச்சேரிக்கு வந்த அவர், ஆசிரமத்திற்குச் சென்று அன்னையின் சமாதியைத் தரிசித்துவிட்டு ஊருக்குத் திரும்பினார். வீட்டிற்குள் கால் எடுத்து வைத்ததும் அவரை எதிர்பார்த்து நல்ல செய்தி ஒன்று காத்திருந்தது. ஒரு பெரிய செல்வர் அவரைத் தேடுவதாகக் கிடைத்த செய்திதான் அது. அவர் உடனே சென்று அந்தத் தனவந்தரைச் சந்தித்தார். தனவந்தர் அவருடைய திறமையைப் பாராட்டி, ஒரு பெருந்தொகையைக் கொடுக்க முன்வந்தார். அவருக்கு ஒரே திகைப்பு. அதோடு அவர் நிறுத்திக் கொண்டு இருந்தால் தேவலை! ஆனால், அவருடன் குடி கொண்டிருக்கும் அகம்பாவம், சந்தர்ப்பம் தெரியாமல் தலை நீட்டியது. ‘என்னுடைய திறமைக்கு இதெல்லாம் சாதாரணம்’ என்பது போலப் பேசினார். அதனால் வேதனை அடைந்த செல்வர், நீட்ட வந்த தம் உதவிக் கரத்தை நீட்டாமல் மடக்கிக் கொண்டார். அந்தத் திறமைசாலிக்குக் கிடைக்கக் காத்திருந்த பாராட்டும், பலனும் கிடைக்காமலே போய்விட்டன. அவருக்கு எஞ்சியது, தம் குணச் சிறப்பை நிலை நாட்டியது ஒன்றுதான்!

குணத்தில் குறைபாடு இருப்பது இயற்கை. ஆனால், தன்னைத் தேடி வரும் சிறப்பை இழப்பது இயற்கை அன்று. அக்குறையுள்ளவர்கள் தாமாகவே முன்வந்து குறையை விலக்க முற்பட்டால் அல்லது அக்குறையை நல்ல காரியங்களில்

மட்டுமாவது தலை நீட்டவிடாது தடுத்தால், விலகியுள்ள அன்னையின் அருள் விரைந்து செயல்பட்டு நன்மைகளை வாரி வழங்கும். அவ்வாறு தம் குறையை உணர்ந்து மனம் மாறிச் செயல்பட்ட அந்த 80 வயதுப் பெரியவர், தம் நிலத்தை ரூ.81,000க்கு விற்க முடிந்தது என்பதை நாம் முன்னர் பார்த்தோம்.

4. அடுத்த வகையினர் மேற்கண்டவர்களிடமிருந்து மாறுபடுகின்றவர்கள். அவர்கள் அருவருக்கத்தக்க குணம் படைத்தவர்கள். தம் குறைபாடு தெரியாத பரிதாபத்திற் குரியவர்கள் அவர்கள். பொதுவாக, அவர்கள் அன்னையிடம் வருவதில்லை. எப்படியோ ஒரு சிலர் விதிவிலக்காக அன்னையிடம் வருவதும் உண்டு.

ஒருவர் உயர்ந்த படிப்பும், உயர்ந்த உத்தியோகமும் உள்ளவர். அவர் யாரைச் சந்தித்தாலும் கடன் கேட்பார். அவர் நிலை கருதி அவர்கள் தட்டாமல் கடன் கொடுத்து விடுவார்கள். தமக்குப் பழக்கமான ஒருவரையும் பாக்கி வைக்காமல் அவர் கடன் வாங்கித் தீர்த்தார். ஆனால், அவர் வாங்கிய கடனை யாருக்கும் திருப்பிக் கொடுத்ததே இல்லை. மற்றொருவருக்குக் கோள் சொல்வதே வாழ்க்கையின் குறிக்கோள். ஒருவரைப் பற்றி மற்றொருவரிடமும், ஒரு குடும்பத்தைப் பற்றி இன்னொரு குடும்பத்திலும் கோள் மூட்டுவது, அவருக்குக் கைவந்த கலை. அவருடைய கைங்கரியத்தால் சீர் குலைந்து சிதைந்து போன குடும்பங்கள் பல. இது அவருக்கு இயல்பாக அமைந்த குணம். 'இது தவறு' என்று புரியாமலே, கோள் சொல்லும் பழக்கத்தை சகஜமாகக் கொண்டிருந்தார் அவர். வேறொருவர் மிராசுதார். கடந்த 25 ஆண்டுகளில் ஒரு வருடம்கூடத் தம் நிலங்களில் ஒழுங்காகப் பயிரிட்டதே இல்லை. நிலத்தை தரிசு போட்டால் வருமானம் எப்படி? வாழ்க்கையை ஓட்டுவது எப்படி? அவற்றைப் பற்றி எல்லாம் அவருக்குக் கவலை இல்லை. தம் தந்தை வைத்துவிட்டுப் போன பொன் விளையும் நஞ்சை நிலங்களை ஒவ்வொன்றாக விற்று





வாழ்க்கையைக் கழித்து வருகிறார் அவர். பிறிதொருவர், வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில், தம் பெற்றோர்களைத் திரும்பிக்கூடப் பார்ப்பதே இல்லை.

அத்தகைய மனிதர்கள் அன்னையிடம் வருவதில்லை. அப்படியே வந்தாலும் அவர்களுக்கு அன்னையின் அருள் பெரிய அளவில் கிடைப்பதும் இல்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ அவர்களிடம் உள்ள வெறுக்கத்தக்க குணங்கள், கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடும்.

அவர்களில் சிலர், தம் அனுபவத்தைப் பற்றி இப்படிக் கூறியுள்ளார்கள்: "நான் அன்னையிடம் வந்தபிறகு, நிலை இல்லாத வருமானத்தால் தத்தளித்துக் கொண்டிருந்த என் வாழ்க்கை, சீராகச் சென்று கொண்டிருக்கின்றது. தவிப்பு, ஏமாற்றம் எதுவும் இல்லாது, இப்பொழுது நிலையாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு நிலையான வருமானமும் வந்து கொண்டிருக்கின்றது. எல்லாக் கோணங்களிலும் என் வாழ்க்கை உயர்ந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால், மற்ற அன்னை பக்தர்களின் வாழ்க்கையில் காணும் வியக்கத்தக்க பெரு மாறுதல்கள் ஏன் என் வாழ்க்கையில் ஏற்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை".

அவர்களுடைய பக்தியும், பிரார்த்தனையும் அவர்களிடம் உள்ள குணக் கேடுகளைக் குறைப்பதில் செலவழிந்துவிடுகின்றன. 'அன்னையின் அருளால் கரி அப்பிய அவர்களுக்கு வெள்ளை அடிக்கத்தான் முடிகின்றதே தவிர, வெளிச்சமாகப் பரவி நிற்க முடிவதில்லை' என்பதை அவர்கள் அறிவதில்லை.

அறிந்தவர்களுக்கு அன்னையின் அருள் அரியன எல்லாம் தரும்.

✶✶✶

## கர்மயோகி எழுதிய நூல்கள்

தமிழ் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | புஷ்பாஞ்சலி | ரூ. 60 |
| 2. | ஆயிரத்தில் ஒருவர் | ரூ.100 |
| 3. | எல்லாம் தரும் அன்னை | ரூ.100 |
| 4. | யோக வாழ்க்கை | ரூ. 75 |
| 5. | யோக வாழ்க்கை விளக்கம் – I | ரூ. 80 |
| 6. | யோக வாழ்க்கை விளக்கம் – II | ரூ. 60 |
| 7. | யோக வாழ்க்கை விளக்கம் III | ரூ. 70 |
| 8. | தத்துவ ஞானம் | ரூ. 40 |
| 9. | பூலோகச் சொர்க்கம் | ரூ. 50 |
| 10. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 11. | அன்னையின் அருள் | ரூ.100 |
| 12. | புண்ணிய பூமி | ரூ.100 |
| 13. | அருளமுதம் | ரூ.100 |
| 14. | அன்னையின் தரிசனம் | ரூ.100 |
| 15. | அமிர்தம் | ரூ. 70 |
| 16. | அன்னையின் வரலாறும் வழிபாடுகளும் | ரூ. 80 |
| 17. | பரம்பொருள் | ரூ.100 |
| 18. | பொன்னொளி | ரூ. 60 |
| 19. | ஸ்ரீ அரவிந்தம் | ரூ. 20 |
| 20. | குடும்பம் | ரூ. 40 |
| 21. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 22. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 23. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 24. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 25. | உள்ளே வேலையிருக்கின்றது | ரூ. 20 |
| 26. | பிரார்த்தனை பலிக்கவேண்டும் | ரூ.100 |
| 27. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 28. | ஸ்ரீ அரவிந்தம் – தத்துவம் | ரூ. 50 |
| 29. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 30. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 31. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 32. | மனம் – ஜீவனின் முக்கியக் கரணம் | ரூ. 20 |
| 33. | சமூகம் – அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |

**Contd...**

| | | |
|---|---|---|
| 34. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 35. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 36. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 37. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |
| 38. | ஆத்ம சோதனை | ரூ.100 |
| 39. | பகவானும் பக்தனும் | ரூ.100 |
| 40. | அபரிமிதமான செல்வம் | ரூ. 50 |
| 41. | சரணாகதியின் ஆன்மீகச் சிறப்பு | ரூ. 50 |
| 42. | ரிஷிகள் கண்ட பிரம்மம் | ரூ.150 |
| 43. | வாழ்வு யோகமாக மாறும்பாதை | ரூ. 50 |
| 44. | ஜீவனுள்ள மலர்கள் | ரூ.350 |
| 45. | அன்னையைப் பற்றிய அருளுரைகள் | ரூ.120 |
| 46. | சிந்தனை மணிகள் | ரூ.100 |
| 47. | எங்கள் குடும்பம் | ரூ.200 |
| 48. | சிந்தனைச்சுடர் | ரூ. 50 |
| 49. | மலர்ந்த ஜீவியம் (மாத இதழ்) ஆண்டு சந்தா | ரூ. 60 |

ஆங்கில நூல்கள்:

| | |
|---|---|
| **1. Mental Peace of the Industrialist (By Karmayogi)** | **Rs. 30** |
| **2. Life & Teachings of Sri Aurobindo and The Mother (By Karmayogi)** | **Rs.120** |
| **3. Sri Aravindam (By Karmayogi)** | **Rs. 40** |
| **4. Luck (By Karmayogi)** | **Rs. 50** |
| **5. A Discussion on The Life Divine (By Karmayogi)** | **Rs.100** |
| **6. Spirituality & Prosperity-I (By Karmayogi)** | **Rs.150** |
| **7. Spirituality & Prosperity-II (By Karmayogi)** | **Rs.200** |
| **8. The Legend of Brahman (By Robert Macfarlane)** | **Rs.200** |
| **9. $100,000.00 (By William Learner)** | **Rs. 50** |
| **10. Kamadhenu (By Garry Jacobs, N.Krishna Murthy & N.Rama krishnan)** | **Rs. 70** |
| **11. Arulamudham◆ (By Karmayogi)** | **Rs. 40** |
| **12. Consecration (Bi-Monthly)** | **Rs.200** |
| **13. Spiritual Opulence (By Karmayogi)** | **Rs.200** |
| **14. My Life with Microbes and Agriculture (Dr. G. Rangaswami)** | **Rs.200** |

**Contd...**

சொசைட்டியின் மற்ற வெளியீடுகள்:

| | | |
|---|---|---|
| 1. தொழிலின் ஜீவன் | என். கண்ணன் | ரூ. 30 |
| 2. தேடி வரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. திருவருளே தீராத செல்வம் | என். அசோகன் | ரூ. 75 |
| 4. அருளோவியம் | என். அசோகன் | ரூ. 80 |
| 5. பக்தியும் சேவையும் | என். அசோகன் | ரூ.100 |
| 6. திருவடி தரிசனம் | என். அசோகன் | ரூ. 75 |
| 7. சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. சத் புருஷன்* | விஜயா & விசாலம் | ரூ. 20 |
| 9. சச்சிதானந்தம் | வசந்தா | ரூ. 20 |
| 10. ஐம்பது லட்சம் | சமர்ப்பணன் | ரூ. 50 |
| 11. லைப் டிவைன் விரிவுரைகள்◆ (தமிழாக்கம்) | கேரி ஜேக்கப் என். அசோகன் | ரூ.100 |
| 12. காமதேனு◆ (தமிழாக்கம்) | என். அசோகன் | ரூ. 40 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து **M.O.** செய்யவும்.

◆ தற்சமயம் கையிருப்பு இல்லை.

* சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

கிடைக்குமிடம்

பாண்டியில் : மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
பாண்டிச்சேரி – 605 011.

சென்னையில் : மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்" 24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு **C.I.T.** நகர், சென்னை – 600 035.
☎ (044)-24347191